விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள்

VALIANT MUSLIMS IN THE FREEDOM STRUGGLE

வரலாற்றாசிரியர்
செ.திவான் எம்.ஏ., எம்.பில்.,

சுகைனா பதிப்பகம்
106F/4A திருவனந்தபுரம் சாலை
பாளையங்கோட்டை-627002
திருநெல்வேலி மாவட்டம்.
போன்:0462-2572665

ஆசிரியரின் 58 வது நூல்
முதற்பதிப்பு : ஆகஸ்ட் 2004
உரிமை : ஆசிரியருக்கே
விலை : நூறுரூபாய்

அச்சு வடிவமைப்பு : காசி டி.டி.பி, பாளை.
அச்சிட்டோர் : சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி.
முகப்போவியம் : வள்ளி ஆர்ட்ஸ், நெல்லை.

காணிக்கை

இந்தியாவில் சிப்பாய்கள் முதன்முதலில் நடத்திய வேலூர் புரட்சியின் *(1806)* வம்சாவழித்தோன்றலும், இந்திய விடுதலைப்போரில் தனிநபர்சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று *(1942)* சிறையேகியும், சிறையிலிருந்து தப்பித்தும், தர்மபுரி மாவட்டக் காடுகளில் தலைமறைவாக இருந்தும், நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்திடும் வரை திருமணம் செய்து கொள்ளாமலும், அரசாங்கத்தின் உதவி எதனையும் பெறாமலும் வாழ்ந்து மறைந்த, எனது பெரிய தந்தையார்

டாக்டர் எஸ்.ஏ.ரஷீத்

(பிறப்பு-வேலூர் 1903 — மறைவு மாரண்டஹள்ளி12.1.1998)

அவர்களுக்கு...

சுகைனாபதிப்பகம்

எண்ண அலைகள்

இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு இதுவரையில் வரலாற்று ஆய்வாளர்கள் பார்வையிலிருந்து முழுமையாக எழுதப்படவில்லை என்றே சொல்லலாம். விடுதலை இயக்கத்தில் பெரும்பங்கு கொண்ட பட்டாபி சீதாராமையா இந்திய தேசிய காங்கிரசின் அறுபதாண்டு கால வரலாற்றை எழுதினார். அது அதிகாரபூர்வமான வரலாறு என்று கூறப்பட்டது. அதில் ஒரு பிறவியில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தேசபக்தச்செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பற்றி ஒரு வரி கூட இல்லை. விந்தியத்திற்கு வடக்கிலிருந்து விடுதலைப் போரைப் பற்றி எழுதியவர்கள் தெற்கை மறந்தார்கள். விடுதலைப் போர் வரலாறு எந்தக் காலம் முதல் துவங்குகிறது? இந்தக் கேள்விக்கு தெளிவான விடை இன்னும் தரப்படவில்லை.

17.5.1498

போர்ச்சுக்கல் நாட்டு லிஸ்பனிலிருந்து (Lisbon) *8.7.1497* இல் *60* முதல் *150* டன் வரை எடையுள்ள மூன்று கப்பல்களில், வாஸ்கோடகாமா (Vasocodagama) தலைமையில் புறப்பட்டு, பத்துமாதம், பத்து நாட்கள் பயணித்து, கள்ளிக்கோட்டைக்கு வடக்கே எட்டு மைல் தொலைவில் உள்ள சிறிய கடற்கரை ஊரான கப்பாடு(Kappat)க்கு *17.5.1498* இல் வந்து, கப்பலை நங்கூரம் பாய்ச்சினார்கள்*

குஞ்ஞாலி மரைக்காயர்

அயல்நாட்டாரை எதிர்த்து, அன்னைத் திருநாட்டில் விடுதலைப்போர் அன்றே துவங்கி விட்டது. விடுதலை மாவீரர் குஞ்ஞாலி மரைக்காயர் (Kunjiali) ஆற்றிய, வீரப்போர்கள், போர்த்துக்கீசியரை கடற்போரிலும், தரைப்போரிலும் எதிர்த்து நின்று ஜெயபேரிகை கொட்டியதும், துரோகத்தால் வீரச்சாவைத்

---

*R.S.Whiteway, The Rise of Portuguese Power in India 1497-1550, First Published 1899, Second Published 1989, NewDelhi, P.78.

தழுவியதுமான அந்த வீர வரலாற்றை இறை அருளால் மிக விரைவில் தனி நூலாகத் தர உள்ளோம். 'கத்தியின்றி இரத்தமின்றி வந்ததன்று சுதந்திரம்', செந்நீர் சிந்தியவர்களின் முகங்களும் பெயர்களும் பட்டியலிட்டுக் காட்டுவதற்கு அடங்காதவை. மதங்கள் கடந்து, மாநில எல்லைகளைக் கடந்து, மொழி வேற்றுமைகளைக் கடந்து இந்திய விடுதலைஇயக்கம் காலத்திற்குக் காலம், தன் அணுகு முறைகளை மாற்றிக் கொண்டு நடைபெற்றே வந்தது. இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் என மதபேதமின்றி எல்லோரும் சுதந்திரப் போரில் பங்கேற்றனர்.

விடுதலைப்போரில் தமிழகமுஸ்லிம்கள்

வள்ளல் சீதக்காதி அறக்கட்டளையார் 1993 ஆம் ஆண்டிற்கான ஷேக்சதக்கத்துல்லாஹ் அப்பா இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரிசுக்கான போட்டியினை நடத்திய போது, அதில் எளியேன் பங்கேற்று, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழக முஸ்லிம்களின் பங்கு ('The Part played by the Muslims of Tamilnadu in India's Struggle for freedom') என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதி முதல் பரிசு பெற்றேன். அதனை 1994 ஜனவரியில் 'விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்' எனும் நூலாக, சென்னை மண்ணடியில் வெளியிட்டேன்; தமிழர் தலைவர் மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர் கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி திருமிகு, வைகோ அவர்கள் அந்த நூலினை, வெளியிட்டுப் பேசுகையில், "அந்த நூல் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடப்புத்தகம் ஆக வேண்டும்; தமிழர் தம் ஒவ்வொருவர் இல்லத்தையும் இந்த நூல் அலங்கரிக்க வேண்டும் என்பதே எனது தணியாத வேட்கையாகும்" என்று முழங்கினார்கள்.

விடுதலையின்நிறம்பச்சை

தொடர்ந்து "சுதந்திரப்போரில் நெல்லைமாவட்ட முஸ்லிம்கள்," "விடுதலையின் நிறம் பச்சை" போன்ற சிறுநூல்களை வெளியிட்டேன். எனினும், இந்திய சுதந்திரப்போரில்

முஸ்லிம்களின் பங்களிப்பினை விரிவாக ஆராயும் பணியினை அனுதினமும் சதா செய்து வருகிறேன். அதன் விளைவாக *1994* இல் *320* பக்கங்களில் வெளிவந்த நூலினை,விரிவாகவும், விளக்கமாகவும் *2004* இல் *1200* பெரிய பக்கங்களில் வெளியிடும் வண்ணம் புதுப்புது தகவல்களுடனும், ஆய்வுக் கண்ணோட்டத்திலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

வஞ்சிக்கப்பட்டவர்களின் வரலாறு

இந்திய விடுதலைப்போரில் இன்னுயிரைத் துச்சமெனஈந்தோர், இல்லம் இழந்தோர், இல்லாளைப் பிரிந்தோர், தடியடிபட்டோர் தண்டனைகள் பெற்றோர், சிறைச்சாலைகளில் சித்திரவதைக்குள்ளானோர் என நீண்டு கொண்டே செல்லும் தியாகசீலர்களின் வரலாற்றில் அத்தியாயங்களாக, வாக்கியங்களாக, ஏன் வார்த்தையாகக்கூட இடம் பெறாமல் வஞ்சிக்கப்பட்டு தங்கள் வரலாற்றையே தியாகம் செய்த தமிழக முஸ்லிம்கள், இந்திய விடுதலைப் போரில் பாளையக்காரர் காலத்தில் ஆற்றிய தியாகத்தை இயன்ற வரை இந்நூலில் தொகுத்திருக்கிறேன். இன்னும் தொடர்ந்து அந்தப் பணியினைச் செய்து வருகிறேன். சுதந்திரமும், சுயமரியாதையும் இரு கண்கள் எனக்கருதி வாழும் இந்திய முஸ்லிம்கள், தங்கள் வீட்டை மறந்து, நாட்டை நினைத்து, தங்களை மெழுகுவர்த்திகளாக்கிக் கொண்டு, இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் ஈட்டித் தந்தனர். நம் கண்ணறையின் ஒளிபடாமல் கல்லறையில் துயிலும் அந்த விடுதலை வீரர்கள் கண்ணியத்திற்குரியவர்கள். அவர்கள் நம் கருத்தில் நிறைந்திருந்து, கால காலங்களுக்கும் முஸ்லிம்கள், இந்த மண்ணில் யாருக்கும் தாழாமல், தன்மானத்தோடு சரிநிகர் சமமாக வாழவும், ஜனநாயகத்தால் ஆளவும்., நாளும் நாளும் உத்வேகம் தந்து கொண்டே இருப்பார்கள். அத்தகைய வீரத்தியாகிகளின் வரலாற்றினை நினைந்து போற்றுதல் மிகமிக அவசியமன்றோ.

இந்திய விடுதலைப்போரில் பாளையக்காரர் கால முஸ்லிம்கள் பங்கேற்ற வீரசரிதத்தினை இந்நூலில் தந்துள்ளேன். இந்திய சுதந்திரப்போரில் பல்வேறு கால கட்டங்களில் பங்கேற்ற முஸ்லிம்களின் தீரமிகு சரித்திரத்தை

தொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்கங்களில் தரஇருக்கிறேன். (இறைவன் நாடினால்)இந்நூலில் இட்டுக்கட்டியும், இல்லாதவற்றையும் எவரைப் பற்றியேனும், எதனைப் பற்றியேனும், எங்கேனும், எள்ளளவேனும் எழுதியிருப்பதாக எவரேனும் கருதினால் என்னைப் பொறுத்துக் கொள்ளத் தேவையில்லை. கனலாக மாறலாம்; அனலாகச் சுடலாம். அக்கினிப் பிரவேசத்துக்கு ஆயத்தமாகப் புதர்க்குப்பைகளை அல்ல, பொன்னைத்தான் தொகுத்துத் தந்துள்ளேன். நூலில் இன்னும் இடம்பெற வேண்டிய பெருமக்களைப் பற்றிய விவரங்களை யாராவது அளித்தால், அடுத்துவரும் பதிப்புக்களில் அவற்றை நன்றியுடன் பயன்படுத்திக் கொள்வேன்.

எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

எளியேனின் அத்தனை முயற்சிகளுக்கும் ஜீவ ஊற்றாகத் திகழும் அன்புத் துணைவியார் திவானி ஜகானராவுக்கும், தினமும் என்னைச் சந்தித்து, எனது முயற்சிகளைத் தொடர உற்சாக மூட்டிவரும் அண்ணன் பாளையங்கோட்டை ஐசாமுவேல் அவர்களுக்கும், விடியல் வெள்ளி ஆசிரியர் அண்ணன் ஜனாப் மு. குலாம் முஹம்மது M.A அவர்களுக்கும், சிங்கப்பூர் அண்ணன் ஹாஜி.S.M.காதிர் சுல்தான் அவர்களுக்கும், வழக்கறிஞர் ஹோசூர் R.செய்யது அன்வர் பாட்சா அவர்களுக்கும், இந்த நூலினை நல்லமுறையில் வடிவமைத்துத் தந்த பாளை காசி டி.டி.பி திரு. முருகன்,திரு.சங்கர் ஆகியோருக்கும், அழகுற அச்சடித்துத் தந்த சிவகாசி சிவசக்தி ஆர்ட்ஸ் சகோதரர் கு.குமரேசன் அவர்களுக்கும், வள்ளி ஆர்ட்ஸ் பொன்.வள்ளிநாயகம்அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் அருளால் இன்னும் இது தொடர்பான நூல்கள் வெளிவர காலம் வாய்ப்பளித்திட வேண்டும்.

எளியேன் வாழ்வதற்காக எழுதிடவில்லை;
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

– செ.திவான்

15.8.2004
கல்வித்தந்தை சுலைமான் இல்லம்,
வள்ளல் வைகோ நூலகம்.
106 F 4A (புதியஎண் 148) திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை -627 002, தமிழ்நாடு. போன்: 0462-2572665

‘இந்திய சுதந்திரப் போரில் தமிழக முஸ்லிம்கள்’ நூலாசிரியர் வரலாற்றாசிரியர் செ.திவான் எம்.ஏ.எம்பில் குறித்து சான்றோர்கள் வழங்கிய பாராட்டுரைகள்

****

மறுமலர்ச்சிதி.மு.கழகப் பொதுச்செயலாளர் தமிழர் தலைவர் வைகோ அவர்கள்

நடமாடும் கம்யூட்டர்

தமிழ்த்தாத்தா உ.வே.சா. கால்கள் தேய கவின் தமிழகமெங்கும் நடந்து பழந்தமிழ்ச் சுவடிகளை தேடிப்பாதுகாத்து பதிப்பித்து தந்தது போல இந்த இலட்சிய இளைஞனும் வரலாற்றின் சாட்சியங்களையும், குறிப்புக்களையும், தேடித்தேடி சேகரித்து தன்னையே ஒரு கருத்துப் பெட்டமாக, செய்திக் களஞ்சியமாக ஆக்கிக் கொண்டார். நூல்களைப் படிப்பதில் பழந்தமிழர் வாழ்வு., விடுதலைப் போர் நிகழ்வு குறித்த செய்திகளைச் சேகரிப்பதில் அவருக்கு நிகர் அவரே. பணியாற்றுவதில் அவர் ஒரு நடமாடும் கம்யூட்டர்.

சமுதாய இலக்கிய ஆய்வாளர் தொ.மு.சி.ரகுநாதன்

எழுத்துப்பணி வெற்றி காணட்டும்

தங்கள் எழுத்துப் பணி மேலும் வெற்றி காண என் வாழ்த்துக்கள்

(‘பாரதியும் காங்கிரசும்’ நூலுக்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில்)

சொற்செல்வர், தமிழறிஞர் சி.சு.மணி

புதிய முகடுகளைத் தொடட்டும்

எறும்பின் சுறுசுறுப்பு. தேனீயின் தேடல்; உடலை மறந்த உழைப்பு. இவ்வளவும் சேர்ந்த உருவம் அன்பிற்குரிய தம்பி செ.திவான். கருத்தாழ மிக்க பல நூல்களை அவர் தமிழுக்கு வழங்க வேண்டும். அவர் புதிய முகடுகளைத் தொட என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

சாகித்திய அகாதெமி விருதுபெற்ற முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணன்

வியக்கத்தக்க பணி

தேனீயைப் போல் சுறுசுறுப்பான உங்கள் பணி வியக்கத்தக்கது.

முதுபெரும் எழுத்தாளர் வல்லிக் கண்ணன் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருபவர்

பாளையங்கோட்டையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் செ.திவான் போற்றுதலுக்குரிய பணிகள் பல செய்து கொண்டிருக்கிறார். மறைந்து போன — மறக்கடிக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை ஆய்ந்து கண்டு சான்றாதாரங்களோடு அவற்றைப் பதிப்பிக்கும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வோடு அவர் ஈடுபட்டுவருகிறார். இவ்வாறு அர்ப்பணிப்புடன் பாடுபடுகிறவர் எவராவது தோன்றி உழைத்தால் தான் உண்மையான திறமைக்கும் நல்ல படைப்புகளுக்கும் உரிய கவனிப்புக் கிடைக்க வழி பிறக்கும் தமிழ்நாட்டில் ('வாழ்க்கைச் சுவடுகள்' நூலில், பக்கம் 271)

சாகித்திய அகாதெமி விருதுபெற்ற பொன்னீலன் பிரமித்துப் போனேன்

நண்பர் செ.திவான் எழுதிய 'ஆரியப்பாதையில் பசுவதை' என்ற நூலைப் படித்த போது நான் பிரமித்துப் போனேன். இந்த நூல் அற்புதமான ஒளிவிளக்கு. அற்புதமான காரியம் செய்திருக்கிற செ.திவான் இன்னமும் நிறைய எழுத வேண்டும்.

சாகித்திய அகாதெமி விருதுபெற்ற திறனாய்வுத்தென்றல் தி.க.சி வரலாற்றுக்கடமையைச் சரியாகச் செய்தவர்

தமிழ்ப் பெருமக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற வரலாற்று ஆசிரியர் என் அருமை நண்பர் சீரிய வரலாற்று ஆய்வாளர் செ.திவான் சிறந்த பண்பாளர். தமது வரலாற்று கடமையைச் சரியாக செய்து வருபவர்.

முதுபெரும் எழுத்தாளர் சுந்தரராமசாமி வியப்பில் ஆழ்த்துகிறது

வாசிப்பில் நீங்கள் காட்டியுள்ள தீவிரம் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது; உங்கள் நூல்களின் தலைப்பே உங்களுடைய சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் மெய்ப்படச் செய்கிற பார்வையைக் காட்டுகிறது.

இலக்கியச்சோலை காப்பாளர், 'விடியல்வெள்ளி' ஆசிரியர் மு.குலாம் முஹம்மது எம்.ஏ. அவர்களின்

அணிந்துரை

நம்நாட்டின் நீண்ட வரலாற்றில் மகுடமாய் அமைவது விடுதலைப் போர் வரலாறு. இந்த மகுடத்தில் மணியாய் மிளிர்வது விடுதலைப் போரின் முதல் பகுதி (1600 களில் தொடங்கி 1809 வரை) விடுதலைப் போரில் இந்த முதல் பகுதிக்குத் தரவேண்டிய முக்கியத்துவம் வரலாற்றில் இன்றளவும் தரப்படவில்லை. உண்மையைச் சொன்னால் அது மறைக்கப்பட்டுவிட்டது. இதனால் தான் விடுதலைப்போர் வரலாற்றில் வேலுநாச்சியார்கள் தடந்தெரியாமல் போய் விட்டார்கள்.

வேலுநாச்சியாரின் வரலாற்றைப் போலவே விடுதலைப் போரில் தங்களைத் தந்த பல நூறு தமிழச்சிகளின் வரலாறும் மண்மூடிஇருக்கின்றது. இவற்றையெல்லாம் மறைத்துவிட்டுத்தான் விடுதலைப்போர் 1857ல் இருந்து தொடங்கிற்று எனப் பேசுகின்றனர். இந்த முதற்காலகட்டத்திற்கு பிரிதோர் சிறப்பும் உண்டு. இது இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே அணியில் ஒ்ன்றாய் நின்று ஒரு பெரும் எதிரியை எதிர்த்து வெற்றி கொண்ட காலம்.

இந்த வரலாறு வெளிச்சத்திற்கு வரும்போதெல்லாம் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் வரலாற்றால் பிணைக்கப்பட்டு இன்னம் அதிகமாக இறுக்கமும்,நெருக்கமும் பெறும். இன்றைய கால கட்டங்களில் இஃது மிகவும் அவசியம். ஏனெனில் இந்தியாவில் முளைத்துத் தழைத்துவிட்ட பாசிசம் இந்திய குடிமக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிளந்து பிரிவுபடுத்தி இரத்த ஆறுகளை ஓட்டிக் கொண்டிருக்கின்றது. இதனால் அண்ணன் தம்பிகளாய் வாழ்ந்து கொண்டிருந்த இந்துக்களும் முஸ்லிம்களும் இரு துருவங்களாக ஆக்கப்படும் அவலம். இந்த மடமையைக் களைய இதுபோன்ற வரலாற்று விளக்கங்கள் அனைவரையும் சென்றடைந்திட வேண்டும். குறிப்பாக இன்றைய இளைய தலைமுறைக்கு இது தவறாமல் சென்றடைய வேண்டும்.

வேலுநாச்சியார் தன் கணவன் வீரமரணத்தை அடைந்தபின் ஒரு முஸ்லிம் ஆண்மகனைப் போல் வேடம் தரித்து ஆங்கிலேயர்களிடமிருந்து தப்பித்து வெளியேறினார். அதுபோது அவர் தனக்கு ஜமால்கான் எனப்பெயர் சூட்டிக் கொண்டார் என்ற வரலாறும், அவ்வாறு வேலுநாச்சிக்கு உதவிட வந்த படைகளுக்கு திப்புசுல்தான் தளபதியாக வந்தார் என்ற வரலாறும், ஹைதர்அலியின் இராணுவ உதவிகளைப் பெற்று தன் கணவரின் உயிரைக்குடித்த ஆங்கிலப் படைகளை வீழ்த்தி மீண்டும் தன் ஆட்சியை நிலைநாட்டினார் என்ற வரலாறும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு தரப்பட வேண்டிய வரலாற்று ஊட்டச்சத்து.

இதைப் போலவே விடுதலைப் போரில் எழுச்சிமிக்கதொரு வரலாற்றைப் படைத்து 'தூக்குமேடை பஞ்சுமெத்தை' என மார்தட்டிய கட்டபொம்முவின் படையில் நான்கு முஸ்லிம் தளபதிகள் இடம் பெற்றிருந்தார்கள் என்ற இனிப்பான தகவல் நம் இளைஞர்களிடையே ஒரு வரலாற்றுப் பிணைப்பையும் நட்பையும் வளர்க்கும். கட்டபொம்முவின் படையில் இடம் பெற்ற நான்கு தளபதிகள் முஹம்மத் தம்பி, சின்னவரிசை , தர்மகுணவான், இபுராஹிம் சாஹிப், இசுமாயீல் இராவுத்தன் ஆகியோராவர்.

இதே போல் ஊமைத்துரையின் வீரப்போரில் முஸ்லிம்கள் பங்கேற்றதையும், விடுதலைப் போரின் முன்னோடி திப்புவின் படையில் இடம் பெற்ற இந்து பெருங்குடிமக்கள் என இந்த வரலாறு ஓர் ஒற்றுமையைப் பிரதிபலிப்பது. இப்படி வரலாற்றில் வல்லுநர் செ.திவான் அவர்கள் விடியல் வெள்ளி மாத இதழில் எழுதிய கட்டுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்த நூலினை தமிழ்ச் சமுதாயம் வாங்கிப் படித்து பயன்பெறுமாறு வேண்டுகிறேன்.

இவண்,

மு.குலாம் முஹம்மது

காப்பாளர்,இலக்கியச் சோலை.

நூலாசிரியர் - வரலாற்று ஆய்வாளர்

செ.திவான் M.A., M.Phil., *எழுதிய, பதிப்பித்த நூல்கள்*

வெளியில் ...

1. விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்
   (சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்காசிப்
   (உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல ...
   (சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
5. நபிபெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர் முகம்மது (நஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சியின் அழகும் ஆரோக்கியமும்
9. குடை
10. சிந்தனைக்கு
11. வ.உ.சியின் துன்பத்தின் கற்பனை
12. வ.உ.சியும் பெரியாரும்
13. வ.உ.சியும் தொல்காப்பியரும்
14. வ.உ.சி. பாடல்கள்
15. வ.உ.சி. யின் அரசியல் பெருஞ்சொல்
16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்
18. பாரதியும் காங்கிரசும்
19. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20. உண்மையின் சவுக்கடி
21. கூடங்குளம் அணுஉலையை மூடு
22. குடைப்புரட்சி
23. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
24. வாகை சூடி வரும் வைகோ
25. கலைஞரை வென்ற வைகோ
26. வைகோவின் பொன்மொழிகள்
27. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28. வ.உ.சி புகழ் பாடிய முன்னோடிகள்

29. வ.உ.சி.யின் நூற்கோவை
30. வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
31. ஆன்மிகச் சிந்தனை
32. வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
33. செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34. கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
35. வி.ஓ.சி. கண்ட பாரதி
36. இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
38. இறைவனின் திருநாமங்கள்
39. இறுதித்திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40. அண்ணாவின் மறுபக்கம்
41. மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
42. பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி
43. விடுதலையின் நிறம் பச்சை
44. ஆரியப்பாதையில் பசுவதை
45. கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
46. இலக்கியப்புரட்சியாளர் வ.உ.சி உதாவதானி
47. செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயமான்மியமஞ்சரி
48. வ.உ.சி.யின் உயில்
49. ஆலிப்புலவர்
50. தியாக நெருப்பில் வைகோ
51. வ.உ.சியும் திருக்குறளும்
52. அணைய வேண்டிய அயோத் .தீ.
53. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
54. வியத்தகு சாதனையாளர் வைகோ
55. மாநபி(ஸல்) காட்டிய மனிதஉரிமைகள்
56. வைகோ.... வெற்றிப்பாதை.... வீரச்சங்கொலி...

விற்பனையில்....

57. செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா.மெய்தீன் - விலை ரூ.100
58. விடுதலைப்போரில் வீரமிகு முஸ்லிம்கள் - அரிய ஆய்வு நூல் - விலை ரூ.100

விரைவில் ...

59. வ.உ.சியின் சிவஞான போதஉரை
60. பசும்பொன் தேவர் திருமகனார்

உள்ளே

பக்

தமிழகத்தில் முஸ்லிம்கள்		14
பாளையக்காரர்கள்		22
மார்த்தாண்டவர்மாகாலமுஸ்லிம்கள்	(1741)	34
ஆங்கிலேயரை எதிர்த்த ஆற்காடு நவாப் சந்தாசாகிப்	(1752)	50
மன்னர் பூலித்தேவர் படையில் முஸ்லிம்கள்	(1756)	65
வங்காளவேங்கைகை சிராஜ்உத்தெளலா	(1757)	73
மருதநாயகம் கான்சாகிப்	(1764)	83
ராணி வேலுநாச்சியாரும் முஸ்லிம்களும்	(1780)	127
வீரபாண்டியகட்டபொம்மன் படையில் முஸ்லிம்கள்	(1799)	138
மானங்காத்த மருதுபாண்டியர் காலத்தில் முஸ்லிம்கள்	(1800)	140
மன்னர் ஊமைத்துரை காலத்தில் முஸ்லிம்கள்	(1801)	155
மன்னர் சேதுபதி படையில் முஸ்லிம்கள்	(1801)	170
மருதுபாண்டியர் மறைவிற்குப் பின் முஸ்லிம்கள்	(1802)	175
தீரன்சின்னமலை காலத்தில் முஸ்லிம்கள்	(1805)	181
கேரளவர்மா (பழாசி ராஜா)கால முஸ்லிம்கள்	(1805)	186
தளவாய்வேலுத்தம்பி கால முஸ்லிம்கள்	(1809)	196

விடுதலைப்போரில் வீரமிகு முஸ்லிம்கள்

தமிழகத்தில் முஸ்லிம்கள்

அகிலத்திற்கோர் அருட்கொடையாகவும், அழகிய முன்மாதிரியாகவும் தோன்றிய அண்ணல் முஹம்மது (ஸல்) போதித்த இஸ்லாம் மார்க்கம் தமிழகத்திற்கு எப்போது வந்தது?. இக்கேள்விக்கான பதிலும், தென்னகத்திற்கு, இஸ்லாமின் வருகை குறித்த தகவல்களும், யூகத்தையும் அனுமானத்தையும் இப்படித்தான் இருந்திருக்கக்கூடும் எனும் வாதப் பிரதிவாதங்களையும் அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன.

சரித்திரச்சான்றாதாரங்கள்

கலாச்சாரப் பண்டிதர்கள், கல்வெட்டுத் துறை ஆய்வாளர்கள், தொல்பொருள் அகழ்வாய்வு நிபுணர்கள், சிலாசாசனச் சிந்தனையாளர்கள், சரித்திர ஜாம்பவான்கள், வரலாற்று விற்பன்னர்கள் ஒப்புக் கொள்ளும் வகையில் தமிழக முஸ்லிம்களின் பாரம்பரியத் தொன்மையினை அறுதியிட்டும், இறுதியாகவும் சொல்லுகின்ற காலம் விரைந்து வந்தாக வேண்டும். தமிழக முஸ்லிம்களின் தொன்மை பற்றிய சரித்திரச் சான்றாதாரங்கள் ஜொலிக்கின்ற போது தான் சிறப்பெய்திட முடியும்.

கள ஆய்வுகள்

தமிழகத்தில் இஸ்லாம் எப்போது வேரூன்றியது? அதன் வரலாற்றுப் பின்னணி என்ன? எப்.கிர்த் (Hirth) W.W.ராக்கில் (Rockhill) ஆகியோரது சீன அரேபிய வணிகம் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1987 இல் இராமநாதபுரம், பெரியபட்டினம் கடற்கரைப் பகுதியில் நடத்திய ஆய்வுகள், நொபருகராசிமா (Noboru Karashima) தலைமையில் தமிழக கேரளக் கடற்கரைப் பகுதிகளில் நடைபெற்ற ஆய்வுகள், தென்கிழக்காசியாவில் நடந்த ஆய்வுகள், இவைகளைப் போன்ற கள ஆய்வுப் பணிகளில் தமிழக முஸ்லிம் அமைப்புகள் இன்னும்முழுவதுமாக இறங்கிடவில்லை. தங்களின் பூர்விகத் தொன்மை குறித்த உண்மையினை நிலைநாட்டிட தமிழக

இஸ்லாமிய சமுதாயக் கல்வி சார்ந்த அமைப்புக்கள் வலுவான முயற்சிகள் எதிலும் இதுகாறும் ஈடுபடவில்லை. இந்த நிலையில் தான் தமிழக முஸ்லிம்களின் வரலாற்றைச் சிந்திக்க வேண்டியதிருக்கிறது.

யூல் – சில்வெயின்லெவி (Sylvainlevi)

'இந்திய வரலாற்றைப் பயில்வோர் அந்நாடு ஒரு கண்டம் என்பதையும், கடல்சார்ந்த நாடு என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்' என்பர் சில்வெயின் லெவி; 'கீழை நாடுகளின் கடற்பயணங்களைப் பற்றிய செய்திகளை நாம் அறியுந்தோறும் அவற்றின் வரலாற்றுத் தொன்மையும் உயர்ந்து கொண்டே போகிறது' என்பர் யூல் (Yule).

இந்துமாக்கடல் (The Indian Ocean)

மத்திய தரைக்கடல் நாற்புறமும் நிலஞ்சூழ்ந்த ஒரு பள்ளம் போன்றது. ஆனால் இந்துமாக்கடல் அத்தகைய தன்று. அதன் தென்புறம் மிகப்பரந்த நீர் நிலையோடு இணைந்துள்ளது. அக்கடலில் உள்ள நீரோட்டங்கள் அங்கு வீசும் பருவக்காற்றுகள் ஆகியவற்றின் விளைவாக ஆப்பிரிக்கக் கடற்கரை, அரேபியா, பாரசீக வளைகுடா, இந்தியா, அதனை அடுத்து அமைந்துள்ள தீவுகள், இந்தோசீனா, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே மிகப்பழங்காலந்தொட்டே கடற்பயணங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன.

தமிழகக்கடற்கரைகள்

தமிழகம் பெற்றிருக்கும் நீண்ட கடற்கரை, கடல்வழித் தொடர்புகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்தது. தமிழகத்தின் தொன்மையான இலக்கியங்கள் சங்கக்காலத் துறைமுகங்கள் பற்றி விரிவாகவே சொல்லியுள்ளது. கே.கே.பிள்ளை, டி.வி.மகாலிங்கம், பி.டி.சீனிவாச அய்யங்கார், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, மயிலை. சீனி.வேங்கடசாமி, அ.ராகவன் போன்றவர்கள் தமிழக வணிகத் தொடர்புகள் குறித்து விரிவாகவே விளக்கியுள்ளனர். தமிழகத்திற்கும் கிரேக்க, ரோமானிய, சீன, அரேபியருக்கும் இடையே வணிக உறவுகள் இருந்துவந்தது.

T.W.ஆர்னால்டு

கி.பி 1896 இல் 'இஸ்லாம் எப்படி பரவியது?' (The Preaching of Islam எனும் ஆய்வு நூலில், T.W..ஆர்னால்டு (Arnold) "இறுதியாக மேற்குக்கடற்கரை முழுவதுமாக அரேபியர்களின் வழி வந்தவர்களாக இருக்கக்கூடிய மக்களின் குடியிருப்புக்கள் இருக்கின்றன. இவர்களுடைய மூதாதையர்கள் இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக வந்தார்கள்" என்கிறார்*.

ஏழாம் நூற்றாண்டில்

அரபு நாட்டில் இஸ்லாம் அறிவிக்கப்பட்டது. புதிய தேசிய வாழ்வு துவங்கியது. அண்ணலாரின் (ஸல்) சேனைகள் மூன்று கண்டங்களையும் நோக்கி முன்னேறியது. முற்காலத்தில் ரோமராஜ்யம் உச்சநிலையில் இருந்ததைப் போல மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் எஜமானர்களாக ஏழாம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் உயர்ந்து நின்றனர்.

பி.டி.சீனிவாசஅய்யங்கார்

"ஏழாம் நூற்றாண்டில் அராபியர் சிரியா, எகிப்து பாரசீகம் (பர்ஷியா) ஆகிய நாடுகளை வெற்றி கொண்டு மீண்டும் இந்திய வணிகத்தின் இடைத்தரகராயினர்".** என்பர் பி.டி.சீனிவாசஅய்யங்கார்.

வி.கனகசபை

பின்னாட்களில் அராபியர்களும், கிரேக்கர்களும் இத்தமிழக வணிகத்தைத் தொடர்ந்து நடத்தினார் என்பர் வி.கனகசபை***

---

*......all along the west coast are settlements probably of Arab descent, whose original founders came to india by sea" by J.A.Baines,General report, London, 1893, p.167.

**In the VII Century the Arabs conquered Syria, Egypt and Persia and became again the intermediaries of Indian Commerce.....P.T.Srinivasaaiyengar, History of the Tamils from the earliest times to 600 A.D. , Madras, 1929, P 321

***Subsequently the Arabs and Greeks appear to have kept up the trade with Tamilakam (V.Kanakasabhai, The Tamils Eighteen Hundred Years Ago, Madras, 1966, P 31.

அரபகக் கப்பல்கள்

பஹ்ரைன்,ஏமன்,ஹோர்மூச் போன்ற அரேபியநாட்டுத் துறைமுகங்களிலிருந்து புறப்பட்ட அரபகக் கப்பல்கள் இந்தியக் கடல்களில் வலம் வந்தது. அரேபிய தென்முனைத் துறை முகங்களிலிருந்து புறப்பட்ட கப்பல்கள் 47 நாட்களில் தமிழகத்தின் எல்லையைத் தொட்டன. வணிகர்களாக வந்த அரேபியர்கள், சங்ககாலந்தொட்டே தமிழகக் கடற்கரைகளில் தங்கியிருந்தனர். பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், சிலப்பதிகாரமும், மணிமேகலை போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் இதற்குச் சான்று தருகின்றன.

அரபு வணிகர்கள்

தமிழ்நாட்டிற்கு வடமேற்கிலிருந்து வந்த அரபு வணிகர்கள் சேரநாட்டின் முசிறித் துறைமுகத்தில் தங்கியிருந்தனர். கடைவீதி என்று பொருள்தரும் 'பந்தர்' என்று தங்கள் வாணிகஞ்செய்த இடத்திற்குப் பெயரிட்டனர்.

பதிற்றுப்பத்து

சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில், ஆறாம்பத்து காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடியது. அதில் ஐந்தாவது செய்யுள் 'துஞ்சும் பந்தர்' ஆகும். "நன்கலவெறுக்கை துஞ்சும் பந்தர்க் கமழும் தாழைக் கானலம் பெருந்துறைத் (ஆறாம்பத்து5.45), கபிலர் பாடிய ஏழாம் பத்தில், ஏழாவது செய்யுளிலும், அரிசில்கிழார் பாடிய எட்டாம் பத்தில், நான்காவது செய்யுளிலும், அங்காடி என்று பொருள் தரும் 'பந்தர்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அரேபியரது வணிகத் தொடர்பினால் தமிழகத்து அரிசி, அரபுமொழியில் 'ஓருஸ்' என்று வழங்கப்படுகிறது.

பி.என்.குஞ்ஞன் பிள்ளை

கேரளத்தில் கொய்லாண்டி வட்டத்திலுள்ள 'பந்தாளயினி கொல்லம்' என்ற நகர் தான் பந்தர் என்று அழைக்கப்பட்டது என்று பேராசிரியர் இளங்குளம் பி.என். குஞ்ஞன்பிள்ளை குறிப்பிடுகிறார்.

---

*கேரளம் அஞ்சும் ஆறும் நூற்றாண்டுகளில், பக் 108;
Studies in Kerala History, 1970,Trivandrum, P.68.

சேரநாட்டு மிளகைக் கொண்டு போய், செங்கடல் துறைமுகங்களிலும், அலெக்சாந்திரியத் துறைமுகப் பட்டினத்திலும் விற்றார்கள். அங்கிருந்து நல்ல குதிரைகள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. வணிகம் நூற்றாண்டு, நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்தது.

பாபாரத்தன்

தமிழகத்துக் கடற்கரைப் பட்டினங்களில் வந்து தங்கிய அரேபிய முஸ்லிம்கள் இந்த நாட்டுப் பெண்களை மணந்தனர். தங்களது மார்க்கக் கோட்பாடுகளை இங்குள்ள மக்களிடம் பரப்பினர். அமைதியான வழியில் கத்தியின்றி, இரத்தமின்றி, இந்தத் திருநாட்டில் இஸ்லாம் மார்க்கம் வேரூன்றத் துவங்கியது. அண்ணலார் (ஸல்) காலத்திலேயே வடஇந்தியப்பகுதியிலிருந்து பாபாரத்தன் என்ற இந்துத்துறவி இருமுறை நேரில் சென்று அண்ணலாருடன் விவாதித்துப் பின்னர் இஸ்லாம் மார்க்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.* நபித் தோழர்களான அகாஷா(ரலி) பறங்கி பேட்டையில், சென்னை கோவளத்தில் தாமீம்அன்ஸாரி(ரலி) ஆகியோரது அடக்கஸ்தலங்கள், அண்ணலார் காலத்திலேயே சத்திய சன்மார்க்க சமரச இஸ்லாம் தமிழ்த்திருநாட்டில் நிலைத்திருந்ததை உறுதிப்படுத்துகிறது.

போர்த்துக்கீசியர்கள்

வாஸ்கோடகாமா போர்த்துக்கீசியர்களோடு இப்பகுதிக்கு வந்திருக்காவிடில், இந்தக் கடற்கரை முழுவதும் இஸ்லாம் மார்க்கத்திற்கு வந்திருக்கும்.

டபிள்யூ.எஸ்.ஸ்காப்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ் (Periplus of the Erithraean Sea) என்ற நூலைப் பதிப்பதித்த W.S.ஸ்காப், “கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு, முன்பே

*JohnA.Subhan, Sufismits Saints and Shrines, I Ed, Lagore, 1938, IInd Ed , Delhi, 1999, P.121.

அரேபியாவும்,எகிப்தும்,பண்டைய இந்திய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தன. பாரசீக வளைகுடாவில் பண்டமாற்றுச்செய்து கொண்டனர்" என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் போர்த்துக்கீசியர்களின் வருகைக்குப் பின் 16 ஆம் நூற்றாண்டில் அரேபியரின் வணிகம் அழிக்கப்பட்டது. அதுமட்டுமா? அவர்களின் மூதாதையர்கள் தமிழக மேற்குக் கடற்கரைகளில் உருவாக்கியிருந்த தங்களது வழிபாட்டுக் கூடங்களான, பள்ளிவாசல்கள் பலவும் அழிக்கப்பட்டன.

ஏ.பி.இப்ராஹிம் குஞ்சு

"The Portuguese demolished the ancient cathedral mosque, which was built ther on the first introduction of Islam in Malabar and made use of its materials for the building of the fort and the church.*

மலபாரில் முதன்முதலாக இஸ்லாம் அறிமுகப்படுத்தப் பட்டபோது கட்டப்பட்ட புராதன பள்ளிவாசலை போர்த்துக்கீசியர்கள் இடித்து, அதிலிருந்து கிடைத்த பொருட்களைக் கொண்டு கோட்டையையும் கோயிலையும் கட்டினார் என்று ஏ.பி.இப்ராஹிம் குஞ்சு தனது 'மாப்பிள்ளை முஸ்லிம்ஸ் ஆப் கேரளா' என்ற நூலில் (1989,பக்.38) விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

தமிழகக் கடற்கரையோரங்களில்

பழவேற்காடு, கோவளம், பரங்கிப்பேட்டை, தொண்டி, பெரியபட்டினம், பௌத்திர மாணிக்கபட்டினம், (கீழக்கரை) காயல்பட்டினம், நாகப்பட்டினம், தேங்காய்பட்டினம், கோட்டாறு, குளச்சல், கொல்லம், கொடுங்காளூர், கள்ளிக்கோட்டை, காஸர்கோடு என தென்னகக் கடலோரம் தீன்குலத்தோரின் சரித்திரம் துவங்கிற்று.

---

*Shaykh Zaynuddin, Hidayat ul Adhkiya lla Tariq till auliya, reprint Tirurangadi,1667, PP 66-70.

பாலக்காடுகணவாய்வழியாக

கடல்வழியே குமரி முனைக்கு வந்து,பிறகு கிழக்கு கடற்கரையின் இதரப் பகுதிகளுக்குச் செல்வது போல, கிராங்கனூர், கண்ணனூர், பொன்னானி ஆகிய மேற்குக் கடற்கரை ஊர்களிலிருந்தும் இருபதுமைல் அகலமுள்ள பாலக்காடு கணவாய் வழியாக கோயமுத்தூர் பகுதிக்கு வந்தனர். பின் அங்கிருந்து கரூர், புதுச்சேரி மதுரைப்பகுதிகளிலும் பரவினர். சோழ, பாண்டிய, சேர மன்னர்கள் காலத்திலும், மதுரைச் சுல்தான்கள் ஆட்சியிலும், ஆற்காடு நவாப்களின் காலத்திலும் முஸ்லிம்கள் தமிழகமெங்கும் பரவி வியாபித்தனர் இது பிந்தைய கால சரித்திரம்.

முதல் பள்ளி வாசல் – மாலிக்பின்தினார்

கடற்கரையோரங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் வழிபாட்டுஸ்தலங்கள், கடல்அரிப்புகள், இயற்கையின் சீற்றம், ஐராப்பியர்ஆதிக்கம் பெறுதல் போன்ற பல காரணங்களால் பல பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டன. வரலாற்றில் எஞ்சியிருப்பதில், மாலிக்பின்தினார் (Malik Bin Dinar) முயற்சியில் காசர்கோடில் (Kancherkot) (Kasergod) கி.பி.643சூனில்,ஹிஜ்ரி22ரஜப்பிறை 13இல் எழுந்தபள்ளிவாசல் இன்றும் அழிக்க இயலாத சரித்திரச் சான்றுகளுடன் திகழ்கிறது. 14 × 77 செ.மீ அகலத்தில் அராபியக் கல்வெட்டு அங்கு அத்தாட்சியாக இன்றும் இருக்கிறது.*

ஹாஜி அப்துல்லா இப்னு அன்வர்

ஹாஜி அப்துல்லா இப்னு அன்வர் முயற்சியால் திருச்சி கோட்டை ரயில் நிலையம் அருகே கட்டப்பட்டு, தற்போது இடிபாடுகளுடன் காணப்படுகின்ற கல்லுப்பள்ளி ஹிஜ்ரி 116 இல் (கி.பி.733) கட்டப்பட்டது. அதுவும் அழிக்க இயலாத ஆதாரமாகத் திகழ்கிறது. தமிழகத்தில் பன்னெடுங்காலமாக வணிகத்தாலும், மனித நேயத்தாலும், மார்க்கப் பிரச்சாரத்தாலும் வளர்ந்து, வருபவர்கள் முஸ்லிம்கள்; ஐரோப்பியரின் கடலாண்மை, ஆரியரின் ஆட்சி அதிகாரம், பிரித்தாளும் சூழ்ச்சி இவைகளால்

*Journal of the Epigraphical Society of India, Vol.25. 1999 Mysore, PP54,55, An Arabic Epigraph pertaining to early Islamic Mission to kerala, by G.S.Khwaja.

பாதிப்பிற்குள்ளாகி, பொருளாதாரத்திலும்., தங்களது வரலாற்றுப் பின்புலத்திலும் மிகவும் பின் தங்கி வருகின்றனர்தமிழக முஸ்லிம்கள். இவர்களது வரலாறு துவக்க காலந்தொட்டு, இதுவரையில் உள்ளதைத்தேடி எடுத்துத்தொகுத்திடும் தூய பணியினைத் தொடங்கிட வேண்டிய தலையாய கடமை ஓர்புறம்; விடுதலைப் போரில் பங்கேற்ற தீரர்கள் சரிதை முழுவதுமாகத் தொகுத்தளிக்கப்பட வேண்டிய கடமை மறுபுறம்; இவைகளைக் கவனத்தில் கொண்டு காரிய மாற்றிட வேண்டிய நிலையில் தமிழக முஸ்லிம் சமுதாயம் இருக்கிறது என்றால் மிகையாகாது.

பாளையக்காரர்கள்

ஒரு படைநிலைக்குத் தலைவன் எனப் பொருள்படும் பாளையக்காரன் (Palayakkaran) என்ற தமிழ்ச் சொல்லிருந்து தோன்றியதே பாலிகார் (Poligar) என்ற சொல்லாகும். தமிழில் 'பாளையம்' தெலுங்கில் 'பாலாமு'(Palamu) ஆங்கிலத்தில் ப்பாலாம் (Polam) என வழங்கப்பட்ட வார்த்தைகள் பாளையக்காரர்களின் நில உடமையைக் குறிப்பிட்டது.

மகாபாரதம்

ஸ்ரீ வில்லிப்புத்தூராழ்வார் இயற்றிய மகாபாரதத்தில் பதினொராம் போர்ச்சருக்கத்தில், கடைசிப்பாடல் *(45)* 'கங்குற்சிலை நூன் முனிவனுடன்' எனத்துவங்கும்; அதில் மூன்றாவது, நான்காவது வரிகளில்,

"இங்குத் துயில்வார் யாவரையும் இருபாளையத்தினிடந்தோறுஞ்
சங்கக் குரலாற் துயிலெழுப்பித் தபனன் குணபாற்றான் சேர்ந்தான்" என்று வருகிறது. மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானும், மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய பண்டித ம.கோபாலகிருஷ்ணையரவர்களின் முகவுரையுடன், மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருள் ஒருவரும் புத்தகவர்த்தகருமாகிய இ.மா. கோபால கிருஷ்ணக்கோனாரால் *1926* இல் *4* ரூபாய் விலையில் வெளியிடப்பட்ட அந்நூலில் பக்கம் *408* இல், "பாளையம்" என்ற சொல்லுக்கு "சேனை" என்று பொருள் தரப்பட்டுள்ளது.

தமிழ் லெக்ஸிகன்

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட *(1932)* தமிழ் லெக்ஸிகன் (வால்யூம் *5*, பகுதி *1* விலை ரூ. *2* பக்கம் *2638* இல் பாளையக்காரர் என்ற வார்த்தைக்கு விஜய நகர வேந்தராட்சியில் சிறிய நாட்டு அதிபராக ஆண்டு வந்த தலைவர்கள் என்றும், "பாளையப்பட்டு" எனும் சொல்லுக்கு அரசனுக்குப் போரில், உதவ வேண்டும் என்ற நிபந்தனையுடன் பாளையக்காரருக்கு விடப்பட்ட கிராமத்தொகுதி* என்றும் கூறப்பட்டுள்ளது.*

---

* Village or group of villages of a feudal cheiftain or Poligar held originally on condition of rendering Military service whenever required by his Suzerain.

முதற்குலோத்துங்கச்சோழன்

சோழராஜ்ஜியத்திற்கு ஏற்பட்டிருந்த தடைகளை எல்லாம் நீக்கி, தனது ஆட்சியில் பெரும்பகுதியை வெற்றிகரமாகவும், வளமானதாகவும் மாற்றியவன் முதலாம் குலோத்துங்கன் (கி.பி *1070 — 1120)** இவரது ஆட்சியில், சோழஇராச்சியத்தில் ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தைக் காண்கிறோம்.**

இவரது ஆட்சியில் அரசனது சேனை நாடு முழுவதிலும் அங்கங்கே கோட்டைக்காவற்படைகளாகவும், "கடகம்" என்றழைக்கப்பட்ட படைவீரர் குடியிருப்புக்களிலும் "பாளையம்" இருந்து வந்தனர்.*** இவரது ஆட்சியில் சோழ நாட்டில் அங்கங்கே படைவீரர் குடியிருப்பை ஏற்படுத்திக்காவலை வலுப் படுத்தியிருந்தார்.

முதலாம் குலோத்துங்கச் சோழனது தென்னாட்டுப் படையெடுப்பின் போது அவனது சேனை நாடு முழுவதும் அங்கங்கே தங்கி காவல் காத்து வந்தது.****

காகதியர்கள்

துர்ஜய குலத்தைச் சேர்ந்தவர்கள் காகத்தியர்கள்; இவர்கள் சாளுக்கியரின் வீழ்ச்சியில் ஏற்றம் பெற்ற "காகத்திபுர வல்லவர்கள்" என்று அழைக்கப்பட்ட ஆந்திர அரசர்கள் அல்லது தெலுங்கு நாட்டு அரசர்கள்; தங்களை "காகத்திபுரத் தலைவர்கள்" எனத் தம்மைப் பெருமையுடன் கூறிக்கொண்டவர்கள் ஆவர் *****

காகதிய அரசு

வேங்கிநாட்டையும் சோழநாட்டையும் ஒருசேர ஆண்ட முதற்குலோத்துங்கச் சோழரின் ஆட்சியின் இறுதியில் வேங்கிநாட்டில் அரசியற் குழப்பம் ஏற்பட்டது.******

---

*கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள் புத்தகம் *1*, சென்னை, *1989*, பக்.*413*.

** A new epock. A new era, K.A. Nilakanta Sastri, The Colas 1984, P.301.

***கே.கே.பிள்ளை, சோழர் வரலாறு, *1977*, பக். *438*.

****ந. இராசையா, மாமன்னன் பூலித்தேவன், *1992*, பக். *15*.

***** Transactions of the Archeological Society of South India, Madras, Vol.I, P. 246.

******கி.ர.அநுமந்தன். ந.க. மங்களமுருகேசன், இந்திய வரலாறு, *1976*, பக்.*165*.

இக்குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனி அரசை, 'அனுமகொண்டா'வைத் தலைநகராகக் கொண்டு 'இரண்டாம் புரோலா' எனும் காகதியர் நிறுவமுயன்றார். காகதியர்களின் தனி அரசு முதற்பிரதாபருத்திரர் என்பார் காலத்திலேயே செம்மைப்பட்டது.*

இரண்டாம் பிரதாபருத்திரன்

இத்தாலியப்பயணி மார்க்கோபோலோ, காகதிய 'ருத்திராம்பாளி'ன் ஆட்சியைப் புகழ்ந்து கூறியுள்ளார். அவளுடைய மகள் வயிற்றுப்பேரனான இரண்டாம் பிரதாபருத்ரன் காகதிய நாட்டை (கி.பி 1291 — 1323) ஆட்சி புரிந்தான்.** இவனது ஆட்சிக் காலத்தில் நிர்வாக வசதிக்காகத் தன் நாட்டை 77 பகுதிகளாகப் பிரித்து வைத்திருந்தான்.***

காகதிய நாட்டில் 'பத்மநாயக்கர்' இனத்திலிருந்து நாயக்கர்களைப் பொறுக்கி எடுத்து, அந்நாட்டை 77 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பத்மநாயக்கரைத் தலைவராக நியமித்து நாட்டில் அமைதி நிலவக்கூடிய புத்தாட்சி முறையைப் புகுத்தியவன் இரண்டாம் பிரதாபருத்திரன்.****

விசுவநாதநாயக்கர்

விஜயநகரப் பேரரசின் பெருவீர மன்னராய் விளங்கியவர் கிருஷ்ணதேவராயர் இவரது ஆட்சிக்காலத்தில் நாகமநாயக்கர் தட்சிணமகாமண்டலேஸ்வரராய் இருந்து தமிழ்நாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்தார். அவர் காசிக்குச் சென்று விசுவநாதப்பெருமானை வணங்கி நின்றார். கி.பி. 1495 இல் அவருக்கு மகன் பிறந்தான். விசுவநாத அருளால் பிறந்த பிள்ளையென்பதால் விசுவநாதன் என்று பெயரிட்டார். விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரால் மண்டலேஸ்வரராக நியமிக்கப்பட்ட விசுவநாதர், கி.பி 1529 இல் பெரிய படைகளுடன் தளவாய் அரியநாதருடனும் மதுரைக்கு வந்து, அங்கு நேரடி ஆட்சியை மேற்கொண்டார்.

*ந. சுப்ரமணியன், இந்திய வரலாறு, (கி.பி 1000—1707), 1976, பக். 173.

**ந.சுப்ரமணியன், இந்திய வரலாறு, இரண்டாம் பகுதி, 1969, பக். 46 .

***அ. இராமசாமி, தமிழ்நாட்டு வரலாறு, 1982,பக் 183.

****அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, சென்னை, 1966, பக் 106.

பாளையப்பட்டுமுறை

மதுரை நாட்டில், பாண்டியர் கீழ் ஆண்டு கொண்டிருந்த சிற்றரசர்கள் தங்களைப்பாண்டியர் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொண்டு உரிமை நாடி, வீறுகொண்டு கலகம் செய்யத் துவங்கினர். மதுரை நாட்டில் காடுகள் மிகுந்திருந்ததால் கள்ளர்கள் காடுகளில் இருந்துகொண்டு மக்களுக்கு எல்லையில்லாத தொல்லைகள் கொடுத்துவந்தார்கள். இதனால் மக்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியிருந்தார்கள்.

மதுரை நாட்டில் மக்களின் மனம் வேறுபட்டிருந்தது. இந்நிலையில் இப்பகுதியில் ஆட்சியினைச் சீருடனும், சிறப்புடனும் நடத்திட, நாட்டை பலபகுதிகளாகப் பிரித்து அரசியல், பொருளாதார, இராணுவ நோக்கங்களோடு பாளையக்காரர் முறையினை விசுவநாத நாயக்கர் மதுரை நாட்டில் புகுத்தினார்.

எத்தனை பாளையங்கள்?

விசுவநாதநாயக்கர் காலத்தில் எத்தனை பாளையங்கள் அமைக்கப்பட்டது என்பது பற்றி தெளிவாகச் சொல்லிட வாய்ப்பில்லை. எனினும் 72க்கும் மேல் பாளையங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று மதுரை நாயக்கர் வரலாற்றை ஆங்கிலத்தில் பாங்குற இயற்றிய ஆர். சத்தியநாதஅய்யர் கருதுகிறார்.* நாட்டு வரலாற்றுக் கதைகள் (Chronicles) கூறும் 72 பாளையங்கள்..............

72 பாளையங்கள்

பாண்டிய மண்டலத்தில் இருந்த பாளையங்கள் 72. பாஞ்சாலங்குறிச்சி, எட்டையாபுரம், நாகலாபுரம், காடல்குடி, குளத்தூர், மேல்மாந்தை, ஆற்றங்கரை, கொல்லபட்டி, கோலார்பட்டி, சந்தையூர், ஏழுமலை, இரசக்கனூர் (இரசக்கயனூர்) கோட்டையூர், மருங்காபுரி, மன்னார்கோட்டை, பாவாலி,

---

* Any how, it is hard to believe that the number of the Palaiyams created in the beginning remained the same to the end of the Nayak Regime...' ' The chronicles speak of the division of the country into Seventy-two Palaiyams....

R. Sathyanatha Aiyar, Histroy of the Nayaks of Madura, 1924, P.P58,59.

இலக்கையனூர், முல்லையூர், கடவூர், இடையகோட்டை, நிலக்கோட்டை, தேவாரம், இராமகிரி, கல்போது, கன்னிவாடி, தொட்டப்ப நாயக்கனூர், கம்பம், காசையூர், வாராப்பூர், தோகைமலை, படதூர், காமயநாயக்கனூர், தும்பிச்சிநாயக்கனூர், நத்தம்,வெள்ளிகுன்றம், மலையபட்டி, வடகரை, அம்மைய நாயக்கனூர், போடிநாயக்கனூர், சக்கந்தி, மதவானையூர், ரோசலைப்பட்டி, வீரமலை, பெரியகுளம், குருவிகுளம், ஆத்திபட்டி, இளசை, மதுவார்பட்டி, கோம்பை, கூடலூர், கவண்டன்பட்டி, குமரவாடி, உதயப்பனூர், கொல்லங் கொண்டான், படமாத்தூர், ஆய்க்குடி, சமுத்தூர், விருப்பாட்சி, கண்டவநாயக்கனூர், ஏழாயிரம் பண்ணை, கடம்பூர், மணியாச்சி, தலைவன்கோட்டை, நெற்கட்டான்செவல், சொக்கம்பட்டி, ஊற்றுமலை, சேத்தூர், சிவகிரி, சிங்கம்பட்டி, அழகாபுரி, ஊர்க்காடு, சுரண்டை ஆகிய 72 பாளையங்களின் பெயர்களின் விவரங்களைத் தருபவர் கவிராஜபண்டிதர் ஜெகவீர பாண்டியனார்.*

தென்பாண்டிச்சீமை முழுவதுமே பாளையக்காரர்களின் ஆட்சியே நிலவிவந்தது. அதாவது திருச்சிக்கு தெற்கே முழுவதும் பாளையக்காரர் ஆட்சிமுறையே இருந்துவந்தது. கி.பி.1565 முதல் கி.பி. 1700 வரை தமிழ்நாட்டின் அரசியல் அரங்கில் நாயக்கர்களின் ஆட்சியின் கீழ் அதிகாரம் வலிமை பெற்றிருந்தது.

சக்கரவர்த்தி ஔரங்கஜேப்

அகிலம் போற்றும் முகலாயப்பேரரசர் ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் படைகள் தென்னாட்டை நோக்கி விரைந்த காலம்; முக்கியத் தளபதியான ஜுல்பிகர்கான்(Dhulfegarkhan) (Zulfiqarkhan) கி.பி. 1690 இல் அதற்குத் தலைமை யேற்றிருந்தார்.** எட்டாண்டு கால மனந்தளராத முற்றுகைக்குப்பின் ஜுல்பிகர்கான், செஞ்சிக் கோட்டையை கி.பி. 1698 பிப்ரவரி 7 இல் கைப்பற்றிக் கொண்டார்.***

---

*பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம், முதல் பாகம், மதுரை, 1939, விலை ரூ.3 அணா 12, பக்கங்கள் 46,47.

**C.S. Srinivasaachari, A History of Gingee and its Rulers, Annamalai Nagar, 1943, P.273.

***Sri Jadunath Sarkar, History of Aurangzip, Vol V, Calcutta, 1924, P.72, P.108.

போரில் பெற்ற வெற்றிக்குப்பின்னர் ஆலம்கீர் ஔரங்கஜேப் தனது தளபதி துல்பிகர்கானை (ஜுல் பிகர்கான்) தென்னகப் பகுதிகளுக்கு நவாபாக நியமித்தார். ஹைதராபாத்தில் தக்காண இராஜபிரமுகர் என்ற பெயரில் ஒரு அதிபரையும் (அவரே நிஜாம் என்று அழைக்கப்பட்டவர்) நியமித்தார். நிஜாமிற்கு கட்டுப்பட்டவராக நவாப் இருக்க வேண்டும் என்ற நியதியையும் ஏற்படுத்தினார்.*

துல்பிகர்கான்

துல்பிகர்கான் செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசுப்பொறுப்புக்களைக் கவனித்து வந்தார். இவரது ஆட்சிப் பொறுப்பிலிருந்த கர்நாடக ராஜ்யம் என்பது அக்காலத்தில் நெல்லூர், வடஆற்காடு, தென்ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்கியதாகும்.**

ஆற்காடு நவாப்

கி.பி. *1707* இல் ஔரங்கஜேப் மறைந்ததற்குப் பின்னர், முகலாயரது ஆதிக்கத்தின் கீழிருந்தவர்கள் தன்னிச்சையாகச் செயல்படத்துவங்கினர். நவாப் தாவூத்கானைத் தொடர்ந்து (கி.பி. 1700 - 1708) நவாபாக வந்த சதாத்உல்லாகான் (Sadatullahkhan) காலத்தில் கி.பி. *1716* இல் செஞ்சியிலிருந்து தலைநகரம் முழுவதுமாக ஆற்காட்டிற்கு மாற்றப்பட்டது. கர்நாடாக நவாப் என்பவரே அது காரணமாக நாளடைவில் ஆற்காடு நவாப் என்று அழைக்கப்படலாயினர். கி.பி. *1732* இல் தோஸ்த் அலிகானும் கி.பி. *1740* இல் அவரது மகன் சப்தர்அலியும் ஆற்காடு நவாபாக இருந்தார்கள்.

அன்வர்உத்தீன்

தோஸ்த் அலியின் உறவினரான சந்தாசாகிப் நவாப் சப்தர் அலியை எதிர்த்தார். கி.பி. *1742* இல் தனது மைத்துனர் முர்த்தஸா அலியால் நவாப்சப்தர்அலி கொலை செய்யப்பட்டார்.

---

*செ.திவான்,கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும், பாளை,*2001*,பக்.*18*.

**வி.ராமமூர்த்தி, தென்னிந்தியக் கோட்டைகள், சென்னை, *1966*, பக்.*55*.

சப்தர்அலியின் மகன் சாத்அத்உல்லாஹ்கான் நவாபானார். அந்த நவாபையும், முர்த்தஸாஅலியும். நவாப்பிற்குப் பாதுகாவலாக இருந்த அன்வர்தீனும் சேர்ந்து கி.பி 1744 இல் கொன்றனர். அதனைத் தொடர்ந்து நவாப்பின் பாதுகாவலராக இருந்த அன்வர் உத்தீன் 28.1.1744 இல் ஆற்காடு நவாபானார்.

தென்னிந்தியாவில் மேலாண்மை பெற்றிட முஸ்லிம்களும், மராத்தியர்களும் போட்டியிட்டனர். உள்நாட்டுத் தகராறுகளை தங்களுக்கென சாதகமாக்கிக் கொண்டு. அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்திக்கொண்டனர். அவ்வேளையில்ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் தங்களது செல்வாக்கினை வளர்த்துக் கொள்ள துடியாய்த் துடித்தனர்.

சந்தாசாகிப்

மராத்தியரிடம் சிறைப்பட்டிருந்த சந்தாசாகிபை முஜபர்ஜங் காப்பாற்றி விடுவித்தார். சிறையிலிருந்து வெளியே வந்த சந்தாசாகிப் பிரெஞ்சுக் காரர்களின் துணையோடு நவாப் அன்வர்உத்தீனைப் போரில் கொன்று ஆற்காட்டைக் கைப்பற்றினார்.

நவாப் அன்வர் உத்தீனின் மகன் முஹம்மது அலி சந்தாசாகிபிடமிருந்து தப்பி திருச்சியை அடைந்தார். ஆங்கிலேயர்கள் அவருக்குப் பெரிதும் உதவினர். கி.பி. 1749 இல் நவாப் வாலாஜாமுஹமதுஅலிகான் பகதூர் சென்று முஹம்மதுஅலி தன்னை நவாபாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். திருச்சி தவிர எஞ்சிய பகுதிகள் அனைத்தையும் தனது கைவசம் வைத்திருந்த சந்தாசாகிப் தானே ஆற்காடு நவாப் என்று அறிவித்தார்.

ஆற்காடு நவாபாக தங்களைக் சொல்லிக் கொண்டிருந்த முஹம்மதுஅலியோ ஆங்கிலேயர்களின் கரங்களிலும், சந்தாசாகிபோ பிரெஞ்சுக் காரர்களின் கரங்களிலும் சிக்கிக்கொண்டனர். சந்தாசாகிபை துரோகத்தால் வென்ற முஹம்மதுஅலி போட்டி ஏதுமில்லாத ஆற்காடு நவாப் ஆனார்.

ஆந்திரத்திலிருந்து திருவாங்கூர் வரையிலான பகுதிக்கு ஆதிக்க உரிமை கொண்டாடி அதனை நிலைநாட்டப் பல போர்களை மேற்கொண்டார். தெற்குச் சீமையில் பாளையக்காரர் களாயிருந்த பலர் ஆற்காடு நவாபைத் தங்களது மன்னராக அங்கீரிக்க மறுத்தனர். இதனால் இருபது ஆண்டுகளாக தமிழகத்தின் தென் பகுதியின் உள்நாட்டில் போர்கள் நீடித்தது.

ஆங்கிலேயர்கள் ஆட்சியாளராகுதல்

இந்தப் போர்களில் நவாப் முஹம்மதலிக்கு ஆதரவாக ஆங்கிலேயப்படைகள் சென்றன. அந்தப் போர்களினால் ஏற்ப்ட்ட செலவுகளை ஆற்காடு நவாப் தர வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் கூறினர். ஆற்காடு நவாப்பும் போர்ச்செலவுகளைக் கொடுத்து வந்தார். அது போதாதென்று கி.பி. 1758 — 59 இல் பிரெஞ்சு தளபதி ஆங்கிலேயரின் சென்னைக் கோட்டை மீது தாக்குதல் நடத்தினார். அந்தப் போரில் ஏற்பட்ட செலவுகள் முழுவதையும் ஆங்கிலேயர் தமது நண்பரான நவாப் முஹம்மது அலியின் கணக்கிலே எழுதினார்கள். கி.பி. 1761 இல் பிரெஞ்சுக்காரர்களது பாண்டிச்சேரி கோட்டையின் மீது ஆங்கிலேயர் போர் தொடுத்தனர். இந்தப் போர்ச்செலவும் முஹமதுஅலியின் பற்றுக் கணக்கில் எழுதப்பட்டது.

இவ்வாறு ஆற்காடு நவாப்பின் மீது ஆங்கிலக் கும்பினியார் கடன் சுமையை ஏற்றிக் கொண்டே வந்தனர். நவாபின் கடன் சுமை அதிகரித்தது. கி.பி. 1763 இல் இன்றைய செங்கற்பட்டு மாவட்டத்தை கும்பினியருக்கு நவாப் கடனுக்காக விட்டுக்கொடுத்தார். அடுத்து நவாப்பிடமிருந்து தெற்குச் சீமையின் வரி வசூலை மேற்கொள்ளும் உரிமையையும் கும்பினியார் பெற்றனர். கி.பி. 1781,1785, 1787, ஆண்டுகளில் நவாப்போடு ஆங்கிலேயக் கும்பினியார் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

9.7.1791

கும்பெனியாரும் ஆற்காடு நவாப்பும் சேர்ந்து செய்து கொண்ட, *9.7.1791* ஆம் தேதியிட்ட ஒப்பந்தப்பட்டி கும்பெனியார் நவாப்பின் பெயரால் பாளையக் காரர்களிடத்து அதிகாரங்களைச் செலுத்திக் கொள்ளவும் உரிமை பெற்றனர். சீமைகளில் வரிவசூல் செய்யும் உரிமையையும் மெல்ல மெல்ல ஆங்கிலேயக் கும்பெனியார் பெற்றனர்.*

மெக்லியாடு

கி.பி. *1790* செப்டம்பரிலே மதுரைச்சீமையில் வருவாய் வசூலை மேற்பார்த்திட மெக்லியாடு என்ற வெள்ளையர் நியமிக்கப்பட்டார். கி.பி. *1795* பிப்ரவரி *8* இல் வெள்ளையர் படை இராமநாதபுரத்தில் நுழைந்தது. முத்துராமலிங்க சேதுபதி மன்னரது சொத்துக்கள் அனைத்தையும் கும்பெனியார் பறிமுதல் செய்தனர்.**

ஆங்கிலேயரின் ஆதிக்கவெறி

கி.பி. *1795* க்கும் கி.பி. *1799* க்கும் இடைப்பட்ட காலத்தில் தெற்குச் சீமையில் ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் அவர்களது உள்ளத்தில் நிறைந்திருந்த ஆதிக்கவெறியை பிரதிபலித்தது என்பர் டாக்டர் எஸ்.எம். கமால்*** மணப்பாறை, திண்டுக்கல் பகுதிகளில் ஆங்கிலேயக் கும்பெனியாரது அட்டகாசம் துவங்கியது. கும்பெனியார் லெட்சுமிநாயக்கர் என்ற மணப்பாறை பாளையக்காரரது பரம்பரை உரிமையை ஒழித்தனர்.**** பழனி பாளையத்தின் தலைவரை, திண்டுக்கல் கோட்டைச்சிறையில் தள்ளி அவரது பதவியையும் பறித்தனர்.

---

*C.U.Aitchison, A collection of Treaties, Engagements and Sandas, etc, Vol V, Calcutta, 1864, The Carnatic Treaty of 1792; Military Consultations Vol 136, 9.7.1791, P.2066.

**Madura District Collectorate Records Vol 1133, 4.9.1801.

***விடுதலைப்போரில் சேதுபதி மன்னர், *1987*, பக். *108*.

****Board of Revenue General Report, Vol II, 31.8.1795, P.74.

எர்ரமக் கோட்டையின் பாளையக்காரரை கும்பெனியார் பயமுறுத்தியதில் அவருக்கு பைத்தியமே பிடித்துவிட்டது.அந்தப் பாளையமும், மம்பாறை பாளையமும், குமாரவாடிபாளையமும் கும்பெனியாரது சொத்தாகியது. திண்டுக்கல் சீமையில் எப்ரவாடு சங்கம்பட்டி, மாத்தூர் பாளையங்கள் கி.பி. 1796 இல் பறிக்கப்பட்டு கும்பெனியாரது உடமையாக்கப்பட்டது.*

வணிகத்திற்காக வந்த வெள்ளைக் கும்பெனியார், வஞ்சகத்தால் இந்தத் திருநாட்டை வளைத்துக் கொண்டு தங்களை எதிர்ப்பவர்களை தங்களுக்கு வரிசெலுத்த மறுப்பவர்களைத் தண்டித்தும், தூக்கிலிட்டும், பாளையங்களைப் பறித்தும், கும்பெனியாரின் அதிகாரத்தை விரிவாக்கிக் கொண்டிருந்த கால கட்டம்.

பாளையங்களில் இராணுவம்

விஜயநகரப் பேரரசின் கீழ் சட்டரீதியான அந்தஸ்து பெற்று, நாயக்கர்கள் அல்லது நவாப்புகளின் ஆதிக்கத்தின் கீழ் பணியாற்றிய பாளையக்காரர்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளனர்.

பேரரசுக்கு திறை செலுத்துதல், தங்களது பாளையங்களில் நீதி செலுத்துதல், மன்னருக்குத் (நவாப்) தேவையான படைகளைப் பராமரித்தல் போன்ற அவர்களது கடமைகள் மத்தியகால ஐரோப்பிய நிலமானியப்பிரபுக்களின் கடமைகளை ஒத்திருந்தன. முகலாய இந்தியாவின் ஜாகிர்தாரின் முக்கியபணி மன்னருக்கு இராணுவப்பணி செய்வதே. வெள்ளையர் ஆட்சி அதிகார கால ஜமீன்தாரின் பணி வரிகொடுப்பதே. ஆனால் பாளையக் காரர்கள் இவ்விருவகைப்பணிகளையும் ஆற்றியதோடு அப்பணிகளை வகிப்பதால் கிடைக்கப்பெறும் உரிமைகளும் ஒருங்கே தங்களிடம் குவிந்திருந்தமையால் பாளையக்காரர்கள் பெருமளவு செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பர் டாக்டர் கே.ராஜய்யன்.

---

*Madura District Collectorate Records, Vol 1236, 4.8.1796, P.45-48.

அவர்களது இராணுவத்தில் அமரம் சேவகர் (Amaram Peons) கட்டுப் புடிசேவகர்(Cattabudy Peons) மற்றும் கூலிச்சேவகர்கள் (Mercenary Peons) என்ற மூன்று பிரிவினர் இருந்தனர். முதல் இருபிரிவினரும் சம்பளமாக நிலம் வழங்கப்பட்டது. மூன்றாம் பிரிவினருக்குப் பணமும் தானியமும் கூலியாக வழங்கப்பட்டது. பாளையக் காரர்கள் சுதந்திரமானதும் எழுச்சிமிக்கதுமான உணர்ச்சிகளைக் கொண்டிருந்தனர். அவர்களது உரிமைகள் வகுத்துக் கூறப்படாத நிலையில் அவர்கள் பெற்றுக்கொண்ட அதிகாரமும் அவர்களே அமைத்துக் கொண்ட நாடும் அவர்களை மன்னருக்கு, நவாப்பிற்கு, கும்பெனியாருக்கு, எதிராக எழச்செய்தது.

பாளையக்காரர் காலஆயுதங்கள்

பாளையக்காரர்களின் ஆயுதம் தரித்த யுத்த வீரருக்குக் காலரிஸ் (Colleries) என்று பெயர். இந்த வார்த்தை திருச்சிராப்பள்ளி தஞ்சாவூரில் வாசஞ்செய்யும் கள்ளர் (Kallars) என்ற வகுப்பாரின் பெயரிலிருந்து வந்தது.* பாளையக்காரர் படையில் தீக்குச்சி துப்பாக்கி ஏந்தியவர், ஈட்டி ஏந்தியவர் என்ற இருபெரும் பிரிவினர் இருந்தனர்.பீரங்கி, கைத்துப்பாக்கி, மதில்களில் நிறுத்தக்கூடிய பீரங்கிகள், கேடயங்கள், ஈட்டி தீக்குச்சி துப்பாக்கிகள் போன்றவை பொதுவாகப்பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் ஆகும்.

ஈட்டிகள்

ஈட்டிமூங்கிலால் செய்யப்பட்டது. இது 18 முதல் 20 அடி நீளம் கொண்டது. இந்த ஈட்டியின் நுனியில் சிவப்புக்குதிரை மயிரினால் செய்த குஞ்சம் ஒன்றைக் கட்டிக் கொள்வார்கள். குதிரைப்படையை எதிர்த்துத் தாக்கும் போது ஒரு சிறுமணியையும், அக்குஞ்சத்தோடு சேர்த்து கட்டிக்கொள்வார்கள். நெருங்கி நின்று அழுத்தமான வரிசைகளாக முன் அப்பியாசமின்றி நீண்ட உறுதியான அடியுடன் முன்னேறிச் சென்று அவர்கள் ஈட்டிகளை எதிர்த்துத்தூக்கி நிற்க, ஈட்டியைக் கையாளும் விதமும் வேகமும் மணியோசையின் சத்தமும் பிரகாசமும் குதிரைப் படையை வெருண்டோடும் படிசெய்யும்.

---

*குழந்தை வேலுச்சாமி, எ.வி. ஆசீர்வாத உடையார்த்தேவர், மறவர் சரித்திரம், ஸ்ரீவைகுண்டம், 1938, விலை ரூ. 2 அணா 8, பக். 59.

பிறைச்சந்திரன் வடிவில்

பாளையக்காரர்கள் வலைத்தடி (Valaithadi) (Bosuerang)என்ற விசித்திரமான ஆயுதத்தைப் பயன்படுத்தினர். பிறைச்சந்திரன் வடிவம் கொண்ட இவ்ஆயுதத்தின் ஓர் அற்றம் கடினமான தாகவும், மறு அற்றம் கூர்மையானதாகவும் இருந்தது. கடினமான மரத்தால் அல்லது இரும்பால் செய்யப்பட்ட வலைத்தடியின் வெளிவளைவு 24 அங்குலமும் , குறுக்களவு 18 அங்குலமும் கொண்டது. இலேசான பளுவற்ற ஓரத்தைப்பிடித்துக் கொண்டு பயங்கரமான விசையோடு எதிரிகள் மீது அதனை வீரர்கள் எறிவார்கள். தாக்கப்பட்டவனிடத்தில் அவ் ஆயுதம் தங்காவிட்டால், சுழல் வேகத்தில் எங்கிருந்து வீசப்பட்டதோ அவ்விடத்திற்கே திரும்ப அது வந்துவிடும். குறுகிய இலக்கையே தாக்கவல்லவை இவ்ஆயுதங்கள்*

தீக்குச்சி வெடியினர்

தீக்குச்சி வெடியினர் கோட்டையின் உயர்ந்த பகுதிகளில் அமர்ந்து கொண்டு நெருங்கிக் கொண்டிருக்கும் எதிரிகள் மீது சுடும்போது, கோட்டையிலிருந்து வீரர்கள் வீரத்தோடு போரிட்டனர். இதற்கிடையில் ஈட்டிவீரர்கள் சுவர்களில் வியக்கும் வண்ணம் வைக்கப்பட்டிருந்த கூர்மையான ஈட்டிகளை எடுத்துச் சுழற்றினர். சுவர்களில் ஏற்பட்ட பிளவை நோக்கிச் செல்லும் பகைவர்களால் ஈட்டியினரை நெருங்க முடியவில்லை. தாக்குதல் எங்கிருந்து வந்தது என்பதை சில வேளைகளில்தான் அவர்களால் கூற முடிந்தது.

தங்களது கட்டுபாட்டின் கீழ் வரம்பிற்குட்பட்ட அளவு இராணுவ வலிமை இருந்த போதிலும், பாளையக்காரர்கள் பெரும் முற்றுகைகளுக்கெதிராகப் பயங்கரமாகப் போராடியதை தமிழக வரலாறு தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

---

*டாக்டர் கே. ராஜய்யன், தமிழக வரலாறு, (1565 — 1967), 1980, பக். 48.

மார்த்தாண்டவர்மா கால முஸ்லிம்கள்
(டச்சுப்படை வென்ற குளச்சல் நூர் முஹம்மது)

இந்தியத் திருநாட்டின் சரித்திரத்தை அறிவதற்கு சாசனங்கள் மட்டுமே சான்றுகளாக நிற்கவில்லை. கர்ணபரம்பரைச் செய்திகள், இலக்கியம், பழைய நாணயங்கள் சிற்பம், சித்திரம், வெளிநாட்டார் எழுதி வைத்துச் சென்ற குறிப்புக்கள், அகழ்வாய்வின் முடிவுகள் போன்ற பலவகை ஆதாரங்களும் உள்ளது. நாம் இப்பொழுது விரும்பும் முறையில் நாட்டுச் சரித்திரத்தை நம் முன்னோர்கள் எழுதி வைத்துச் செல்லவில்லை என்பது உண்மை தான், நாம் இக்காலத்தில் கொண்டிருக்கும் மனப்பான்மைக்கும் நம் முன்னோர்கள் பெற்றிருந்த மனப்பான்மைக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. அவர்கள் தங்கள் மனத்திற்கு இசைந்தவாறு சரித்திரத்தை எழுதி வைத்தே சென்றிருந்தார்கள்.

மக்களுடைய விருப்பங்களும் உள்ளக்கிளர்ச்சிகளும் நாகரிகம் முன்னேற்றம் அடையுந்தோறும் நாளுக்கு நாள் மாறி வருகின்றன. அன்றி, அவை தேசந்தோறும் வேறுபடுகின்றன. பண்டைய மக்கள் சரித்திரத்தையும், காலமுறையையும் நாம் இப்பொழுது கருதுவதைப்போன்று மதிப்பிடவில்லை. அவர் களுக்குத் தெய்வபக்தியும் காவிய ரசனையுமே முக்கிய மானவைகளாகத் தோன்றின. எனினும், அவர்கள் சரித்திரங்களை எழுதாமல் விட்டுவிடவில்லை. பழைய புராணங்களில் நம்நாட்டுச் சரித்திரப் பகுதிகள் காணப்படுகின்றன. எனினும் அவைகளில் பல இடைச் செருகல்களும் திருத்தங்களும் உள்ளன என்பதை வரலாற்றாய்வாளர்கள் ஒப்புக் கொள்வர்.

பார்ஜிதர்

'கலியுகராஜ வம்சங்கள் பற்றிய புராண பாடம்' என்ற பெயரில் பார்ஜிதர் தொகுத்த நூல் உள்ளது. இதில் கி.மு நான்காம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையில் சுமார் ஐந்தாறு நூற்றாண்டுகளின் சரித்திரம் உள்ளது. மௌரியர், சுங்கர், கண்வர், சாதவாகனர்கள், வமிசாவளிகள்

பற்றிய ஆட்சி விவரங்கள் அதில் உள்ளது. மகததேசத்தைப் பற்றியும் அதைச் சுற்றியுள்ள நாடுகளுக்குரிய வரலாறு மட்டும் அதிலே காணப்படுகிறது. பரத கண்டம் முழுமைக்குமான சரித்திரம் அதில் இல்லை. எனினும் புராணங்களில் காணப்படும் செய்திகளைக் கொண்டும் சில சரித்திர முடிவுகளை வரையறுத்திட வேண்டிய நிலையில் உள்ளது.

காசிப்பிரசாதஜயஸ்வால்

கி.மு.700 முதல் கி.பி.770 வரையில் 1500 ஆண்டுக்களுக்குரிய சரித்திரம் 'மஞ்சுஸ்ரீமூலகல்பம்' என்னும் புத்தமத நூலில் காணப்படுகின்றது. ஸ்மஸ்கிருதத்தில் எழுதப்பெற்ற அந்த நூல் திபெத்திய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இவைகளை அடிப்படையாகக் கொண்டு 'இந்தியப் பேரரசின் வரலாறு' (ஆன் இம்பீரியல் ஹிஸ்டரி ஆப் இந்தியா) எனும் நூலினை காசிப்பிரசாத ஜயஸ்வால் தந்துள்ளார்.

கல்ஹணர்

'நீலமுனி' எழுதிய 'நீலமதபுராணம்' ஹேலாராஜர் பன்னீராயிரம் செய்யுட்களில் எழுதிய 'பார்த்திவாவலி', சேமேந்திரர் எழுதிய 'நிருபாவலி', ஸுவ்ருதர், பத்மமிஹிரர் ஆகியோர் எழுதிய நூல்கள், முதிர்ந்தோர் வாய்மொழிகள், சுவடிகள் இவைகளை ஆதாரமாகக் கொண்டு கி.பி.1148—49 இல் கல்ஹணர் 'ராஜதரங்கிணி' எனும் நூலாக எழுதினார். காஷ்மீரதேசத்தின் வரலாற்றைக் கூறும் நூல் இது. தமிழ்நாட்டிலும் இத்தகைய சரித்திரங்கள் உள்ளன.

கர்னல்மக்கென்ஸி

இந்தியாவில் முதன் முதலில் களஆய்வினைத் தொடங்கி வைத்தவர், மர்டாக்மெக்கன்சி — பார்பரா மெக்கன்சி தம்பதியரின் புதல்வர் கர்னல் மெக்கன்சி (1754 — 1821). இவர்நம் நாட்டுச் சரித்திரத்தை ஆராய்ந்து எழுதிட, அதற்குத் தேவையான ஆதாரங்களைத் தேடிச் சேகரித்தார். அதற்காக அவர் பல உதவியாளர்களை நியமித்து அவர்களை நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பி வைத்தார். அங்கங்கே உள்ள வயது முதிர்ந்தவர்களிடமும், முக்கியஸ்தர்களிடமும் கிடைத்த பழைய நூல்களையும் செய்திகளையும் சேகரித்தார். அவ்விதம்

கிடைத்தவற்றை அப்படியே தொகுத்துப் பிரதி செய்து வைத்துள்ளார்கள். அந்தத் தொகுதிகளுள் கர்ண பரம்பரைச் செய்திகள், நாட்டுச் சரித்திரங்கள், மகாத்மியங்கள், ஸ்தலபுராணங்கள், சிற்றூர் வரலாறுகள், கோயிற் சுவர்களினின்றும்பெயர்த்தெழுதிய கல்வெட்டுக்கள்., செப்பேட்டுப் பிரதிகள், சில்லறைப் பிரபந்தங்கள், நாட்டுப் பாடல்கள் ஆகியவை நிறைந்து இருக்கின்றன.

கொங்குதேசராஜாக்கள்

38 ஆண்டுகள் இந்தியாவிலும், ஜாவாவிலும் இலங்கையிலும் அலைந்து திரிந்து உழைத்துத்தொகுத்த 'மக்கன்ஸி தொகுப்பில்'* கிடைத்திட்ட 'கர்நாடகதேசராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்', 'கொங்குதேசராஜாக்கள், 'மதுரைத்தல வரலாறு', 'தஞ்சாவூரி ஆந்த்ரராஜுலு சரித்திரமு' (தெலுங்கு) போன்ற நூல்கள், கி.பி.15,16,17ஆம் நூற்றாண்டுகளின் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை எழுதுவதற்கு முக்கிய ஆதாரங்களாக உள்ளன.**

ஆர்.சத்தியநாதஐயர்

மதுரை நாயக்க மன்னர்களின் சரித்திரத்தை எழுதிய பேராசிரியர் ஆர்.சத்தியநாதஅய்யர், இத்தகைய நூல்களை நடுநிலைமையோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கண்ட முடிவே இந்தச் சரித்திரம் எழுதுவதற்கு முக்கியமான ஆதாரமாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்.***

கே.ஏ.நீலகண்டசாஸ்திரி

மதச்சார்பற்ற இலக்கியங்களில், நமக்கு மிகவும் பயன்படக்கூடிய, புத்தமித்திரர் எழுதிய, 'வீரசோழியம்', ஜெயங்கொண்டார் இயற்றிய 'கலிங்கத்துப்பரணி' ஒட்டக் கூத்தரின் 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்', 'மூவருலா', ஆகிய நூல்கள் நமக்குப் பெரிதும் பயன்படக்கூடியனவாக உள்ளன என்பர்.****

சாதத்நாமா

சரித்திரமாக இல்லாது இலக்கியச் சுவைபெற்ற காவியமாக பாரசீக மொழியில், வாலாஜாநவாபுகளின் சரித்திரத்தைக் கூறும் 'துஸ்கத் இ வாலாஹு' என்ற நூலும், 'சாதத் நாமா' போன்ற நூலும் உள்ளன.****

---

* ம.இராசேந்திரன், காலின் மெக்கன்சி வரலாறும், சுவடிகளும், சென்னை, 2002, பக்.30.

**தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி2, தி.நா.சுப்பிரமணியன் தொகுப்பு, 1957, பக்.உருச.(254).

***R.Sathyanatha Aiyar, History of the Nayaks of Madura, 1924, P.33.

****கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், முதற்பாகம், 1989, பக்.16,17.

ஜேக்கப்கிரீமின்

ஆதாரம் கிடைக்காத ஒரு காலகட்டத்தின் வரலாற்றை நாட்டுப்புறவியல் சான்றுகளைக்கொண்டு, வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு உருவானது. ஜேக்கப் கிரிமீனது, இக் கொள்கை பலரையும் கவர்ந்தது.

ஜார்ஜ்லாரன்ஸ்கொம்மே

நாட்டுப்புறவியல் ஒரு வரலாற்று அறிவியல் (Folklore as an Historical Science) என்ற பல தொகுதிகள் அடங்கிய நூலை ஜார்ஜ் லாரன்ஸ் கொம்மே (George Lawrence Gomme) *1908* இல் வெளியிட்டார்.

குனியா யனகித்

கொம்மேயின் கோட்பாட்டை குனியாயனகித் (Kuniyo Yanagit) என்ற ஜப்பான் நாட்டு, நாட்டுப்புறவியல்அறிஞர் ஆதரித்தார்.

ஹெக்டர் நோராசாட்விக்

ஹெக்டர் (Hector) நோராசாட்விக் (NoraChadwick) போன்றோர் நாட்டுப்புற இலக்கியங்களில் வரலாற்றுச் செய்திகள் இருப்பதைக் கண்டனர்.

இந்தியாவில்

நாட்டுப்புறவியல் சம்பந்தப்பட்ட செய்திகளை முதலில் தொகுத்தவர்கள் அயல் நாட்டுப்பயணிகள், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், ஐரோப்பிய கிறிஸ்தவ மிஷினரிகள்; இவர்கள் மக்களின் மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள இத்தகைய ஆய்வினை நடத்தினர். 'ராயல் ஆசிய சங்க இதழ்' (Royal Asiatic Society of Bengal) (1784) 'பம்பாய் ராயல் ஆசிய சங்க இதழ்' (Royal Asiatic Society of Bombay) (1804) 'பிரிட்டன் மற்றும் அயர்லாந்து ராயல் ஆசிய சபை இதழ்' (Royal Asiatic Society of Great Britain and Ireland 1829) 'இந்தியன் ஆண்டிகுவரி' (Indian Antiquary 1872)போன்ற இதழ்கள் நாட்டுப்புறச் செய்திகளையும் ஆய்வுகளையும் வெளியிட்டன.

ரெவரண்ட் எஸ். ஹிஸ்லாப் (Rev.S.Hislop)(1886) ரிச்சர்டு டெம்பிள் (Richard Temple)ஆகியோர் நாட்டுப்புற கதைத் தொகுப்பில் முன்னோடியாகத் திகழ்கின்றனர்.

மேரிபிரெரெ

பழைய தக்காண நாள்கள் (Old Deccan Days) என்ற நூலினை 1871 இல் மேரிபிரெரெ (MaryFrere) வெளியிட்டார். தென்னிந்தியாவில் சேகரித்த நாட்டுப்புறக் கதைகள் இதில் உள்ளது.

சார்லஸ் கோவர்

இந்திய நாட்டுப்புறப் பாடல் வரிசையில் வெளிவந்த முதல் நூலான (Folk Songs of Southern India)'தென்னிந்திய நாட்டுப்புறப் பாடல்கள்' என்ற நூலினை சார்லஸ் கோவர் (Charles E.Gover) 1871 இல் வெளியிட்டார்.

தாருதத்தா

இந்துஸ்தானின் பண்டைக் கதைப்பாடல்கள் மற்றும் புராணக் கதைகள் (Ancient Ballads and Legends of Hindustan) என்ற நூலை தாருதத்தா (Tarudutta) 1882 இல் வெளியிட்டார்.

நடேசசாஸ்திரி

தென்னிந்தியா பற்றிய நாட்டுப்புறவியல் தொகுதியை நடேசசாஸ்தரி 1885 இல் வெளியிட்டார்.

இ.ஜெ. ராபின்ஸன்

தென்னிந்திய கதைகள் மற்றும் பாடல்கள் (Tales and Poems of South India) நூலினை இ.ஜெ.ராபின்ஸன் (E.J.Robinson) வெளியிட்டார்.

தமிழகத்தில் கதைப்பாடல்கள்

முத்துப்பட்டன் கதை, நல்லதங்காள் கதை, அண்ணன்மார் சுவாமிகதை, காத்தவராயன் கதைப்பாடல், வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடல், இராமப்பய்யன் அம்மானை, கள்ளழகர் அம்மானை, பவளக்கொடி மாலை, அல்லியரசாணி மாலை, திவான் வெற்றி, சிவகெங்கைக் கும்மி, ஆதியூர் சரிதம்,

'கட்டபொம்மு இராமநாதபுர பேட்டி விருத்தம்', 'கான்சாகிபு சண்டை', 'இரவிகுட்டிப்பிள்ளை போர்', 'கன்னடியன் படைப்போர்', 'பூலித்தேவன் சிந்து பாடல்கள்' வரலாற்றுக்குப் பெரிதும் துணை புரிகின்றன. இராமப்பய்யன் கதைப்பாடலைநாயக்கர் வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணலாம். தேசிங்கு ராஜன் கதையை, கர்நாடக ராசாக்கள் சவிஸ்தாரம் போன்றவற்றுடன் ஒப்பிட்டு வரலாற்று நிகழ்ச்சியைத் தொகுத்து காண்பதைப் போல், குளச்சல் போர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை நாட்டுப்புறப் பாடல்கள் உலகுக்களிக்கின்றன.

திருவிதாங்கூர் அரசு

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் அடங்கிய திருவிதாங்கூரை மார்த்தாண்டவர்மா (கி.பி. 1729—1758) ஆட்சி புரிந்தார். திருவிதாங்கூர் அரசை உருவாக்கிய இவரைப் பற்றிய செவிவழிக் கதைகள் நிறையவே உள்ளன.

மார்த்தாண்டவர்மா

உள்நாட்டுக்கலகத்தையும்,வெளிநாட்டுப் படையெடுப்பையும் சாமர்த்தியமாகவும் உறுதியாகவும் நின்று சமாளித்து நிலையான அரசை நிறுவியவர் மார்த்தாண்டவர்மா.

வேணாடு

வேள்நாடு, வேணாடு என்றாயிற்று. இந்த நாட்டை ஆண்ட இரவிவர்மாவின் இரு புதல்வர்களில் மூத்தவர் ஸ்ரீபத்மநாபன்தம்பி; இளையவர் ஸ்ரீ இராமன் தம்பி; நாட்டை ஆளும் அரசர் நாடு நீங்கினால் அதன் உரிமை அந்நாட்டு வழக்கப்படி மருமக்களுக்கே சாரும்; இரவிவர்மாவைத் தொடர்ந்து, அவரது மருமகன் ஸ்ரீ வீர மார்த்தாண்டவர்மாவிற்கு ஆட்சி வர இருந்தது. ஆனால் இவ்வழக்கத்திற்கு மாறாக பத்மநாபன் தம்பியும், இராமன் தம்பியும் சூழ்ச்சி செய்தனர்.

சுந்தர அய்யர்

பத்மநாபன்தம்பியின் உற்ற மந்திரியான சுந்தரய்யர் பல வித சூழ்ச்சிகள் செய்தார். எட்டு வீட்டுப் பிள்ளைமார்களும் இதற்கு உறுதுணையாக நின்றனர். மார்த்தாண்டவர்மாவைக் கொல்ல பலவழிகளிலும் முயன்றனர்.

சதிசெய்தபிராமணர்கள்

மார்த்தாண்டவர்மா மன்னரானதும் மேல் குடிமக்கள் அரசனுக்கு எதிராகச் சதி செய்தனர். எட்டு வீட்டுப் பிள்ளைமார்களும், கோவில் நிர்வாக யோகக்காரர்களும் பிராமணர்களும் சதியில் முக்கியப் பங்கு வகித்தனர். கலகம் ஒடுக்கப்பட்டது. மார்த் தாண்டவர்மா கலகக்காரர்களை எதிர்த்த இடம் பத்மநாபபுரம், கலகத்தினை தலைமையேற்ற தம்பிமார்களைக் கொன்ற இடம் நாகர்கோவில் (தற்போது காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைந்துள்ள இடம்)

கலகக்காரர்களில் 42 பேர்கள் பத்மநாபபுரம் முக்கு மண்டபத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்டனர். கி.பி.1733 இல் நடைபெற்ற மன்னருக்கெதிரான கலகத்தில் சதி செய்த பிராமணர்கள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டனர்.*

சி.வி.இராமன்பிள்ளை

மலையாளத்தில் சி.வி.இராமன் பிள்ளை எழுதிய நூல் மார்த்தாண்டவர்மா. இதனை வித்வான் ஓ.கிருஷ்ணபிள்ளை 1954 இல் தமிழில் மொழி பெயர்த்தார். பி.கே.மேனன், ஆர்.லீலாதேவி ஆகியோர் இதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ளனர். சென்னை ஶ்ரீ சங்கர் தமிழில் பிறிதொரு மொழி பெயர்ப்பு செய்துள்ளார்.

பி.நாராயணன் நாயர்

திருவனந்தபுரம் கமலாலயா அச்சுக்கூடத்தில் பி.நாராயணன் நாயர் முயற்சியில் வெளிவந்த மார்த் தாண்டவர்மா என்ற கிருஷ்ணபிள்ளை மொழி பெயர்த்த நூலில், 356, 357,வது பக்கங்களில் மார்த்தாண்டவர்மாவைக் காப்பாற்றிட போரிட்டவர்களில் பலர் முஸ்லிம்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

---

*டாக்டர் அ.கா.பெருமாள், கன்னியாகுமரி மாவட்ட வரலாறு, 1995, பக். 51.

ஹாக்கிம்

சம்சுதீன், (ஷம்சுடீன்) பீராங்கான், நுறடீன் (நூருதீன்) ஹாக்கீம், உஸ்மான்கான் போன்ற முஸ்லிம்தீரர்கள் மார்த்தாண்டவர்மாவின் அணியில் போரிட்டு, திருவிதாங்கூர் அரசு நிலைத்திட உறுதுணையாயிருந்ததை விளக்கியுள்ளார். மன்னருக்கெதிரான சதிபற்றியும், அது முறியடிக்கப்பட்டது பற்றியும் இன்றும் நாஞ்சில் பேச்சு வழக்குக் கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தம்பிமார்கதை

மார்த்தாண்டவர்மா — தம்பிகள் உள்நாட்டுக்கலகம் குறித்து குமரிமாவட்டத்தில் தம்பிமார் கதை, ஒட்டன்கதை எனும் கதைப்பாடல்கள் உள்ளன. பப்புத்தம்பி, இராமன் தம்பி ஆகிய இருவரைச் சார்ந்தது தம்பிமார் கதை. மார்த்தாண்டவர்மாவைச் சார்ந்தது ஒட்டன் கதை.

கல்குளம் தாலூகாவில் தம்பிமார்களைச் சார்ந்த மலையாளக் கதைப்பாடல்களும், மார்த்தாண்டவர்மாவைச் சார்ந்து தம்பிமார்களை எதிர்த்துப் போரிட்ட அனந்தபத்மநாப நாடார் எனும் மாவீரரைப் பற்றியச் செவி வழிக்கதைகள் கல்குளம், விளவங்கோடு தாலூகாக்களில் இன்றும் வழங்கப்படுகின்றன.

மறைக்கப்பட்டவரலாற்றின் பக்கங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்ட வர்மாவைச் சார்ந்தும், தம்பிமார்களைச் சார்ந்தும் ஆக இருநிலைகளில் மக்கள் உள்நாட்டுக் கலகத்தில் ஈடுபட்டனர் என்ற செய்தியைத் திருவிதாங்கூர் வரலாற்றாசிரியர்கள் கூறவில்லை. ஆனால் கதைப்பாடல்கள் இதைக் கூறுகின்றன என்பர் அ.கா.பெருமாள்.*

நா.வானமாமலை

தி.நடராசன், க.சண்முகசுந்தரம், மு.அருணாசலம் இராமச்சந்திரன் செட்டியார், தி.இராசாராம், சக்திக்கனல், ஏ.என்.பெருமாள், விநாயகமூர்த்தி, நா.வானமாமலை, கேசவன்.

*கன்னியாகுமரி மாவட்ட வரலாறு, பக்.52.

லாரன்நாயகம்,தங்கத்துரை, விவேகானந்தன், க.சக்திவேல் சிவசுப்பிரமணியம் போன்றவர்கள் தமிழகத்தில் கதைப் பாடல்களைத் தேடி எடுத்துப் பதிப்பித்தவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் ஆவர். விடுதலைப்போரில் மார்த் தாண்டவர்மா காலத்து முஸ்லிம்கள் என்று தலைப்பிட்டு விட்டு, கதைப்பாடல்கள் குறித்தும், அவற்றின் சரித்திர முக்கியத்துவம் குறித்தும் சொல்லிக் கொண்டு செல்கிறாயே என்ற கேள்வி பிறக்கும். மார்த்தாண்டவர்மா காலத்தில், டச்சுக்காரர்களை குளச்சலில் எதிர்த்து வீரப்போரிட்டு மடிந்த மானமிகு முஸ்லிம்கள் பற்றி கதைப்பாடல்களில் செய்திகள் கிடைக்கின்றன. அவைகளைச் சொல்லப் புகுமுன் தான், கதைப்பாடல்கள் குறித்த பின்னணியினைக் கொஞ்சம் சொன்னேன்.

உள்நாட்டுக்கலகத்தை ஒடுக்கிய பின் மார்த்தாண்ட வர்மாவின் ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது கி.பி.1741 இல் டச்சுக்காரர்கள் இந்த நாட்டைக் கைப்பற்ற ஆயத்தமாயினர்.

மிளகு கொள்முதல்

கேரளக் கடற்கரைப் பகுதியில் டச்சுக்காரர்கள் தங்களின் மிளகு கொள் முதலில் ஏகபோக உரிமையினைப் பெரிதும் விரும்பினர். திருவிதாங்கூர் அரசு மார்த்தாண்டவர்மாவின் தலைமையின் கீழ் வளர்ச்சியடைந்தும், விரிவடைந்தும் வேகமாக முன்னேறியது. இது மேற்குக்கடற்கரையில் டச்சுக்காரர்களின் மிளகு கொள்முதலை வெகுவாகப் பாதித்தது.

இளையடுத்து சொரூபம்

மேற்குக் கடற்கரையில் மிகக் கூடுதலாக மிளகு விளையும் முக்கிய இடமான இளையடுத்து சொரூபத்தை (Elayadathu Swaroopam) மார்த்தாண்டவர்மா 1737 இல் கைப்பற்றினார். அது டச்சுக்காரர்களின் வாணிபத்தை மேலும் பாதித்தது. மலபாரில் நடைபெறும் காரியங்களை அறிந்து கொள்ள இலங்கையிலிருந்து டச்சுக்கவர்னர் வானிம் ஹோப் (Vanimhoff) (1739) கொச்சிக்கு வந்துசேர்ந்தார்.

25.2.1739

தென்திருவிதாங்கூரில், தேங்காய்பட்டினத்தில் திருவிதாங்கூர்மன்னர் மார்த்தாண்டவர்மாவை டச்சுக்கவர்னர் வானிம்ஹோஃப் சந்தித்தார். இளைய இடத்துசொரூபம் என்ற பகுதியை திருப்பித் தருமாறு கேட்டார். மார்த்தாண்டவர்மா மறுத்தார். டச்சுக்கவர்னர் மன்னருடன் போரிடப் போவதாக அச்சுறுத்தினார்.

விடுதலைப்போர்

'எனது நாட்டை ஆக்கிரமிக்கும் உன்னை நான் முறியடிப்பது மட்டுமல்ல; உனது தாய்நாடான ஹாலந்தையே கைவசப்படுத்த தீர்மானித்துள்ளேன்' என மார்த்தாண்டவர்மா வீரவுரை பகர்ந்தது, சுதந்திர உணர்ச்சி கொண்ட ஒவ்வொரு இந்தியனையும் மெய் சிலிர்க்க வைக்கும் என்பதில் ஐயமே இல்லை என்பர் தே.ப.பெருமாள்.* திருவிதாங்கூர் அரசுக்கு எதிராக டச்சுக்காரர்களோடு சேர்ந்து கொண்டு, தெக்கூம்பூர்(Tekkumkur), வடக்கூங்கூர்(Vadakkumkur), கொச்சி(Cochin), புரோகார்டு(Procaud) படைகள் சேர்ந்து கொண்டது.

கேப்டன்ஜோஹன்ஸ்ஹாக்கார்ட்

1739 அக்டோபர் *17* இல் கேப்டன் ஜோஹன்ஸ் ஹாக்கார்ட் தலைமையில் இலங்கையிலிருந்து டச்சுப்படைகள் வந்து சேர்ந்தது.**

திருவிதாங்கூர் அரசை எதிர்த்து கொல்லத்தில் போர் துவங்கியது. மார்த்தாண்டவர்மா மன்னருக்குச் சொந்தமான வெடிமருந்து கிட்டங்கியை கொல்லத்தில் டச்சுப்படைகள் தீ வைத்து எரித்தன. திருவிதாங்கூர் அரசுக்குத் சொந்தமான *6* பீரங்கிகளை டச்சுக்காரர்கள் கைப்பற்றினார்கள். *1740* மே மாதத்தில் யுத்தம் திருவிதாங்கூர் வடக்குப்பகுதியில் நடைபெற்றது. மேலும் இலங்கையிலிருந்து டச்சுக்காரர்களுக்குப் படைகள் வந்து குவிந்து கொண்டிருந்தது. டச்சுக்காரர்கள் குளச்சலைத் தாக்கிட திட்டமிட்டனர்.

---

*வேணாட்டு வேந்தன், *1980*, பக்.4.

**The Diary of Captain Hackert, Translation S.Krishna Iyer, J.K.S, Vol II, P.37.

குளச்சல்

தமிழகத்தின் இயற்கை துறைமுகம் குளச்சல்; யவனரும், கிரேக்கரும் வாணிபத்தின் பொருட்டு 3000 ஆண்டுகளுக்கு முன்பு வந்திறங்கிய துறைமுகப்பட்டினம் குளச்சல் இஸ்லாமிய வரலாற்றில் தனிச்சிறப்பு பெற்ற தலமாக இது விளங்குகிறது.

குளச்சிஸ்

கருங்கடலை அடுத்துள்ள ஒரு பெரிய வணிகத்தலம் குளச்சிஸ் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. குளச்சலின் பழைய பெயர் குளச்சை தான். இன்னும் வயதானவர்கள் குளச்சலை குளச்சை என்று தான் கூறுவர்*. பார்த்திபசேகரபுரம் கல்வெட்டில் குளச்சை இடம் பெற்றுள்ளது.**

குளச்சி என வழங்கப்படும் செந்நெல் இங்கு அதிகமாக விளைந்த காரணத்தால் குளச்சி என இவ்வூர் அழைக்கப்பட்டு, குளச்சலாகியது***

10.2.1741

டச்சு கமாண்டர் கொலேன்ஸ் (Gollenesse) தனது கப்பற்படைகளுடன் கொச்சியிலிருந்து குளச்சலுக்கு வந்து சேர்ந்தார்.****

ஏற்கனவே கன்னியாகுமரியில் இராணுவத்தளத்தை நிறுவியிருந்த டச்சுக்காரர்கள், குளச்சலில் தங்களது இராணுவ முகாமை பலப்படுத்திக் கொண்டு, அதனைத் தொடர்ந்து அதற்கு தெற்கே உள்ள பகுதிகளைக் கைப்பற்றிடத் திட்டமிட்டனர். கன்னியாகுமரி - குளச்சல் இடைப்பட்ட பகுதிகளை தங்களுடையதாக ஆக்கிக் கொள்ளத் தீர்மானித்தனர்.

---

*டாக்டர் எஸ்.பத்மநாபன், தென்னகத்தை தேடி வந்த இஸ்லாம், ஆய்வுக்களஞ்சியம், பிப்ரவரி 2004, பக்.9.

**Travancore Archeological Series, Volume III, part II, P.55.

***பெட்டகம், குமரி மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பொக்கிஷம், 2001, பக்.187.

****Records of Fort St.George, Letters to Fellicherry, Vol V, P. 35.

அப்பகுதிமக்களின் மேல் பல கொடுமைகளைச் செய்தும் வீடுகளை கொள்ளையடித்தும், பஜார்களைச் சூறையாடவும் செய்தார்கள்.* டச்சுப்படைகளால், தேங்காய்பட்டினம், மிடாலம் (Midalam) கடியபட்டனம் (Kadiapatnam) ஊர்கள் சூறையாடப்பட்டன. டச்சுக்காரர்கள் செல்வமிக்க நகரான இரணியலை (Eraneil) நோக்கி முன்னேறினர். இதற்கிடையில் மார்த்தாண்டவர்மா தனது வடபகுதி போரினைக் கைவிட்டு விட்டு கல்குளம் (kalkulam) நோக்கிப் புறப்பட்டார்.

படைகள்பலப்படுத்தப்படல்

மார்த்தாண்டவர்மா பத்மனாபுரம் நாயர் வீரர்களைத் தனது படையில் சேர்த்து படையை மேலும் வலுவாக்கினார். மற்றொரு படைப்பகுதி தளவாய் ராமஅய்யனால் அமைக்கப்பட்டு, துப்பாக்கி வீரர்கள், பீரங்கி மற்றும் குதிரை வீரர்களுடன் பலப்படுத்தப்பட்டது. ஐரோப்பிய படையிலிருந்து விட்டு விட்டு ஓடிய வந்தவர்களையும் தமது படையில் மார்த்தாண்டவர்மா சேர்த்துக் கொண்டார். அத்தோடு பரம்பரை நாயர்கள், மறவர்கள் என்றதற்கும் மேலாக ஈழவர்களையும், முக்குவர்களையும்., முஸ்லிம்களையும் படையில் சேர்த்துக் கொண்டார்.

10.8.1741

டச்சுக்காரர்களை எதிர்த்து மாபெரும் குளச்சல் போர் *10.8.1741* இல் நடைபெற்றது. இந்தப்போரில் டச்சுப்படை தோற்கடிக்கப்பட்டது.**

---

*Committing Several atrocities on the people, they plundered all the houses and robbed the bazaars....... D.Sankaran, Military system in Travancore, Ph.D thesis, M.S.University, Unpublished, March 2001, P. 76.

**The Momentous, combined and naval battle of Colachel between Marthandavarma, the king of Travancore, and the Dutch took place in August 1741, in which Marthandavarma inflicted a crushing defeat on the Dutch and once for all put an end to the ambition of the Dutch, to set up their colony in that country........ District Census Hand Book, Kanniyakumari District, 1981, Part XIII A&B, P15.

குளச்சல் போர் டச்சுக்காரர்களுக்கு முக்கியமான முதல் தோல்வியாயிற்று. டச்சுக்காரர்கள் கேரளத்திலிருந்து ஆதிக்கம் செலுத்த எண்ணியிருந்த கனவையும், விருப்பத்தையும், நோக்கத்தையும் முடிவிற்கு கொண்டு வந்தது.டச்சுக்காரர்களின் ஆயுத பலத்தின் மீது மாபெரும் அடியாக முதலில் விழுந்து, அதனுடைய தாக்கம் எவ்வளவு பெரிதாக இருந்ததென்றால் அதன் பின் டச்சுக்காரர்கள் அதிலிருந்து மீளவேயில்லை. டச்சுக்கம்பெனியானது அரசியல் விவகாரங்களில் தலையிடாமல் வணிகத்தை மட்டுமே கவனித்துக் கொள்ள தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொண்டனர்.*

Eustachio D Lannoy

போரின் முடிவில் டச்சுப்படைத் தளபதிகள் பிடிபட்டனர். டிலெனாய் (Eustachio D Lannoy), பிளமிங் (Fleming) டென்காடு (Doncaud) போன்ற பலரும் கைது செய்யப்பட்டு, பின்னர் மார்த்தாண்டவர்மாவின் படையில் உயர்பொறுப்பில் நியமிக்கப்பட்டனர்.**

திருவிதாங்கூரில், மேற்குக்கடற்கரையில்,. மலபார் பகுதியில் கேரளத்தில் டச்சுக்காரர்களின் நாடு பிடிக்கும் ஆசையை, அரசியல் அதிகார வெறியை முடிவுக்கு கொண்டு வந்தது குளச்சல் போர். இந்தப்போரில் பங்கேற்ற முஸ்லிம் தீரர்கள்......

பூவாறுரசாக்முதலாளி

பல மொழிகள் கற்றவர், பெரியவணிகர்; குதிரை வாணிபம் செய்து வந்தவர். இந்த நாட்டில் மலைகளிலிருந்து கிடைக்கும் வாசனைப் பொருட்களை வெளிநாட்டிற்கு அனுப்பியும் அங்கிருந்து பேரீச்சம் பழம் போன்றவகளை இறக்குமதி செய்திடும் வணிகர் பூவாறுரசாக் முதலாளி. இவர் துன்புறுவோருக்கு பொருள் கொடுத்து உதவுபவர்.

---

*But it put an end to the Dutch dreams of the conquest of kerala..... the company was reconciled to the position of mere traders without political pretensions..... K.M.Panikkkar History of kerala, 1498-1801, Annamalai Nagar, 1960, P.241.

**Tamil Nadu State, Kanniyakumari District , Gazetteers of India, 1995, P.117.

பப்புத்தம்பியும், எட்டு வீட்டு பிள்ளைமார்களும் பூவார்ரசாக் முதலாளியின் பெயரைக் கேட்டாலே பயந்து நடுங்குவார்கள்.* மார்த்தாண்டவர்மாவின் வீரர்களுக்கு மேற்கத்திய போர் முறைகளும், பயிற்சிகளும் பூவாறு ரசாக் முதலாளியின் தோட்டங்களில் அளிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை சுலைமான் சேட்

மார்த்தாண்டவர்மாவிற்கு ஆதரவாகச் செயல் பட்டவர் பாளையங்கோட்டை சுலைமான் சேட். இவருடன் வெடிமருந்தில் வான வேடிக்கை செய்வதிலும், துப்பாக்கி செய்வதிலும் புகழ்பெற்ற இஸ்மாயில் மூப்பன், செய்துஅலிமூப்பன், போன்றவர்கள் பூவாறு ரசாக் முதலாளியிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள்**

500 குதிரைகள்

குளச்சல் போரில், டச்சுக்காரர்களை வீழ்த்திட, இந்த நாட்டின் மானங்காத்திட 500 குதிரைகளை மார்த்தாண்டவர்மாவின் படைப்பிரிவிற்கு அனுப்பி வைத்தவர் பூவாறுரசாக் முதலாளி.***

யூசுப் – இஸ்மாயில்மூப்பன்

குளச்சல் போர் நடைபெறுவதற்கு முன் டச்சுக்காரர்கள் தூதராக வந்து குளச்சலின் படைவீரர்கள் தங்குவதற்கும் வணிகத்திற்கும் கோட்டை கட்டிட அனுமதி கேட்டனர். அதனை ஒப்புக் கொள்ளாவிடில் பயங்கரப் போர் மூளும் என எச்சரித்த போது, மாவீரன் செல்லையாவும், யூசுப்பும், இஸ்மாயில் மூப்பனும் தங்களது வாளையும், துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு பறங்கிகள் மீது பாய்ந்ததும், மாவீரன் அனந்த பப்பு நாடார் அவர்களை அப்போது தடுத்து நிறுத்தியதும் நாட்டுப்புறப் பாடல்கள் தரும் சரித்திரக் குறிப்புக்களாகும்.

---

*உதயமார்த்தாண்டன் ரவி, மாவீரன் அனந்தபத்மநாபன், பக்.57.

**முற்கூறிய நூல், பக்.61.

***டச்சுப்படை வென்ற குமார உதயமார்த்தாண்டன் நாடார், 1987, சென்னை, பக்.116.

குளச்சல் நூர்முஹம்மது

பீரங்கிகள் போல் உருவாக்கப்பட்ட பனை மரங்களின் பொந்துகளில் குண்டுகற்களும், வெடிமருந்துகளும் நிரப்பப் பட்டிருந்தது. அவை டச்சுப்படைகளை எதிர்த்து நிறுத்தப் பட்டிருந்தது. தளபதி குமார உதயமார்த்தாண்டன் நாடாரும், மலைக்குட்டிநாடார், மாவீரன் குளச்சல் நூர் முகம்மது, யூசுப், அந்தோணி அடிமை, ஜெபமணி நாடார் போன்றோர் குளச்சல் போரில் காட்டிய வீரம் மெச்சத் தகுந்தது.

திருவிதாங்கோடு செய்யது முகம்மது

திருவிதாங்கோடு ஜோசப் நாடார், நாகமணி நாடார் பள்ளியாடிநேசப்பெருமாள், குலசேகரப் பெருமாள்நாடார், காட்டுக்கடைஆசான், மூலச்சிஆசான், அதங்கோட்டு ஆசான் திருவிதாங்கோடு செய்யது முகம்மது போன்றவர்கள் குளச்சல் போரில் தீவிரங்காட்டி போரிட்டவர்கள் ஆவர்.

குளச்சல் முஹம்மது அலி

நாலுகெட்டுஆசான், ஆற்றூர்ஆசான், வன்னியப் பெருமாள் நாடார், செல்லப்பெருமாள் நாடார், சூசைமைக்கேல், குளச்சல் முஹம்மதுஅலி போன்றவர்கள் குளச்சல் போரில் டச்சுப் படையைத் தோற்கடித்து திருவிதாங்கோடு இராச்சியத்திற்கு மாபெரும் வெற்றியும், மங்காப்புகழும் ஈட்டித் தந்த அஞ்சாநெஞ்சினர் ஆவர்; இந்த நெஞ்சுறுதி படைத்த மாவீரர்களின் புகழ் நாட்டுப்புறப்பாடல்களில் இன்றும் பாடப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றது.

"கொல்லம் ஆண்டு 916 ஆடிமாதத்தில் துவங்கியது குளச்சல் யுத்தம். சிலோனில் நின்று வந்த டச்சு வீரர்களைக் கரையில் இறங்கச் சம்மதிக்காமல், கரையோரங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு நல்ல தோணிகளைச் சேகரித்து, சாமர்த்தியமுள்ள தோணிக்காரர்களையும் ஏற்பாடுசெய்தன்ன் மார்த்தாண்டவர்மா. அரசனுடைய குதிரைப் படையானது அதிசயப்படும்படியான சாமர்த்தியம் காட்டியது. ஓடிப்போன டச்சுக்காரர்களை அது

பின்பற்றித் தொடர்ந்தது. அநேகம் டச்சுப்படையாட்கள் மரணமடைந்தனர். குளச்சல் யுத்தம் திருவிதாங்கூர் சரித்திரத்தில் பிரதானப்பட்ட ஓர் நிகழ்ச்சியாகும். டச்சுக்காரர்களுக்கு மலபாரில் ராஜாதிகாரத்தை நிறுவுவதில் இருந்த ஆசை சாத்தியமல்ல வென்று இந்த யுத்தத்துடன் தெளிந்தது.*

விடுதலைப்போரில் முஸ்லிம்கள்

பறங்கியரை எதிர்த்து வீரப்போர் புரிந்து, டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தை திருவிதாங்கூரில் ஏற்படாமல் தடுத்து நிறுத்திய குளச்சல் போரில், குளச்சல் நூர்முஹம்மது, யூசுப், திருவிதாங்கோடு செய்யது முகம்மது, பூவாறு ரசாக் முதலாளி, இஸ்மாயில்மூப்பன், செய்யதுஅலி, பாளையங்கோட்டை சுலைமான்சேட் குளச்சல் முஹம்மதுஅலி போன்ற நூற்றுக் கணக்கான முஸ்லிம்தீரர்களின் பங்களிப்பும், இந்த நாட்டில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து அவர்கள் நடத்திய வீரப்போரும் என்றென்றும் நினைந்து போற்றத்தகுந்தது ஆகும்.

*திருவிதாங்கூர் சரித்திரம், *1939*, பக்.*103*, *104*.

ஆங்கிலேயரை எதிர்த்த ஆற்காடு நவாப் சந்தாசாகிப்

ஷாஜகான்

இளவரசர் குர்நம் என்று அழைக்கப்பட்டு பின்னர் அபுல் முஸஃப்ஃபர் ஷிஹாபுத்தீன் முஹம்மத் ஷாஹ்ஜஹான் (ஷாஜகான்) முகலாயப் பேரரசராக தனது முப்பத்தேழாவது வயதில் கி.பி.1627 இல் பட்டத்திற்கு வந்தார்.*

அபித்குலிகான்

புக்காராவின் காஜி (Quaziof Bukhara) அபித்குலிகான் (Abid Kuli Khan) அப்போது இந்தியாவிற்கு வந்தார். பேரரசர் ஷாஜகானின் அவையில் சேர்ந்தார். அரசரிடம் அமைச்சராகப் பணிபுரிந்தார்.

ஔரங்கஜேப்

அபுல்முஃஸஃப்ஃபர் முஹியுத்தீன் முஹம்மத் ஔரங்கஜேப் ஆலம்கீர் ஆட்சிகாலத்தில் கி.பி.1660 இல் அபித்குலிகான் அமைச்சரானார். மூல்தான் (Multan) சுபேதார் (Subahdar) ஆகவும் பணியாற்றினார். மெல்ல மெல்ல வேகமாக வளர்ந்த இவர் ஆண்வாரிசு வமிசத்தில் முதலாவது கலீபா அபூபக்கர் (ரலி) வழி வந்தவர். பெண்வாரிசு வழியில் அண்ணல் முஹம்மது நபி (ஸல்) வழி வந்தவர் ஆவார்.**

முதலமைச்சர்

கி.பி.1681 இல் அபித்குலிகான் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் முதலமைச்சரானார். கி.பி.1687 இல் கோல்கண்டா முற்றுகையில் பங்கெடுத்து போரில் காயமுற்று மரணமடைந்தார். அவரது கல்லறை ஆஸப் நகரில் (Asafnagar) உள்ளது.

---

* ஸையித்இப்ராஹீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, இரண்டாம் பகுதி, திருச்சி, 1976, பக். 74.

** A.Vadivelu, The Ruling Chiefs, Nobles & Zamindars of India, Madras, 1928, P.3.

ஷகாபுதீன் கெய்ஸ் உதீன்கான்

அபித்குலிகானின் மகன் சகாபுதீன் கெய்ஸ் உதீன்கான் பிரோஸ்ஜங் (Shahab-ud-dinGhazi-ud-dinkhan Firozjung) உரியமரியாதை அளிக்கப்பட்டு, ஔரங்கஜேப்பின் தளபதிகளிலேயே தலைசிறந்த தளபதியாக பணியாற்றி வந்தார். இவர் 1710 இல் மறைந்தார், இவரது கல்லறை டில்லி ஆஜ்மீர் கேட்டில் உள்ளது.

மீர்கமருதீன்

சகாபுதீன் கெய்ஸ் உதீன் கான்பிரோஸ் ஜங்கின் மகனாக 1671 இல் பிறந்த மீர்கமருதீன் (Mirkamruddin) தனது பத்தொன்பதாவது வயதில் ஔரங்கஜேப்பால் சின்காலிஸ்கான் (ChinKalichkhan)என்ற பட்டத்தைப் பெற்றார். பல போர்களில் வீரப்போர் புரிந்தார். பாராட்டுக்கள் பல பெற்றார்.கி.பி.1707 இல் ஔரங்கஜேப் மண்ணுலகிலிருந்து மறைந்தார். முகலாயப் பேரரசு வீழ்ச்சியுறத் துவங்கியது.

பஹாதூர்ஷாஹ்

முஅஃஸ்ஃஸம் என்னும் ஔரங்கஜேப்பின் குமாரர் ஷாஹ்ஆலம் பஹாதுர்ஷாஹ் எனும் பட்டத்துடன் ஔரங்கஜேப்பிற்குப் பின் அரியணை ஏறினார், அவரது காலத்தில் அயோத்தியின் சுபேதாராகவும், லக்னோவின் பௌஸ்தாராகவும் (Fauzdar) மீர் கமருதீன் என்ற சின்காலிஸ் கான் நியமிக்கப்பட்டார். பின்னர் கருத்து வேற்றுமை காரணமாக அப்பதவியிலிருந்து விலகி, ஓய்வெடுத்து வந்தார். பகதூர்ஷாஹ்வின், மறைவிற்குப்பின்னர் பதவிக்கு வந்த ஜஹான்தார்ஷாஹ்வின் (Jehandarshah) கீழ் தொடர்ந்து பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து பட்டத்திற்கு வந்த முகலாயஅரசர் பருக்ஷியார் காலத்தில், தக்காணத்தின் சுபேதாராக (கவர்னர்) மீர்கமருதீன் என்ற சின்காலிஸ்கான் நியமிக்கப்பட்டார். அவரே நிஜாம்—முல், பகதூர்பஜ்ஜங் என்ற பட்டத்துடன் (Nizam-Ul-Mulk Bahadur Fatch Jung) தக்காணத்தில் நிஜாமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

தக்காணம்

தக்காணம் ஒரு பீடபூமிப் பிரதேசம்; விந்திய சாத்பூரா மலைத்தொடர்கள் தக்காண பீடபூமியை வடநாட்டுப் பகுதிகளிலிருந்து பிரிக்கின்றன. தக்காண பீடபூமியை வடநாட்டுப்பகுதிகளிலிருந்து பிரிக்கின்றன. தக்காணப் பீடபூமியில் நர்மதை ஆறுபாய்வதால் அப்பிரதேசம் நிலவளமுற்று செழிப்புத் தன்மையுடன் திகழ்கின்றது. வடநாட்டுப் பேரரசர்கள் தக்காணத்தைப் பொன்வயலாகக் (Eldorddo) கருதினார்கள். கிழக்கில் வங்களாவிரிகுடாவும், மேற்கில் அரபிக்கடலும், வடக்கில் நர்மதை ஆறும், தெற்கில் தமிழகமும் தக்காணத்தின் புவியியல் எல்லைகளாகும்.*

ஐதராபாத்

தக்காணம் என்பது 'தஷிணம்' என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். ஆங்கில மொழியில் டெக்கான் எனப்படும். தக்காணம் நர்மதை, கிருஷ்ணா என்ற கிருஷ்ணவேணி ஆறுகளுக்கு இடைப்பட்ட. உயர்ந்த நிலப்பரப்பை குறிக்கும். அதாவது நர்மதைக்குக் தெற்கிலுள்ள இந்தியத் தீவக்குறை முழுமையும் அதில் அடங்கும். போத்துக்கீசியர் 16 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம் அரசரான பிஜப்பூரைச்சுட்டவும், ஆங்கிலேயர் அதன் பிறகு ஐதராபாத்தைக் குறிக்கவும் தக்காணம் என்ற பெயரைப் பயன்படுத்தினர்.**

கர்நாடக நவாபு

முகலாயப் பேரரசர் ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் படைகள் தென்னாட்டைத் தாக்கியது. ஔரங்கஜேப்பின் தளபதி ஜுல்பிகார் கான் கடுமையாகப் போராடி செஞ்சியை 1698 பிப்ரவரி 7 இல் வென்றார். போரின் வெற்றிக்குப் பின், தென்னகப் பகுதிகளுக்கு நவாபாக ஜுல்பிகார்கான் நியமிக்கப்பட்டார்.

---

* டி.வி.சீனிவாசன், பாமினி அரசின் வரலாறு, சென்னை, 1977, பக்.2,3.

** ப.சிவனடி, இந்திய சரித்திரக் களஞ்சியம், தொகுதி மூன்று, 1990, சென்னை, பக்.58.

ஹைதரபாத்தில் (தக்காண நதில்) இராஜபிரமுகர் என்ற பெயரில் ஒரு அதிபரையும் (அவரே நிஜாம் என்று அழைக்கப்பட்டவர்) நிஜாமிற்கு கட்டுப்பட்டவராக கர்னாடக நவாப் இருக்க வேண்டும் என்ற நியதியும் ஏற்படுத்தப்பட்டது.

கர்நாடகம்

கன்னடமொழி வழங்கும் கர்னாடகத்திற்கும் இந்தக் கர்னாடகத்திற்கும் சம்பந்தமில்லை. விஜய நகரப் பேரரசை வீழ்த்தியபிறகு தக்காணச் சுல்தான்களான விஜயபுரி என்ற பிஜப்பூர் மன்னரும், கோல்கொண்டா மன்னரும் அப்பேரரசின் எஞ்சிய பகுதிகளைப் பதினேழாம் நூற்றாண்டில் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். அவை பிஜப்பூர் கர்நாடகம், கோல்கொண்டா கர்நாடகம் என்றும் பெயர் பெற்றன. வடபகுதி பிஜப்பூருக்குரியது. கரையோரச் சமவெளியாவும் கோல்கொண்டாவிற்குரியது. இந்தச்சமவெளிப் பகுதியைப் பிரிட்டிஷார் கர்நாடகம் என்று சுருக்கி அழைத்தனர்.

நவாபு – பிரதிநிதி

நவாபு என்ற பாரசீகமொழிச் சொல்லுக்குப் பிரதிநிதி என்று பொருள். நவாபு என்றால் முகலாயப் பேரரசர்களின் மேலாண்மைக்கு அடங்கிய பிரதிநிதியாக இருக்க வேண்டும்.

கர்நாடக நவாபு

கர்நாடக நவாபாக சுல்ஃபிகர்கான் முதலில் ஔரங்கஜேப்பால் நியமிக்கப்பட்டார். செஞ்சிக் கோட்டையைப் பிடித்ததும், சுல்பிகார்கான் அதில் தங்கியிருந்து ஆட்சி நிர்வாகத்தை நடத்தினார். அந்த இடம் தனது உடல் நலத்திற்கு உகந்ததாக இல்லை என்று அவர் பின்னர் ஆட்சி பீடத்தை ஆற்காட்டுக்கு மாற்றினார். சுல்பிகர்கானைத் தொடர்ந்து அவரது உதவியாளராயிருந்த தாவூதுகான்(Daudkhan) *(1700—1708)* ஆட்சிப் பொறுப்பிலிருந்தார். அதன்பின் அவர் சாதத்துல்லாகான் என்பவரை நவாபாக அமர்த்தினார்.

ஆற்காடுநவாப்

சதாத்துல்லாகான் என்ற முஹம்மது செய்யது (Saadatullah Khan @ Muhamad Saiyid) காலத்தில் கி.பி.1710 இல் செஞ்சியிலிருந்த தலைநகரம் முழுவதுமாக ஆற்காட்டிற்கு மாற்றப்பட்டது. கர்நாடக நவாப் என்று அழைக்கப்பட்டு வந்தவர்கள் அதற்குப்பின்னர் ஆற்காடு நவாப் என்று அழைக்கப்படலாயினர்.

நவயத்துகள்

ஆற்காட்டின் முதல் நவாபு என்று கருதப்படும் சாதத்துல்லாகான் 'நவயத்துகள்' மரபில் வந்தவர் ஆவார். 1732 இல் சதாத்துல்லாகானின் மருமகன் தோஸ்த்அலி(Ali Dost Khan) ஆற்காடு நவாபானார்.

தெற்குநோக்கி

நிலப்பகுதிகளை இணைக்கும் கொள்கையைப் (Policy of Annexation) பின்பற்றிய தோஸ்த் அலி தனது மருமகன் உசைன் தோஸ்த்கான் என்ற சந்தாசாகிப் மற்றும் தனது மகன் சஃப்தர்அலி ஆகியோர் தலைமையில் தெற்குநோக்கி 12000 வீரர்களைக் கொண்ட பெரும் படையை அனுப்பி வைத்தார்.

செல்வாக்கு நிலை நிறுத்தப்படுதல்

சப்தர்அலி தஞ்சாவூரை நோக்கிச் சென்று, கிபி1739 இல் மராத்திய மன்னர் சயாஜி (Sayaji)யை வென்றார். சந்தாசாகிப் தனது படைவீரர்களுடன் 1936இல் மதுரை நாட்டை நோக்கி வந்து அதனை வென்றார். நவயத்துவம்சத்தினரான ஆற்காடு நவாபுகள் தஞ்சையிலும் மதுரையிலும் தங்களது செல்வாக்கை நிறுவினர்.*

திருச்சியில்

திருச்சியில் சுதந்திர அரசை சந்தாசாகிப் நிறுவினார். அப்போது மதுரை—திருச்சி அரசை இழந்தவர்கள் மராத்தியரிடம் உதவி கேட்டு விண்ணப்பித்தனர்.

---

*Press list of Ancient Dutch Records, P.26.

தமது அதிகாரத்திற்கு எதிராக ஆற்காடு நவாப் (நவயத்தவர்கள்) காட்டிய அவமதிப்பாலும், தன்னுடைய அனுமதியின்றி நிலப்பகுதிகளை அவர்கள் கைப்பற்றியதால் கோபமுற்ற நிஜாம் ஆஸப்ஷா, ஆற்காடு நவாப்பைக் கண்டிக்கும் வாய்ப்பை மராத்தியரிடம் விட்டு விட்டார்.

மராத்தியர்படையெடுப்பு

1740 மே மாதத்தில் மராத்திய படைத்தளபதி ராகுஜிபோன்ஸ்லேயும் (Raguji Bhonsle) பதேசிங்கும் (Fateh Sing) *40000* முதல் *50000* வீரர்கள் அடங்கிய குதிரைப் படையுடன் தமிழகத்திற்கு விரைந்தார்கள்.*

1740 மே 20

சந்திரகிரிக்கு அருகாமையில் உள்ள கணவாயில் அரண் கொண்ட மராத்தியர் *1740* மே*20* இல், நவாப்பின் படைகளைத் தாக்கினார்கள். தோஸ்த்அலியும் அவர்து மகன் ஹசன்அலியும் (Hasanali) கொல்லப்பட்டனர்.

சப்தர்அலி

சப்தர்அலி தஞ்சாவூரிலிருந்து முன்னேறினார். இவர்கள் செல்வதற்குள் ஆற்காடு வீழ்ந்தது. ஆற்காடை காலி செய்திட ஒரு கோடி ரூபாய் மராத்தியருக்கு கொடுத்திட சப்தர்அலி ஒப்புக் கொண்டார். அத்தோடு திருச்சிராப்பள்ளியை சந்தா சாகிபிடமிருந்து கைப்பற்றிக் கொள்ள மராத்தியருக்கு அனுமதியும் அளித்தார். சந்தாசாகிபின் ஆட்சியை ஒடுக்கிட மராத்தியருக்கு நான்கு லட்சம் ரூபாய் பரிசளிப்பதாகவும வாக்குறுதி அளித்தார் சப்தர்அலி. By a secret article of the settlement he promised to give a present of Four lakhs of Rupees to the Marathss for the supresssion of the regime of Chanda Sahib** Heal so granted them permission to take possession of Tiruchirapalli for themselves***

---

*Public Consultations, madras July 1740, Vol65, P.147

**K.Rajayyan, Selections from History of Tamilnadu, 1978, P 100-101 .

*** Defence of Lord Pigot, 1777 , p16.

சந்தாசாகிபின் வெற்றி

சந்தாசாகிப் தனது மைத்துனர் சப்தர்அலியால் வஞ்சிக்கப் பட்டார். 1741 பிப்ரவரியில் ஹுட்டியின் (Gooty) *மராத்திய தளபதி முராரிராவ்* (Murari Rao) *தலைமையில் 10000 குதிரைப் படை வீரர்கள் திருச்சிக்கு வந்தனர். சந்தாசாகிபின் படைகளோடு மேற்கண்ட போரில் தோல்வி கண்டனர்.* An advanced party of the Marathas marched to Tiruchirapalli but suffereed a reverse in a battle with the forces of ChandaSahib*

புத்தாசாகிப் – சாதக்சாகிப்

வெகுவிரைவில் மராத்தியர் திருச்சி கோட்டைக்கு அருகில் நிலை கொண்டு, கோட்டைக்குரிய தொடர்பைத் துண்டித்தனர். வடக்கு எல்லையைப் பாதுகாக்கும் பொருட்டு நவயத்படையினர் புத்தாசாகிபின் தலைமையில் முன்னேறினர். தனது சகோதரரான சாதக்சாகிப்புடன் (Sadak Sahib) திண்டுக்கல்லை அடைந்த புத்தாசாகிப் அங்கு மராத்தியரை முறியடித்தார். திருச்சி நோக்கி விரையும் வேளையில் ராகுஜி போன்ஸ்லே என்ற மராத்திய தளபதி மணப்பாறையில் அவர்களைத் தடுத்து நிறுத்தினார். தீவிரமான போரில் புத்தாசாகிப்பும், சாதக்சாகிப்பும் கொல்லப்பட்டனர். திருச்சியில் முற்றுகையிற்றிருந்த மராத்தியர் படை கோட்டையின் சுவர்கள் மீதேறி குதித்து, வலிமை இழந்திருந்த சந்தா சாகிப்பின் படைகளைத் தாக்கி கோட்டையைக் கைப்பற்றினர்.

அபித்அலி

1741 மார்ச் *13* இல் மராத்தியர்கள் சந்தாசாகிபையும் அவரது மகன் அபித்அலியையும் (Abidali) கைதியாக பிடித்துச் சென்றார்கள். பின்னர் அங்கிருந்து பீராருக்கு (Berar) கொண்டு செல்லப்பட்டு, 1744 டிசம்பரில் சதாராவிற்கு கொண்டு சென்றார்கள். பிரெஞ்சுக்கரர்களின் உதவியுடன், டூப்ளேயின் முயற்சி (Dupleix) யால் 7 இலட்ச ரூபாய் மராத்தியரிடம் வழங்கப்பட்டது. பின்னர் *1748* நவம்பரில் எட்டுவருட சிறை வாசத்திற்குப் பின் சந்தாசாகிப் விடுதலையானார்.*

---

*Public Country Corrpesondence, Vol I, P.89.

முர்தஸா அலி

சந்தாசாகிப் கைதியாக இருந்த காலத்தில், சப்தர்அலியின் மைத்துனரான முர்தஸா அலி 1742 இல் சப்தர்அலியை கொலை செய்து தானே ஆற்காடு நவாபானார். ஆனால் நவாபின் படைகள் முர்தசா அலியை தலைநகரத்திலிருந்து துரத்தியது.

சையித்முஹமது – இரண்டாம்சதாத்அலிகான்

கொலைசெய்யப்பட்ட சப்தர்அலியின் மகனான சையித்முஹமதுவை இரண்டாம் சதாத்அலிகான் என்ற பெயரில் அரியணையில் அமர்த்தினர்.

குவாஜா அப்துல்லாகான்

நிஜாம் ஆஸப்ஷா, குவாஜாஅப்துல்கானை, நவாபின் பாதுகாவலாளராக நியமித்தார். ஆற்காடு 'நவயத்' நவாப் இளவரசரின் பாதுகாப்பாளராகவும், திருச்சிராப்பள்ளியில், நவாபாகவும் செயல்பட்ட குவாஜாஅப்துல்லாகான் உண்மையான நவாப்பாக அதிகாரத்தைச் செலுத்தினார்.

அன்வாருதீன்

1744 இல் குவாஜாஅப்துல்லாகான் இறந்தார். நிஜாம் தனது தளபதியான அன்வாருதீனை இரண்டாம் சாதத்துல்லாகானின் பாதுகாப்பாளராக நியமித்தார். ஜுன் 1744 இல் பத்து வயதான நவயத் இளவரசர் இரண்டாம் சதாத்துல்லாகான் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த போது, முஹம்மது அன்வாருதீன் முர்தஸா அலியின் முன்னிலையில், நவாப்பை படுகொலை செய்தார். அதனைத்தொடர்ந்து முஹம்மது அன்வாருதீன் (Muhamad Anwar-ud-din) ஆற்காடு நவாபின் அதிகாரத்தை அபகரித்துக் கொண்டார். தனது செல்வாக்கைப் பாதுகாப்பதில் மட்டும் ஆர்வம் கொண்டிருந்த நிஜாம், வாலாஜா வம்சத்தைச் சேர்ந்த அன்வாருதீனை ஆற்காடு நவாபாக ஏற்றுக் கொண்டார்.

---

* Despatches from Charles Floyer to the comapny, Public Despatches to England, Fort St.David, Vol17,2 November 1749, PP 61-97

ஆற்காட்டில் சந்தாசாகிப்

1749 ஜூனில் 14000 குதிரைகளுடனும் 15000 வீரர்களுடனும் சந்தாசாகிப் ஆற்காட்டின் மீது படையெடுத்தார். 2300 வீரர்களைக் கொண்ட பிரெஞ்சுப் படையும் சேர்ந்து கொண்டது. 1749 ஜூலை 23 இல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் சந்தாசாகிப் அன்வருதீனைக் கொன்றார். பின்னர் ஆற்காட்டைக் கைப்பற்றினார். முஹமதுஅலி அங்கிருந்து தப்பிச்சென்றார்.

முஹமதலி

திருச்சிராப் பள்ளிக்குத் தப்பிச் சென்ற முஹமதலி ஆற்காடு நவாபாக தன்னை அறிவித்துக் கொண்டார். (Nawab Mahomed Ali khan Bahadur, styled Wallajah Nawab of the Carnatic, 1749-1795)* அதன் பின் 1795 வரை அவரே ஆங்கிலேயர் ஆதரவுடன் ஆற்காட்டு நவாபாக இருந்தார்.

ஆங்கிலேயரும் – பிரெஞ்சுக்காரர்களும்

முஹமதலிக்கு ஆதரவாக ஆங்கிலேயர்கள் களத்தில் நின்றனர். பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாகிபிற்காக களத்தில் நின்றனர். போர் தொடர்ந்து நடைபெற்றது.

1752 ஏப்ரல்

ஆங்கிலப்படைகள், மராத்தியப்படைகள், மைசூர் படைகள், முஹமதலியின் படைகள் அனைவரும் சந்தாசாகிபிற்கு எதிராக களத்தில் நின்ற போது, சந்தாசாகிப் வீழ்ந்தார். தன்னை மாறுவேடத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் உள்ள காரைக்காலில் கொண்டுவிட்டு விடுமாறு மராத்தியரிடம் தூது சொல்லப்பட்டது. இறுதியில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்ற அந்த மாவீரன் துரோகத்தால் படுகொலை செய்யப்பட்டார். பிரிட்டிஷ் கும்பெனியாரை எதிர்த்து களங் கண்ட ஆற்காடு நவாப் சந்தாசாகிபின் இரத்தம் இந்த மண்ணில் சிந்திய வரலாற்றின் பக்கங்கள் இதோ...

---

*A.Vadivelu, The ruling Chiefs Nobles & Zamindars of India, Madras, 1928, P.528a.

A Brief History of The Nawabs of Carnatic and the Princes of Arcot, 1690-1990 Madras, 1990, P-1.

எம்லா

பிரெஞ்சுத் தளபதி எம்லா (M.Las) அறிவுரையை ஏற்று சந்தாசாகிப் தனது வக்கீல்களான கோபிநாத் (Gobinath) தாவூத்கான் (Dawud Khan) என்ற ஆப்கானியரையும் தஞ்சாவூர் மராத்திய அரசர் மானாஜிராவிடம் அனுப்பிவைத்தார். வாய்வழியாக செய்தி சொல்லி அனுப்பப்பட்டது. இந்தச் செய்தியைக் கேட்ட மானாஜிராவ், சந்தாசாகிபிற்கு சாதகமான பதிலைக் கூறினார்.

He listened to the oral news apparently with great concern, and gave an affirmative reply.*

மானாஜிராவின் துரோகம்

இதற்குப்பின்னர் சந்தாசாகிப், எம்.லா, அசனுத்தீன்கான் ஆகியோர் மானாஜிராவைச் சந்திக்க வந்தனர். அவர்களை மிகவும் ஆறுதல்படுத்துவதாக மானாஜிராவ் காட்டிக் கொண்டார். இரகசியமாக தளவாய் மண்டபத்தில் சந்தாசாகிபை மானாஜிராவ் தங்க வைத்தார். மறுநாள் புதுச்சேரிக்கு சந்தாசாகிப் தப்பிச் செல்லப் பார்க்கிறார் என்று கூறி சந்தாசாகிபை கைது செய்திருப்பதாக மானாஜிராவ் அறிவித்தார்.

ஆற்காடு நவாப் முஹம்மதலி அச்செய்தி கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். ஆங்கிலேயக் கும்பெனித் தளபதிகள் அகமகிழ்ந்தனர். மராத்தியர்கள் மனம் மகிழ்ந்தனர். மைசூர்க்காரர்கள் மகிழ்ச்சியிலே திளைத்தனர்.

12.6.1752

11.6.1752 இல் சந்தாசாகிப் மானாஜியால் வஞ்சமாக கைது செய்யப்பட்டார். *12.6.1752* அன்று ஆங்கிலத் தளபதி மேஜர் லாரன்ஸ் தலைமையில் சந்தாசாகிப் குறித்து முடிவெடுத்திட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

---

*S.Muhamdhusayn Nainar, Tazaki Walajahi, Part II , Madrs, 1939, P.122.

மேஜர்லாரன்ஸ்

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பெனியாரின் படைத்தளபதி மேஜர்லாரன்ஸ் (Major Stringer Lawrence) சந்தாசாகிபை ஆங்கிலேயர்கள் கரங்களில் ஒப்படைத்திடுமாறு கேட்டுக் கொண்டார். நவாப் முகமதலியும்., மைசூர்க்காரர்களும், மராத்தியர்களும் தங்கள் வசமே ஒப்படைத்திட வேண்டுமென்று வலியுறுத்தினர். இறுதியில் அன்றைய கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படாமல், கூட்டம் கலைந்தது.

மீர்முஜாபர் அலி

மராத்திய ஜெனரல் மானாஜிராவ், மீர்முஜாபர்அலி (Mirmuzaffarali) என்ற தனது சிப்பாய்களில் ஒருவரை அழைத்து சந்தாசாகிபை கொன்று விடுமாறு இரகசியமாக உத்திரவிட அவரது காதுகளில் முணுமுணுத்தார். "யுத்தகாலத்தில் என்னுடைய மகனையோ அல்லது சகோதரனையோ தலையை வெட்டிவா என்று எனது எஜமானர் உத்திரவிட்டால் அதனை மறுக்க முடியாது என்றாலும், தன்னிடம் தஞ்சம் புகுந்த ஒருவரைக் சொல்லுவது அநியாயமும் கொடூரமும் ஆகும் நான் எனது வாளை அதற்காக உருவிடமாட்டேன்" என்று பதிலளித்தார்.

அஸீர்பேக்

அதன்பின்னர், மானாஜிராவ் அஸீர்பேக் (Ashurbeg) என்ற பெயருடைய ஒருவரையும், இராஜபுத்திரர் ஒருவரையும் அனுப்பி சந்தாசாகிப்பைக் கொலை செய்ய உத்திரவிட்டார். அவர்கள் தனியாக இருக்கும் சந்தாசாஹிபிடம் வந்தார்கள். அஸீர்பேக் சப்தமிட்டு, "நவாப் சாஹிப், நீங்கள் கலிமா தையூபைச் சொல்லிக் கொள்ளுங்கள் (Nawwab Sahib, pronounce the kalima tayyib) நாங்கள் உங்களுடைய தலையைத் தேடி வந்திருக்கிறோம். அல்லாஹ்வின் கருணையால் தயாராகிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

ஈட்டியை உருவிப் பாய்ந்த சந்தாசாகிப்

இக்குரலைக் கேட்டதும் சந்தாசாகிப் தனது ஈட்டியை உருவி அஸிர்பேக் மீது பாய்ந்தார். அஸிர்பேக் சந்தாசாகிப்பை பலமாகப் பிடித்துக் கொண்டிருந்த போது, இராஜபுத்திரவீரன் சந்தாசாகிபை தனது ஈட்டியால் குத்தினான். சந்தாசாகிப் மிகுந்த ஓலமிட்டு தரையில் சாய்ந்தார். அஸீர்பேக் தனது ஈட்டியால் சந்தாசாகிபை மேலும் குத்தி காயப்படுத்தியதோடு நில்லாமல், தனது கூர்மையான கத்தியினால் சந்தாசாகிபின் தலையைத் துண்டித்தனர். 13.3.1752 அந்த மாவீரனது உயிர் வஞ்சகமாகப் பிரிக்கப்பட்டது. வெட்டப்பட்ட சந்தாசாகிப்பின் தலை மானாஜிராவிடம் கொண்டு வரப்பட்ட போது அதனை ஒரு ஒட்டக ஓட்டியிடம் கொடுத்து, அதனை நவாப் முஹமதலியிடம் எடுத்துச் செல் என்று மானாஜி உத்திரவிட்டார்.

பக்கீரின்சுதந்திரதாகம்

வெட்டப்பட்டு தனியாக இருக்கும் தலையினை ஒரு துணியினால் சுற்றாமல் வெறுமனே எப்படி அதை எடுத்துச் செல்லமுடியும் என்று ஒட்டக ஓட்டியான பக்கீர் ஒருவர் அப்போது மழுப்பி நின்றார்.

இன்னொரு பக்கீர்

இராணுவத்தினரிடையே தங்கியிருந்த இன்னொரு பக்கீர் தனது நீண்ட துண்டை எடுத்துக் கொடுத்த போது ஒட்டக ஓட்டி அந்தத் துண்டில் சந்தாசாகிப்பின் தலையை வைத்துக் கட்டி தூக்கிச் சென்றார்.

நிமிர்ந்துநிற்கும்தலை

சந்தாசாகிப்பின் மீது அபிமானங்கொண்ட பக்கீர் ஒருவர் அப்போது, “ஓ! தாராள மனப்பான்மை உடையவனே! உனது தலைஉயிருடன் இருந்தாலும், இறந்து விட்டாலும் எப்போதும் உயர்ந்து நிமிர்ந்து நிற்கும்!” என்று உரக்கக் கூறினார்.

கோட்டையில்காட்சிப்பொருளாக

சந்தாசாகிபின் தலை திருச்சிகோட்டைவாயிலில் தொங்கவிடப்பட்டது. பிறகு இமாமிய (Imamiyya) வமிசத்தைச் சேர்ந்த பீர்கள் சந்தாசாகிப்பின் உடலை எடுத்துச் சென்று இஸ்லாமிய முறைப்படி அடக்கஞ் செய்தனர். திருச்சிராப்பள்ளி ஹஸ்ரத் நத்தர் வலியுல்லாஹ்தர்ஹாவின் வடபுறத்தில் சந்தாசாகிபின் உடல் அடக்கம் செய்யப்பட்டு, அங்கே கல்வெட்டும் வைக்கப்பட்டுள்ளது.

மேஜர்லாரன்ஸ்

சந்தாசாகிபை வஞ்சகமாக படுகொலை செய்ததில் ஆங்கிலேயக் கும்பெனித் தளபதி மேஜர் லாரன்ஸின் பங்களிப்பும் உள்ளது. வரலாற்றின் மறைந்துள்ள பக்கங்களில் சாட்சியங்கள் அதுகுறித்து தெளிவாகவே உள்ளன.

சந்தாசாகிபினை மராத்தியர், ஆற்காடுநவாப், மைசூர்க் காரர்களின் சதித்துணையுடன் நிறைவேற்றிய ஆங்கிலேயக் கும்பெனி அதன்பின் தெற்குச் சீமையில் வேகவேகமாக தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொண்டது.

விரிவாக எழுத இருக்கும் வரலாறு

ஆங்கிலேயரைப் போர்களங்கள் பலவற்றில் எதிர்த்து நின்று வாகை சூடிய ஆற்காடு நவாப் சந்தாசாகிப் என்னும் வீரவேங்கையின் வரலாறு வெள்ளையரின் துரோகத்தாலும், மராத்தியரின் வஞ்சகத்தாலும், ஆற்காடு நவாபின் மோசடியாலும், சதியாலும் வீழ்த்தப்பட்டது. தமிழகத்தில் சந்தாசாகிப் நடத்திய வீரப்போர்கள், ஆங்கிலேயரை வீழ்த்திய களங்கள், மாற்று மதத்தவரிடம் அவர் காட்டிய சமயப் பொறை, அவரதுஆற்றல், திறமை இவைகள் முழுவதுமாக விரிவாக தமிழ் உலகம் அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

(ஆற்காடு நவாப் சந்தாசாகிப்பின் சரித்திரம் விரிவாக முழுவதுமாக எளியேனால் எழுதப்பட்டு வருகிறது. எல்லாம் வல்ல இறைவனின் அருளால் அது தனி நூலாக விரைவில் வெளிவருகிறபோது சந்தாசாகிப் குறித்த முழு வரலாற்றுச் செய்திகளையும் இன்னும் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்)

சந்தா சாகிப்

நவாப் முஹம்மது அன்வருதீன்

நவாப் முஹம்மது அலி

மன்னர் பூலித்தேவர் படையில் முஸ்லிம்கள்

இந்திய விடுதலைப்போராட்ட வரலாறு இன்னமும் சரியாக இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரவேண்டிய வரலாற்றுக் கட்டாய நிலையிலே இருக்கிறது. புவியில் போலிகள் புகழ் வெளிச்சம் பெற்றுக்கொள்ளட்டும், பரவாயில்லை; உண்மையான வீரர்கள், உத்தமர்கள் உலகுக்கு அடையாளங்காட்டப்படவேண்டும்.

இந்திய விடுதலை இயக்கத்தில் அந்நியர்களை எதிர்த்து இங்கு ஆட்சி செய்தவர்கள் நடத்திய விடுதலைப்போர் அதன்பின் அந்நியர்களுக்கும், சுதேசிச்சிப்பாய்களுக்கும் இடையில் நிகழ்ந்தபோர், முடிவில் மக்களே வெள்ளையரை எதிர்த்து நடத்திய வீரப்போர் இப்படி பல கட்டங்களை இந்திய விடுதலை வரலாறு சந்தித்துள்ளது.அந்நியர்களுக்கும் முடி மன்னர்களுக்கும் இடையே நிகழ்ந்த போர் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் வெள்ளையருக்குமிடையே நடந்த போர். திப்புசுல்தானும், தீரன் சின்னமலையும், மானங்காத்த மருதுபாண்டியரும் நடத்திய மகத்தான போர்.

இவைகள் இந்தியத்திருநாட்டின் விடுதலைக்காக நிகழ்வதற்கு நாற்பதாண்டுகளுக்கு முன்னரே தென்பாண்டிச் சீமையில் வெள்ளையரை எதிர்த்து மாமன்னர் பூலித்தேவர் முழக்கமிட்டார். களங்கண்டார். அவருக்குத் துணையாக உடனிருந்து வெள்ளயரை எதிர்த்து வீரப்போர் புரிந்த தளபதிகளில், வீரர்களில் பலர் முஸ்லிம்கள். அவர்களின் தியாகசரிதக் குறிப்புக்களை தமிழகத்தின் விடுதலை வரலாற்றின் பக்கங்களில் வரிகளாகக்கிடும் அவாவின் உந்துதல் இதோ....

மன்னர்பூலித்தேவர்

ஆறடிக்கு மேற்பட்ட நெடிய தோற்றமும் முழங்கால் வரை நீண்ட கைகளும், வைரம் போன்ற உடல் உரமும், அரசியல் நுண்ணறிவும், போர்த்திறனும் நிரம்பப்பெற்ற மாமன்னர் பூலித்தேவர் நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரர்!

சித்திரபுத்திரத் தேவர் சிவஞான நாச்சியாருக்கும் ஆவணித்திங்கள் 16 ஆம் நாள், 1.9.1715 இல் பிறந்தவர் காத்தப்ப பூலித்தேவர். 1726 இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். கயல்கண்ணி நாச்சியார் இவரது பட்டத்தரசியாவார். கோமதி முத்துதலவச்சி, சித்திரபுத்திரத்தேவர் சிவஞானத்தேவர் இவரது பிள்ளைகள் ஆவார்.

வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் நடத்தி, வெற்றிகள் பல கண்டு, வரலாற்றில் அழியாப்புகழ் பெற்ற வீரத்தலைவர் பூலித்தேவர் 1767 இவ்வுலகிலிருந்து மறைந்தார். பூலித்தேவன் சிந்து, பூலித்தேவன் கதைப்பாடல், புதுக்கோட்டைச்சண்டை, வண்ணக் கோடாங்கி பாடல், பொலிப்பாடல், கும்மிப்பாடல், தாலாட்டுப் பாடல், வெள்ளையர் கால வரலாற்று ஆவணங்கள் பூலித்தேவரது புகழ் பாடிக் கொண்டிருக்கின்றன. மன்னரோடு தோளோடு தோள் நின்று அவரது படையில் பணியாற்றிய முஸ்லிம்கள்......

ஆலம்கான் (Alamkhan)

மதுரை—திருநெல்வலி உள்ளிட்ட தெற்குச் சீமையில் உள்நாட்டு விவகாரங்களை ஒழுங்குபடுத்தி வரிவசூல் செய்திட ஆற்காடு நவாப் முகமதலி கி.பி.1749 இல் தனது தம்பி அப்துல் ரஹிம் (AbdulRahim) என்பவரை அனுப்பிவைத்தார். கிபி 1750 இல் அவர் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு வந்த சமயத்தில் சந்தாசாகிபின் ஆதரவு அணியினைச் சேர்ந்த ஆலம்கான் மதுரையைப் போர் ஏதுமின்றி துளிஇரத்தம் சிந்தாமல் கைப்பற்றிக் கொண்டார். திருச்சி —ஆற்காடு உள்ளிட்ட வடக்குப் பகுதி ஆற்காடு நவாப் முகமதலி வசம்; திருநெல்வேலி தம்பி அப்துல் ரஹிம் பொறுப்பில்; இடையில் மதுரையோ போட்டி நவாபான சந்தாசாகிபின் ஆதரவாளரின் கரங்களில் மதுரைக்கும் நெல்லைக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டதைப் போன்ற நிலை. வரியும் வசூலாகவில்லை. கப்பத்தொகையும் கிடைக்கவில்லை. நவாப்முகமதலி மேலும் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஆங்கிலேயப் படைகளுடன் மோதிட திருச்சி சென்ற ஆலம்கான் 1752 இல்நடைபெற்ற போரில் கொல்லப் பட்டார்.

மியானா – மூடமையா – நபிகான் கட்டாக்

கி.பி 1752 நவம்பர் 29 இல் மியானா என்ற முகமது பார்க்கி (Mahomed Barky @ Mianah)மூடமையா என்ற முகமது மெயினாக் (Mahomed Mainacha @ Moodemiah)நபிகான் கட்டாக்(Nabi cawn catteck) ஆகிய மூன்று முஸ்லிம் தளபதிகள் மதுரையின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

வெள்ளையர் எதிர்ப்பு

ஆற்காடு நவாபாகத் தன்னைப் பிரகனடப்படுத்திக் கொண்டிருந்த முகமதுஅலி ஆங்கிலக்கிழக்கிந்திய கும்பினியாருடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பதையும் அவனுக்கு ஆயுதப்படையுதவியளிக்கக் கும்பெனியார் ஒப்புக்கொண்டதையும் கேள்விப்பட்ட மூன்று முஸ்லிம் போர்த்தளபதிகளும் ஆற்காடு நவாபை எதிர்க்கவே எண்ணங் கொண்டனர். தங்களுக்குச் சந்தாசாகிபும் ஆலம்கானும் அளித்திருந்த பொறுப்பிலிருந்தபடியே, தமிழர்களுக்குத் தகுந்த உதவி செய்யும் விருப்பங் கொண்டிருந்தனர்.

மாபூஸ்கான்

ஆற்காடு நவாபான முகம்மது அலிக்கு முன்பிறந்தவர் மாபூஸ்கான். 18 ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் மிகவும் முக்கியமானவர். தோற்றத்தில் அழகாயிருக்காவிட்டாலும் படோடோபக்காரர். இவரைக் கண்டு பிரெஞ்சுத் தளபதி டூப்ளேயும் அஞ்சியதாக இராபர்ட் ஓர்ம் குறிப்பிடுகிறார்.

மதுரையை நோக்கி மாபூஸ்கானுடன் வந்து கொண்டிருந்த கர்னல் ஹீரான், மூன்று முஸ்லிம் தளபதிகளும் தங்களுக்குள் மிகவும் ஒற்றுமையாகவும் தமிழகப் பாளையக் காரர்களுடன் இணங்கி இருப்பதையும் அறிந்து அவர்கள் மீது போர் தொடுத்தார். மியானா நத்தம் பாளையத்திற்குள் சென்றார். மூடமியாவும், நபிகான்கட்டாக்கும் நெற்கட்டாஞ்செவல் பாளையக்காரர் மன்னர் பூலித்தேவருடன் சேர்ந்து கொண்டார்கள்.

"பூலித்தேவன், நபிகான் கட்டாக், மூடேமியா என்ற மூவரும் இணைபிரியாத நண்பர்களாகவே பழகி வந்தனர். வீரனை வீரன் தான் விரும்புவான் என்பதை அவர்களுடைய ஒற்றுமையே உலகத்திற்கு எடுத்துக்காட்டி வந்தது."*

முகமது பர்க்கி

மியானோ என்ற முஹம்மது பர்க்கி நத்தம் பாளையக்காரர்களுக்கு உணர்ச்சியூட்டி அவர்கள் எல்லோரையும் மதுரையை மீட்டும் பணியில் ஈடுபடசெய்ய வீரமிக்க சொற்பொழிவுகளைப் புரிந்து வந்தான். "வெள்ளையர்கள் தமிழகத்தின் எதிரிகள் மட்டுமல்லர். அவர்கள் அகில இந்தியாவின் ஒவ்வொரு நாட்டின் எதிரிகளுமாவார்கள்." என்று ஆவேசமாகப் பேசினார் முஹம்மது பர்க்கி என்ற மியானோ'** இத்தகைய புரட்சிப்படையெழுச்சிக்கான நடவடிக்கைகள் இரகசியமாகவே தமிழகமெங்கும் நடந்து வந்தன.

1756 மார்ச் 21

திருநெல்வேலிக்கு ஏழுமைல் தொலைவில் மாமன்னர் பூலித்வேரது படைகளும், கிழக்கிந்தியக் கும்பெனிப்படைகளும் நேருக்குநேர் *1756* மார்ச் *21* இல் மோதிக்கொண்டது.

முஹம்மது மெயினாக்

மூடமையா என்ற முஹம்மது மெயினாக், மன்னர் பூலித்தேவருக்கு ஆதரவாக யுத்த களத்திலே முன்னணியிலே நின்றார். மாவீரன் பூலித்தேவனுக்கு ஆதரவாக மூடேமியா என்ற பட்டாணியத் தலைவரும் போரிட்டார். இவன் மாவீரன் பூலித்தேவனுக்கு உண்மையாக நடக்கும் ஒப்பற்ற வீரனாவான். மூடேமியா குதிரை மீது ஏறிப்பாய்ந்து சென்று போரிட்டுக் கொண்டிருக்கும் போது அவனையும், அவனுடைய குதிரையையும் துண்டு துண்டாக வெட்டி எறிந்து விட்டனர் வெள்ளையர். இதனால் மாவீரன் பூலித்தேவனின் படையினர் நாலாப்பக்கமும் கலைந்து ஓடினர். போரில் மாவீரன் பூலித்தேவனின் படையினர் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

---

* துர்க்கதாஸ் எஸ்.கே. ஸ்வாமி, தமிழ்வீரன் பூலித்தேவன், சென்னை, *1958*, பக்.*57*.

** முற்கூறிய நூல், பக்.*65*.

இந்த நிலையில் தான் மூடோமியா கொல்லப்பட்ட செய்தியை அறிந்த மன்னர்பூலித்தேவர்,மூடோமியாவின் மறைவு குறித்து மிகவும் வருந்தினார்.

இனியாவது முன்னேறுங்கள்

மூடோமியாவின் உடலை மடியில் கிடத்தி, “என் படையில் உண்மையாக நின்று போரிட்டு மாண்டாய்.உன்னை நானும் இந்த நாடும் மறவோம்” என்று கூறி ஆற்றொண்ணாத் துயரத்துடன் மூடோமியாவின் உடலை அடக்கம் செய்தார் மன்னர் பூலித்தேவர். இந்த சோகமான முடிவினால் மாவீரன் பூலித்தேவன் அன்றையப்போரை அப்படியே நிறுத்தி விட்டு, எஞ்சிய படைகளுடன் நெற்கட்டான் செவ்வல் கோட்டைக்குத் திரும்பினார். இந்தப் போரில் மாவீரன் பூலித்தேவர் ஏராளமான படைவீரர்களை இழந்தார். மாவீரன் பூலித்தேவரின் படைகளில் இரண்டாயிரம் காலாட்படைகள் கும்பினியாரால் சுட்டுப் பொசுக்கப்பட்டனர். என்பர் மாமன்னர் பூலித்தேவன் ஆய்வாளர் ந. இராசையா.*

பூலித்தேவர் படையோடு கூட்டாக இருந்து வெள்ளையரை எதிர்த்து வீரச்சாவைத் தழுவிய முஹம்மது மெயினாக் என்ற மூடமையாவின் வரலாறு இனியாவது போற்றப்பட வேண்டும்.**

ராபர்ட் ஓர்ம்

கி.பி. 1728 இல் அஞ்சங்கோவில் பிறந்த ராபர்ட் ஓர்ம் 1742 இல் 14 வயதில் கல்கத்தாவின் கும்பினிப்படையில் சேர்ந்தார். 1751 இல் சென்னையில் இராபர்ட் கிளைவ்வோடு உறவு கொண்டவர். 1754 இல் சென்னை கும்பெனி கவுன்சில் உறுப்பினர். ஏற்றுமதிப் பொருட்களின் கிடங்குப்பொறுப்பாளர்; ஆற்காடு நவாபின் கணக்குகளைக் கவனித்திடும் ஆணையாளர். கும்பெனியாரின் ரகசியக்கடிதங்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியவர்; இவர் பின்னாளில் கவர்னரானார்.

---

*மாமன்னன் பூலித்தேவன் இராசபாளையம், 1992, பக்.108,109.

**Moudemia certuinly kill’d and two thousands colleries three Hundered Horse taken. All tho Baggage, Guns and some Elephants the Battle was fought within seven Miles of Turnavelly Diary and Proceedings , 1755 - 56, Page.132

இவர் எழுதிய 'இந்துஸ்தானத்தில் பிரிட்டிஷ் நாட்டின் ராணுவ நடவடிக்கைகள்' என்ற அற்புதமான மூன்று பாகங்களைக் கொண்ட நூலினை இலண்டனில் வெளியிட்டார்.*

The battle was fought on the 21 st of March 1756, within sevenmiles of Tinevelly and was Maintained with More obstinacy than usual in the fights of this country, until Moodemiab fell; he was cut down charging bravely with his cavalary the rout then became general; 2000 Colleries were slain and 300 horse, with all the cannon and elephants were taken. This victory saved Madura, for it entirely broke the army of the Confederates, all of whom and Pulitaver with as much terror as any, hurried from the field to the shelter of their respective homes.

வெள்ளையர் எழுதிவைத்துச் சென்றுள்ள வீரவரலாறு முஹம்மது மெயினாக் என்ற மூடமையாவின் தியாகசரிதம் மாமன்னர் பூலித்தேவரோடு இணைந்து நின்று இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடிய வீரப்போர்சரிதம்; இன்னும் இது போன்ற எத்தனையோ முஸ்லிம் வீரர்களின் சரிதம் வெளிக்கொண்டு வரப்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

நபிகான் கட்டாக் – பர்கத்துல்லா

பூலித்தேவரது நண்பரான நபிகான்கட்டாக் ஏராளமான படைகளுடன் நெற்கட்டான் செவ்வலுக்கு வந்தார். ஆற்காடு நவாபின் பிரதிநிதியான பர்க்கத் துல்லாவும் மன்னர் பூலித்தேவருக்கு உதவிட முன்வந்தார்கள். இதனை பிஷப்கால்டு வெலும், ராபர்ட் ஓர்மும் உறுதிப்படுத்துகிறார்கள்.

பிஷப்கால்டுவெல்

கி.பி. *1881* இல் பிஷப் ஆர். கால்டுவெல்(Bishop R. Caldwell) எழுதி வெளியிட்ட திருநெல்வேலி வரலாற்று நூலில் (A History of Tinnevely) பக்கம் *113* இல் 'A few days after, Barakat ulla and Nabikhan kattak went with 500 horse to the Pulidevar's place' என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

---

*A History of the Military Transactions of the British Nation in Indostan by Robert Orme, Fourth edition, Vol.I, 1861, Madras, Book V, P422 - 423.

பூலித்தேவர் அரண்மனைக்கு குதிரைப்படைகளுடன் வந்து நபிகான் கட்டாக்கும் பர்க்கததுல்லாவும் சேர்ந்து கொண்டனர். நவாபின் அண்ணன் மாபூஸ்கானும் பூலித்தேவர் அணியில் சேர்ந்தார்.

வெள்ளையரை எதிர்த்து

'Pulidevar and Mahfuzkhan with Barakatullah and Nabikhan Kattack raised a power ful revolt against the British' பூலித்தேவரும் மாபூஸ்கானும், பர்கத்துல்லாவும், நபிகான்கட்டாக்கும் சக்தி வாய்ந்த புரட்சிக்கூட்டணியை பிரிட்டிஷாருக்கு எதிராக உருவாக்கினார்கள்.*

பாளையக்காரர்லீக்

நபிகான் கட்டாக், பர்க்கத்துல்லா, மகபூஸ்கான், மாமன்னர் பூலித்தேவர் வெள்ளையரை எதிர்த்து 'பாளையக்காரர் லீக்' எனும் அமைப்பை ஏற்படுத்தினார்கள். 'They formed the ' league of Poligars under Puli Tever' என்று தனது பிஎச்டி ஆய்வேட்டில் முனைவர் P.செல்வமுத்துக் குமாரசாமி விளக்கியுள்ளார்.**

தெற்குச்சீமையில் நெற்கட்டான்செவ்வல் பாளையத்து மாவீரர் மன்னர் பூலித்தேவரோடு இணைந்து வெள்ளையரை எதிர்த்துப் போராடியவர்கள்முஹம்மது மெயினாக் என்ற மூடமையா நபிகான் கட்டாக், பர்க்கத்துல்லா, மாபூஸ்கான் போன்ற முஸ்லிம் தலைவர்கள்.

அல்லா தெரு

ஆற்காடு நவாப் முகமது அலியின் அண்ணன் மாபூசுக்கான் தன்னுடன் இருந்தபோது, தன்னுடைய கோட்டைக்குள்ளே விடுதி கட்டிக்கொடுத்தவர் பூலித்தேவர். மாபூசுக்கானுக்கும் அவருடன் வந்த முகமதிய (முஸ்லிம்) படைகளுக்கும் வழிபாடுசெய்ய அல்லா கோயில்களையும் (பள்ளிவாசலையும்) ஏற்பாடு செய்து கொடுத்தார்.

*Yusufkhan 2 January 1757 Letter, Military Country Correspondence, Vol.5, PP. 35 - 36.

**The British Expansion and Internal Resistance in Tirunelveli, 1755 - 1801, P.117.

பூலித்தேவர் நெற்கட்டான் செவ்வலின் அவர்கள் தங்கியிருந்த தெரு அல்லா தெரு என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது என்பர். பூலித்தேவர் வரலாற்று ஆய்வாளர் முனைவர் ந.இராசையா*

பீர் முஹம்மது

நெற்கட்டான் செவல் பாளையத்தில் குடியேறியவர்களில் குறிப்பிடத்தக்க காலாடிக்குடும்பன் வகையறாக்கள், ஒண்டிவீரன் வகையறாக்கள் சின்னச் சொக்கன் வகையறாக்கள் பீர்முகம்மது வகையறாக்கள் இவர்களோடு ஆயிரக்கணக்கான வீரர்களும் வாழ்ந்து வந்தனர்.** பூலித்தேவன் சிந்து நூலில், பக்கம் *68* இல் பீர்முகம்மது மகமதியர் படைப்பிரிவைச் சேர்ந்தவன் என்ற குறிப்பும் தரப்பட்டுள்ளது.வீரத்தலைவர் பூலித்தேவர் வெள்ளையரோடு நடத்திய சுதந்திரப்போரில் நெற்கட்டான் செவல் பாளையத்தில் பூர்வீகமாக வாழ்ந்த வந்த பீர்முகம்மது வகையறாக்களை சேர்ந்த எண்ணற்ற முஸ்லிம் வீரர்களும் கலந்து கொண்டு போராடி இந்த நாட்டின் விடுதலைக்கு தங்களது இன்னுயிரைத்தந்துள்ளனர்.

முதல் வரிசையில் முஸ்லிம் படை

மன்னர் பூலித்தேவர் தனது புரட்சிப்படைகளின் முதல் வரிசையில் மாபூசுக்கானையும் அவனது படைகளையும்தான் நிறுத்தி வைத்திருந்தார். மாபூசுக்கானோ பூலித்தேவருக்காக உயிரை விடக்கூடத் தயாராயிருந்தான்* *18* ஆம் நூற்றாண்டின் மத்தியில் பறங்கியரை எதிர்த்துப் போர் முழக்க மிட்ட நெற்கட்டான் செவல் பாளையத்து மாமன்னர் பூலித்தேவரின் அணியில் நின்று முதல் வரிசையில் முஸ்லிம்கள் போராடினர். முஹம்மது மெயினாக் என்ற மூடமையா களத்திலே வெட்டப்பட்டு உயிர்துறந்தார். நபிகான்கட்டாக், பர்க்கதுல்லா, மாபூஸ்கான், பீர்முகம்மது வகையறாக்கள் பூலித்தேவரோடு தோளோடு தோள் நின்று நாட்டின் விடுதலைக்காக வெள்ளையரை எதிர்த்து நின்றார்கள். இது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சரித்திரம்; நாளையத் தலைமுறையினரும் அறிந்து கொள்ள வேண்டிய அற்புத சரித்திரமும் ஆகும்.

---

*புதுக்கோட்டைச் சண்டை, இராசபாளையம், *2001*, பக்.*96*.

**முனைவர் ந. இராசையா, பூலித்தேவன் சிந்து, இராசபாளையம், *2000*, பக்.*61* .

வங்காளவேங்கை
சிராஜ் உத் தௌலா

பவிஷ்யத (பவிடிய) புராணத்தில் சேர,சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிய ஏராளமான செய்திகள் அடங்கியுள்ளன.* பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான பவிடிய புராணத்தின் பிரதிசாகர பருவத்தில், கல்கத்தா, டெல்லி ஆகிய இரு நகரங்களில் தோற்றுவாய் குறித்துக் கூறப்பட்டுள்ளது.**

ஜாப்சார்னோக்

கி.பி 1655 இல் இந்தியாவிற்கு வந்த சாப்சார்னோக், கிழக்கிந்தியக்கம்பெனியின் ஆட்சிக்குழுவில் ஓர் இளநிலை உறுப்பினர்; கி.பி 1690 ஆகஸ்ட் 24 இல் முப்பதுபடை வீரர்களுடன் இன்றைய கல்கத்தா நகரம் அமையவிருந்த இடத்திற்கு வந்தார். மழை பெய்து கொண்டிருந்தது. அங்கு மெல்ல குடியேறத்துவங்கினார்கள்.***

வில்லியம்கோட்டை

கங்கை டெல்டாப்பிரிவு முழுமைக்கும் போக்கு வாயிலாகவுள்ள கப்பல் துறை கல்கத்தா ஆகும். **** உடைந்த செங்கல்கள், சுண்ணாம்பு, வெல்லப்பாகு, வெட்டியசணல்நார் இவற்றைக் கொண்டு இங்கு ஒரு கோட்டையை கி.பி. 1696 இல் கட்டத்துவங்கி 1699 இல் நிறைவு செய்தார் சார்னோக். அதற்கு மூன்றாம் வில்லியம் மன்னரின் (1650—1702) பெயரைச் சூட்டினார். ஆங்கிலேயருக்கு கல்கத்தா முக்கிய வியாபாரஸ்தலமாயிருந்தது. அதில் வில்லியம் கோட்டையில், தங்களது வியாபார சரக்குகளைப்பத்திரமாகப் பாதுகாத்து வந்தார்கள்.

---

* ப. சிவனடி, இந்திய சரித்திரக்களஞ்சியம், முதற்தொகுதி, சென்னை 1987, பக்.20,21.

** ஆர். பாலசுப்பிரமணிய ஐயர், திண்டுக்கல், இந்து, ஆசிரியர் கடிதப்பகுதியில், 1989, ஜீலை.

*** ப.சிவனடி, இந்திய சரித்திரக்களஞ்சியம் தொகுதி 2, பகுதி2, சென்னை, 1989, பக்.233, 234.

**** மிஸ். ஈவாடி. பார்ட்ஜ் அம்மையார், இந்தியா, ம.சண்முகசுந்தர முதலியார் மொழிபெயர்ப்பு, சென்னை, 1940, பக்.164.

முகலாயப்பேரரசு காலத்தில்

முகலாயப்பேரரசர் ஔரங்கஜேப் 1707 இல் இவ்வுலகிலிருந்து மறைந்தார். நவாப் முர்ஷித்குலிக்கான் (Murslid Qulikhan) காலத்தில் வங்காளத்தில் அவர் ஒரு சுதந்திர அரசரைப் போல இருந்தார். 30.6.1727 இல் அவர் இறந்ததும், அவரது மருமகன் சுஜாவுதீன் முஹம்மது கான் (Shuja ud din Muhammadkhan)வங்காள அரசப்பொறுப்பிற்கு வந்தார். அவரைத் தொடர்ந்து சர்பராஸ்கான்(Sarfaraz Khan) பதவிக்கு வந்தார்.

அலிவர்திகான்

சர்பராஸ்கானை எதிர்த்துப் புரட்சி நடத்தி, கி.பி 1740 இல் அலிவர்திகான் (Alivardikhan) சிங்காசன மேறினார். அவருக்கு மைந்தர்கள் இல்லை. அவர்தம் புதல்வியர் மூவரும் அவர்தம் சகோதரரின் குமாரர் மூவருக்கு மணமுடித்து வைக்கப்பட்டனர்.

வங்காளத்திலுள்ள ஐரோப்பிய வணிகக் கம்பெனிகளிடம் அலிவர்திகான் கண்டிப்புடன் நடந்து கொண்டு அவர்களின் மேல் தனது அதிகாரத்தை நிலை நாட்டினார்.* கி.பி. 1756 ஏப்ரல் 10 இல் அலிவர்திகான் மறைந்தார். அலிவர்திகானின் இளையமகனின் மகனாரான சிராஜ் உத் தௌலா வங்காளத்தின் நவாபாக 1756 இல் பொறுப்பிற்கு வந்தார்.

சிராஸ்–உத்–தௌலா (அரசின்ஞாயிறு)

முஸ்லிம் இளவரசர்களுக்கு வேறுபெயர்கள் இருப்பதைப் போன்று சிராஜ்-உத்-தௌலாவிற்கு மீர்சா முஹம்மது (Mirza Mahmood) என்ற பெயரும் இருந்தது. எனினும் அவர் சிராஜ்-உத்-தௌலா என்றே அழைக்கப்பட்டார். அதற்கு "அரசின் ஞாயிறு" (Lamp of the State) என்று பொருள் ஆகும்.**

---

* R.C. Mujumdar,History and culture of the Indian People, Vol VIII, The Maratha Supremacy, Mumbai, 2001, P.111.

** ப.சிவனடி, இந்தியசரித்திரக்களஞ்சியம், தொகுதி 6, சென்னை, 1992, பக்.286.

ஆங்கிலேயர்மீதுவெறுப்பு

"இளம் பருவ முதற்கொண்டே ஸுராஜ்வுட்டவுலாவுக்கு ஆங்கிலேயரிடம் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அந்த வெறுப்பை மாற்றக்கூடியவர்கள் இல்லாமல் போகவே அது நாளுக்கு நாள் அதிகரித்தது" என்று, சிராஜ்-உத் தௌலாவிற்கு வெள்ளையர்மீது வெறுப்பு இருந்ததை என்.முனுசாமி முதலியார் சுட்டிக்காட்டியிருக்கிறார்.*

H.H டாட்வெல்

அலிவர்திகான் சிராஜ்-உத்-தௌலாவிடம் "ஐரோப்பியர்களின் ஆதிக்கமனப்பான்மையான அபாயங்களுக்கு எதிராக, மிகவும் உன்னிப்பாக எச்சரித்தார்" என்று டாட்வெல் தெரிவித்துள்ளார்.

"Ali wardi khan had solemnly warned Siraj ud daula against the dangers of European aggression" **

இராபர்ட்ஓர்ம்

'நாஸிர்ஜங், சந்தாசாகிப் ஆகியோரது கதிகளையும், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்களுடைய ராணுவ நடவடிக்கைகளையும் கருத்தில் கொண்டு அலிவர்திகான் தனது இளம் வாரிசான சிராஜ்-உத்-தௌலாவிற்கு வங்காளத்தில் உள்ள எல்லா ஐரோப்பிய முகாம்களையும் கண்காணித்து அவர்களுடைய கோட்டை கொத்தளங்கள் மற்றும் இராணுவ பலத்தை அதிகரித்துக் கொள்ளவிடாதபடி எங்கேயெல்லாம் அவர்களுடைய பலம் உயர்கிறதாகத் தோன்றுகிறதோ, அவர்களை உடனடியாக ஒடுக்கிட வேண்டுமென்று' அறிவுறுத்தினார்என்று இராபர்ட் ஓர்ம் குறிப்பிடுகிறார்.

"Surajah Dowlah, to watch the Military Measures of all the European Settlement in Bengal, and to suffer no increase in their garrisons, nor addition in their fortifications and to crush immediatley which so ever of them should. Manifest any symptom of defiance of confidence in their own strength"...***

---

* லார்டு கிளைவ், சென்னை, *1930*, பக்.53.

** H.H Dodwell, The Gambridge History of India, Vol. V, Cambridge, 1929, P.141.

*** Robert orme, A History of the Military Transactions of the British Nation in Indostan, London, Madras, 1861, Vol II, Book VI, P-83.

தனது தாத்தாவின் ஆலோசனைகளை மனதிலே தாங்கிய சிராஸ் உத் தௌலா ஆங்கிலேயர்கள் மீது வெறுப்பும் எச்சரிக்கையும் கொண்டு செயலாற்றினார்.

ஜேம்ஸ்மில்

பிரிட்டிஷ் இந்திய வரலாற்றை எழுதிய ஜேம்ஸ் மில் இதனை உறுதிப்படுத்துகிறார்.*

தாத்தாவின் எச்சரிக்கை

"அலிவர்திகானின் மரணமும், அதற்குபின் சிராஜ்-உத் தௌலா, சிம்மாசனம் ஏறியதும் ஆங்கிலேயர்கள் நிலையில் ஒரு முக்கியமான மாற்றத்தை உண்டு பண்ணியது. புதிய நவாபான சிராஜ்-உத்-தௌலா ஆங்கிலேயர்களுக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தார் என்பது தெளிவாக இருந்தது.

உண்மையில் அவரது பாட்டனார் அலிவர்திகான் தன்னுடைய அரசை மிக நிதானமாக நடத்திச் சென்றாலும் இதே கருத்தை அவர் கொண்டிருந்து, 'ஆங்கிலேயரின் இராணுவ பலத்தை பறித்திட வேண்டும்' என்று தனது பேரனுக்கு அவர் கடைசியாக அறிவுறுத்தியதாகச் சொல்லப்படுகிறது".

எட்வர்டுதாண்டன்

" The new soubahdar was known to entertain unfavourable views towards the English. It has been said, indeed, that his predecessor, not withstanding the great Moderation of his government, shared those views, and that his last advice to his grandson was to deprive the English of Military power" என்று அலிவர்திகான் சிராஜ்-உத்-தௌலாவிடம் ஆங்கிலேயரின் இராணுவ பலத்தைப்பறித்திட வேண்டும் என்று கடைசியாக அறிவுறுத்தியதை எட்வர்டு தாண்டனும் உறுதிப்படுத்துகிறார்.**

---

* James Mill, The History of British India, Vol 2,NewDelhi, 1972, P.225.

** Edward Thornton, The History of the British Empire In India, London, Vol I.

ஹால்வெல்

ஹால்வெல்லும் தனது நூலில் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.*

கல்கத்தாகோட்டைவலுப்படுத்தப்படல்

இந்த நிலையில் கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டையை ஆங்கிலேயர் வலுப்படுத்தினர். சிராஜ் உத்தௌலா தனது இசைவின்றிக் கோட்டையைப் புதுப்பித்தல் கூடாது என்று தடுத்தார். ஆங்கிலேயர்கள் அதனை மீறிக் கோட்டையை வலுப்படுத்தினர்.** அத்தோடு தப்பி ஓடிய அரசியல் குற்றவாளிகளுக்குத் தங்கள் கோட்டையில் புகலிடம் கொடுத்தனர். அதன்மூலம் சிராஜ் உத்தௌலா ஆங்கிலேயரிடத்துக் கொண்டிருந்த ஐயுறவினை, மேன்மேலும் ஆங்கிலேயர்கள் வளர்த்துவந்தனர்.

வில்லியம் கோட்டை

பிரிட்டிஷாரின் வணிகமும், செல்வாக்கும் வங்காளத்தில் ஓங்கி வளர்வதைத் தடுத்திட சிராஜ் உத் தௌலா விரும்பினார். கம்பெனியாரால் கட்டப்பட்ட பலமான வில்லியம் கோட்டையைத் தகர்த்திடவும் உத்திரவிட்டார். அந்த உத்திரவிற்கு அவர்கள் கீழ்ப்படிய மறுக்கவே, முதலாவதாக கம்பெனியின் காசிம்பஜார் பண்டகசாலையின் மீது தாக்குதலை நடத்தி, அது சரண் அடைந்ததும், கல்கத்தா மீதே தாக்குதலைத் தொடுத்தார் சிராஜ் உத்தௌலா *** கல்கத்தாவை நோக்கிச் சென்ற சிராஜ் உத்தௌலா அதனைத் தாக்கி *11.6.1756* அன்று அதைக் கைப்பற்றினார்.****

40,000 வீரர்கள்

சிராஜ் உத் தௌலா கல்கத்தாவை நோக்கி வெள்ளையரை எதிர்த்து படையெடுத்துச் சென்றபோது, அவரது படைப்பிரிவில் *30,000* காலாட்படைவீரர்கள், *20,000* குதிரை

---

* J.S. Holwell, India Tracts, 2nd Ed, 4 to 1764, P.286.

** கிர. அநுமந்தன், ந.க. மங்கள முருகேசன், இந்திய வரலாறு *(1200-1773)*, சென்னை, *1976*, பக்.*672*.

*** Willem G.J.Kuiters, The British in Bengal, 1756 - 1773, Paris, 2002, P.38.

**** P. Spear. The Oxford History of Modern India, (1740-1975), Calcutta, 1978, P.23

வீரர்கள், 400 பயிற்சி பெற்ற யானைகள், 80 பீரங்கிகள், 20,000 காலாட்படையினர்,தீவட்டி, வாள்,வேல்,வில்அம்பு இவைகளுடன் போர்களம் சென்றார்.
he had with him 30,000 foot 20,000 horse, 400 trained elephants, and 80 pieces of cannon, about 20,000 of his troops were armed with Muskets, Match locks, and wall pieces, the rest with lances, swords, bows and arrows etc..* என்று செ.இ புஸ்டீடு என்பவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

கோட்டைகைப்பற்றப்படல்

வெள்ளையர்கள் கல்கத்தாவிலிருந்து தப்பி ஓடினர். கவர்னர் டிரேக்கும், படைத்தளபதிகளும் கோட்டையை விட்டுவிட்டு கப்பலில் ஏறிச் சென்று தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். 20.6.1756 இல் வில்லியம் கோட்டை சிறிய எதிர்ப்பிற்குப்பின் சிராஜ்-உத்-தௌலாவிடம் சரண் அடைந்தது.

பகைவர்மூவரைஒழித்தமாவீரர்

'வயதில் சிறியவராயிருந்தும், அனுபவமற்றவராயும் இருந்த சிராஜ் உத்தௌலா தனது ஆட்சிப் பகுதியில் குழப்பம் செய்ய முயற்சித்த சௌகத் ஜங்கின்மேல் படையெடுத்து அவரைத் தோற்கடித்துக் கொன்றார். தான் சிம்மாசனமேறிய சிலமாதங்களுக்குள் ஆற்றல் வாய்ந்த பகைவர் மூவரை ஒழித்த மாவீரர் சிராஜ்-உத்-தௌலா'.

R.C.மஜூம்தார்–H.இராய்சௌதுரி–K.தத்தா

" It reflects no small credit upon the young and inexperienced Nawab that he could get rid of his three powerful enemies within a few months of his accession to the throne" .என்று வரலாற்று ஆசிரியர்கள் R.C.மஜூம்தார், H.ராய்சௌதுரி, K.தத்தா ஆகியோர் சிராஜ்-உத்-தௌலாவின் வீரத்தினைப் புகழ்ந்துரைத்துள்ளனர்.** "ஐரோப்பியர்கள் நம் நாட்டைக் கண்ணோக்கி நிற்கின்றனர் என்று ஞாபகம் வைத்துக் கொள்"

---

*H.E Busteed, Echoes from old Calcutta, Madras, 1999 (First Published Calcutta 1888), P.5.

** R.C. Majumdar, H.C.Rayehaudhuri, Kalikinkardatta, An Advanced History of India, London, 1963, P.658

என்று கூறிவிட்டு, 'ஆங்கிலேயர்கள் பலிஷ்டர்கள் அவர்கள் கோட்டைகட்டிக் கொண்டு சிப்பாய்களை வைத்துக் கொண்டிருப்பதற்கு இடங்கொடாதே. இடங்கொடுத்தால் நாடு நம்முடையதல்ல'* என்று தனது தாத்தா அலிவர்திகானின் அரிய ஆலோசனையை ஏற்றுச் செயல்பட்ட சிராஜ்-உத்-தௌலா, எளிதில் வெள்ளையரை வென்றார். ஆனால் உட்பகை, துரோகம், சதி, பிரித்தாளும் சூழ்ச்சி இவைகளால் பின்னர் வீழ்த்தப்பட்டார்.

செல்வங்கொழிக்கும் கல்கத்தாவை சிராஜ்-உத்-தௌலா வெற்றி பெற்றதும், ஆங்கிலேயரை வீழ்த்தியதையும் அறிந்து பிரிட்டன் தனக்கு ஏற்பட்ட அவமானத்திற்குப் பழி தீர்க்கும் வகையில் சென்னையிலிருந்து இராபர்ட்கிளைவ் தலைமையில் பெரும்படையை அனுப்பியது. சூழ்ச்சியும் வஞ்சகமும், தந்திரமும் நிறைந்த காட்சிகள் அரங்கேறியது.

மீர்ஜாபரை நவாப்பாக்கினார் கிளைவ். சிராஜ்-உத்-தௌலாவை கைது செய்த மீர்ஜாபரின் மகன், மீரான் அவருடைய மரண தண்டனையை நிறைவேற்றினான்.** *1757* ஜீன் 25க்கு பிறகு அந்த மாவீரன் படுகொலை செய்யப்பட்டான். (சிராஜ்-உத்-தௌலாவின் வீர வரலாற்றை விரிவாக எளியேன் பிறிதோர் நூலில் தரஇருக்கிறேன்).

நாட்டுப்பற்று

ஜி.ஏ. ஹெண்டி என்பவர், "அந்நாளில் கல்கத்தா ஆங்கிலேயர்களுக்கு முக்கிய வர்த்தகத்தலமாயிருந்தது. அவர்கள் தங்களுடைய கோட்டை கொத்தளங்களை உறுதிப்படுத்தத் தொடங்கியதும் நவாப் சுராஜ்-உத்-தௌலா *1756* இல் வெள்ளையரை எதிர்த்துப்போர் தொடங்கினார். **இந்தச் செயல் சிராஜ்-உத்-தௌலாவின் நாட்டுபற்றுக்கு ஒரு சான்றாகும்**" என்று குறிப்பிட்டுள்ளார்.*** வெள்ளையரை எதிர்த்து வெற்றி பெற்று, பின்னர் துரோகத்தால் வீழ்த்தப்பட்ட வங்காள வேங்கை சிராஜ்-உத்-தௌலாவின் உண்மை சரிதம் முழுவதுமாக விரைவில் வெளிவரவேண்டும்.

---

* வை. சூரிய நாராயண சாஸ்திரி, நமது பரத கண்டம், இரண்டாம் பாகம், அன்னிய நாட்டுக் கிரஹணம், சென்னை. 1926,பக்.206.

** வாமனன், கல்கத்தா. சென்னை, 2003, பக். 52.

*** பிஸ்ரீ., கிளைவ் முதல் ராஜாஜி வரை. இந்திய சரித்திரத்தில் இரு நூற்றாண்டு, சென்னை, 1954, பக்.17.



ஹைதர் அலி

சிராஜ்-உத்-தௌலா

திப்பு சுல்தான்



சந்தா சாகிப் படுகொலை செய்யப்பட்ட
திருச்சி - தளவாய் மண்டபம்

கான்சாகிப் அடக்க இடம்
மதுரை - சம்மட்டிபுரம்

மருதநாயகம் கான்சாகிப்

மருதநாயகம் என்னும் கான்சாகிப் தமது வாளின் வல்லமையால், வியூகம் வகுக்கும் போர்த்திறத்தால் வெற்றிகளைக் குவித்து வரலாற்றில் நிலைத்துவிட்ட தீரர்களில் ஒருவர்.

பிறந்த ஆண்டு

நெல்லூர், நெல்லூர் சுபேதார்,ஈசப், யூசுப், யூசுப்கான், முகம்மது யூசுப், கும்மந்தான், கான்சாகிப், கும்மந்தான் கான்சாகிப் இப்படி பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட மருதநாயகம் பிறந்த இடம், பிறந்த ஆண்டு, தாய் தந்தையர் இது போன்ற விவரங்கள் வரலாற்றில் தெளிவாகக் காணப்படவில்லை. அநுமானங்களின் 'அடிப்படையில் கி.பி.1720க்கும் 1730க்கும் இடையில் மருதநாயகம் பிறந்திருக்கலாம் என்று கருதிட வாய்ப்புள்ளது.

செவிவழிச்செய்திகள்

கி.பி.1914ல் யூசுப்கான், புரட்சி தளபதி என்ற எஸ்.ஸி.ஹில் என்பவர் எழுதிய நூலில் ராமநாதபுர மாவட்ட நீதிமன்றத்தில் சிரஸ்தாராகப் பணியாற்றிய ரங்கசாமி நாயுடுகாரு என்பவர் சொல்லிய செவிவழிச் செய்திகளின் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டம் பனையூரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் மருநநாயகம் பிள்ளை என்று பெயரையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது மருதநாயகம் கான்சாகிப் தூக்கிலே தொங்கவிடப்பட்டு 150 ஆண்டுகள் கழிந்த பின் சொல்லப்பட்ட ஒரே ஒரு செய்தியைத் தவிர வரலாற்றில் 'மருதநாயகம்' என்ற பெயருக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை.

1765 இல் வெளியான ஸ்காட்ஸ் மேகசின், 'Khan sahip is by birth a moor' என்று குறிப்பிடுகிறது. மூர் என்ற சொல்லுக்கு 'முகமதிய மக்களில் ஒருவர்' என்று பொருள் கூறப்படுவதாலும், 'கான்சாயபு சண்டை' நாட்டுப் புறப்பாடல் வரிகளில் 'ஆலிம்குலம் விளங்க வருதீரன்' என்று குறிப்பிடப்படுவதாலும், மருதநாயகம் பிறவியிலேயே முஸ்லிம் தான் என்று கூறுபவர்களும் உண்டு. மதுரை மக்களால் போற்றப்படக் கூடிய தலைவராக

விளங்கிய காரணத்தால் மதுரை நாயகம் என்று அழைக்கப்பட்டு, பின்னர் காலப்போக்கில், வட்டாரப் போக்கில் மதுரை, மருதை என்றாகி, மதுரைநாயகம், 'மருதநாயகம்' என்று மாறியிருக்கக்கூடும் என்று கருதுபவர்களும் உண்டு.

இளைஞராய் இருந்த மருதநாயகம் யூசுப்கான் தன் சகாக்களிடையே தோளில் தடி ஒன்றைச் சாத்திக் கொண்டு, "டேய் நான் சிப்பாயி" என்று வீரநடை போட்டார். விளையாட்டுக்களில் முனைந்தார். புதுச்சேரிக்குப் புகலிடம் தேடிச் சென்றார். அங்கு தையற்காரராகத் திகழ்ந்தார். படகோட்டியாகப் பணியாற்றினார். ஜாக்கிஸ்லா, பிரண்டன் ஆகியோரிடம் வேலை செய்தார். பிரண்டனிடம் பணிபுரிந்த போது பிற மொழிகளையும் பயின்றார்.

தஞ்சாவூர் மராட்டிய மன்னர் பிரதாபசிம்ஹனின் படையில் பணிபுரிந்தார். திருப்பதி, நெல்லூர் பகுதியில் முகமதுகமால் என்பவரது கண்காணிப்பில் இருந்தார். அங்கு போர்க்களங்களில் காயம்பட்டவர்களுக்கு மருத்துவம் பார்த்தார் என்றும் கூறப்படுகிறது. தமிழகத்தில் ஆற்காடு நவாப் பதவியைக் கைப்பற்ற முகமது அலியும், சந்தாசாகிபும் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயரைஎதிர்த்து ....

சந்தாசாகிபிற்கு ஆதரவாக அவரது மகன் ராஜாசாகிப்பும், பிரெஞ்சுப் படையினரும் போர்க்களத்தில் நின்றனர். முகமதுஅலிக்கு ஆதரவாக ஆங்கிலேயப் படைகள் இராபர்ட் கிளைவின் தலைமையில் ஆற்காட்டில் அணி வகுத்து முற்றுகையிட்டது. கி.பி.1751 இல் ராஜா சாகிப்பின் படைப்பிரிவில் பணியாற்றி முதன் முதலில் மருதநாயகம் கான்சாகிப் போர்க்களம் சென்றது ஆங்கிலேயப் படையினரை எதிர்த்துத்தான்.

அந்த போரில் ராஜாசாகிப் தோல்வியைத் தழுவிய போது, போருக்குப் பின் மருதநாயகம் கான்சாகிப் கிளைவின் படையில் தனது வீரர்களுடன் சென்று சேர்ந்து பணியாற்றத் துவங்கினார். ஆற்காட்டு நவாபாக தன்னை அறிவித்துக் கொண்டமுகமதுஅலி சுலபமாக திருச்சியைக் கைப்பற்றிக்கொண்டார். அவருக்கு ஆதரவாக ஆங்கிலப்படைகள் அணிவகுத்து துணை நின்றன. அதே வேளையில் திருச்சிக்கோட்டையை சந்தாசாகிப்பின்

படைகளும் பிரெஞ்சுப் படைகளும் முற்றுகையிட்டது. அந்த வேளையில் கோட்டைக்குள்ளிருந்த ஆங்கிலேயப் படையினருக்கு வேண்டிய பொருட்களையும் தளவாடங்களையும் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தவர் மருதநாயகம்.

தனது புத்திக் கூர்மையினால் பொறுப்புடன் பணியாற்றிய மருதநாயகத்தின் புகழ் உயர்ந்துகொண்டே வந்தது. உடனிருந்த சிலர் பொறாமை கொண்டனர். மருதநாயகத்தின் மீது துரோகக்குற்றம் சுமத்தப்பட்டது. விசாரணை நடைபெற்றது. உண்மை உணரப்பட்டது. துரோகக் குற்றஞ்சுமத்தியவர்கள் பீரங்கி வாயில் வைத்து சுடப்பட்டனர். கான்சாகிப் நிரபராதியென நிரூபிக்கப்பட்டார். 'தலைசிறந்த வீரர் யூசுப்கான் (மருதநாயகம்) அவர் நாட்டை நன்கு அறிந்து வைத்திருந்தார். மிகவும் தீரமும், வீரமும் மிக்கவர். போரிடும் போது பதட்டப்படாமலும், பேரறிவாற்றலோடும் போரிட்டார். அவரை விட பிறவியிலேயே வீரரான ஒருவரை இந்த நாட்டிலே நான் எப்போதும் பார்த்ததில்லை' என்று மேஜர் லாரன்ஸ் மருதநாயகத்தின் வீரதீரங் குறித்து புகழ்மாலை சூட்டியுள்ளார்.

மருதநாயகத்தின் வீரத்தைப் பாராட்டிடவும், அவரது விசுவாசஊழியத்திற்கும், திறமையான அதிகாரியாய் செயல்பட்டதிற்கும் பாராட்டும் வகையில் அவரைக் கௌரவித்து முகமது யூசுப்கான் பகதூர் கமாண்டர் ஆப் ஹானரபிள் கம்பெனி என்று ஒருபுறமும், கம்பெனியின் சின்னம் மறுபுறமும் பொறிக்கப்பட்ட பதக்கம் மருதநாயகத்திற்கு அளிக்கப்பட்டது.

கி.பி.1757 ஜூன் 9ல் பத்துப் பேர்களுடன் இருக்கும் போது, 400 பேர்கள் மருதநாயகத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்த இக்கட்டான சூழ்நிலையில் ஆபத்து நிறைந்த வேளையில் கடைசி வரையில் நின்று அஞ்சாது போரிட்டு வென்றவர் மருந நாயகம். இவ்வாறு மெல்ல, மெல்ல தன் போர்த்திறத்தால் தெற்கு பாளையங்கள் முழுவதையும் வென்றார். மதுரையின் கவர்னராக, ஆட்சியாளராக பின்னர் மருதநாயகம் நியமிக்கப்பட்டார்.

முந்தைய ஆட்சியாளர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட மதுரை அழகர் கோவில் நிலங்களைத் திரும்பவும் கோவில் நிர்வாகத்தினரிடம் வழங்க ஆணை பிறப்பித்தார்மருதநாயகம் கான்சாகிப். அவர் விவசாயத்திற்கு முன்பணம் அளித்தார். வாய்க்கால்களைச் செப்பனிட்டார்.

மக்களின் மகிழ்ச்சியில் தனது மகிழ்ச்சி இருப்பதாகப் பறைசாற்றிய மருதநாயகம் தனது பாசறையை விட்டுவெளியே சென்று நிலபுலன்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களின் குறைகளை கண்டறிந்து அவர்களைத் தேற்றினார். பல்வேறு போர்க்களங்களில் போற்றத்தக்க வெற்றிகள் பல பெற்ற மருதநாயகம் இறுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியாரையும்., ஆற்காட்டு நவாபையும் எதிர்த்து தனி அரசு காண விரும்பினார்.

வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்து நாட்டைக் காத்திட தனது சக்தி முழுவதையும் செலவிடத் திட்டமிட்ட மருதநாயகம் தமிழகத்தில் ஆளுந்திறமையற்ற ஆற்காடு நவாபின் ஆட்சியையோ, அல்லது அன்னியரின் ஆட்சியையோ நிலை நிறுத்த விரும்பவில்லை. எனவே குத்தகையுரிமையைப் பயன்படுத்திக் கொண்டே ராணுவத்தைப் பலப்படுத்தி கம்பெனிக்கும், நவாபிற்கும் இடையே குழப்பத்தை உண்டு பண்ணி, இறுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியாரை நாட்டை விட்டே ஓட்டத் திட்டமிட்டார். அதனால் நல்ல பிள்ளையைப் போல வெள்ளைக் கம்பெனியிடத்திலே நடந்து கொண்டு குத்தகை வியாபாரியைப் போல் ஆற்காடு நவாபிடத்திலும் நடந்து கொண்டு உள்ளத்தில் மட்டும் தமிழகத்தின் விடுதலையைக் கருதிவந்தார் மருதநாயகம். யூசுப்கானை கீழ்ப்படிய வைக்கவில்லையென்றால் அவன் கும்பெனிக்கு விசுவாசமுள்ள ஊழியராக நீடிக்க மாட்டான் என்று நான் அஞ்சுகிறேன்.

"You should require a submission from him, for I apprehend he will soon be too great to remain a servant of the company".

மனதில்விழுந்தசந்தேகவிதை

இதற்கு கான்சாகிப் அப்போது தகுந்த பதிலைச் சொல்லித் தப்பித்துக் கொண்ட போதிலும் அவரது அடிமனதில் ஆங்கிலேயர் குறித்த சந்தேக விதையை விழச் செய்தது. புதிய அதிகாரிகள் பொறுப்பிற்கு வந்து, நமது பகைவர்களால் வசீகரிக்கப்பட்டு, கைக்கொள்ளப் படுகிறபோது, நமக்கு எதிராக அவர்கள் திகழக்கூடும் என்ற சந்தேகம் அப்போதே கான்சாகிபிற்கு வரத் துவங்கிவிட்டது.

துவக்கத்திலேயே சந்தேகம்

கான்சாகிப் ஒரு முஸ்லிமாக இருந்த போதிலும், ஆற்காடு நவாப் முகமதலி எப்போதும் அவர் மீது வெறுப்புக் கொண்டிருந்தார். தெற்குச்சீமைக்கு, இராணுவ நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்திட கான்சாகிப் நியமிக்கப்பட்ட போதே (1759) நவாப் முகமதலி அவர் மீது வெறுப்புக் கொண்டிருந்தார்.

நவாபின் வெறுப்பு

தெற்குச்சீமையின் பொறுப்பை கவனித்திட தகுதியான வரை தன்னிடத்திலே பெற்றிருக்காத நிலையிலும், அந்தப் பகுதிகள் தனது கட்டுப்பாட்டிற்குள்தான் விடப்பட வேண்டும் என்றும், கான்சாகிபிடம் வழங்கக்கூடாது என்றும் ஆரம்பம் முதலே சொல்லி வந்த முகமதலிகான்சாகிப் மீது வெறுப்பும், பகைமையும், அவநம்பிக்கையும், கொண்டிருந்தார்.

"The Nabob had, ever since the first appointment of Mahomed Issoof to conduct the war in these countries, regarded him with suspicion and aversion, and insisted that they should be left to his own disposal and control."

விடுதலை வேட்கை

இந்தச் சூழலிலிருந்த கான்சாகிப் குறித்து, துர்க்காதாஸ் எஸ்.கே.ஸ்வாமியின் வார்த்தைகள் பொருத்தமாக இருக்கிறது. இதோ அந்த வரிகள்....

"வாசுதேவநல்லூர் போருக்குப் பிறகு, வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்து நாட்டைக் காக்கத் தனது சக்தி முழுமையும் செலவிடத் திட்டமிட்டான் கான் . தமிழகத்தின் ஆளுந்திறமையற்ற ஆற்காடுநவாப்பின் ஆட்சியையோ, அல்லது அன்னியரின் ஆட்சியையோ அவன் நிலைநிறுத்த விரும்பவில்லை. எனவே குத்தகையுரிமையைப் பயன்படுத்திக் கொண்டே, ராணுவத்தைப் பலப்படுத்தி கும்பினிக்கும் நவாபுக்கும் இடையே குழப்பத்தை உண்டு பண்ணி, இறுதியில் கும்பினியாரை நாட்டை விட்டே ஒட்டி விடத் திட்டமிட்டான் கான். ஆகவே நல்லபிள்ளையைப் போல, வெள்ளைக் கும்பினியிடத்தில் நடந்து கொண்டு குத்தகை வியாபாரியைப் போல, ஆற்காடு நவாபிடத்தில் நடந்து கொண்டு உள்ளத்தில் மட்டும் தமிழகத்தின் விடுதலையையே கான் கருதி வந்தான்.*

கொளுத்தப்பட்ட கும்பினிக் கொடி

இந்த நிலையில் மதுரைக் கோட்டைவாயிலில் பறந்து கொண்டிருந்த கும்பினிக்கொடி இறக்கப்பட்டது. கீழே இறக்கப்பட்ட ஆங்கிலக் கொடி முகாமின் மத்தியில் கொண்டுபோய் வைக்கப்பட்டு கான்சாகிபின் வீரர்கள் பார்த்து மகிழும் வண்ணம் எரிக்கப்பட்டது என்று மார்ச்சந் கூறியிருக்கிறார். At the same time he announced his alliance with our nation, allowing me to lower the English Flag and that of Muhammad Ali and even to burn them in the middle of the camp.**

சர்ஜான்லின்ட்சே

யூசுப்கான் தனது கோட்டையிலிருந்து ஆங்கிலக் கொடியை கீழே இறக்கிட உத்திரவிட்டார். கோட்டையிலிருந்து கும்பெனிக் கொடி இறக்கப்பட்டதும் அது பீரங்கி வாயில் வைத்து சுட்டுப் பொசுக்கப்பட்டது. இந்த விஷயம் *13.10.1770* இல் டச்சுக்காரர்களின் கப்பற்படைகளின் தலைமைத் தளபதி சர்ஜான்லின்ட்சே (Sir John Lindsay) என்பவரால் Lord Viscount Weymouth என்பவருக்கு பின்னால் எழுதப்பட்டது.

---

* *கான்சாகிப் கம்மந்தான், பக்.77-78.*

** மேலும் இந்த விவரங்கள் J.Macpherson என்பவர் *எழுதிய* The History and managemnet of East India company from its origin in 1600 to the present time Vol I, 1782, P.143.

He than joined the French and carried them into Madura Fort. And to show that he was perfectly estranged from the English he fixed their colours to the mouth of a cannon and fired it off.* *1763* பிப்ரவரி *5* இல் ஆங்கிலத் தளபதி பிரஸ்டன் மதுரைக் கோட்டையில் தங்களது ஆங்கிலக் கொடி கான்சாகிபால் இறக்கப்பட்டு கொளுத்தப்பட்ட செய்தியை குறித்து, *15* நாட்களுக்கு முன்னதாக யூசுப்கான் தன்னுடைய முகாமில் பிரெஞ்சுக்கொடியை ஏற்றி வைத்து தன்னுடைய கோட்டைகளில் எல்லாம் பிரெஞ்சுக் கொடியை ஏற்றிட உத்திரவிட்டிருக்கிறார். அதற்கு முன்னர் அங்கு ஆங்கிலேயக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன என்று எழுதிகிறார். நவாபின் கொடியை ஏற்ற வேண்டும் என்று பலமுறை கவுன்சில் வற்புறுத்தியிருந்த போதும் கோட்டையில் கான்சாகிப் அந்தக் கொடியை ஒருபோதும் ஏற்றவில்லை.

கோட்டையில் பறந்து கொண்டிருந்த ஆங்கிலக் கொடியை இறக்கி எரித்துவிட்டதோடு, நடனமிடும் குதிரையும், முரசும் பொறிக்கப்பட்ட தனது கொடியையும்** பிரெஞ்சுக் கொடியையும் கோட்டையில் ஏற்றினார் கான்சாகிப்.

பாரிஸ் ஒப்பந்தம்

இந்த நிலையில் இங்கிலாந்தும் பிரான்சும் இனி ஒருவருக்கெதிராக மற்றவர் ஆயுதங்களைத்தீண்டுவதில்லை யென்றும், இரு தேசத்தவர்களும் இணைந்து வாழ்தல் அவசியம் என்றும்; *1763* பிப்ரவரியில் 'பாரிஸ் ஒப்பந்தம்' ஏற்பட்டது. அதில் கர்னாடக நவாபாக முகமதலியும் அங்கீரிக்கப்பட்டார்.*** இந்தச் செய்தி *1763* மே *19* இல் பம்பாயிலிருந்து தெற்குச் சீமைக்கு வந்து சேர்ந்தது.

---

* சர்ஜான் லின்ட்சே கூறும் இந்தச் செய்தியினை *1763—64* இல் டச்சுக்காரர்களால் எழுதப்பட்டு அச்சில் வராத 'Short Accounts of Madura' என்ற நூலில் காட்ப்ரேடு ஸ்வீப்பி (Godfried Sweepe) என்பவரும் உறுதிப்படுத்துகிறார்.

** மஹதி,மாவீரர் கான்சாகிப், சென்னை, *1961*, பக்.*72*.

***சிவ. இராமச்சந்திரன், ஆங்கிலேயர் காலம், தமிழக வரலாறு, பேராசிரியர் அறுவர் சொற்பொழிவுகள், *1975*, பக்.*270*.

அதே வேளையில் தக்காண நிஜாம்அலி மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் மருதநாயகம் கான்சாகிபை கவர்னராக நியமித்து, தனது முத்திரையுடன் கூடிய ஆணையை மாதவ்(Maudave) என்ற பிரெஞ்சு அதிகாரிக்கு அனுப்பி வைத்தார். இதற்குப்பிறகு ஆங்கிலக் கும்பெனி ஆவேசங் கொண்டது. ஆற்காடு நவாப் ஆத்திரங்கொண்டார். வெள்ளையரின் விரோதியாக கான்சாகிப் அறிவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து மதுரைப் போரும் ஆரம்பித்தது.

வெள்ளையரின் விரோதிகான்சாகிப்

"கான்சாகிபுடன் சேருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கலகக்காரர்களாகக் கருதப்பட்டு அதன்படியே நடத்தப்படுவார்கள். ஆனால் அவரை விட்டு முன்னதாகவே வந்து விடுபவர்களுக்கு நவாபால் எல்லா சலுகைகளும் அளிக்கப்படும். இங்கிலாந்து இதர நாடுகளுடன் சமாதானங்கொண்டிருப்பதால் கான்சாகிபுடன் காணப்படும் இதர ஐரோப்பியர்கள் கலகக்காரர்களாகவே கருதப்படுவார்கள். அவர்களும் அங்கிருந்து வந்துவிட்டால், அவர்களுக்கும் சாதகமான வரவேற்பு அளிக்கப்படும். கான்சாகிப்பிற்கு எதிராக கம்பெனியின் மேஜர் ஜெனரல் லாரன்ஸாகிய நானும் நவாப்புடன் சேர்ந்து விட்டேன்" என்று 8.7.1763 இல் திருச்சி கோட்டையின் வாயிலில் பிரகடனம் செய்தார்.*

மருதுபாண்டியரின் பிரகடனம்

"நாட்டிலுள்ள ஒவ்வொருவரும், பாளையக்காரர்களும் தாங்களாகவே கிளர்ந்தெழுந்து ஆயுதமேந்தி ஈனத்தனமான ஆங்கிலேயரை அகற்றும் வரை போரிட வேண்டும்.இந்த இழிதகைப் பிறவிகளான ஆங்கிலேயர்கள் அடியோடு ஒழிக்கப்படும் வரை எங்கெங்கே கண்டாலும் அவர்களை ஒழித்துக் கட்டுங்கள்"*** என்று மானங்காத்த மருது பாண்டியர்கள் 1801 ஜுன் 16 இல் திருச்சி கோட்டையின் வாயிலில், வெள்ளையர்களை எதிர்த்து போர்ப்பிரகடனம் செய்யப் போகிறார்கள் என்பதனை கும்பெனிப்

---

*S.C.Hill, Yusufkhan, The Rebel commandant, NewDelhi, 1987, P.41.

&Military Consultations, 18.7.1763, P.74.

***பொன்.முத்துராமலிங்கம், தென்னாட்டுப் புரட்சி, 1990, சென்னை, பக்.389—390 & K.Rajayyan, South Indian Rebellion, Mysore, 1971, PP.236-237.

படைத் தலைவர் அப்போது அறிந்திருக்கவா முடியும்? ஆங்கிலேயரின் விரோதியாக கான்சாகிபை அறிவித்த மேஜர் லாரன்ஸின் பிரகடனத்தை கும்பெனிக் கவுன்சில் ஏற்றுக் கொண்டது.

சென்னைக்கு அனுப்புக

கான்சாகிபுடன் பேச்சு வார்த்தை நடத்தி அவரை சரண் அடையக் கோர வேண்டும். அதை மீறி கான்சாகிப் கோட்டையைப் பாதுகாத்திடப் போரிட்டால், அப்போது ஒருவேளை உயிரோடு பிடிபட்டால் அவரைக் கைது செய்து சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று 12.7.1763 இல் கும்பெனிக் கவுன்சில் ஆணையிட்டது. கான்சாகிபின் புரட்சியானது கடுந்தண்டனைக்குரியதாக இருப்பதால் அவர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அது, இது மாதிரிச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குப் பாடமாக அமைய வேண்டுமென்றும் கவுன்சில் விரும்பியது.

முதல்மரத்தில்தூக்கு

'கான்சாகிபை நவாப்பிடம் கைதியாக ஒப்படைப்பது அபாயகரமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதுவதால், கான்சாகிப் பிடிப்பட்டதும் தென்படும் முதல் மரத்தில் அவரைத் தூக்கிலிட அனுமதி அளிக்கிறோம்' என்றும் 1.8.1763இல் கவுன்சில் கடிதம் எழுதியது.

கொல்லத்துடித்த கும்பெனியார்

'நவாப்முகமதலி ஒரு வேளை கான்சாகிபிற்கு மரண தண்டனை கொடுக்கத் தயங்கினால் கூட, கான்சாகிப்பை ஆங்கிலேயப் படைவீரர்களுக்கு முன்னால் தூக்கிலிடும் படி நமது கர்னல் மான்சனுக்கு கட்டளையிடுங்கள்' என்று மேஜர் லாரன்ஸ் 6.8.1763 இல் கவுன்சிலுக்குப் பதில் கடிதம் எழுதினார். கான்சாகிப்பை கொல்லத் துடித்தனர் கும்பெனியார்; கடுகளவும் அஞ்சாது களமிறங்கினார் கான்சாகிப்.

வெள்ளையரை விரட்டிய வீரர்

3000 சிப்பாய்கள், 1000 அரேபியக் குதிரைகள் இருநூறிலிருந்து முந்நூறு வரை ஐரோப்பிய அதிகாரிகள் பறக்கும் படையில் 4000சிப்பாய்கள், 2000 சுதேசி வீரர்கள். 1000 குதிரைவீரர்கள், 100 டுபாஸ்கள்(Topasses) ஆறுபீரங்கிகள் அதனை இயக்கும் வீரர்கள் ஆகியோரைக் கொண்டதாக மதுரையில் கான்சாகிப்பின் படைபலம் இருந்தது. அது போல் பாளையங்கோட்டையில் 2000 சிப்பாய்களும் 100 குதிரை வீரர்களும் இருந்தனர். இது தவிர்த்து தேவைக்கேற்றார்போல் பயன்படுத்துகிற வகையில் மேலும் படைவீரர்களையும் தயார் நிலையில் வைத்திருந்தார் கான்சாகிப்.

பிரஸ்டனின் பெரும்படை

திருச்சியை விட்டு 1763 சூலை 14 இல் ஆங்கிலப்படை, தளபதிபிரஸ்டன் தலைமையில் கிளம்பி கிழக்குப்பாதை வழியாக திருப்புவனத்திற்கு வந்து சேர்ந்தது. நத்தம் பாதையை நவாப்பின் அதிகாரி வெஸ்ட்(Mr.West) கைப்பற்றிக் கொண்டார். அதனால் திருச்சியிலிருந்து நேரடிப் பாதை ஆங்கிலேயர்கள் வசமானது.

இந்த நிலையில் திருச்சியைத் தாக்க திட்டமிட்டார் கான்சாகிப். பிரெஞ்சு அதிகாரி மாதேவ் ஆலோசனைப் படி அது கைவிடப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர்கள் மீது சிறுசிறு தாக்குதல்களை நடத்தி தனது போர் ஆற்றலைக் காட்டிட கான்சாகிப் முயன்றார். கும்பெனிப் படைகளை 1763 ஆகஸ்ட் 11 இல் கான்சாகிப் தாக்கினார். 150 ஆங்கிலச் சிப்பாய்கள் போரில் கொல்லப்பட்டனர். 40 ஆங்கிலேயர் காயமுற்றனர். 200 துப்பாக்கிகளை சேதப்படுத்தி அபார வெற்றியினை கான்சாகிப் பெற்றார்...... the English losing 150 sepoys killed and wounded and 40 missing, as well as 200 stand of arms. இந்த வெற்றியைப் பாராட்டி ஹைதர்அலி கான்சாகிப்பிற்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்தார்.* 28.8.1763 இல் மதுரைக் கோட்டையின் பார்வைக்குள் பிரஸ்டன் வந்து சேர்ந்தார். கோட்டையில் கான்சாகிப்பின் நடனமாடும் குதிரையுடன் முரசமும் கொண்ட கொடியும் பிரெஞ்சுக்கொடியும் பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

*Orme MSS, 47, P, 74 *மேற்கோள் எஸ்.ஸி.ஹில், பக் 145.*

1763 செப்டம்பர் 1

1600 ஐரோப்பியர்கள், *4000* சிப்பாய்கள், *2000* கருப்புக் குதிரைகள், பல்லாயிரக்கணக்கான வீரர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக கோட்டையை நோக்கி நெருங்கத் துவங்கியபோது, கான்சாகிபின் வீரர்கள் குண்டுகளை மழையெனப் பொழிந்ததால், பின்வாங்கிய கும்பெனிப் படையினர் அனைவரும் தென்கிழக்கில் தெப்பக்குளத்தருகே செப்டம்பர் 2 இல் முகாமிட்டனர்.

சமவெளியில் இறங்கி ஆங்கிலேயப் படையினர் தாக்குதலைத் தொடுத்தனர். ஆங்கிலத் தளபதி மான்சன் மதுரைக் கோட்டையின் மேற்குப் பகுதியைத் தாக்கிடும் வகையில், தமது படைகளை அருகிலிருந்த சமவெளியைக் கடந்து செல்ல உத்திரவிட்டார்.

தயக்கமும் தாக்குதலும்

ஆங்கிலேயரின் படையிலிருந்த சுதேசி வீரர்கள் தங்களது சொந்தக் குதிரைகளை துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கப் பயந்து, ஆங்கிலயேப் படையைப் பின் தொடர்ந்து செல்லத் தயங்கினார்கள். இந்தத் தயக்கத்தை அறிந்து கொண்ட கான்சாகிப் விரைந்து தனது படைகளுடன் முன்னேறி, ஆங்கிலப் படையைத் தாக்கி குழப்பத்தை ஏற்படுத்தி, ஆங்கிலப் படையை வந்த கரையை நோக்கியே திருப்பி விரட்டியடித்தார். இந்தப் போரில் 17 ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டனர். லெப்டினென்ட் சாமுவேல் ஸ்டீவன்சன் இந்தப்போரில் கொல்லப்பட்டார். திரும்பி ஓடும் போது காப்பன் ரூடால்ப் ஒரு காலை இழந்தார்.*

படையைவிட்டுச் சென்றபறங்கியர்

1763 செப்டம்பர் 2 இல் ஆங்கிலேயக் குதிரைப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வியால் ஆங்கிலேயர் துவண்டு போயிருந்தனர். மேலும் மதுரை நகரத்தை நெருங்கவிடாமல் கான்சாகிபின் குதிரைப் படையின் வீரர்களும் கடுமையான எதிர் தாக்குதலை நடத்தினார்கள். ஆங்கிலேயப் படையினரிடையே நோய்களும் பரவலாயிற்று. அங்கிருந்த ஐரோப்பியர்கள் படையை விட்டுச் செல்லவும் ஆரம்பித்தனர்.

---

*மஹதி. கான்சாஹிபின் கடைசி நாட்கள், *1958*, ஜனவரி, மணிவிளக்கு, பக் *32*.

பலமான பாதுகாப்புகள்

1763 செப்டம்பர் *5* இல் கேப்டன் கால் (Call) யோசனைப்படி *14* பீரங்கிகள், பத்து நாட்களுக்குத் தேவையான வெடி மருந்துகளுடன் மதுரைக் கோட்டையின் வடகிழக்குப் பகுதியைத் தாக்குவதற்கு ஆங்கிலேயரால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் கான்சாகிபின் படைகள் பலமாக பாதுகாத்து நின்றதால் கோட்டையின் மூன்று மைல் தூரத்திற்குள் எந்த இடத்திலும் தங்களது படைகளை முகாமிட முடியாத நிலையை உணர்ந்தனர்.

படையெடுப்பதா? பதுங்கிநிற்பதா?

மேஜர் பியர்ஸ் (Piers) சாப்மென் (Chapman) பிரஸ்டன் கால் ஆகியோர் *1763* செப்டம்பர் *7* இல் மேலும் பீரங்கிகளும் வெடிமருந்துகளும் வராமல் மதுரை தாக்குதலைத் தொடர முடியாது என்று முடிவெடுத்தார்கள். *1763* செப்டம்பர் *12* இல் ஆங்கிலப் படையின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், பெருமையை நிலைநாட்டிடவும், மதுரையைத் தாக்கி கைப்பற்றும் முயற்சியைத் தள்ளிப் போட முடியாது என்றும் முடிவெடுத்தனர். ஆனால் மழைகாலம் வந்துவிடுமே அதனால் போரைத் தள்ளி வைத்திடலாமா? என்று ஆங்கிலேயர் ஆலோசித்தனர். இவ்வாறாக படையெடுப்பதா? பதுங்கி நிற்பதா? என்று முடிவெடுக்க முடியாது பறங்கியர் திகைத்து நின்றனர்.

தாக்குதல் தொடர்ந்து

1500 கெஜங்களுக்கு அப்பால் படுகுழிகளை அமைத்துக் கொண்டு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இல்லாத நிலையில் ஆங்கிலத்தளபதி மான்சன் *1763* செப்டம்பர் *15* இல் திரும்பவும் போரை ஆரம்பித்தார்.

பின்வாங்குதலும் பித்தலாட்டக்காரணங்களும்

“கான்சாகிபிடமிருந்து மதுரையைக் கைப்பற்றுவதில் சிரமங்கள் வெகுவாக இருப்பதாக அறிந்தால் தற்சமயம் அந்த முயற்சியை கைவிடுவதே உசிதமாக இருக்கும். பின் வாங்கிச் செல்வதினால் வரும் சூழ்நிலைகள் மோசமாக இருந்தாலும் அதை

விட வீண் முயற்சி எடுப்பது மோசமானதாக இருக்கும். எனவே ஜெனரல் லாரன்ஸ் கவுன்சிலின் கருத்துக்களை மனதில் கொண்டு மதுரைப் போரிலிருந்து தமது படைகளைப் பின்வாங்கிட வேண்டுமென்று மான்சனுக்கு உத்திரவிட வேண்டும். அப்படி போரிலிருந்து பின் வாங்கும் போது பாரிஸ் ஒப்பந்தத்தால் இங்கிலாந்தும் பிரான்சும் போரிடக்கூடாது என்பதால்,மதுரைக் கோட்டையில் தற்போது பிரெஞ்சுக்கொடி பறப்பதால் தாக்காமல் திரும்புகிறோம்" என்று சொல்லி விட்டு பின் வாங்கிட வேண்டுமென்று *1763* செப்டம்பர் *19* இல் கவுன்சில் ஆங்கிலேயத் தளபதிகளுக்கு தாக்கீது அனுப்பியது.

தொடர்ந்திடும் போரும் தொடர்ந்திடும் தொடர்புகளும்

24.09.1763 இல் கான்சாகிபின் படையினர் கோட்டையிலிருந்து தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தனர். *28.9.1763* இல் ஆங்கிலத் தளபதி கால் மேலும் தனது படைகளுடன் முன்னேறிச் சென்றார். கோட்டையிலிருந்து குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்த கான்சாகிபின் படையினரை எதிர்த்து ஆங்கிலேயர் தொடர்ந்து முன்னேற இயலவில்லை.

ஆனால் கோட்டைக்குள்ளிருந்த கான்சாகிப் வெளியில் தனது நண்பர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். ஆங்கிலேயர்களின் எதிர்ப்பேதுமின்றி, கான்சாகிபின் ஆட்கள் மதுரைக் கோட்டைக்குள் பொருட்களை வெளியிலிருந்து கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தனர்.

தலைமைப்பொறுப்பு

கோட்டைக்குள்ளிருக்கும கான்சாகிப் ஆதரவுப் பிரெஞ்சுப் படைகளுக்கு எம்.பிளாமிகோர்ட் (M.Flami Court) தலைமை தாங்கினார். அதுபோல் கோட்டைக்கு வெளியிலிருக்கும் பிரெஞ்சு மற்றும் கான்சாகிப் ஆதரவுப் படைகளுக்கு மார்ச்சந் தலைமை தாங்கினார்.

மகிழ்ச்சியும் மனஉளைச்சலும்

மார்ச்சந்திற்கும், கான்சாகிபிற்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியது. எனவே மார்ச்சந்தை சிறையில் தள்ளிவிட்டு படைத் தலைமையை ரிக்கட் என்ற ஜெர்மானியர் வசம் ஒப்படைத்தார் கான்சாகிப். மார்ச்சந்தைப் போல், ரிக்கட் படை ஆற்றல் பெற்றவர் இல்லை. எனவே சார்லஸ் பிளாக்கர்ட் (M.Charles Flacourt) மாவ்தேவ் இருவரும் மார்ச்சந்திற்காகப் பரிந்துரைத்த போது, மீண்டும் மார்ச்சந்திற்கு படைப்பொறுப்பு வழங்கப்பட்டது. 1763 அக்டோபர் 4,5 ஆம் நாட்களில் மதுரைக்கு வெளியே நடைபெற்ற போர்களில் கான்சாகிபிற்கு ஆதரவாக மார்ச்சந்த் பெருவெற்றி பெற்று, ஆங்கிலேயர்களுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தினார்.

மான்சனின்மடல்

தனக்கு உடல் நலமில்லையென்றும், தன்னால் கான்சாகிபை வெற்றி கொள்ள இயலாதென்றும், தனக்குப் பதில் புதிய தளபதியை நியமித்துக் கொள்ளுங்கள் என்றும் கும்பெனிக் கவுன்சிலுக்கு மான்சன் கடிதம் எழுதினார். 12.11.1763 இல் ஆங்கிலப் படைகள் மதுரையிலிருந்து பின் வாங்கி திரும்பூருக்கு வந்து சேர்ந்தது. பத்து நாட்கள் பெருமழை தொடர்ந்தது. ஆங்கிலத் தளபதிகள் பலர் தோல்வியோடு சென்னைக்குத் திரும்பிச் சென்றனர்.

ஆங்கிலேயர் பயன்படுத்திய ஆயுதங்கள்

கான்சாகிபை எதிர்த்து நடைபெற்ற இந்தப் போரின் போது வெள்ளையர் பயன்படுத்திய ஆயுதக் கணக்கு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. 40,000 பீரங்கிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. 18,000 துப்பாக்கிக் குண்டுகள் மதுரையை நோக்கிச் சுடப்பட்டது. 700 ஐரோப்பியர்கள் சாவைத் தழுவிக் கொண்டனர். ஒரு மில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங் பணம் செலவாயிற்று என்றால் போரின் கடுமையை என்னவென்று சொல்வது? That in this seige the English fired more than 40,000 cannon shot, and threw into the town more than 18000 shells, and that they lost by death and desertion 700 Europeans, and spent about a million pounds streling.*

---

* Letter from M.de Maudare to the Duc dechoiseul, IIede France, 20th April 1764. Archieves du Department des affaires Etrangeres, Paris, (Unpublished)

பின்வாங்கிய பீரங்கிகள்

1763 நவம்பரில் மதுரைக் கோட்டை அகழியைக் கடக்க முயன்ற போது அந்த முயற்சியில் இருமுறை மான்சனும் ஆங்கிலப் படையும் தோற்றுப் போனது. மழையோ பெய்து கொண்டிருந்தது. பீரங்கிகளை பாதுகாப்பாக வைத்திட முடியாத நிலையில், ஆங்கிலத் தளபதிகள் தங்களது பீரங்கிகளை அப்புறப்படுத்தி எடுத்துச் சென்றனர்.

கான்சாகிபின் படைபலம்

கான்சாகிபின் படைபலத்தை குறைவாக மதிப்பிட்டதால் ஆங்கிலக் கும்பெனி மதுரையின் முதல் முற்றுகையில் தோல்வியைத் தழுவியது. இதோ எஸ்.ஸி.ஹில் சொல்கிறார். One can only conclude that ability and strength of Yusufkhan had been grievously under rated.*போரில் வெற்றி பெற்ற கான்சாகிப் தனது தளபதிகளுக்கும் தனது வீரர்களுக்கும மகிழ்ச்சி பொங்கிட பணத்தை அள்ளி அள்ளி வழங்கி மகிழ்ந்தார். மதுரையின் முதல் முற்றுகை இவ்வாறாக முடிவுக்கு வந்தது.

கான்சாகிபின் வெற்றி

'தற்சமயம் எனக்கு கிடைத்த தகவலின்படி கான்சாகிப் நமது ஆங்கிலப் படையை நன்றாகவே தோற்கடித்து, அதிகமான நமது வீரர்களைக் கொன்று, நமது படைகளை நதியின் இக்கரையிலிருந்து பின் வாங்கிச் செல்ல வைத்து வெற்றி கண்டார் என்று தெரிய வருகிறது' என்று சென்னை வணிகர் சுங்குராம செட்டியார் *6.11.1763* இல் ராபர்ட் ஓர்மிற்கு எழுதிய கடிதத்தில் ,கான்சாகிபின் முதல் வெற்றி போற்றப்பட்டிருக்கிறது.**

மீண்டும் மதுரை முற்றுகை

முதல் முற்றுகையில் வெற்றியைப் பெற்ற கான்சாகிப் ஆங்கிலேயர்கள் திரும்பவும் விரைவில் தாக்குதலைத் தொடுப்பார்கள் என்பதனை மறந்திடவில்லை. எனவே கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார்.

---

* எஸ்.ஸி.ஹில், *முற்கூறிய நூல், பக்.160*

** Orme MSS, 30, P.45.

அரசாங்கத்திற்கு சேர வேண்டிய வரிப்பாக்கிகளை பாதியைப் பணமாகவும், மீதியைப் பொருட்களாகவும் வசூலித்து சேர்த்துக் கொண்டார். கோட்டை அகழியைப் துப்பரவு செய்திட ஆணை பிறப்பித்தார்.கடந்த போரின் போது மதுரையைச் சுற்றியிருந்த நீரோடைகள் வழியாக ஆங்கிலேயர்கள் எளிதில் கோட்டையை நோக்கி வரமுடிந்ததை உணர்ந்த கான்சாகிப் அவைகளை நிரப்பிட உத்திரவிட்டார்.

ஆயத்தவேலைகள்

கோட்டைக்கு வெளியே முகாமிடும் தனது படைகளின் பாதுகாப்பிற்காக அகழியிலிருந்து 600 முதல் 800 கெஜதூரத்தில் பல மண்மேடுகளை கான்சாகிப் அமைத்தார். உணவுப் பொருட்கள், யுத்த தளவாடங்கள், வெடிமருந்துகள், துப்பாக்கிகள் பெருமளவில் சேகரிக்கப்பட்டன. கோட்டையின் சுற்றுப் புறங்களிலுள்ள வீரர்களுக்குத் தரிசு நிலங்களை அளித்து, அவர்களின் அன்பை மேலும் சம்பாதித்துக் கொண்டார் கான்சாகிப்.

கும்பெனியாரின் முயற்சிகள்

மதுரை நகரத்தை நேராகத் தாக்கினால் மிகுந்த வெறியுடன் அதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் கான்சாகிபின் படைகள், ஆங்கிலப் படைகளுக்கு பலத்தை சேதத்தை ஏற்படுத்திவிடும் என்பதால் அந்த ஆபத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆங்கிலேயர்கள் திட்டம்வகுத்தனர். கான்சாகிபின் ஆதரவாளர் களுக்கும் மதுரைக்குமுள்ள தொடர்பைத் துண்டித்து விட்டால் மதுரை கோட்டைக்குள் பஞ்சம் ஏற்பட்டு, அதன்பின் தானாகவே கான்சாகிப் சரண் அடைந்து விடுவார் என்று ஆங்கிலேயத் தளபதி பிரஸ்டன் நம்பினார்.

திரும்பத்தாக்கத் தீர்மானித்தல்

திரும்பவும் மதுரையை முற்றுகையிட கும்பெனியார் தீர்மானித்தனர். 50 பேர்களை தங்களது படையில் சேர்த்தால், லெப்டினென்ட் அந்துஸ்துடையவர் காப்டனாக்கப்படுவார் என்று சலுகைகளை அறிவித்து படை திரட்டினர் ஆங்கிலேயர்.

1763 நவம்பர் 18 இல் தளபதி பிரஸ்டன் மதுரைக்குத் திரும்பவும் வந்து 'போர் இன்னும் முடியவில்லையென்று' மக்களிடம் அறிவிப்புச் செய்தார். 1763 நவம்பர் 25 இல் படைகளை களத்திற்கு அழைத்துச் செல்ல பிரஸ்டன் விரும்பிய போது, அவரது படையில் 96 வது படைப்பிரிவினர் போருக்குச் செல்ல மனமன்றி ஒத்துழைக்கவும் மறுத்தனர்.

1763 டிசம்பர் 27 இல் கவுன்சில் ஆங்கிலக் கும்பெனிப் படையிலுள்ள சுபேதார்களுக்கும், ஐமேதார்களுக்கும் சலுகைகளையும் பதவி உயர்வையும் அளித்தது. 29.12.1763 இல் அதிக அளவில் வெடிமருந்துகளை கும்பெனிப் படைகளுக்கு ஆதரவாகக் கொண்டு வந்த படையினரும் ஆங்கிலப் படையினரோடு இணைந்து கொண்டனர். 5.1.1764 இல் பிரஸ்டன்தனது படை பட்டாளங்களுடன் மதுரை தெப்பக்குளத்தருகில் வந்து முகாமிட்டார்.

கான்சாகிபின் கடிதம்

ஆங்கிலேயரையும் ஆற்காடு நவாபையும் ஆதரிப்பவர்கள் தங்களது வீழ்ச்சிக்குப் பின்னர் தங்களின் அழிவைத் தாங்களே தயார் செய்து கொள்வதாக அமையும் என்று மற்ற பாளையக்காரர்களுக்கு கான்சாகிப் கடிதம் எழுதினார். அத்தோடு தனக்கு ஆதரவு தரவேண்டு மென்றும் தன்பக்கம் பாளையக்காரர்களுக்கு அழைப்பும் கொடுத்தார்.

குவிந்தன கும்பினிப்படைகள்

31.12.1763 இல் சென்னைக்கு வந்துசேர்ந்த 250 ஐரோப்பியப் படை வீரர்கள் 25.1.1764 இல் காப்டன் வில்லீர்ஸ் பிஷ் கிரால்டு (Captain Villers Fitzgerald) தலைமையில் தொண்டியை வந்தடைந்து , பின்னர் மதுரைக்கு விரைந்தனர். 26.1.1764 பிரஸ்டனின் பொறுப்பினை நல்ல அனுபவம் வாய்ந்த சார்லஸ் காம்பெல் ஏற்றுக் கொண்டார்.

---

24 பவுண்டு பீரங்கிகள் எட்டு, 18 பவுண்டு பீரங்கிகள் பன்னிரெண்டு., 12 பவுண்டு பீரங்கிகள் நான்கு., 9 பவுண்டு

பீரங்கிகள் நான்கு, அவைகளுக்குத் தேவையான 40000 குண்டுகள், நானூறு தோட்டாக்கள், 5500 பேரல் வெடிமருந்துகள், பழைய கோட்டைகளை இடிக்கும் ராட்சத இயந்திரம் இத்தனையும் கும்பெனிப்படைகக்கு வந்து இறங்கியது.

பம்பாயிலிருந்து வந்த பறங்கியர் படை

31.1.1764 இல் பம்பாயிலிருந்து ஆங்கிலப்படையும், மதுரைக்கு வந்து சேர்ந்தது. மதுரையின் சுற்றுப்புறத்திலுள்ள சிறிய சிறிய கோட்டைகளையெல்லாம் மெல்ல மெல்ல ஆங்கிலப் படை கைப்பற்றத் தொடங்கியது.

ஹைதர்அலி அனுப்பிய யார்க்கான்சுலைமான்

1764 பிப்ரவரியில் ஹைதர் அலி யார்க்கான் சுலைமான் (Yarkhan Sulaiman) என்ற தளபதியின் கீழ் ராணுவத்தை கான்சாகிப்பிற்கு அனுப்பி வைத்தார்.* தன்னிடமிருந்த படைவீரர்களில் பலரை தங்களது படையிலிருந்து விலக்கி, அவர்களையெல்லாம் கான்சாகிபிடம் சேர்ந்து கொள்ளவும் அனுப்பி வைத்தார். "நான் உன்னை என்னைப் போன்றுதான் ஒவ்வொரு வகையிலும் கருதுகிறேன். அதேபோல் உனது நாட்டையும் உனது ராணுவத்தையும் என்னுடையதைப் போலவே மதிக்கிறேன். நீ வேறு நான் வேறு இல்லை" என்று ஹைதர் அலி கான்சாகிபிற்கு கடிதம் எழுதி நட்பும் பாராட்டினார்.**

பிற்காலத்தில் போரிடும் போது கான்சாகிபின் யுத்த முறைகளையே ஹைதர்அலி பின்பற்றினார்.*** மராத்தியர்கள் தங்கள் நாட்டின் மீது படையெடுக்கக்கூடும் என்பதாலும், மலபார் பகுதிகளில் போரிட மைசூர் படைகள் சென்றதாலும் அதிக அளவில் படைகளை கான்சாகிபிற்கு ஹைதர் அலி தொடர்ந்து அனுப்ப இயலாத நிலை அப்போது ஏற்பட்டது. (தொடர்ந்து ஹைதர் அலி படைகளை அனுப்பி உதவியிருந்தால் தமிழகத்தின் வரலாறு ஒருவேளை மாறியிருக்கக் கூடும்)

---

*Haidar Ali, Letter to Yusuf khan, copy M.C.C. Vol.12,P.370 .

** Ibid ,P.375

*** C.Hayavadana Rao, History of Mysore II, 1946 , PP-540,544.

கான்சாகிபின் தாக்குதலும் கும்பெனியாரின் கலக்கமும்

400 ஐரோப்பியர்களையும், 1600 சிப்பாய்களையும்., 2 பீரங்கிகளையும் வைத்துக் கொண்டு கான்சாகிபை எதிர்கொள்ள இயலாத நிலையில் கும்பெனியார் கலக்கமடைந்தனர். திருவாதூர், திரும்பூர், நத்தம் ஆகிய இடங்களில் கான்சாகிப் தனது ஏராளமான படைவீரர்களைப் பலமாக நிறுத்தி வைத்திருந்தார். ஆங்கிலப்படையினர் உமாசத்திரத்தை நெருங்க முயன்ற போது 300 குதிரைப் படையினருடனும், இருநூறு சிப்பாய்களுடனும் கான்சாகிப் படையினர் பலத்த தாக்குதலைத் தொடுத்தனர். போரில் ஆங்கிலேயர்கள் காயம்பட்டு பின் வாங்கினர்.

கவுன்சிலுக்கு கால் எழுதிய கடிதம்

'கான்சாகிப் கோட்டையை நன்கு பலப்படுத்தி மூன்று திசைகளிலும் வெகுதூரத்திற்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வைத்திருக்கிறார்; அவைகளையெல்லாம் கைப் பற்றியதற்குப் பின்னர் தான் அவரது கோட்டையை நெருங்க முடியும். பத்து மைல் சுற்று வட்டாரத்திற்குள் கான்சாகிப் கொண்டிருக்கும் தொடர்புகளைத் துண்டித்திட மேலும் கூடுதல் சிப்பாய்களை அனுப்பி வையுங்கள். தற்போது மதுரையில் இருக்கும் போர்வீரர்களைப் போல் இன்னும் இரண்டு மடங்கு ஐரோப்பிய வீரர்கள் வந்தால் தான் கோட்டை முற்றுகையை நாங்கள் தொடரமுடியும்' என்று கால் என்ற ஆங்கிலத் தளபதி கும்பெனி கவுன்சிலுக்கு 15.2.1764 இல் கடிதம் மூலம்கேட்டுக் கொண்டார்.

கான்சாகிப் பெற்ற ராணுவ மரியாதை

17.2.1764 இல் நத்தம் செல்லும் சாலையை கான்சாகிப் படையினர் கைப்பற்றிக் கொண்டனர். 19.2.1764 இல் பிரெஞ்சு ஆதரவுப் படைகள் இந்தியாவிற்குள் வந்துசேர்ந்து விட்டதாக கான்சாகிபிற்கு செய்தி வந்தது. இதையறிந்ததும் மதுரை கோட்டையில் மகிழ்ச்சியுடனிருந்த கான்சாகிபிற்கு கோட்டைக்குள் 21 குண்டுகள் முழங்கிட ராணுவ மரியாதை செலுத்தப்பட்டது. போர் வீரர்களின் அணிவகுப்பைப் பார்த்து மகிழ்ந்த கான்சாகிப் அவர்களின் சல்யூட் மரியாதையைப் பெற்றுக் கொண்டார்.

சகதியில் சிக்கிய பீரங்கிகள்

1.3.1764 இல் கோட்டைக்குத் தெற்கேயுள்ள பெரிய குளக்கரைகளை கான்சாகிப் துண்டித்தார். தெப்பக் குளத்திற்கு நடுவிலுள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. ஆங்கிலேயர் நிறுத்தி வைத்திருந்த பீரங்கிகள் சகதியில் சிக்கியது. முன்னேறிச் சென்ற ஆங்கில வீரர்களை கான்சாகிபின் படையினர் பலமாகத் தாக்கினர். ஏழு ஆங்கில வீரர்கள் அங்கே கொல்லப்பட்டனர்.

மணிலாவிலிருந்து மாற்றார் படைகள்

14.3.1764 இல் பெருமளவில் தளவாடச் சாமான்கள், படைகள் மணிலாவிலிருந்து கும்பெனியினருக்கு ஆதரவாக வந்து சேர்ந்தது. அதனைத் தடுத்து நிறுத்தி குதிரைப் படையைத் துண்டித்திட கான்சாகிபின் படையினர் செய்த முயற்சிகள் பலனிக்கவில்லை. *4.4.1764* இல் பம்பாயிலிருந்தும் மேலும் படைகள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக வந்து குவிந்தது.

கேப்டன் ஹிக்கர் தலைமையில் *150* ஆங்கிலேயர்கள் வந்து சேர்ந்தனர். மணிலாவில் இருந்து காப்டன் காட்ஸ்போர்டு தலைமையில் படைகள் மதுரைக்கு வந்து சேர்ந்தது. *17.5.1764* இல் காரைக்காலில் இருந்தும் ஆங்கிலப் படைகள் வந்து குவிந்தது.

தெற்குச்சீமை

தெற்குப் பாளையக்காரர்கள் கும்பெனியாருக்கு சரக்குகளை அனுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால் போர் துவங்குவதற்கு முன்பாகவே கான்சாகிப் இந்தப் பகுதியிலிருந்த பொருட்களை பெருமளவில் கவர்ந்து சென்று கோட்டைக்குள் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார். மேலும் சிறுசிறு பாளையக்காரர்கள் பாளையங்கோட்டையில் இருக்கும் கான்சாகிபின் தளபதி தாவூத்கானுக்குப் பயந்து கும்பெனியினருக்கு பொருட்கள் எதுவும் அனுப்பவில்லை எனவே அவர்களைத் தாக்கி பணியவைக்க வேண்டுமென்று ஆங்கிலத் தளபதிகள் முடிவெடுத்தனர்.

தளபதி தாவூத்கான்

பாளையங்கோட்டையில் தளபதி தாவூத்கான் (Daudkhan) 900 சிப்பாய்கள், 250 கருப்புக் குதிரைப் படையுடன் இருந்தார். இந்தப் பகுதியை காம்பெல் கைப்பற்றத் திட்டமிட்டு 1764 மார்ச் 16ந் தேதி 130 ஐரோப்பியர்கள், 600 கருப்பு குதிரைப் படையினர், 1200 சிப்பாய்கள், 500 வீரர்கள் அடங்கியப் படையுடன் புறப்பட்டார்.

தாமிரபரணி நதிக்கரையில் போர்

தாமிரபரணி நதிக்கரையில், பாளையங்கோட்டை தளபதி தாவூத்கான் ஆங்கிலப்படையில் எதிர் கொண்டார். அவரோடு ஒரு குதிரைப் படை இருந்தது. ஆற்றில் எதிர் கரையில் நிற்கும் வெள்ளைத் தளபதி எதிரிகளின் படைபலம் அதிகமிருக்கும் என்று எண்ணிக் கொண்டு தாக்குதலைத் தொடுக்காது தயங்கி நின்றார். எதிரிகளோ முன்னேறி வரட்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த போது.., எதிர்பாராத நிலையில் உடனிருந்த ஆங்கிலேய வீரர்கள் தாக்குதலைத் தொடுத்து விட்டனர். கும்பெனிக் குதிரைப் படைவீரர்கள் தாமிரபரணி ஆற்றைக் கடந்தனர். கழுத்தில் வெள்ளிச் செயின் அணிந்திருந்த தாவூத்கானை எதிர்த்து ஆங்கிலத் தளபதி கெயின் (Heyne) போரிட்டார். குதிரை வீரர்கள் தாக்கப்பட்டனர். தாவூத்கான் போரில் காயமுற்றார். இருபது குதிரைகளை கும்பெனியார் கைப்பற்றிக் கொண்டனர். தாவூத்கான் காயமுற்றார் என்றாலும் பாளையங்கோட்டையை ஆங்கிலப் படையினர் சரண் அடையச் செய்தமுயற்சி வெற்றி பெறவில்லை. 1764 ஏப்ரல் 17 இல் கும்பெனி காப்டன் கார்ட் (Hart) பாளையங்கோட்டைக்கு வெளியிலே நிறுத்தி வைக்கப்பட்டார். பின்னர் பிரஸ்டன் ஏப்ரல் 20 இல் திரும்பவும் மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

திரும்பவும் தெற்குச் சீமை

பாளையங்கோட்டையிலிருந்த வீரர்கள், அதிகாரிகள் ஆகியோரின் மனைவி, மக்களை முன்கூட்டியே மதுரைக் கோட்டைக்கு அழைத்துச் சென்று கான்சாகிப் தனது

கண்காணிப்பில் வைத்துக் கொண்டார். எனவே எதிர்த்துப போரிட வேண்டிய நிலையில் பாளையங்கோட்டையில் இருந்த கான்சாகிபின் வீரர்கள் சரண் அடையாமல் கோட்டைக்குள் இருந்து கொண்டனர். எனவே தெற்குச் சீமையிலிருந்தும் தனக்கு உதவிக்குப் படைகள் வருமென்ற நம்பிக்கையை கான்சாகிப் இழந்தார். திரும்பவும் தெற்குச் சீமையில் ஆங்கிலேயர் வரி வசூலிக்கும் வாய்ப்பைப் பெற ஆரம்பித்தனர்.

பறங்கியர் முழுவதும் மதுரையில்

26.3.1764 இல் கும்பெனிக் கவுன்சில் இங்கிலாந்துக்கு எழுதிய கடிதத்தில், மதுரையில் இப்போது *1784* ஐரோப்பியர்களே உள்ளனர். அதாவது நம்முடைய ஐரோப்பிய படைகள் அனைவருமே இப்போது இங்கு உள்ளனர். இவர்கள் தவிர *5500* சிப்பாய்களும் போரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

This may be said to be your whole force of European on the coast; about 5500 sepoys are also employed on the expedition.*

தஞ்சாவூர் அரசரின் துரோகம்

கேப்டன் தாமஸ் பிட்ஸ் கிரால்டு (Captain Thomas Fitzgerald) தலைமையில் உள்ள ஆங்கிலேயப் படையினருடன், தஞ்சாவூர் அரசரின் *300* குதிரைப் படைவீரர்களும் சேர்ந்து கொண்டு *27.3.1764* இல் கான்சாகிபின் படை வீரர்களைத் தாக்கி முறியடித்தனர்.

தஞ்சாவூர் அரசரின் குதிரைப் படைகள் தனக்கு ஆதரவாகப் போரிடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்த கான்சாகிபின் எண்ணம் நிறைவேறவில்லை. கும்பெனியாருக்கு ஆதரவாகப் போரிட்ட தஞ்சாவூர் வீரர்களுக்கு ஆங்கிலேயர் பரிசுகளையும் வழங்கி தங்கள் பக்கத்தில் அவர்களை நெருக்கமாக்கிக் கொண்டனர்.

---

* Letter to Court Para 7, I.O.Records, Madras Letters Received, Vol I.A and Brit. Mus Addl Ms34688,F.77.

மேற்கோள், எஸ்.ஸி.ஹில், முற்கூறிய நூல், பக்.188.

களப்பாதுகாப்பு அரண்

4.4.1764 இல் கும்பெனி முகாமிற்குப் பெருமளவில் பணம் வந்து சேர்ந்தது. கான்சாகிபை வீழ்த்திட வியூகங்கள் வகுக்கப்பட்டது. *6.4.1764* இல் வைகை நதியின் குறுக்காக களப்பாதுகாப்பு புறஅரண் ஒன்றை கான்சாகிப் அமைத்தார். அதன் மூலம் வெளியிலிருந்து வீரர்கள் மதுரைக்குள் வருவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொண்டார்.

இந்த பாதுகாப்பு அரணைத் தாக்கினால் தங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதால் தாக்குதலைத் தொடுக்காத ஆங்கிலேயர், அதன் அருகே ஆங்கிலக் காப்டன் பிரஸ்மெனைப் (Captain Frischman) படைகளுடன் நிறுத்தி வைத்தனர்

துளிஇரத்தம்இருக்கும்வரை

"என்னுடைய உடலில் கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரை இந்த இடத்தை யாருக்கும் ஒரு போதும் கொடுக்க மாட்டேன்" எனது தரப்பிலிருந்து சிலர் உங்களிடம் வந்து சேர்ந்ததால், எல்லோரும் அதே மாதிரி உங்களிடம் வருவார்கள் என்று நீங்கள் நினைத்திட வேண்டாம். உங்களிடம் வந்து சேர்ந்து கொண்டவர்கள் இங்கு இருக்கும் போது எனக்கு செலவைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்ளே தவிர உருப்படியான பணி ஒன்றையும் செய்யவில்லை. காரைக்காலில் இருந்து உங்களை ஏமாற்றி விட்டு எங்களிடம் வந்தது போல் , இப்போது என்னை ஏமாற்றி விட்டு உங்களிடம் வந்ததில் எனக்கு ஆச்சரியம் எதுவும் இல்லை. கோட்டையிலிருந்து சில கூலிப்படையினர் சென்றால் என்ன நஷ்டமோ அதற்குமேல் அவர்களுடைய விலகலினால் எனக்கு எதுவும் ஏற்பட்டதாக நான் நினைக்கவில்லை" என்று கான்சாகிப் *7.4.1764* இல் காம்பெல் என்ற ஆங்கிலத்தளபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்தார்.

My last intention is, as I have wrote before to Colonel Monson, as long as I have got a drop of blood in my body I never shall render the place to nobody.*

* Country Correspondence, 1764, S.C.ஹில், மேற்கோள், பக்.192.

பீரங்கித்தாக்குதல்

குவியும் ஆங்கிலப் படைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் கான்சாகிப் தனது பீரங்கிகளை வெளியே கொண்டு வந்து ஆங்கிலேயப் படைகள் மீது குண்டு மாரி பொழியச் செய்தார். இந்தத் தாக்குதல் *18.4.1764* லும் தொடர்ந்தது. ஆங்கிலேய முகாம்களை நோக்கி குண்டுகள் விழுந்து கொண்டிருந்தது.

மாவீரனுக்கு உதவிய மழை

கான்சாகிபின் பாதுகாப்பு அரண்களை தெற்குப் பகுதியில் காம்பலும், கிழக்குப் பகுதியில் பிரஸ்டனும் *27.4.1764* இல் தாக்கி அழிக்கத் திட்டமிட்டனர். அரண்களைச் சுற்றிலும் முட்புதர்களால் பாதுகாக்கப் பட்டிருந்ததால் அவைகளைத் துப்பாக்கியால் சுட்டு அழித்து தொடர்ந்து முன்னேறலாம் என்று வெள்ளையர் நினைத்தனர். இரவில் பெய்த பெருமழையால் முட்புதர்கள் நன்றாக நனைந்து விட்டதால் வெள்ளையர்கள் அந்த முயற்சியில் தோற்றனர்.

ஜமால்சாகிப்

7.5.1764 இல் கான்சாகிபின் வீரர்களில் ஒரு பிரிவினர் திருச்சிக்கு அருகே சென்று ஆங்கில ஆதிக்கப் பகுதிகளைத் தாக்கினர். இது போன்ற தாக்குதல்களை இலகுவாக வெள்ளையர்கள் முறியடித்தனர். கான்சாகிபின் நெடுநாளைய நண்பரான ஜமால்சாகிப் வெள்ளையர்களால் போரில் கொல்லப்பட்டார்.

வெள்ளையர்தரப்பில் வீழ்ந்தவர்கள்

இரு தரப்பிலும் இடைவிடாத போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெள்ளையர் தரப்பில் ஐரோப்பியர் *15* பேர்களும், காபிரீஸ்(Coffrees) ஐவரும், ஐரோப்பிய வீரர்கள் *29* பேர்களும் துபாஷிஸ் (Topasses) *35* பேர்களும், சிப்பாய்கள் *800* பேர்களும், கடைநிலைவீரர்கள் *500* பேர்களும் கொல்லப்பட்டனர். *800* குதிரைகளும் மடிந்தன. *5290* எண்ணிக்கையைக் கொண்டிருந்த ஆங்கிலப் படை தற்போது *3906* ஆக குறைந்தது.* *17.5.1764* காரைக்காலில் இருந்து ஆங்கிலப் படைகள் வந்து குவிந்தது.

*S.C.ஹில், முற்கூறிய நூல், பக்.197.

வெளிஆதிக்கத்தை இழத்தல்

கான்சாகிப் தரப்பிலிருந்து 409 சிப்பாய்கள், 20 துபாஷ்கள், 8 ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். நகரத்தின் தொலைவில் இருந்த தனது காவல்நிலைகள் அனைத்தையும் 21.5.1764 க்குள் இழந்து மதுரைக் கோட்டையின் வெளி ஆதிக்கத்தை விட்டு விட்டு கான்சாகிப் கோட்டைக்குள் சென்று விட்டார்.

22.5.1764 இல் ஆங்கிலேயர்கள் மகிழ்ச்சியோடு இருப்பதாகவும், சூன்மாதத்திற்குள் மதுரையை கான்சாகிபிடமிருந்து கைப்பற்றி விடுவோம் என்றும் கூறிக் கொண்டிருந்தனர்.

மறைந்திருந்து மாபெரும் தாக்குதல்

30.5.1764 இல் மதுரைக் கோட்டையின் தென்கிழக்குப் பகுதியில் வெள்ளையர் போலித் தாக்குதலைத் தொடுத்தனர். அன்று இரவில் ஆயிரக்கணக்கான வீரர்களுடன் ஆங்கிலேயர் கோட்டையின் வட மேற்குப் பகுதியினை ஆவேசமாகத் தாக்கினர். வெள்ளையர் பக்கமிருந்து பெருந்திரளாக வீரர்கள் வருவதையறிந்த கான்சாகிபின் வீரர்கள் பலத்த சப்தம் எழுப்பினர். தீப்பந்தங்களை ஏற்றினர். தங்களது துப்பாக்கிகளால் சுட ஆரம்பித்தனர். இரவு முழுவதும் குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்தன. கான்சாகிபின் வீரர்கள் எங்கிருந்து கொண்டு தங்களை நோக்கிச் சுடுகிறார்கள் என்பதனை அறிந்து கொள்ள ஆங்கிலேயர்களால் முடியவில்லை.

But though the Musketry began again and discharges of round and grape were fired all through the night, the enemy did not appear *

---

*S.C.ஹில், முற்கூறிய நூல், பக், 199.

பறங்கியரின் பாதுகாப்புச்சுவர்பாழ்

1.6.1764இல் கான்சாகிபின் 18 பவுண்டு பீரங்கியிலிருந்து குண்டுகள் பாயத்துவங்கியது. ஆங்கிலேயர் தங்களது பாதுகாப்பிற்காக ஏற்படுத்தியிருந்த சுவரை அது தகர்த்தது. பதிலடி கொடுப்பது போல் வெள்ளையரும் 6.6.1764 இல் மதுரைக் கோட்டையின் வடமேற்குப்பகுதியிலிருந்த கோபுரமொன்றை சுட்டு வீழ்த்தினார். அன்று ஆற்காடு நவாபும் ஆங்கிலமுகாமிற்கு வந்து சேர்ந்தார்.

7.6.1764 இல் பம்பாய், காரைக்கால் பகுதியிலிருந்து 200 ஐரோப்பியர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக வந்து சேர்ந்தனர்.10.6.1764 இல் மதுரை கோட்டையை முற்றிலுமாக தாக்குதவற்காக வெள்ளையரின் பீரங்கிகள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டது.

மஞ்சள்கொடி

1764 சூன் 11 இல் நவாபின் கொடி கோட்டைக்கு எதிரில் முற்றுகையிட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேய முகாமில் ஏற்றப்பட்டது. அதற்குப் பதில் தரும் வகையில், மரண பரியந்தியம் வரையில் தான் போராடிச் சாகத் தயாராக இருப்பதைக் காட்டும் விதத்தில் கோட்டையில் மஞ்சள் கொடியை ஏற்றினார் கான்சாகிப்.

ஆவேசப்போர்

13.6.1764 இல் ஆங்கிலக் காப்டன் எலே (Eley) போரில் காயமுற்றார். மருத்துவர் புச்சானன் (Buchanan) தனது இடது காலை இழந்தார்.

ஒரே நாளில் ஐம்பது ஆங்கிலேயர்கள்

1764 சூன் 14 கான்சாகிப் ஆக்ரோஷமாகப் போரிட்டார்.50 ஆங்கிலேயர்களை அன்று மாத்திரம் கொன்று தீர்த்தார்.*

'On 14th the besieged made a desperate sally, and though they were repulsed witha loss of fifty men, Smith and four Europeans were killed.....'

* முற்கூறிய நூல், பக், 201.

15.6.1764 இல் நடைபெற்ற போரில் லெப்டினென்ட் ஒயிட்கரும் (Whitehear) அவருடன் இரு ஆங்கிலேய அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். *18.6.1764* போரில் ஜேம்ஸ் ஹாமில்டன் (James Hamilton) ஆங்கிலத்தரப்பில் கொல்லப்பட்டார். சூன் 20,21 நாட்களில் ஆங்கிலப் படையினர் அகழிக்குள் இறங்கி கோட்டைச் சுவர்களை இடித்து ஓட்டைகளை ஏற்படுத்தினர்.

வெள்ளையரை திகைக்க வைத்த தீரன்

கோட்டையைச் சுற்றி அகழிக்குள் சிறிதளவு தண்ணீரே இருப்பதால் அதை எளிதில் கடந்து விடலாம் என்று வெள்ளையர் நினைத்திருந்தனர். ஆனால் இரவில் பெய்த பெருமழை வெள்ளையரைப் பின் வாங்கிட வைத்தது. பகல் நேரத்தில் அகழியைக் கடந்து செல்ல முயலும் போதும் கான்சாகிபின் வீரர்களின் ஆவேசத் துப்பாக்கிக் குண்டுகளை ஆங்கிலப் படையினர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

பின்வாங்கிய பறங்கியர்

23.6.1764 இல் கோட்டையைத் தாக்கினார் வெள்ளையர், கான்சாகிபின் படையினர் குண்டுகளை மழையெனப் பொழிந்தனர். 2 ஐரோப்பிய வீரர்கள் கொல்லப்பட்டதோடு, 27 வீரர்கள் ஆங்கிலத் தரப்பில் காயம்பட்டனர். ஆங்கிலத் தளபதி பிரஸ்டனும், உட்டும் உடனடியாகத் தாக்குதலை இனித் தொடர முடியாது என அறிவித்து களத்திலிருந்து பின் வாங்கினார். Preston and Wood both declared that an immediate assault was impossible.

வெள்ளையர் வெருண்டனர்

மறுநாள் போரில் ஆங்கிலப் படை வீரர்கள் அகழியில் இறங்கிய போது அதற்குள் ஏற்கனவே வெட்டப்பட்டிருந்த குழிகளுக்குள் விழுந்து நனைந்தனர். அதன்பிறகு சிரமங்களுக்குப் பின் கோட்டையில் உடைப்பேற்படுத்திய பக்கங்களை நெருங்கிய போது அந்தப் பகுதியைக் காத்துக் கொண்டிருந்த கான்சாகிபின் வீரர்கள் ஆங்கிலேய அணியின் வீரர்களை வெட்டி வீழ்த்தினார்கள். ஈட்டியால் கும்பெனிப் படை வீரர்களைக் குத்திக் கொன்றனர். இதனையறிந்த வெள்ளையர் வெருண்டனர்.

அகழியைக் கடந்து வரும் போது தங்களின் துப்பாக்கித் தோட்டாக்கள் நனைந்து சேதமுற்றதால் அவைகளும் பயனற்றுப் போயிற்று. கோட்டைக்குள்ளிருந்து பலமான குண்டு வீச்சும் தொடர்ந்தது. ஆங்கிலப் படைவீரர்களுக்கு ஆயுதங்களை கொண்டு வந்து கொடுத்திட வசதி இல்லாத நிலையில் வெள்ளையர் விழித்துக் கொண்டிருந்தனர். அதனையும் மீறி ஒரு சில கும்பெனிப் படைவீரர்கள் கோட்டையின் மேல்புறச்சுவர்களில் ஏறிடமுற்பட்ட போது, கான்சாகிபின் வீரர்கள் அவர்களை வெட்டி அகழியில் தூக்கி எறிந்தனர்.

மேஜர்பிரஸ்டன்

கான்சாகிப்பின் கொடிபறந்த கோட்டைச் சுவரின் மீது ஏறி அதை அகற்றும் முயற்சியில் இறங்கிய கேப்டன் பிரஸ்டன் (Preston) சுடப்பட்டு இடுப்பிலே குண்டு பாய்ந்து கீழே வீழ்ந்தார். அப்போது அவரை தூக்கிச் சென்ற போது, "என்னுடைய பாவங்களுக்காக நான்இப்போது தண்டிக்கப்பட்டேன்" என்று பிரஸ்டன் கூறினார். ஒரு மணி நேர கடுமையான போருக்குப் பின் வெள்ளையர் பின் வாங்கினர். முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட பிரஸ்டன் 1764 சூலை 12 இல் மறைந்தார்.

"மதுரை வீழ்ந்துபட்டால், அது எத்தனை அருமையான விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதை நம்மை நினைக்கச் செய்யும்" என்று பிரஸ்டனுக்காக கவுன்சில் எழுதிய வரிகள் இது.* அது கான்சாகிப் விஷயத்திற்கும் ஒரு வகையில் பொருந்தத்தானே செய்கிறது.

அப்போது நடைபெற்ற போரில் 800 ஐரோப்பியர்களும்,2000 சிப்பாய்களும் கொல்லப்பட்டதாக மார்ச்சந் தனது நூலில் குறிப்பிடுகிறார். இந்த எண்ணிக்கையை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள இயலுமா என்ற கேள்வியெழுந்தாலும் வெள்ளையர் தரப்பில் பெருமளவில் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

காப்டன் புல்லாக் (Captain Bullock) என்சைன்ஸ் வாஸ்ஹன் (Ensigns Vashon) மாக்டானால்டு (Macdonald) போன்ற ஆங்கிலத்

---

* மார்ச்சந், முற்கூறிய நூல், பக் 38, 12—10—1764 தேதியில், ஆங்கில அதிகாரி எழுதிய கடிதம்.

தளபதிகள் சாவைத் தழுவினர். காப்டன்ஜேம்ஸ் கிர்பாட்ரிக் (James Kirkpatrick) காப்டன் தாமஸ் பிட்ஸரால்டு (Thomas fitgerald) கார்னட் வில்லியம் நாக்ஸ் (Cornet William knox) லெப்டினென்ட் டானியல்வீர் (Daniel Wear) தாமஸ் கால் பயோனி (Thomascol Byowne) கில்பர்ட் பெய்ண்டர் (Gilbert Painter) என்சைன் தாமஸ் பரூஸ் (Ensign Thomas Bruce) இப்படி பல ஆங்கிலத் தளபதிகள் அந்தப் போரில் காயமுற்றனர்.

காயம்பட்டவர்கள் மீதுகனிவு

ஆங்கிலேயர் பெற்ற பெருத்த சேதத்திற்குப் பின் கான்சாகிபின் வீரர்கள் பின் தொடர்ந்து தாக்குதலை நடத்தவில்லை. மனிதாபிமான முறையில் நடந்து கொண்டனர். ஆங்கிலத் தரப்பில் சமாதானக் கொடி ஏற்றப்பட்டது. இறந்தவர்களையும் காயம்பட்டவர்களையும் எடுத்துச்செல்ல கும்பெனியார் கான்சாகிபிடம் அனுமதி கேட்டனர். நிகரற்ற பெருவீரரான கான்சாகிப் அதற்கு உடனே அனுமதி அளித்தார். But they made no movement, So a flag of truce was sent in to ask permission to remove the dead and wounded, which was granted.*

ஒப்பாரிவைத்தநவாப்

ஆங்கிலப்படையினர் தோல்விக்குள்ளாவதை அறிந்த ஆற்காடு நவாப் அதிர்ந்து போனார். இடிந்து உட்கார்ந்தார். தனக்குத்தானே ஒப்பாரி வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்று ஸ்வார்ட்ஸ் (Schwartez) பாதிரியார் எழுதியிருக்கிறார். டேனிஷ் மிஷனரிகளின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆங்கிலேய முகாமில் நவாப் முகமதலி ஒப்பாரி வைத்ததற்குச் சான்றுகள் தந்து கொண்டிருக்கின்றன. The nawab came and lamented much over him. When he was brought to his tent.**

---

*முற்கூறிய நூல் பக் 36,37 எஸ்.ஸி.ஹில், மேற்கோள் பக்.205.

** Danish Missions, Geschichte der missions anstalten in Ost Indien. 1763-1764, Vol IX , Part I.P.583.

கான்சாகிபின்கடும்முயற்சி

இரண்டு மூன்று நாட்கள் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. ஆங்கிலேய வீரர்கள் பலர் நோயுற்றனர். களைப்புற்றனர். புதிதாகத் தாக்குதலை நடத்த அவர்களால் இயலவில்லை. இந்த சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட கான்சாகிப் தனது தரப்பில் ஏற்பட்ட சேதங்களைச் செப்பனிட ஆரம்பித்தார். வெள்ளையர்கள் தனது கோட்டையில் ஏற்படுத்திய ஒட்டைகள் திரும்பவும் அடைக்கப்பட்டன. முட்புதர்களை வெட்டிக் குவித்து பலமாகத் தடைகளை ஏற்படுத்தி எதிரிகள் நெருங்கி வர இயலாதவாறு செய்யப்பட்டது.

கோட்டைக்குள் பசி

கோட்டைக்குள்ளிருந்த பெண்கள், குழந்தைகள், ஏழைகளுமான 400 பேர்களை ஏற்கனவே கான்சாகிப் வெளியே அனுப்பியிருந்தார். இப்போது கோட்டைக்குள்ளே இருப்பவர் களுக்கு உணவுப் பற்றாக்குறையும் வந்துவிட்டது. மதுரையைச் சுற்றியுள்ள பிறபகுதிகளோடும் நாடுகளுடனும் கான்சாகிப் கொண்டிருந்த தொடர்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு அறுவடையான தானியங்கள் எதுவும் கோட்டைக்குள் செல்லவில்லை. தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்படும் நிலை தோன்றி விட்டது. கோட்டைக்குள்ளிருந்த நீர் நிலைகளும் நாற்றமடிக்கத் துவங்கியது. கோட்டைக்குள் பசியின் கொடுமையால் தங்களின் குதிரைகளைக் கொன்று சாப்பிட ஆரம்பித்தார்கள். பட்டினியின் கொடுமை தாங்காமல் குரங்குகள், கழுதைகள், பூனைகள் கூட உணவாக மாறிற்று. போரிடும் சிப்பாய்கள், பழைய சாதமும் உப்பும் மட்டும் உணவாகச் சாப்பிடும் நிலை ஏற்பட்டது.

1764 சூலை மாதத்தின் எஞ்சிய நாட்களிலும், ஆகஸ்ட் மாதம் முழுவதும், செப்டம்பரில் பகுதிநாட்களும் கோட்டைக் குள்ளிருந்த கான்சாகிபின் வீரர்கள் தற்காப்பு ஏற்பாடுகளை மாத்திரம் கவனித்துக் கொண்டிருந்தனர். 1764 செப்டம்பர் 24 இல் கான்சாகிப் சரண் அடைவதைத் தவிர வேறு எதற்கும் நாங்கள் சம்மதிக்கப் போவதில்லை என்று ஆங்கிலேயர் அறிவித்தனர்.

இந்தப்போரில் கோடிக்கணக்கில் பணம் செலவாகியிருக்கிறது என்று நவாப் சொன்னார். கோடிக் கணக்கில் செலவிடப்பட்ட இந்தப் போரில் கான்சாகிப் சரண் அடைவதையே நவாப்பும் வற்புறுத்திக் கொண்டிருந்தார். ஆனால் எதுவரினும் அஞ்சாது எதிரிகளை எதிர்த்து களத்திலே துணிவுடன் நின்று கொண்டிருந்தார் கான்சாகிப். படை பலத்தால் சாதிக்க இயலாததை துரோகத்தால் வீழ்த்திடுவது எளிதல்லவா! இதோ ! அந்த துரோகச் செயல் நடந்தே விட்டது.

கான்சாகிபின் கடைசி நாட்கள்

அக்டோபர் 13, 1764 அதிகாலை

கோட்டையிலிருந்து செல்ல அனுமதி கிடைக்கா விட்டால் இங்கிருந்து தப்பித்துச் செல்ல கான்சாகிப் திட்டமிட்டிருக்கிறார் என்று செய்தியை துரோகிகள் மெல்ல மெல்ல கோட்டைக்குள் பரவ விட்டார்கள். கான்சாகிப் கோட்டையிலிருந்து தப்பித்துச் சென்று விட்டால் நாமனைவரும் கோட்டைக்குள் அகப்பட்டு விடுவோம் என்று நினைத்த கான்சாகிபின் வீரர்கள் சந்தேகங் கொள்ள ஆரம்பித்தனர். இந்த நெருப்புக்கு காற்றை வீசி மேலும் பரவச் செய்தார் மார்ச்சந் (மொசியோ மர்ஷாம்). இவருடன் ஸ்ரீனிவாசராவ், பாபாசாகிப் ஆகியோர் கான்சாகிபைக் கைது செய்து நவாபிடம் ஒப்படைக்க முடிவெடுத்தனர். சதித் திட்டமும் தயாரானது.

காலை 10 மணி

கான்சாகிபின் வீரர்கள் கடமையில் இல்லாது ஓய்வாக இருந்தனர். இறைவணக்கத்தில் மூழ்கியிருந்த கான்சாகிப் அன்று பகல் முழுவதும் கோட்டைக் குள்ளிருந்த தனது அறையில் இருந்து வெளியே வரவில்லை. தங்களது சதித்திட்டம தெரிந்து விட்டதோ அதனால் தான் கான்சாகிப் வெளியே வராமல் அறையின் உள்ளேயே இருந்து விட்டாரோ என்று துரோகிகள் பயந்தார்கள். ஆனாலும் பின்வாங்கிட இயலாத நிலைக்கு சதித்திட்டம் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது.

மாலை 5 மணி

காவலாளி வந்து தங்களைக் காண வந்திருப்பவரைப் பற்றிச் சொன்னார். 'சீனிவாசராவ் பொடிக்குப் புகையிலை கேட்க வந்திருப்பார்; பிரெஞ்சுக்காரர் சாப்பாட்டிற்கு மாடு கேட்டு வந்திருப்பார்'. சுபேதார் செய்தி கொண்டு வந்திருப்பார்; அவர்களை வரச்சொல் என்று வர இருக்கும் ஆபத்தை உணராதவராக அவர்களை உள்ளே வரச் சொன்னார் கான்சாகிப். பிறகு சதிக் கூட்டத்தினர் கான்சாகிபின் அறைக்குள் நுழைந்தனர். கான்சாகிப் இறைவனை வணங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அது நிறைவுற்றதும் நீண்ட நெடுங்காலமாக அவருடன் பணிபுரிந்த ஒரு சுபேதார் எங்களையெல்லாம் கைவிட்டு விட்டு கோட்டைக்குள்ளிருந்து நீங்கள் செல்ல முயற்சிக்கிறீர்களாமே என்று பேச்சைத் துவங்கினார்.

கட்டப்பட்ட கரங்கள்

உண்மையற்ற இந்த வார்த்தைகளைக் கேட்ட கான்சாகிப் மிகுந்த கோபமடைந்து தனது வாளால் பழி தூற்றிய சுபேதாரை வெட்டி வீழ்த்தினார். அப்போது அங்கிருந்த மற்றவர்கள் கான்சாகிபைப் பிடித்து, அவரது தலைப்பாகையை வைத்தே அவரது கரங்களைக் கட்டினார்கள். இதனை சற்றும் நினைத்திராத கான்சாகிப் 'இந்த இடத்திலேயே இப்போதே என்னை கொன்று விடுங்கள்'. 'நவாபிடம் மட்டும் ஒப்படைத்து விடாதீர்கள்' என்று கேட்டார். ஆனால் சதிகாரர்களோ அவரை அருகிலிருந்த மார்ச்சந்தின் வீட்டிற்கு அழைத்துச் சென்று கடுமையான காவலில் வைத்தனர். சரித்திரம் போற்றுகின்ற மாபெரும் வீரனைச் சரணடையச் செய்து அதன் மூலம் சலுகைகளைப் பெறக்காத்திருந்த சதிகாரர்கள் கோட்டைக்குள்ளிருக்கும் வீரர்களை விழிப்புடனிருக்கவும் உத்திரவிட்டனர். எதுவுமே தெரியாத நிலையில் வீரர்கள் தங்களது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இருள் ஆரம்பித்தது. புயல் வருவது போன்ற சூழ்நிலையில் காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்தது. பொதுமக்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி எள்ளளவும் தெரியாமல் இருந்தது.

தூதுசென்றதுரோகிகள்

அதுவரை ஆங்கிலேயரை எதிர்த்து கோட்டைச் சுவர்களில் இருந்து தொடர்ந்து குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்த நிலை மாறி சுடுவது நிறுத்தப்பட்டதைக் கண்டு ஆங்கிலேயப் படையினர் ஆச்சரியமடைந்தனர். உள்ளே என்ன நடக்கிறது என்பதனை அறியாத ஆங்கிலேய முகாமினரிடம் சதிகாரர்கள் தொடர்பு கொள்ள முனைந்தார்கள்.

இரவுமணி 8

கான்சாகிபின் வெறுப்புக்கு ஆளாகியிருந்த செயின்ட் டேவிட் கோட்டை முன்னாள் எஞ்சினியர் பெரிக்னிபிமார்சியஸ் (M.Perigny Beaumarchais), கான்சாகிபின் மருத்துவரான பத்ருதீன் தார்வேஷ் (Badruddin Darwesh) இருவரும் தூதுவர்களாக ஆங்கிலேயரிடம் இரவு 8 மணிக்கு அனுப்பப்பட்டனர்.

அக்டோபர் 14, 1764

பேச்சு வார்த்தை நடைபெற்றது. இரவு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. உத்திரவாதமாக எழுதித் தரப்பட வேண்டுமென்ற மார்ச்சந்தின் கோரிக்கையை ஏற்று, பொது மன்னிப்புப் போன்ற வாசகத்தை ஒரு துண்டு காகிதத்தில், பென்சிலால் எழுதிக் கொடுத்து காம்பெல் அனுப்பி வைத்தார். அதன் பின் கோட்டையிலிருந்தவர்கள் ஆயுதங்களை கீழே போட்டார்கள். தெற்கு வாசலுக்கு குதிரைப் படைகளுடன் காம்பெல் நுழைந்தார். மார்ச்சந் தனது வாளை காம்பெலிடம் ஒப்படைக்க அதனை வாங்கிக் கொண்டு திரும்பவும் அவரிடமே அதனைக் கொடுத்தார். அனைவரும் ஆயுதங்களை கீழே போட்டனர். நவாப்பின் ஆட்களிடம் கான்சாகிப் ஒப்படைக்கப்பட்டார். நவாபின் வீரர்கள் கான்சாகிபை கட்டி பல்லக்கில் வைத்து தங்களது முகாமிற்கு தூக்கிச் சென்றனர்.

அக்டோபர் 15, 1764

"இன்று திங்கள் கிழமை மாலை 5 மணிக்கு புரட்சிக்காரர் தூக்கிலிடப்பட்டார்; இது நமது பகைவர்களின் இதயத்தில் ஒரு பீதியை உண்டு பண்ணியிருக்கிறது" என்ற ஒரு வரி கடிதத்தை நவாப் கவுன்சிலுக்கு அனுப்பி வைத்தார்.

Today, being Monday, the Rebel was hung at five o' clock in the evening, which struck a terror in the hearts of our enemies.* கைகளால், கடுக்காய் மையால் எழுதப்பட்டு பெரிய பேரெடு போன்ற தொகுப்பில் இந்த வாசகங்கள் அடங்கிய பக்கங்களை ஆவணக் காப்பகத்தில் பார்த்த போது என்னையறியாமல் எனது கண்கள் கலங்கின . ஒரு வரியில் எழுதவேண்டிய விஷயமா இது?

காலத்தால்அழிக்க இயலாத தூக்கு

'தென்னிந்தியா மீது பிரான்சும், ஆங்கில ஏகாதிபத்தியமும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் ஆட்சியை நிறுவமுயன்ற போது இந்தியாவின் பேராற்றல் மிக்க பெருவீரனாக இருந்தவர் யூசுப்கான்' என்று சர் ஜான் மால்கோம் (Sir John Malcolm) போற்றிப் பாராட்டிய கான்சாகிப் கைதியாக அழைத்து வரப்படுகிறார்.

வீரன் வருகிறான்

இந்திய விடுதலை சரித்திரத்தில் அற்புத மனிதர்களின் உயிர்களைத் தூக்குக் கயிறு அகற்றியிருக்கிறது. ஆனால் கி.பி.1764 அக்டோபர் 15 இல் நடந்தது அற்புதத்தையும், ஆச்சரியத்தையும் அளித்தது. எத்தனையோ போர்க்களங்களைக் கண்டவன்; எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தவன்; வெற்றி மேல் வெற்றிகளை யுத்த களத்தில் குவித்தவன்; சங்கிலிகளால் பலமாகக் கட்டப்பட்டு அங்கே அழைத்து வரப்படுகிறான்.

ஆண்டுக்கணக்கில் ஆங்கிலேயரை எதிர்த்த தீரன்

நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில் வெள்ளையருக்கு எதிராக வீரப் போர்கள் நடத்தி இறுதியில் வீழ்ந்தன பல பாளையங்கள். ஆனால் தென்னக வரலாற்றில் சாதிக்க இயலாத அளவில் வெள்ளையரை எதிர்த்து ஆண்டுக்கணக்கில் போர் நடத்தி, கடுகளவும் அஞ்சாது கோட்டையைக் காத்து நின்ற துணிவுடன் போரிட்ட வீராதி வீரன் அங்கே அழைத்து வரப்படுகிறான். இந்திய விடுதலை வரலாற்றில் எங்கும் காணாத ஒரு அதிசயம்; இதயத்தை சிலிர்க்கச் செய்யும் வீர காவியம்; இரத்தத்தை உறைய வைத்திடும் பயங்கரம் ; இப்போது நடைபெறப் போகிறது.

*Country Correspondence, 1764, No.205

சம்மட்டிபுரம்

மதுரைக்கு மேற்கே இரண்டு கல்தொலைவில் சம்மட்டிபுரம். மெயின் கார்டுகேட் பொட்டல் அருகே ஆங்கிலேயரும், ஆற்காடு நவாபும் கூடாரங்களில் தங்கியிருந்தனர். ஆஜானுபாகுவான கான்சாகிப் அங்கே அழைத்து வரப்படுகிறார். அவரது முகத்திலே சோகத்தின் சாயலே இல்லை. சுடர்விட்டுச் ஜொலித்த அவரது பார்வையில் மாறுதல் இல்லை. மௌனமாக நடந்து வரும் மாவீரன் அங்கே அழைத்து வரப்படுகிறான்.

மாவீரனும் மாமரமும்

அருகிலிருந்த மாமரத்தில் பலமான கயிறு ஒன்று மாட்டப்பட்டது. அதன் கீழே பலகை ஒன்றும் வைக்கப்பட்டது. அதற்கு அருகே அழைத்துச் செல்லப்பட்ட அஞ்சாத சிங்கத்தின் கழுத்தில் சுருக்குக்கயிறு மாட்டப்பட்டது. புன்னகை தவழும் முகத்துடன் இருந்த அந்த மாவீரன், சுற்றிலும் இருப்பவர்களை அலட்சியமாகப் பார்த்தான். காலம் கடந்தது, கயமை அரங்கேறியது. கயிறு அறுக்கப்பட்டது. கான்சாகிபின் சடலமும் கீழே இறக்கப்பட்டது.

சடலமும் சுவாசமும்

சடலத்தின் அருகில் சென்ற வீரர்கள் கதி கலங்கினர். சடலம் சாவகாசமாக சுவாசக் காற்றை விட்டுக் கொண்டிருந்தது. அந்த வீரநெஞ்சம் விம்மிவிம்மித் தாழ்ந்தது. அதன் அருகில் சென்ற சிலர் அலறினர். ஒரு சிலர் அதன் அருகே மயங்கி வீழ்ந்தனர். அச்சத்தால் ஓடினர் பலர். துணிச்சல் மிக்க வீரர்கள் துப்பாக்கிகளை, சடலத்தை நோக்கி நீட்டினர். வீரர்கள் மீண்டும் கட்டப்பட்டிருந்த கான்சாகிபை பலமாகப் பிடித்துக் கொண்டனர்.

என்ன முடிவெடுக்க

என்ன செய்வது? ஏது செய்வது? கும்பெனி அதிகாரிகள் கலங்கி நின்றனர். இவ் மாவீரனை இரண்டாம் முறையாகத் தூக்கில் தொங்க விடுவதை மேலிடம் அனுமதிக்குமா? யாரிடம் கேட்பது ? என்ன முடிவெடுப்பது ? திகைத்தனர் வெள்ளை

அதிகாரிகள். கான்சாகிபைத் தூக்கிலிடாமல் மேலிடத்திற்கு விஷயத்தைச் சொல்லலாமா என்று ஆங்கிலேய அதிகாரிகள் யோசிக்க ஆரம்பித்தனர். அப்போது ஆற்காடு நவாப் ஆத்திரங் கொண்டார். 'கான்சாகிபைத் தூக்கிலிடாவிட்டால் என்னைத் தூக்கிலே தொங்க விடுங்கள்' என்று ஆவேசத்தோடு கூறினார்.

"தூக்காமல் இவனை நீங்கள் விட்டால், என்னைத்
தூக்குங்களென்று சொல்லி எழுந்திருந்து போனார்."*

மறுபடியும் மாமரத்தில்

மறுபடியும் மாமரத்தின் அருகே கொண்டு செல்லப்பட்ட அந்த நிகரற்ற பெருவீரனை மீண்டும் பலகை மீது ஏற்றினார்கள். முன்னைவிட பலமான கயிறு கொண்டு வரப்பட்டது. இம்முறை கான்சாகிபின் கால்களில் இரும்புக் குண்டுகளும் கட்டப்பட்டது. சிங்கமென நின்று கொண்டிருந்த அவரின் கழுத்தில் மீண்டும் கயிறு மாட்டப்பட்டது. இந்த முறை முன்னை விட அதிகமான நேரம் தொங்கட்டும் என்று அதிகாரிகள் உத்திரவிட்டனர். காலம் கடந்து கொண்டிருந்தது.

மீண்டும் கான்சாகிபின் கழுத்தில் மாட்டப் பட்டிருந்த கயிறு அறுக்கப்பட்டு சடலம் தரையில் கிடத்தப்பட்டது. சடலத்தின் உதடுகளின் ஓரத்தில் இலேசாகப் புன்னகை ; அருகிலிருந்த வீரர்கள் சிதறி ஓடினர். இவர் பேய் மனிதர் என்று திடுக்கிட்டு திக் பிரமை பிடித்தவர்களாய் நின்றனர் பலர்.

பேசஆரம்பித்த பெருவீரன்

நவாபின் முகாமில் கரங்களும் உடலும் கட்டப்பட்டு கிடத்தப்பட்டிருந்த போது, உன்னிடமுள்ள பொன்னும், பணமும் எங்கே? என்று கேட்ட போது., 'உதவியாளரைக் கேளுங்கள்' என்று ஒரு வார்த்தை மட்டுமே கூறியதற்குப் பின் வாய் திறந்து எதுவுமே பேசாத கான்சாகிப்; *1764* அக்டோபர் *14,15* நாட்களில் உண்ணுவதற்கு உணவு ஆற்காடு நவாப்பால் அனுப்பப்பட்டபோது அதனை தனது காலால் தட்டிய கான்சாகிப்; இரண்டு நாட்கள் ஒரு சொட்டுத் தண்ணீரையும் பருகாமல் இருந்த கான்சாகிப்; இதயத்தால் இறைவனை வணங்கிக் கொண்டிருந்த கான்சாகிப்;

*நா.வானமாமாலை, கான்சாகிபு சண்டை, பக்.115.

கரங்கள் கட்டப்படாதிருந்தால் தூக்குமரத்தருகேயும் பல வீரர்களைத் தனது கரங்களாலேயே கொன்று குவிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்த கான்சாகிப், மெல்ல தன் வாய் திறந்து பேச ஆரம்பித்தார்.

ஆஸனங்கள்பயின்றவன்

"நான் ஆஸனங்கள் பயின்றவன்; நெடுநேரம் மூச்சை அடக்கப் பழகியவன்; கழுத்தைக் கயிறு இறுக்காத வண்ணம் , கழுத்தை உப்ப வைத்து மூச்சை அடக்கிக் கொள்ளத் தெரிந்தவன்; ஆகையால் எனது உயிர் போகாமல் இன்னும் இருப்பவன்; நான் விரும்பினாலொழிய என்னை நீங்கள் கொல்ல முடியாது. இனி நான் உயிர்வாழ விரும்பவில்லை; எனக்காக என்னோடு தோளோடு தோள் நின்று போராடி மடிந்த மாவீரர்களை எனது உயிர் நண்பர்களைச் சந்திக்கச் செல்கிறேன்; எனது வலது கரத்தில் தாயத்து ஒன்று இருக்கிறது. அதனை எடுத்து விட்டுத் தூக்கிலே மீண்டும் என்னை இடுங்கள்" என்றார் கான்சாகிப். அதன்படியே அந்தத் தாயத்து அகற்றப்பட்டது. மீண்டும் மூன்றாவது முறையாகத் தூக்கிலே தொங்க விடப்பட்டார் கான்சாகிப்.

தங்கச்சிமிழ்

கான்சாகிபின் வலதுகையைக் கிழித்து அதனுள் ஒரு தங்கச் சிமிழை அடக்கஞ் செய்து வைத்திருந்தனரென்றும், அதன் சக்தியால் அவரை எந்தவிதமான கொடுந்துன்பங்களாலும், ஹிம்சித்துக் கொல்ல முடியாதென்றும், அவரைத் தூக்கிலிடவும், அவர் சாகாமலிருக்குமாறு தூக்குக் கயிறே அறுந்து விழுந்ததென்றும், இரண்டாவது தடவையிலும் அவ்விதமே தூக்கிலிட, மறுபடியும் கயிறு அறுந்தது என்றும், மூன்றாந் தடவையில் தங்கச் சிமிழை நீக்கி விட்டுத் தூக்கிலிட, தூக்குக்கயிறு அதனுடைய வேலையைச் சரியாகச் செய்து மரணத்துக்குக் காரணமாகவும் நின்றது.*

நெல்சனின் கூற்று

Mohamed Yusuf carried a Magical ball of gold in the fleshof his right arm, and was thereby rendered safe from all bodily harm. Consequently when he was

*எஸ்.குருகுகதாஸப்பிள்ளை, திருநெல்வேலிச்சீமைச்சரித்திரம்,சென்னை,1931,பக்.158,159.

dropped from the gallows the rope broke, and when he was dropped a second time the rope broke a second time. Finally he removed the golden ball, and then the rope did its duty.** நிகரற்ற பெருவீரனின் சடலம் மாமரத்திலே தொங்கிக் கொண்டிருந்தது. சடலம் கீழே இறக்கப்படவேயில்லை. அதனைச் சுற்றி காவல் காத்து நின்றனர் கும்பெனியாரின் வீரர்கள். சடலத்தை என்ன செய்வது என்று குழம்பி நின்றனர் கும்பெனி அதிகாரிகள்.

கனவில் குரல்வளை நெறிப்பு

இரவுவேளை சடலத்தைக் காவல் காத்து நின்ற வீரர்கள் தங்களின் குரல் வளையை கான்சாகிப் நெருக்குவதைப் போல் கனவு கண்டு விழித்து வெருண்டோடினர். வேறு வீரர்கள் விரைந்து காவலுக்கு அனுப்பப்பட்டனர். காவல்காத்து நின்ற வீரர்களின் கனவில் கான்சாகிப், 'மலையாளத்து மந்திரவாதி கொடுத்த தங்கப்பிரம்பும், பொம்மக்காளிச்செம்பும் என் மனைவி மாசாவிடத்தில் இருக்கிறது. அதனை வாங்கி வந்து அந்தச் செம்பிலிருக்கும் தண்ணீரை என் மீது தெளித்து அந்தப் பிரம்பால் அடித்தால் மீண்டும் உயிர் பெற்று எழுந்து விடுவேன்' என்று கூறினார். இந்த விஷயம் வெள்ளையருக்கும், நவாபிற்கும் சென்றது.

சுண்டுவிரலில் சீறிப்பாய்ந்தரத்தம்

'இன்னுமா இருக்கிறான் கான்சாகிபு' என்றவாறே விரைந்தார் ஆற்காடுநவாப். அதிவேகத்தில் அங்கு சென்றனர் ஆங்கிலேயர். தூக்கிலே தொங்கிக் கொண்டிருந்த கான்சாகிபின் சுண்டு விரல் அறுக்கப்பட்டது. அதிலிருந்து ரத்தஞ் சுறுக்காகப் பீறிப் பாய்ந்தது. சமகால வரலாற்றாசிரியர் இராபர்ட்ஓர்ம், ஆங்கிலேயர்களில் சிறந்த வீரரான கான்சாகிபையும் ஒப்பிட்டுப் பார்க்குமளவிற்கு நிகரற்ற திறமை பெற்றிருந்த பெருவீரன் கான்சாகிபின் சடலம் கீழே இறக்கப்பட்டது.

---

*J.H.Nelson, The Madura Country a Manual, part III, 1868, Reprint, 1989, P.P.282, 283.

பழிதீர்த்தபடலம்

"கழுத்திலே பரங்கச் சூரிவைத்து மதுரைக்
கான்சாயபு சிரசினை சீக்கிரம் அறுத்து
கால் கையைத் துண்டு துண்டாய் அறுத்து
கான்சாயபுவை நாலு துண்டாக வெட்டினர்"*

'இந்தியாவே பெருமைப்படக்கூடிய கருப்பு மனிதனின் கழுத்தில் விழுந்த அந்த தூக்குத் தண்டனை'** நிறைவேற்றப் பட்டதற்குப் பின்னரும் அவரை கண்ட துண்டமாக வெட்டினார்கள். பின்னர் அவரது தலை திருச்சிக்கும், கைகளை தஞ்சாவூருக்கும், பெரியகுளத்திற்கும், கால்களை திருவிதாங்கூருக்கும், பாளையங்கோட்டைக்கும் அனுப்பி வைத்தார்கள். அவரது உடலை மதுரையிலே புதைத்தார்கள். ஆனால் மதுரையில் அவரது தலை புதைக்கப்பட்டதாக உள்ளூர்ச் செய்திகள் சொல்லுகின்றன. தூக்கிலே போட்டார்கள். ஒரு முறையல்ல, இரு முறையல்ல., மூன்று முறை. அதோடு விட்டார்களா? நிகரற்ற பெருவீரனின் சடலத்தை துண்டு துண்டாக வெட்டினார்கள். அதோடும் விட்டார்களா ? இல்லை அதன்பின் என்ன செய்தார்கள்?

பார்வைக்குவைத்தபாதகம்

துண்டு துண்டாக வெட்டப்பட்ட கான்சாகிபின் உடலின் பகுதிகள் நகரத்தின் முக்கியமான வாயில்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைத்து விட்டுத்தான் அவரது புனித உடற்பகுதிகளை பறங்கியர்கள் பிற பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்கள்.(after they had been exposed for sometime over the principal gate-ways of the city).*

அகிலம்அழுதது

ஆண்டுக்கணக்கில் ஆங்கிலேயரின் முற்றுகையை எதிர்த்து நின்று, அத்தனை ராணுவ பலத்தையும் தாக்குப்பிடித்து, கும்பெனியின் ராணுவப் பெருமையை முறியடித்து பாதிக்கச்

*கான்சாகிபு சண்டை, முற்கூறிய நூல், பக் 117.

**செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் அதிகாரியான ஜார்ஜ் நிக்சன் (George nixon) 'மத்தியகோ' வில் உள்ள தனது நண்பருக்கு 13.7.1765 இல் எழுதிய கடிதம்.

***எஸ்.ஸி.ஹில், முற்கூறிய நூல், பக்.228.

செய்த கான்சாகிப் மடிந்த போது, பல ஐரோப்பியர்கள் அழுதனர். சுதேசி வீரர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். பொதுமக்கள் அழுது புலம்பினர். His fate lamented by Europeans as well as natives, by civilians as well as soldiers.*

சாவைக் கண்டு சஞ்சலங் கொள்ளாத
சரித்திர நாயகரின் சோக
சரிதம் அன்று முற்றுப் பெற்றது.

விடுதலை வீரர் கான்சாகிபை வீழ்த்தி விட்டோம் என்று பழி தீர்த்துக் கொண்டே பறங்கியரின், வெள்ளை ஏகாதிபத்தியம் மகிழ்ந்தது. அன்று ஒரு வீரவரலாறு காவியமானது.

கான்சாகிப்பள்ளிவாசல்

ஒரு புரட்சியாளர் தனக்காகவே போராடுகிறார். 'அவர் ஜெயித்தால் சிம்மாசனம், தோற்றால் மரணம்' என்று மட்டுமே மக்கள் அறிந்திருந்தனர். அதனால் தான் அவரது மறைவிற்குப் பின் மெல்ல மெல்ல அவரைப் பற்றிய நினைவுகளை மறக்கத் துவங்கினர்.

ஷேக்கத்தால் (Shaikh Kathal) என்பவரின் மகனான ஷேக் இமாம்(Shaikh Imam) ஹிஜ்ரி 1222 இல் கி.பி.1808 இல் கட்டப்பட்ட கான்சாகிப் பள்ளிவாசல் என்று தமிழிலும், பாரசீகத்திலும் எழுதிய குறிப்புகளுடன் கான்சாகிபின் உடலில் ஒரு பகுதி அடக்கப்பட்ட கான்சாகிப் பள்ளிவாசல்* (தர்ஹா) இன்றும் மதுரை திண்டுக்கல் ரோட்டில் சம்மட்டிபுரத்தில் அமைந்திருந்து அவரைப் பற்றிய நினைவை நாட்டிற்குத் தந்து கொண்டிருக்கிறது.

வீரத்தின்வாரிசு –சுல்தான்

அவரது துணைவியாரும் பிள்ளையும் குடும்பத்தோடு திருச்சிக்கு அனுப்பப்பட்டனர். பின்னால் கான்சாகிபின் மகன் சுல்தான் மைசூருக்குச் சென்றார். கி.பி.1780 இல், பதினாறு ஆண்டுகளுக்குப் பின், கான்சாகிபின் புதல்வர் சுல்தான்,

---

*மேலது, பக்.230

* எஸ்.ஸி.ஹில், முற்கூறிய நூல், பக்.233 F.N.

‘திண்டுக்கல்லில் தனது தந்தையாரின் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு மதுரைக்கும் நெல்லைக்கும் படையெடுத்து வருவதாகத் தெரிகிறது என்று’ பாளையங்கோட்டையிலிருந்து *1780* ஆகஸ்ட் முதல் நாளன்று கேப்டன் ஜேம்ஸ் எடிங்டன் (Captain James Edington) கும்பெனிக் கவுன்சிலுக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரிய வருகிறது. வீரத்தின் வாரிசு வீரர் தானே. கான்சாகிபின் படை வீரர்கள் பலர் போருக்குப் பின்னால் ஹைதர் அலியுடன் சென்று சேர்ந்து கொண்டனர்.*

மரணதண்டனைக்குப் பின் தீட்டிய மடல்

24.10.1764 ஆங்கிலக் கும்பெனிக் கவுன்சில் சென்னையிலிருந்து லண்டனுக்கு தனது தலைமையிடத்திற்கு எழுதிய கடிதம்; ஆம்! கான்சாகிப் தூக்கிலிடப்பட்ட எட்டு தினங்கள் கழித்து அவர்களின் மேலிடத்திற்கு எழுதியது. இதோ: We have the agreeable satisfaction of advising your honors that the Rebel Yusufkhan is at last reduced** யூசுப்கான் கொல்லப் பட்டார் என்ற செய்தியை அறிவிப்பதில் மிகுந்த திருப்தியடைகின்றோம். இதற்கு தலைமையிடத்திலிருந்து சென்னைக் கவுன்சிலுக்கு வந்த பதில் என்ன தெரியுமா?

லண்டனின் மகிழ்ச்சி

சென்னையிலிருந்து அக்டோபரில் எழுதிய கடிதத்திற்கு *1765* ஏப்ரல் *26* இல் லண்டனிலிருந்து வந்த பதில் இதோ.

At length we are happy in being informed of the surrender of Madura and the death of Yusufkhan.***

‘மதுரை சரண் அடைந்ததையும், யூசுப்கான் மரணம் பற்றியும் கடைசியாக நாங்கள் அறிந்த போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். பிரிட்ஷ் மியூசியத்திலும் அரசாங்கத்தின் ஆவணக் காப்பகங்களிலும் காணப்படுகின்ற கடிதங்கள் கான்சாகிப் கொல்லப்பட்ட போது கும்பெனியார் கொண்டாடி மகிழ்ந்ததை சாட்சியமளித்துக் கொண்டிருக்கின்றன.

---

*Fort St.George Letters Received, Vol II, *எஸ்.ஸி.ஹில், மேற்கோள்,பக் 283.*

** Brit Mus,Addl.M.S.34, 687 f.43

***S,C*ஹில், மேற்கோள், பக்.284.*

தொடரும்கடிதம்

சென்னைக் கவுன்சில் கி.பி.1768 இல் லண்டனிலுள்ள கோர்ட் ஆப் டைரக்டர்ஸ்க்கு எழுதிய கடிதம் இதோ:

"யூசுப்கான் மதுரை நெல்லைச் சீமைகளைக் கைப்பற்றிக் கொண்டு வேறு ஒரு எதிரிகளும் நமக்கு இல்லாதபோது நமது படைகள் அனைத்தையும், திரட்டி நவாபுடைய மிகுந்த உதவிகளையும், பெற்று அவரைத் தாக்கி முறியடித்து விரட்டியடித்து நாட்டைக் கைப்பற்ற முடியவில்லை. மாறாக அந்த யுத்தத்தை நடத்திச் செல்வதில் நாம் மிகுந்த சிரமப்பட்டோம். கம்பெனி அநேக சிறந்த அதிகாரிகளையும், வீரர்களையும், பெரும் பணத்தையும், வெடிமருந்துகளையும், உணவுப் பொருட்களையும் இழக்க நேரிட்டது.

இரண்டுஆண்டுகள் நடைபெற்ற போர்

இவ்வளவிற்கும் பின்னர், பிரெஞ்சு அதிகாரிகளின் துரோகத்தினால் தான் நாம் கோட்டைக்குள் செல்ல முடிந்தது. இல்லாவிட்டால் இந்த நாட்டை யூசுப்கான் எவ்வளவு காலம் தன் கைவசம் வைத்திருப்பார் என்று சொல்லிட முடியாது " என்று வெள்ளையர்களே எழுதி வைத்துள்ளனர்.

வீரச்சாவைவிரும்பிஏற்றல்

'பணத்திற்கும், பதவிக்கும் பவிசுவாழ்விற்கும் ஆசைப்படுபவர்களே, இங்கேயே உங்கள் கைவாள்களாலேயே கண்ட துண்டமாக வெட்டி எறிந்து விடுங்கள். என்னை பகைவர் களாகிய ஆற்காடு நவாபிடமோ, ஆங்கிலேயரிடமோ ஒப்படைத்து விடாதீர்கள்'. என்று தன்னைக் காட்டிக் கொடுக்க முயன்ற துரோகிகளிடம் கேட்டுக் கொண்ட கான்சாகிப் துரோகத்தால் பிடிக்கப்பட்டு பகைவர்களிடம் கொண்டு சென்ற போது வீரச் சாவை விரும்பி ஏற்றுக் கொண்டார். கான்சாகிப் தன்னுடைய தண்டனையை மிகுந்த ஆண்மையுடன் ஏற்றுக் கொண்டார் என்றும், காம்பலிடமோ, நவாபிடமோ தன்னைக் கொல்லாமல் விட்டு விடுங்கள் என்று கேட்கக் கூட இல்லை.

Yusufkhan, when he was seized, requested them to kill him, which they declined; but never apply'd to Major Campbell or the Nawab to spare his life.* தனது ஆயுளின் இறுதியில் இரண்டு ஆண்டுகள் ஆங்கிலேயரை எதிர்த்து தூக்குத் கயிற்றை முத்தமிட்ட மாமனிதன் கான்சாகிப் போற்றிப் புகழப்பட வேண்டிய சுதந்திரப் போர்வீரர் ஆவார்.

காணவிரும்பிய தனியாட்சி

மதுரை, திருச்சி, திண்டுக்கல், புதுக்கோட்டை , தஞ்சை திருவிதாங்கூர் திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றை உள்ளடக்கி தனியாட்சி நடத்த கனவு கண்ட கான்சாகிபின் கனவு நனவாகமலே விடுதலை வீரர் கான்சாகிப் வீழ்ந்தார்.

ஆங்கிலக்கும்பெனியார்

தங்களது பரம எதிரியான பிரெஞ்சுக்காரர்களுடன் கான்சாகிப் கூட்டுச் சேர்ந்ததை எந்த விதத்திலும் பொறுத்துக் கொள்ள இயலாத ஆங்கிலேயர்கள் ஆக்ரோஷமாகப் போரிட்டனர். கான்சாகிபிற்கு டச்சுக்காரர்களும் டேனிஷ் காரர்களும் ஆயுதங்களை விற்கவிடாமல் கும்பெனியார் தடுத்து நிறுத்தினர். பெரும்சிரமங்களுக்குப் பின் பேரிழப்பு களுக்குப் பின் கான்சாகிபை இறுதியில் துரோகத்தால் வீழ்த்தினர்.

வெள்ளையர் வியந்தனர்

போருக்குப்பின், கோட்டையிலிருந்து மூன்று மாதங் களுக்குரிய உணவுப் பொருட்கள், ஏராளமான வெடிமருந்துகள் 4 லட்சம் பகோடாக்கள் கைப்பற்றப் பட்டது.* இவ்வளவுக்குப் பிறகும் போர் நடந்தால் இன்னும் தாக்குப்பிடித்து நிற்குமளவிற்கு பொருட்களையும் ஆயுதங்களையும் சேமித்து வைத்திருந்த கான்சாகிபின் அரிய செயலையறிந்த வெள்ளையர் வியந்தனர்.

* Captain Mathew Horne, to Colonel Richard Smith, dated 20th October 1764.

வரலாற்றில் வாழும் நிகரற்ற பெருவீரன்

'சிம்மாசனமா?' 'சரணாகதியா?' 'சாவா?' என்ற கேள்விகளுக்கு மத்தியில் கோழையைப் போல் பலமுறை சாகாமல், சரித்திரத்தில் ஜொலித்திடும் சாவைத் தழுவிய சரித்திர நாயகர் கான்சாகிப் இன்னும் வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். "உயிர் வாழ்வதற்காக ஓடும் கோழைகள் மாண்டு போகிறார்கள். இறப்பதற்காகப் போராடும் வீரர்கள் என்றென்றும் உயிர் வாழ்கிறார்கள்."* ஆம்! வையகம் உள்ளவரை அதில் வரலாறு இருக்கும்வரை நிகரற்ற பெருவீரன் கான்சாகிபின் வரலாறும் போற்றப்படும் என்பதில் ஐயம் எவருக்கு இருக்க முடியும்?

நினைவுமண்டபமும் அரசுவிழாவும்

கான்சாகிப் என்ற சுதந்திரமலரை கும்பெனியார் கசக்கிப் போட்டு 240 ஆண்டுகள் ஆகிவிட்டது. மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட மாவீரரது சரிதம் மக்கள் மன்றத்தில் மறுமலர்ச்சி காணப்பட வேண்டும். கும்பெனியாரின் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த ஆற்றல் மிகு வீரரின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் அரசு விழா எடுக்க வேண்டும். அவரது உடல் புதைக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலையொட்டி அவருக்கு நிரந்தரமான நினைவு மண்டபத்தை அரசாங்கம் அமைத்திட வேண்டும். ஆண்டுகள் பலவாக பலரும் எழுப்பிவரும் கோரிக்கையை அரசு ஏற்றுச்செயல்படுத்த வேண்டும்.

வீரமும்வாழும்! விடுதலைநிலவும்!!

அண்ணன் மஹதி 43 ஆண்டுகளுக்கு முன் சொன்ன வார்த்தைகளைக் கொண்டே முடிக்கின்றேன். தமிழ்நாட்டை அடிமைப்படுத்த முனைந்த வேற்றாரை வேரறுப்பதே தம் பணியெனத் துணிந்து அந்த வீரவேள்வியில தம் உயிரையே தியாகம் செய்த விடுதலை வீரர் கான்சாகிபை அனைவரும் போற்றிக் கொண்டாடுவது தான் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும். சாதிசமய வேறுபாடின்றி வீரர்களை மதிக்கும் நாட்டில் தான் வீரம் வாழும். விடுதலை நிலவும். நிலைத்த புகழுடன் புரட்சித் தளபதியாக, நிகரற்ற பெருவீரனாக சரித்திரத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் கான்சாகிபை காலந்தோறும் போற்றுவோம்!

---

*சாவர்க்கர், எரிமலை அல்லது முதலாவது இந்திய சுதந்திரயுத்தம், சென்னை, 1946, பக்.382.

ராணி வேலுநாச்சியாரும் முஸ்லிம்களும்

கி.பி.1728 இல் சேதுபதி சீமையில் இருந்து சிவகங்கைச் சீமை பிரிந்தது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் காடாக இருந்த பகுதியில் சிவகங்கை நகர் உருவாயிற்று. மானவீர மதுரை, திருப்புவனம், படைமாத்தூர், பாகனேரி சக்கந்தி, நாலுகோட்டை மல்லாக்கோட்டை பட்டமங்கலம், அரளிக்கோட்டை, சத்தருசங்காரகோட்டை, திருப்பத்தூர், பாலையூர், எழுவன்கோட்டை, இரவிசேரி, தென்னாலைக் கோட்டை, காளையார் கோயில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது சிவகங்கைச் சீமை.

சிவகங்கைத் தன்னரசைத் தோற்றுவித்த சசிவர்ண பெரிய உடையாத் தேவரது ஆட்சி கி.பி.1729 முதல் 1749 வரை நீடித்தது. இரண்டாவது மன்னராக முடிசூட்டிக்கொண்டவர் முத்துவடுகநாதபெரிய உடையாத் தேவர்.

கி.பி.1772 மே மாதத்தில் திருச்சியிலிருந்து பெரும் படை ஜோசப்ஸ்மித் என்ற ஆங்கிலத் தளபதியின் தலைமையில் கிளம்பியது. 1772 ஜூன் 1, 2 இல் இராமநாதபுரம் கோட்டையைத் தாக்கியது. சேதுபதியின் அணி போரில் தோற்றது. இராமநாதபுரம் ராணியும், இளவரசரும் திருச்சிக் கோட்டையிலே சிறை வைக்கப்பட்டனர்.

21.6.1772

ஆங்கிலேயர்கள் சிவகங்கைச் சீமையை நோக்கி ஆக்கிரமிப்பு பயணத்தைத் தொடர்ந்தனர். தளபதி ஜோசப் ஸ்மித் (Joseph Smith) மேற்கு நோக்கி முன்னேறினார். தளபதி பான்ஜோர் (Abraham Bonjour) தலைமையிலான வெள்ளையர் படை சிவகங்கையைக் கைப்பற்றி (25.6.1772) கிழக்கே முன்னேறியது.* சிவகங்கைச் சீமை தோன்றியபிறகு அந்தச் சீமையிலே நடந்த முதல் போர்.

---

*Dr.K.Rajayyan, History of Madurai, (1736-1801),Madurai, 1974, P.261.

காளையார்கோயில்போர்

காளையார் கோயிலில் நடைபெற்ற போரில் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் வீழ்த்தப்பட்டார் * ஆங்கிலேயரை, அந்நியச் சக்திகளை எதிர்த்துப் போரிட்டு மன்னர் மாண்டார். இராணியார் வேலு நாச்சியார் கொல்லங்கொண்டானில் இருக்கிறார் என்கிற தகவல் கிடைத்தது.

வேலுநாச்சியார்

'இந்தியாவின் சுதந்திரத்திற்கு வித்திட்ட முதல் கதாநாயகி ஜான்ஸிராணி என்று பலரும் பேசுகின்றனர்; கொண்டாடவும் செய்கின்றனர். ஆனால் முதல் கதாநாயகி தமிழகத்தில் பிறந்த வேலுநாச்சி என்ற உண்மை பலருக்குத் தெரிந்தும் ஏனோ மறைத்து விட்டனர்.**ராணிவேலுநாச்சியாரின் வீரசரித்திரம், வெள்ளையரை எதிர்த்திடப் போர்க்களத்திலே அவருக்கு உதவி புரிந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம் தீரர்கள் பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் இதோ ....

விருபாட்சி

1772 ஜுன் *25* இல் நடைபெற்ற போரில் வெள்ளையர் களால் தனது கணவர் கொல்லப்பட்டதை அறிந்த ராணி வேலுநாச்சியார் திண்டுக்கல் அருகேயுள்ள விருபாட்சி பாளையத்திற்கு மருதுபாண்டியர்களுடன் தப்பிச் சென்றார். விசுவநாதநாயக்கர் காலத்தில், மதுரைப்போரில் அவருக்கு உதவிய தொட்டிய நாயக்கரைப் பெருமைப்படுத்த விருபாட்சி பாளையம் நிறுவப்பட்டது.***

சின்னப்ப நாயக்கர் என்ற கம்பளத்தார்ரால் விருபாட்சி பாளையம் நிறுவப்பட்டது என்று பி.எஸ்.வார்டு (B.S.Ward) தனது 'மதுரை திண்டுக்கல் நினைவுகள்' நூலில் குறிப்பிடுகிறார்****

---

*Military Consultations, Vol 42/1.7.1772, P.442.

**கோவி.மணிசேகரன்,வேலுநாச்சி, சென்னை, *1970*, முன்னுரையில்

***W.Francis, I.C.S, Madura,1909, P.310.

****Memoir of Madura and Dindigal, 1895, Vol.3, P.68.

மதுரை மாவட்டம் பின்னால் ஆங்கிலேயர் வசமாகி, **விஞ்ச்** (Wynch) காலத்தில் (கி.பி.1795 நவம்பர் 24) இருந்த 24 பாளையப்பட்டுகளில் விருபாட்சியும் ஒன்றாகும். மலை நாடாகிய இது பெரிய பாளையபட்டு ஆகும். குடமுருட்டி ஆற்றின்கரையில் சிறிய மண்கோட்டை; வளமான விளை நிலங்கள்; ராணி வேலு நாச்சியாரும், அவரது குழந்தையும் பாதுகாப்பாக இருப்பதற்குப் பொருத்தமான ஊர் இது என்று பிரதானிதாண்டவராயபிள்ளை தேர்வு செய்து அழைத்துச் சென்றார். மருதுபாண்டியர்களும் உடன்சென்றனர். விருபாட்சியில் பாதுகாப்பாக இருந்து கொண்டு ராணிவேலுநாச்சியார் வெள்ளையரை எதிர்த்திடத் திட்டங்களைத் தீட்டினார்.

சையத்சாஹிப்

திண்டுக்கல் கோட்டையிலிருந்த மைசூர் ஹைதர்அலியின் மைத்துனரும், திண்டுக்கல் கோட்டைத் தளபதியுமான சையத் சாகிபை சிவகங்கை பிரதானி தாண்டவராயபிள்ளை, ராணிவேலுநாச்சியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மறவர் சீமைகளிலிருந்து ஆங்கிலேயரது படைகளையும், அவர்களுக்கு உதவியாக இருந்து வரும் ஆற்காடுநவாப்பின் படைகளையும் துரத்தியடித்திட, ஐதர்அலியிடம் படை உதவிகோருவது என்று முடிவெடுக்கப் பட்டது.

திண்டுக்கல்கோட்டை

திண்டு (தலையணை) போலத் தோன்றுவதால் இம்மலைக்குத் திண்டுக்கல் என்பது பெயரானது, கி.பி.1605 இல் முத்துகிருஷ்ணப்பநாயக்கர் இங்கு கோட்டையினை எழுப்பினார். திருமலைநாயக்கர் கோட்டைச்சுவர்களை அமைத்தார். கோட்டையில் படிகள் இராணிமங்கம்மாள் காலத்தில் அமைக்கப்பட்டது. கி.பி.1736 இல் சந்தாசாகிப் திண்டுக்கல்லைக் கைப்பற்றினார். பின்னர் உத்தமபாளையம் பாளையக்காரர் இராமநாயக்கர் அதனை வென்றார். கி.பி.1745 இல் தளபதி பிக்ரி வெங்கட்ராவ் (மைசூர்) அதனைக் கைப்பற்றினார். கி.பி.1752 இல்

பாளையக்காரர்கள் போர் தொடுத்தனர். கி.பி.1755 இல் ஹைதரலியின் துருப்புக்கள் இங்கு வந்தது; வென்றது. பின்னர் திண்டுக்கல் ஆங்கிலேயர் கரங்களுக்குச் சென்றது. திரும்பவும் ஹைதர்அலியின் பொறுப்பிற்கு வந்தது. ஹைதர்அலி அமைத்த அறைகள் இங்கு இன்றும் உள்ளது.* திண்டுக்கலின் கிழக்குப்பக்கத்தில் சிறுமலையும், மேற்கே பழனிமலையும் இருக்கிறது. மதுரை,கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பலபகுதிகளுக்கும் போய் வர திண்டுக்கல் வழியாக இருப்பதால், இதனைக் கைப்பற்றுவதில் வரலாற்றில் அடிக்கடி போர்கள் நடைபெற்றதை அறிய முடிகிறது. கன்னட நாட்டின் போர் வாள் ஹைதர் அலியின் கரங்களில் திண்டுக்கல் கோட்டை இருந்து வந்த வேளை அது.

8.12.1772

8.12.1772 தேதியிட்ட கடிதத்தை தாண்டவராயபிள்ளை மூலமாக ராணி வேலு நாச்சியார், மைசூர் ஹைதர்அலி சுல்தானுக்கு அனுப்பி வைத்தார். வரலாற்றின் பக்கங்களில்** காணப்படும் அந்தக் கடிதத்தில் தாங்கள் ஐயாயிரம் குதிரை வீரர்களையும் ஐயாயிரம் போர் வீரர்களையும் அனுப்பி வைத்தால், அவர்களுடன் இணைந்து சிவகங்கை, இராமநாதபுரம், சீமைகளைத் திரும்பவும் கைப்பற்றிட முடியும் என்று வேண்டுகோள் விடுத்து ராணிவேலுநாச்சியார் மைசூர் சுல்தான் ஹைதர்அலிக்கு கடிதம் எழுதினார்***

ஹைதர் அலியின் ஆதரவில்

தீரன் திப்புசுல்தானின் தந்தையரான, கன்னட நாட்டின் போர்வாள் மைசூர்ஹைதர்அலியின் பாதுகாப்பில் வேலுநாச்சியார் இருந்து வந்தார்.

---

*சி.எஸ்.முருகேசன், தென்னிந்தியக் கோட்டைகள், 1994, பக்.252.

**Military Country Correspondence, Vol 21, P.281-282.

***டாக்டர் S.M.கமால், சீர்மிகுசிவகங்கைச் சீமை, 1997, சிவகங்கை, பக்.78. & ஜி.ஆளவந்தார், மாவீரன் திப்பு சுல்தான், சென்னை, 2002, பக்.50.

சீரஞ்சிவி

சிவகங்கைச் சீமையை இழந்த வேலுநாச்சியாரும், மருதுசகோதரர்களும், ஹைதர்அலியின் ஆதரவை எதிர்பார்த்து திண்டுக்கல்லில் தங்கி இருந்தனர்* சிவகங்கை மன்னர் வீரமரணம் அடைந்தார். அவரது மனைவி வேலுநாச்சியாரும் மருது சகோதரர்களும் தப்பியதோடு திண்டுக்கல்லுக்குச் சென்றனர். திண்டுக்கல் கோட்டையில் அவர்கள் மைசூரின் விருந்தினராகத் (ஹைதர்அலியின் ஆதரவு) தங்கிவிட்டனர்.**

டாக்டர்பாலிகா

கி.பி.1755 க்குப் பிறகு திண்டுக்கல் கோட்டை ஹைதர்அலியின் பொறுப்பில் இருந்ததை மதுரை மாவட்ட கெஜட்டியரும் உறுதிப்படுத்துகிறது ***

கா.அப்பாத்துரை

'கன்னட நாட்டின் போர்வாள் ஹைதர்அலி' என்ற நூலில், பக் *39* (சென்னை *1960*) பன்மொழிப் புலவர் கா.அப்பாத் துரையாரும், கி.பி.1755 இல் ஹைதர் திண்டுக்கல் மாவட்டத்தின் படைத்துறை ஆட்சியாளராக இருந்ததை உறுதி செய்கிறார்.

Lewin B.Bowring

'ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான்' எனும் ஆங்கில நூலினை *1893* இல் எழுதிய பவரிங் அதில் பக்கம் *26,27* இல் Haidar was appointed Faujadar or Military Governor of Dindigal now in Madura District of Madras, a strong hold which the Mysore State had acquired ten years previously. என்று குறிப்பிடுகிறார்.

---

*சிரஞ்சீவி,வீராங்கனை வேலுநாச்சியார், சிவகங்கைச் சீமை வரலாறு,சென்னை, *1983*, பக்.*87*.

**சிரஞ்சீவி,க.இலக்குமிநாராயணன்,புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு , சென்னை, *1981*,பக்.*84*

*** Dr.B.S.Baliga,Madurai,1960, Chennai, P.71

தற்போதைய சென்னை மாகாணம் மதுரை மாவட்டத்தில் உள்ள பலம் வாய்ந்தஸ்தலமான திண்டுக்கல்லுக்கு ஹைதர்அலி பௌஸ்தாரராக அல்லது இராணுவகவர்னராக நியமிக்கப்பட்டார்.

Colonel W.Miles

பெர்சிய மொழியில் மீர்ஹுசேன் அலிகான் கிர்மானி (Meer Hussein Ali Khan Kirmani) எழுதிய ஹைதர் நாயக் (Hydur Nalk) எனும் நூலினை கர்னல் W.மில்ஸ் இலண்டனில் 1842 இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். அந்த நூலில் பக் 45 இல் விருபாட்சி, பழனி, திண்டுக்கல் பகுதிகளில் ஹைதர்அலி, லுகூர் கோட் (Lukkurkote) எனும் கோட்டைகளைக் கட்டி தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்த செய்தினை விவரித்துள்ளார். The Rajah with many of his followers fell dead in the battle. But his widow and daughter fled to Virupakshi in Dindugal *

"போரில் சிவகங்கை அரசர் அநேக வீரர்களுடன் கொல்லப்பட்டதும் அவரது விதவை மனைவியும், மகளும் திண்டுக்கல் விருப்பாட்சிக்குத் தப்பிச் சென்றனர்" என்று வெள்ளையர் கால ஆவணங்களை மேற்கோள் காட்டி டாக்டர் கே.ராஜய்யன் தனது நூலில் நிறுவுகிறார்.**

சுத்தானந்தபாரதி

மருதுபாண்டியருடன் வேலுநாச்சியார் திண்டுக்கல் சென்று, ஐதரலி, திப்புசுல்தான் உதவி பெற்று சிவகங்கையைப் படையெடுக்க முனைந்தார் என்று சுத்தானந்தபாரதி தமது நூலில்*** தெரிவித்துள்ளார். மேலும் அந்த நூலில் ராணிவேலு நாச்சியார் ஆண் வேடத்தில் தப்பிச் சென்ற போது முஸ்லிம் வேடத்திலே சென்றதாகவும், அவரது பெயரை ஜமால்கான் என்று சூட்டிக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.****

---

*Military consultatilons 13, July 1779, Vol.42, P.607.

**K.Rajayyan, Rise and Fall of the Poligars of Tamilnadu, Chennai, 1974, P.66.

***வீர வேலுநாச்சியார், சிவகங்கை, 1980, பக்.4.

****முற்கூறிய நூல், பக்.68.

மேலும் சிவகங்கை படையெடுப்பிற்கு முன்னர் திப்புசுல்தானிடம் வேலு நாச்சியார் போர் பயிற்சி பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.* மருதுபாண்டிய மன்னர்கள்' நூலில் பக் 93 இல் மீ.மனோகரன், வேலுநாச்சியார் ஹைதரலியிடம் அடைக்கலம் சென்றதை உறுதிப்படுத்துகிறார். திண்டுக்கல் விருபாட்சி பகுதியில் ஹைதர்அலியின் பாதுகாப்பில் இருந்த வேலுநாச்சியார், மைசூரிலிருந்து ஹைதர்அலியின் படைகளை எதிர்பார்த்து ஏழு ஆண்டுகள் காத்திருந்தார். சிவகங்கையில் வெள்ளையரை எதிர்த்திடுவதற்கான வேளையும் வந்தது.

சேலம்பகடால நரசிம்மலுநாயுடு

'பாளையக்காரரர் போரில் கொல்லப்பட்டார். அப்போது பூர்ண கர்ப்பவதியாக இருந்த இராஜமஹிஷி சேர்வைக்காரரான மருதப்பருடைய உதவியினால் திண்டுக்கல்லுக்குப்போய் அங்கு ஜதராலியால் பாதுகாக்கப்பட்டார். 1781 ம் வருஷம் ஐதராலி கர்னாடக தேசத்தின் மீது படையெடுத்து வந்த போது சின்னமருது, திண்டுக்கல் கில்லாதாரரிடம் கொஞ்சம் சேனையைச் சம்பாதித்துக் கொண்டு அச்சேனையின் உதவியினால், இராணியாரைச் சிவகங்கைக்கு அழைத்துவர, இராணியாரைக் குடிகள் நல்வரவுடன் அங்கீரிக்க...** வீராங்கனை வேலுநாச்சியார் வெள்ளையரை எதிர்த்து வாகை சூடிய வரலாற்று நிகழ்வுகள் அதற்கென மைசூர் ஹைதர் அலி படை அனுப்பிய செய்திகள் இதோ...

ஹைதர்அலியின் ஆணை

சிவகங்கைச் சீமையிலிருந்து வெள்ளையரை விரட்டுவதற்கும், அவர்களது ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை மீட்டுவதற்கும் உதவும் படைகளை திண்டுக்கல் கோட்டையில் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு ஹைதர் அலி, வேலுநாச்சியாருக்குத் தகவல் தெரிவித்தார்.***

---

*முற்கூறிய நூல், பக்.76 .

**சேலம் பகடால நரசிம்மலுநாயுடு, திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம், இரண்டாம் பாகம், தட்சண இந்தியா சரித்திரம், சென்னை, 1919, பக்.666.

***Correspondance on permanent Settlement, 1799-1803, P.33.

மீர்ஜாஅலிகான்

கி.பி.1770லிருந்து 1783 வரை ஹைதரின் பிரதிநிதியாகத் திண்டுக்கல் கோட்டைப்பகுதியை ஆண்டு வந்தார் மீர்ஜாஅலி. இவர் ஹைதர்அலியின் தங்கை அமருஸ்ஸா பேகத்தின் கணவர்* மீர்ஜாஅலியின் தலைமையில் ஹைதர்அலியால் அனுப்பப்பட்ட படைகள் ராணிவேலு நாச்சியாரது படைகளோடு வெள்ளையரை வீழ்த்திட களங்கண்டது.

சிவகங்கையில்

பஞ்சகல்யாணி குதிரையில் ராணிவேலு நாச்சியார், பெரும் ஆரவாரத்துடன் சிவகங்கை நகரை அடைந்தார். ஹைதர்அலியால் அனுப்பப்பட்டு உதவிக்கு வந்த 5000 சிப்பாய்களும் காட்டாறு போல பாய்ந்தனர். அது வெள்ளையர் படைகளையும், ஆற்காடு நவாப் படைகளையும் தாக்கியது; வென்றது. வேலுநாச்சியார் வெற்றி வாகை சூடினார். கன்னட நாட்டு ஹைதர்அலியின் உதவியை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். ஹைதர்அலியின் முஸ்லிம் சிப்பாய்கள் அந்தப் போரில் வேலு நாச்சியாருக்கு உதவியதை மேற்கோள் காட்டுகிறார் அண்ணன் எஸ்.எம்.கமால்**

S.M.கமால்

கி.பி.1780 ஜூன் மாதம் மைசூர் மன்னர் ஹைதர் அலி வழங்கிய குதிரைப் படைகளின் உதவி கொண்டு மன்னரது விதவை மனைவி இராணி வேலுநாச்சியார் மீண்டும் மறவராட்சியை ஏற்படுத்தினார் என்பதனை தனது சேதுபதி மன்னர் வரலாறு நூலில் பக் 62 (2003) எஸ்.எம்.கமால் உறுதிப்படுத்துகிறார்.

---

*வெ.ஜீவானந்தம், கு.ஜமால் முஹம்மது, தொகுப்பு, திப்பு விடுதலைப் போரின் முன்னோடி, ஈரோடு, 1999, திண்டுக்கல் மலைக்கோட்டை ஒரு வரலாற்று உண்மை கட்டுரை, பேரா.செ.ஹனீபா, பக்.83.

**Correspondence on the Permanent settlement of Southern Polams, Ramnad and Sivaganga Zamindar's P.28.& மாவீரர் மருதுபாண்டியர், இராமநாதபுரம்,1989, பக்.51.

நந்தனில் தொடர்

நந்தனில் நண்பர் கே.ஜீவபாரதி 'வேலுநாச்சியார்' தொடரை எழுதினார், அது பின்னர் நூலாக வந்துள்ளது. 2001 இல் வெளிவந்த வேலுநாச்சியார் நூலில் பக்கம் 185 இல் 'பன்னிரண்டு பீரங்கி வண்டி, நூற்றுக்கணக்கான துப்பாக்கிகள் ஆகியவற்றோடு ஹைதர்அலியின் புதல்வர் திப்புசுல்தான் விருப்பாட்சி நோக்கி, வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி கேட்டு வேலுநாச்சியார் முகத்திலும் புன்னகை பூத்தது' என்று எழுதுகிறார்.

உருதுஅறிந்தவர்

மலையாளம், கன்னடம், தெலுங்கு சமஸ்கிருதம், உருது, ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகளில் தேர்ச்சியும்., வளரி என்ற ஆயுதத்தைக் கையாளுதல், வாள்வீச்சு, குதிரைஏற்றம், சிலம்பம் போன்ற வீர விளையாட்டுக்களிலும் தேர்ந்த பயிற்சி பெற்றவர்* ராணி வேலுநாச்சியார். உருதுமொழியினை அறிந்தவர் வீரமங்கை வேலுநாச்சியார் என்பதால் அவருடன் முஸ்லிம்களுக்குள்ள தொடர்பும், அவர் திரும்பவும் அரியணை ஏறிட முஸ்லிம்கள் ஆற்றிய சேவையும், ஹைதர்அலியும், திப்புசுல்தானும், அ்வரது ஆயிரக் கணக்கான படைவீரர்களும், பீரங்கிகளும், துப்பாக்கிகளும் இந்த நாட்டின் விடுதலைக்காக வெள்ளையரை எதிர்த்து வெடித்துக்கிளம்பிய வரலாற்றின் பக்கங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

ராஜபாணா

800 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் இருந்த சிலம்பக்கலையையும், அரபு நாட்டு வாட் போர்க் கலையையும் இணைந்து உருவாக்கப்பட்ட ஒரு புதுமுறைப் போர்க்கலையே ராஜபாணா. இந்தப் போர்க்கலைப் பள்ளியைச் சேர்ந்த வீரர்கள் பாண்டிய மன்னர்களது படையில் பெரும் பங்காற்றியுள்ளார்கள்.

---

* கே.ஜீவபாரதி, வீரன் எட்டப்பன் முதல் வேலுநாச்சியார் வரை , சென்னை, 2002, பக்.125.

மிசா–கு–கனி

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தப்பள்ளியில் பிரதான குருவா'க மிசாகு கனி இருந்தார். இவர் 1756 ஆம் ஆண்டில் திண்டுக்கல் கோட்டையில் இருந்த ஹைதர் அலியின் படையில் வீரராகச் சேர்ந்தார். ஹைதர்அலியிடமும், திப்புசுல்தானிடமும் பணியாற்றிய மிசாகுகனி 1814 இல் அருப்புக்கோட்டையில் காலமானார். வேலுநாச்சியாரின் சிவகங்கைப் படையெடுப்பின் போதும் மிசாகுகனி கலந்து கொண்டிருக்கக்கூடும். அவருக்கு ஹைதர்அலியும், திப்புசுல்தானும் வழங்கிய செப்பேடுகளை அவரது வாரிசுகள் பேரீச்சம் பழத்திற்கு விற்ற கொடுமை, அதனால் வரலாற்றில் பல செய்திகள் அழிந்து போயிற்று. அது மட்டுமா? அவர் தமிழ்க் கவிதைவடிவில் நினைவுக் குறிப்புக்களைப் பாடலாகவும் எழுதி வைத்துள்ளார்.

நினைவுக்குறிப்புக்கள் (Memoirs)

நாயக் மிசாகுகனி போன்ற வீரர்கள் தங்களது வீர அனுபவங்களை தமிழில் கவிதையாக்கி ஓலைச் சுவடியில் வடித்திருந்தனர். காலகதியில் அவைகள் கரையானுக்கு இரையாயின.

'வெங்கதிரோயவில்லை, வெம்மையும் தணியவில்லை
மங்கிய மாலை நேரம் மலர் மணத்து அசரின்* வேளை
செங்கமாச்சாராலெல்லாம் சடுதியில் மங்கல் ஏனோ?
எங்குமே புழுதி ஓங்கி எழூதலும் ஏனோ? ஏனோ?
பொங்கிய கடலும் ஓங்கிப் பூதலம் நடுங்க வந்தச்
செங்கமாக் கணவாய்க்குள்ளே சீறியே பாய்ந்ததாலோ
சிங்கமாம் ஹைதர் அண்ணல் சினந்ததால் எழுந்த சேனை
அங்கு தான் பாய்ந்ததாலோ அந்நிலையென்க மாதோ'

எனும், மிசாகு கனி(Nayak Misaghu Ghani)யின் பாடல்களை

---

*அசர் - முஸ்லிம்களின் மாலைத் தொழுகை நேரம்

சுஜாவுதீன் சர்க்கார் (M.Sujauddin Sarkear) தனது நூலில்* மேற்கோள்காட்டுகிறார்.

இராமநாதபுரம் மன்னருக்கு மகளாகப் பிறந்து, சிவகங்கை மன்னருக்குத் துணைவியராகி, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வெள்ளையரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய ராணிவேலு நாச்சியார் கி.பி.1772 இல் இழந்த தனது நாட்டினை, கி.பி.1780 இல் மீட்டிட, இந்த மண்ணிலிருந்து வெள்ளையரை விரட்டிட அவருக்கு உறுதுணையாக ஹைதர்அலியும், திப்புசுல்தானும், மீர்ஜா அலியும், கோட்டைத்தளபதி சையத்சாகிபுவும், நாயக் மிசாகுகனியும் இன்னும் வரலாற்றில் பெயர் தெரியாமல் போராடி உயிர் நீத்த எண்ணற்ற முஸ்லிம் தீரர்களும் உதவினார்கள் என்பது கடந்த கால வரலாறு.

இந்துக்களும், முஸ்லிம்களும் இனவேறுபாடின்றி, மதவேறுபாடின்றி, தாய்நாட்டின் விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட வரலாறு ஆகும்.

சாதிமத மோதல்களால் மானுடம் காயப்பட்டுக் கிடக்கும் இன்றையச் சூழலில், நிகழ்காலத்தில் நம் கண்ணெதிரே கொண்டு வரப்பட வேண்டிய வரலாறும் ஆகும்.

---

* சுஜாவுதீன் சர்க்கார், திப்புவின் அரசியல், வரலாற்று மயக்கமும் ஆய்வுத் தெளிவும், 1983,சென்னை, பக்.28,30.

வீரபாண்டியகட்டபொம்மன் படையில்முஸ்லிம்கள்

முஹம்மதுதம்பி, யூசுப்லெப்பை, குப்பைராவுத்தர்

அன்றைய நெல்லைச்சீமை பாஞ்சாலங்குறிச்சியில், 3.1.1760 இல் மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தார். 2.7.1790 இல் அவர் பட்டத்திற்கு வந்தார். கி.பி.1793லிருந்து கிழக்கிந்தியக் கம்பெனியார் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக கப்பம் கேட்டு வந்தார்கள். 1798 இல் ஆலன் என்ற ஆங்கிலேயர் திரும்பவும் கும்பெனியாருக்கு திரைசெலுத்தக்கேட்டு பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு வந்தார். கப்பம் செலுத்திடக் கேட்டார். கட்டபொம்மன் மறுத்தார். கலெக்டர் ஜாக்சனை கட்டபொம்மன் சந்திக்க வேண்டுமென்று சொல்லிச் சென்றபோது ரணசிங்கனும், துரைசிங்கமும், சின்னபொம்மையாவும், சிவசுப்பிரமணிய பிள்ளையும் இது கேட்டு சீறினர். வீரர் ஊமைத்துரை உறுமினார். 24.8.1798 இல் காலத்தி வருடம் ஆவணி மாதம் ஒன்பதாம் தேதி வியாழக்கிழமை தசமி தினத்தன்று ஜாக்சனைக்காண கட்டபொம்மனுடன் வேலாளர், வாளாளர், வில்லாளர் முதலிய நாலாயிரம் வீரர்கள் புறப்பட்டனர்.**

இந்திய விடுதலை வரலாற்றில் வீரமிகு முஸ்லிம்களின் பங்கு என்று எழுதக் கேட்டால் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறாரே என்ற எண்ணம் எழும்; இரண்டிற்கும் உறுதியான சம்பந்தம் இருக்கிறது என்பதைக் காண்போம். கட்டபொம்மனுடன் ஜாக்சனைக் காண இராமநாதபுரம் சென்ற 4000 படை வீரர்களைப் பற்றிய குறிப்பு வீரபாண்டியக் கட்டபொம்முகதைப்பாடலில் இருக்கிறது.

வீரபாண்டியகட்டபொம்முகதைப்பாடல்

இந்தக் கதைப்பாடல் இஸ்லாமியத் தோழர் ஒருவர் பதிப்பித்து, அவர் அதில் இதை இட்டுக்கட்டி சேர்த்திருப்பாரோ என்று எவராவது எண்ணி விட வேண்டாம். அன்றைய மதுரைப் பல்கலைக்கழகம் (இன்றைய மதுரை காமராசர் பல்கலைக் கழகம்) நாட்டுப் பாடல்களைத் தொகுத்து 1971ல்வெளியீடு செய்தது. முதலாவது நாட்டுப்பாடல் வெளியீடு நூலான வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், நா.வானமாமலை அவர்கள் பதிப்பித்தது; அதில் பக்கம் 33ல். கட்டபொம்மனுடன்

* ஜெகவீர பாண்டியனார், பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம், முதல் பாகம், 1939 , மதுரை, பக்.84

இராமநாதபுரத்திற்கு ஜாக்சனைக் காணச் சென்ற படைவீரர்கள், போர்த்தளகர்த்தர்களைப் பற்றி குறிப்பிடும் போது, வரிசையாக பெயர்களைச் சொல்லிக் கொண்டே வரும்போது,

"மம்மது தம்பியும் முகமது தம்பியும் மார்க்க
முள்ள தம்பி வரிசையுந்தான்
தர்மகுணவான் புராமுசாயுபும் தம்பி
இசுமாலு ராவுத்தனும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரஞ்சீவி என்பவர் எழுதிய 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நூலில், அதைப் பற்றியவரலாறு வரும் இடத்தில், பக்கம் 211ல்,

"மம்மது தம்பி முகம்மது தம்பியும்,
மார்க்கமுள்ள சின்ன வரிசையும்,
தர்மகுணவான் இபுராமுசாகிபும்,
தம்பி யிசுமாலு ராவுத்தனும்" என்று அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்டபொம்மன்வரலாறு

அன்றைய சென்னை அரசாங்கத்தின் (இன்றைய தமிழ்நாடு) பதிப்புத்துறையினரால் ஒரியண்டல் மானுஸ்கிரீப்ட் வரிசையில் 67வது நூலாக 1960 இல் டி.சந்திரசேகரன் என்ற அரசு மானுஸ்கிரீப்ட் நூலகப் பாதுகாவலர் பதிப்பித்த "கட்டபொம்மன் வரலாறு" என்ற நூலில் பக்கம் 10 இல் அதே விஷயத்தைச் சொல்லும்போது

"மகம்மதுத் தம்பி ஈசுப்பு லெப்பையும்
மார்க்கமுள்ள குப்பை இராவுத்தனும்
தர்மகுணவானும் மாமுஞ்சாமியுந்
தம்பி இஸ்மானு ராவுத்தனும்"

என்ற வரிகளைக் குறிப்பிட்டுள்ளார். அந்தநூலிற்கு 27 பக்கங்களில் விளக்கம் எழுதிய அவரே பக்கம் 12,68ல் மம்மது தம்பி, ஈசாப்பு லெப்பை, குப்பராவுத்தன், இஸ்மான் இராவுத்தன் என்றும் சொல்லியிருக்கிறார்.

குப்பராவுத்தர்

இவைகளை ஆய்ந்து பார்க்கிற போது முகம்மதுதம்பி, யூசுப்லெப்பை இரண்டும் ஒரே பெயராகவோ அல்லது தனித்தனியாகவோ இருக்க வாய்ப்புள்ளது. வரிசை என்பது சின்னவரிசை என்று வழங்கும் பெயரைக் குறிக்கலாம். குப்பராவுத்தன் என்பதை எளிதில் எவரும் உணர்வர். கயத்தாற்றில் இவர் பெயரால் பத்தாண்டுகளுக்கு முன் தெரு ஒன்றும் இருந்தது. தற்போது காஜாமுகைதீன் தெரு என்று அது மாற்றப்பட்டுள்ளது. பேரூராட்சியின் பழைய ஆவணங்கள் கயத்தாற்றில் குப்பராவுத்தர் பெயரில் தெரு இருந்ததை உறுதி செய்கின்றது. கட்டபொம்மன் ஜாக்சனை பேட்டிகாணச் செல்லும் போது உடன் சென்ற பாதர் வெள்ளை போன்ற முக்கியமான வீரர்கள் 100 பேர்களுக்கு உள்ளாகவே அந்தப் பாடலில் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதில் மேற்குறிப்பிட்ட முஸ்லிம் வீரர்கள் நால்வரின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது. 10.9.1798 இல் ஜாக்சனை கட்டபொம்மன் சந்தித்தும், அங்கே லெப்டினன்ட் கிளார்க் வெட்டிக் கொல்லப் பட்டதும், அங்கு நடந்த போரில் கட்டபொம்மன் தப்பி வந்ததும், சுப்பிரமணியபிள்ளை பிடிபட்டதும், 5.9.1799 இல் பாஞ்சாலங்குறிச்சியில் திரும்பவும் போர் மூண்டதும், 16.10.1799 இல் கட்டபொம்மன் கயத்தாற்றில் கட்டைப் புளியமரத்தில் தூக்கில் தொங்விடப்பட்டதும் சரித்திரத்தின் பின் நிகழ்ச்சிகள்.

மருதுபாண்டியர் கால முஸ்லிம்கள்

தென்னகத்தில் வெள்ளையரை எதிர்த்துப் போர்க் களத்திலேயே தீரன் திப்பு சுல்தான் வீழ்ந்தார்; வீரபாண்டிய கட்டபொம்மனும் வீழ்ந்ததற்குப் பின்னரும், வீரப்போரிட்டு ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் நடத்திட தென்னாட்டில் முயற்சிகள் தொடர்ந்தன.

திண்டுக்கல்லில்

மதுரைப்பகுதியின் சார்பில் மானங்காத்த மருது பாண்டியரும், திண்டுக்கல் திருச்சிப் பகுதிகளின் சார்பில், விருபாச்சி (Virupakshi) பாளையக்காரரும் சிறந்த ராஜதந்திரியுமான கோபால்நாயக்கரும் (Gopala Nayak), கோயமுத்தூர் சேலம் பகுதிகளின் சார்பில் கான் இ ஜகான், கேரளவர்மா என்ற (Kerala Varma) என்ற பழாசி ராஜா (Rajah of Pazhassi) மலபார் பகுதியின் சார்பிலும், கிருஷ்ணப்பநாயக்கர் மேற்கு மைசூரிலும், மராத்திய மாவீரன் துந்தாஜிவாக் (Dhoondaji waug) கன்னட நாட்டின் வடபகுதியிலும் தலைமையேற்று வெள்ளையரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தனர்.

கான்–இ–ஜகான்

கான்—இ—ஜகான் (Khan-i-Jahkhan) மூதூரைச்(Muddoor) சேர்ந்தவர். தீரன் திப்புசுல்தானின் குதிரைப் படையில தளபதியாகப் பணிபுரிந்தவர். வடக்கு தெற்குப் புரட்சி அமைப்புக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

மராத்தியப்பகுதிக்குத்தூதுக்குழு

வெள்ளையரை எதிர்த்து புரட்சி நடத்திட பெரும் திட்டம் தீட்டப்பட்டது. அது குறித்து கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ளவும் புரட்சிப் படையினரைத் திரட்டிடவும் மராத்தியப் பகுதிக்கு தூதுக்குழு சென்றுவந்து கொண்டிருந்தது.

ரிஷாசாகிப்

திண்டுக்கல் கோபால்நாயக்கரிடம் கருத்துக்களைக் கேட்டதற்குப் பின்னர் அப்பாச்சிக் கவுண்டரும் வெங்கடரமணய்யாவும் மராத்தியப் பகுதிக்கு மூன்றாவது

தூதுக்குழுவை அனுப்பிடமுடிவெடுத்தனர். கான்—இ—ஜகான் தன்னுடைய ஆதரவினைத் தெரிவித்ததோடு, தன்னுடைய மருமகன் ரிசா சாகிப்பை (Riza Sahib) தன்னுடைய பிரதிநிதியாக தூதுக்குழுவில் அனுப்பி வைத்தார். தூதுக்குழுவினர் திண்டுக்கல்லிருந்து கிளம்பினர். மூதூருக்குப் பக்ககத்திலுள்ள நங்கீ குட்டி (Nuggeehuty) என்ற இடத்தில் தூதுக்குழுவினரைச் சந்தித்தனர். வீரத்தளபதி கான்—இ—ஜஹானுடன் மேலும் கலந்தாலோசித்தனர். பெரும்பாலான பிரதிநிதிகள் கலந்துகொண்டு எல்லாப்புரட்சி அமைப்புக்களுக்கும் நல்ல முறையில் செய்தி அறிவித்து, முறையோடு சென்ற தூதுக்குழு இதுவேயாகும்.

தூண்டாஜிவாக்

மராட்டிய மாவீரன் தூண்டாஜிவாக் (Dhoondaji waug) நல்ல மனஉறுதியும் உயர்ந்த செல்வாக்கும் பெற்றிருந்தவர்; சிமோகா (Shimoga) பகுதியிலுள்ள சென்னகிரியைச் (Chennagiri) சார்ந்தவர். கி.பி.1780 இல் ஹைதர்அலியின் படையில் குதிரைவீரராகப் பணியில் சேர்ந்தவர். பின் அதிலிருந்து விலகினார். தீரன் திப்பு சுல்தானால் சமாதானம் செய்யப்பட்டு, திரும்பவும் மைசூர்ப்படையில் பணியாற்றினார். திப்புவின் மறைவிற்குப் பின்னர் மராத்தியப் பகுதிக்குத் தப்பி ஓடிய தூண்டாஜிவாக் அங்கிருந்து கொண்டு திப்புவினுடைய படையில் பணியாற்றிய வீரர்களோடு தொடர்பு கொண்டும், ஆங்கிலேயர்களால் கொடுமைப்படுத்தப்பட்ட மைசூர் மக்களோடு தொடர்பு கொண்டும், 5000 குதிரைகளையும், படைவீரர்களையும் சேர்த்து வெள்ளையரை வீராவேசத்தோடு எதிர்த்திடத் துணிந்தார். இரண்டு உலகங்களுக்கும் மன்னர் (King of the Two Worlds) என்று தன்னைப் பிரகடனப்படுத்திய தூண்டாஜிவாக்கின் புரட்சிக்காரர்களுடன், மைசூரிலுள்ள எல்லா இஸ்லாமியர்களும் சேர்ந்து கொண்டனர். Almost all the Muslims of Mysore associated themselves with the rebels.*

---

* Madras Council, 3 June 1800, Military Consultations,Vol 269, P.3259. & 14 Nov.1800, Political Consultations, Vol.2,P.694.

கிரிக்கோட்டை சந்திப்பு

மூதூரிலிருந்து தூதுக்குழுவினர் வடக்கு நோக்கிக் கடும் பயணம் மேற்கொண்டனர். எதிரிகள் பார்வையிலும், துரோகிகளின் கண்களிலும் அகப்படாமல் தூந்தாஜிவாக் முகாமிட்டிருந்த கிரிக்கோட்டைக்கு (Giri Kottai) தேசியப் புரட்சியாளர்கள் (Patriots) சென்றனர். வெள்ளையரை வீழ்த்துவதற்கான திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றது. அப்போது புரட்சி தூதுக்குழுவினரிடம் கோவைப் பகுதியிலிருந்து ஏற்கனவே தீரன் சின்னமலை (Chinnan Gour) தம்மைச் சந்தித்ததாகவும், அந்தப் பகுதியில் புரட்சியினை தொடங்க அவரைத் தலைமை தாங்கிட, தான் அனுமதித்து அனுப்பியிருப்பதாகச் சொன்னார் தூந்தாஜிவாக்.

காவிரிக்குவடக்கே கான்-இ-ஜகான்

தூந்தாஜிவாக்கினைச் சந்தித்த தூதுக்குழுவினர் ஓரளவே செல்வாக்குப் படைத்த சின்னமலைக்கு பெரும் பொறுப்பை வழங்கிவிட்டதாக எடுத்துக் கூறினர். அத்தோடு செல்வாக்குப் படைத்தவர்களும், பலம் பொருந்தியவர்களும் தங்கள் பக்கமே இருப்பதாகவும் தெரிவித்தனர். எல்லாப் புரட்சியாளர்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒருவரை தலைமைப் பொறுப்பிற்கு நியமித்திருக்கலாம் என்றும் கூறினர். தெற்குச் சீமையில் வெள்ளையரை எதிர்த்துப்போர் புரியத்தலைமை தாங்கும் பெரும்பொறுப்பை ஏற்றுச் செயல்படப் பொருத்தமானவர் கான்-இ- ஜகான் தான் என்றும் கூறினார்கள். 'அந்தப் பேச்சு வார்த்தைக்குப் பின் தமிழகத்தில் காவிரிநதிக்கு வடபுறமுள்ள பகுதிகளுக்குப் புரட்சி அமைப்புகளின் தலைவராக கான்-இ- ஜகான் நியமிக்கப்பட்டார். காவிரி நதிக்குத் தென்பகுதி முழுமையும் புரட்சி அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு மானங்காத்த மருதுபாண்டியர்கள் தலைமையேற்று நடத்தினர்' என்று வரலாற்றாசிரியர் கு.ராஜய்யன் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இதோ அவரது வாசகங்கள் ....

"The deputies indicated that khan-i-jahkhan would be the most acceptable and capable of doing the job. Accordingly, the rebel council appointed him as its administrator for the Tamil region north of the kaveri., as MaruduPandyan has assumed the control of rebel organisation in the region south of the kaveri...*

புரட்சிக்குழுவின்தலைவர்

மூதூருக்குத் திரும்பி வந்த அப்பாசிக்கவுண்டரும் (Apaji Gour) வெங்கட்டரமணய்யாவும் (Venkataramaniah) கான்-இ-ஜகான் புரட்சிக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரத்தை அறிவித்து பெரிதும் பாராட்டினார்கள். தூந்தாஜிவாக் கொடுத்தனுப்பிய கடிதங்களும் அவரிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் இத்தூதுக்குழு திண்டுக்கல்லுக்குச் சென்றது.

கான்-இ-ஜகானின் இரண்டாவதுமருமகன் அவர் களுடன் அனுப்பி வைக்கப்பட்டார். விருப்பாச்சியில் அந்தக் குழுவினர் தங்கியிருந்தனர். விருப்பாட்சி கோபால் நாயக்கர் கான்-இ-ஜகானின் மருமகனைத் தன்னுடனே தங்குவதற்கு ஏற்பாடு செய்தார். நாட்டின் மற்ற இடங்களுக்கு புரட்சிச்செய்திகள் பறந்தன. தலைமல்லா (Talmalla) விற்குச் சென்ற புரட்சியாளர்கள் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டனர்.

நாடெங்கும் புரட்சிக்குழுவின் சீரிய நடவடிக்கைகள் புரட்சிக்கூட்டமைப்பில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தின. புரட்சிக்குழுவினர் இந்து—முஸ்லிம் என்ற பாகுபாடின்றி வேற்றுமையில் ஒற்றுமை கண்டனர். வீரத்தளபதி கான்—இ—ஜகானும் மானங்காத்தமருதுபாண்டிரும் தமிழகத்தில் காவிரிக் கரைக்கு வடக்கிலும் தெற்கிலும் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் நடத்திட வரிந்து கட்டிக்கொண்டு முன்நின்றதை வரலாற்றில் தெளிவாகக்காண முடிகின்றது.

---

*K.Rajayyan, South Indian Rebellion, The First war of Independence, Mysore, 1971, P. 111.

புரட்சித்திட்டங்கள்

ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் நடவடிக்கையைபுரட்சி கூட்டத்தினர் துவக்கினர். வெள்ளையரை எதிர்த்துப் போர்நடவடிக்கைகளைக் கவனித்திட இராமநாதபுரப் பகுதிக்கு முத்துக்கருப்பத்தேவரும், தஞ்சாவூர் பகுதிக்கு ஞானமுத்துவையும் மருதுபாண்டியர் நியமித்தார்.*

சத்தியமங்கலம்

கோபால்நாயக்கர், அப்பாச்சிக் கவுண்டர், நீலப்பக் கவுண்டர், காரித்தம்பி, வெங்கட்டரமணய்யா ஆகிய புரட்சித் தலைவர்கள் ஆயுதம்தாங்கிய புரட்சிவீரர்களோடு சத்திய மங்கலத்தில் கூடினர். சத்தியமங்கலத்திலுள்ள மலைப்பகுதிகளைச் சாதகமாக்கிக் கொண்டு வெள்ளையர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள புரட்சித்தளபதி கான்-இ-ஜஹான் ஆணையிட்டார்.

கோயமுத்தூரைத்காத்திட

ஆயுதங்தாங்கிய புரட்சிப்பெரும் படையோடு விருப்பாச்சி மலையில் முகாமிட்டுக் கொண்டிருந்த கான்-இ-ஜஹான் கோயமுத்தூரிலிருந்த வெள்ளையரைத் தாக்கத்தயாரானார்.

Khan-i-Jahkan in command of a large body of rebels established himself in the hills of Virupakshi in Dindigul for launching an offensive towards Coimbatore.**

கேரளவர்மா

மலபார்தலைவர்கள் பெரியா (Peria) என்ற இடத்தில் இரண்டு முறை கூடிப் பேசினார்கள். பழாசி அரசன் என்று மக்களால் அழைக்கப்பட்ட மலபார் கோட்டையோடுக் குடும்பத்தைச் சார்ந்த இளவரசன் கேரளவர்மா முதல்முறை நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். புரட்சித்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட புரட்சித் தலைவர்களுக்கு ஒவ்வொரு பகுதியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

---

*Madras Council, 1 December 1801, Military Consultations, vol 289, P.7754

**Confession of Appaji Gour, Board of Revenue, 16 June 1800, Proceedings, Vl 255, PP. 5594-5599.

குன்ஹியாமிமாப்பிள்ளை

எழம்பலம் குஞ்சனுக்கு கோட்டையாற்றுப் பகுதிப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. எடத்தரா குஞ்சனுக்கு வயநாடுப்பகுதி வழங்கப்பட்டது. கார்த்திநாடு, செங்கோத்திரி அம்புவுக்குத்தரப்பட்டது. ரெண்டாற்றாபகுதி குன்ஹியாமி மாப்பிள்ளாவிடம் ஒப்படைக்கப்பட்டது. (Rendatara was entrusted with Kunhyami Mopilla)

ஹைதர்குட்டி

இரவிநாடு புரட்சிப் படையினை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு கஞ்சோட்நம்பியார், ஹைதர்குட்டி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. (Iruvinad with Kanjotnambiar, and kydri kutti)

மஹதாப்கான்

பெல்நாட்டின் தலைவர் கிருஷ்ணப்ப நாயக்கர் கன்னடத்திலுள்ள விட்டல்ஹெக்டே, சுப்பராவ் மஹதாப்கான் (Mahtabkhan) ஆகியோருடன் உடன்பாடு செய்து கொண்டார்.* மைசூரின் வடபாகத்தில் தூந்தாஜிவாக் புரட்சிப் படைகளுக்குத் தானே தலைமைப் பொறுப்பினை ஏற்றார்.

29.4.1800

வெள்ளையரை எதிர்க்கும் புரட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தபின், புரட்சித்தலைவர்கள் எந்த இடத்தில், எந்த நாளில் புரட்சியினைத் தொடங்க வேண்டுமென்று முடிவு செய்திட விருப்பாட்சியில் *29.4.1800* இல் கூடினர். கோபால் நாயக்கர் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.*

கோயமுத்தூரைத் தாக்கிட கான்-இ-ஜகான்

தென்னகத்தின் தெற்கு வடக்குப் புரட்சிக்குழுவின் தலைவர்கள் கலந்து கொண்டதும், வெள்ளையரை எதிர்த்து நடக்கவிருக்கின்ற புரட்சிக்கான திட்டங்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட கூட்டமும் இது என்பதால், தென்னிந்தியப்

* B.Hurdis, 8June 1800, Report to the Board of Revenue, Individual Papers, No.34

புரட்சிக்கான கூட்டமைப்பின் மிகமுக்கியமான கூட்டமாக இது வரலாற்றில் கருதப்படுகிறது. இந்தக் கூட்டத்தில், ஆங்கிலேயரின் பலம் பொருந்திய கோயமுத்தூர் இராணுவக் கோட்டையைத் தாக்கி அழிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. வீரத்தளபதி கான்-இ-ஜஹான் கோவை செல்லும் புரட்சிப் படையினருக்கு உறுதுணையாக 4000 குதிரைப்படையுடன் குஜல்குட்டிக் கணவாய்க்கு வந்துவிடுவதாக அப்போது தெரிவித்தார். Khan-i-jahkhan at the command of 4,000 horse agreed to reach by the pass of Gujel gutty in support of the insurgent column of Dindigul.* கோவைப்புரட்சியில் பங்கெடுத்திட புரட்சிப்படை வீரர்களைத் திரட்டியும், போருக்கான ஆயத்தங்களையும் செய்து கொண்டிருந்த கான்-இ-ஜஹான் வெள்ளையர் எதிர்ப்புப் போரில் வீரச்சாவைத் தழுவியிருப்பார். அவர் புரட்சி வீரர்களைத் தயார் செய்து கொண்டிருந்த செய்தியை பின்னாளில் ஆங்கில இராணுவத்தில் அகப்பட்டு., நீதிமன்றம் நடத்திய விசாரணையில் 8.6.1800 இல் மொஹைதீன்கான் அளித்த சாட்சியம் உறுதிப்படுத்துகிறது.** மாபெரும் புரட்சித்தளபதி கான்-இ-ஜஹான் படைப் பிரிவினர் வெள்ளையரை எதிர்த்து நடத்திய கோவைப்புரட்சி பற்றிய விரிவான வரலாற்றுச் செய்திகள்...

முஹம்மது ஹசம்
(1800சூன்–கோவைப்புரட்சியில்)

புரட்சியாளர்களின் ஆதிக்கத்திலுள்ள தென்கிழக்கு வடமேற்கு மலைப்பகுதிகளுக்கு இடையில் உள்ள கோயம்புத்தூர் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது. இங்குள்ள கோட்டையையும், இந்த நகரத்தையும் புரட்சியாளர்கள் கைப்பற்றுவதன் மூலம் ஆங்கில ஆதிக்கத்தை இப்பகுதியில் ஒழிப்பதோடு புரட்சிக் கூட்டமைப்பிலுள்ள தமிழக-கன்னடப் பகுதிகளை இணைக்கும் தொடர்பு மையமாக கோயமுத்தூர் அமையுமெனப் புரட்சியாளர்கள் கருதினார்கள். கோவைப்பகுதி

* Confession of Appaji Gour, Board of Revenue, 16 June 1800 Proceedings, Vol255, P.5599.

** Mohiuddin Khan, declaration, 8 June 1800, Board of Revenue Proceedings, Vol 255, PP.5752-5769.

மக்கள் புரட்சிக்குழுவோடு கொண்ட ஆழ்ந்த ஈடுபாடுகளின் காரணமாகவும், புரட்சியாளர்கள் தங்களது திட்டத்தைக் கோயம்புத்தூரிலேயே முதன்முதலாகச் செயல்படுத்தத் தொடங்கினார்கள்.

கர்னல்மெகாலிஸ்டர்

கோயம்புத்தூரில் ஆங்கிலேயரின் இராணுவக் கோட்டை லெப்டினன்ட் கர்னல் மெகாலிஸ்டர் (Lieutenant Colonel K.Macalister) தலைமையில் பலத்த பாதுகாப்பில் இருந்தது. இதனை *3.6.1800* அன்று புரட்சிக் குழுவினர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

சேக்உசேன்

இராணுவக் கோட்டையில் இருக்கும் பிரிட்டிஷாரின் *5*வது ரெஜிமண்ட்டின் குதிரைப்படையைத் (Fifth Regiment of British Cavalry) தாக்கிட, புரட்சியாளர்கள் கிராமங்களிலிருந்தும் படைவீரர்களை ஒன்று சேர்த்துக் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள மலைப்பகுதியில் தயார் நிலையில் இருக்கவும் செய்தனர். தாக்குதல் நடத்தவிருக்கும் புரட்சிப் படைக்கு சேக் உசேனை (Shaik Hussain) தலைமை ஏற்றுச் செல்லப் பணித்தனர்.

கோவையில் புரட்சிப்படை

30.4.1800 ஆம் நாள் திண்டுக்கல் காட்டுப் பகுதியிலிருந்து ஐந்து புரட்சிப் படைப் பிரிவினர் ஆங்கில இராணுவ மையங்களைத் தாக்கிட கோவைக்குச் சென்று அதற்காக ஆயத்தமானார்கள்; திப்புசுல்தானின் மறைவிற்குப் பின் துவங்கப்பட்ட புரட்சியின் ஆரம்பக் கட்டம் இதுவாகும். தமிழகத்தில் வெள்ளையரை எதிர்த்து நடைபெற்ற இந்தப் புரட்சிக்கு வட பகுதியிலிருந்து எந்த ஆதரவும் அப்போது கிடைத்திடவில்லை. எல்லாப் புரட்சியாளர்களும் ஆயுதம் தாங்கியிருந்தனர். அவர்களது பயணம் ரகசியமாக இருந்தது. திப்பு சுல்தான் படையில் போர்வீரர்களாகவும், தளபதிகளாகவும் பணியாற்றியவர்களும், விவசாயிகளும், இந்தப் புரட்சிப் படையில் பணிபுரிந்தனர்.

முஹம்மதுஹசம்

1800 மே மாதத்தொடக்கத்தில் முஹம்மதுஹசம் தலைமையில் புரட்சிப்படையினர் தாராபுரத்தை தாக்க முனைந்தார்கள். அப்போது தாலமல்லாவிலும், சத்திய மங்கலத்திலும் ஆயுதம் தாங்கிய புரட்சிப்படையினர் குவிந்து கொண்டிருந்தனர். தாராபுரத்தையும் சத்திய மங்கலத்தையும் நோக்கிச் சென்ற புரட்சிப் படையினர் தவிர எஞ்சிய படைவீரர்களை முஹம்மது ஹசம் (Mohammad Hasham) அப்பாச்சிக் கவுண்டர், சரமையா ஆகியோர் தலைமை ஏற்று கோயமுத்தூரை நோக்கி வழி நடத்தி அழைத்துச் சென்றனர். தீரன் சின்னமலை இந்த வீரர்களுக்கு உரிய ஆணைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ஒசூர் புத்தேமுஹம்மது

அரவக்குறிச்சியைச் சார்ந்த கௌரக் கவுண்டரும் (Kaurka Gour) ஒசூரைச் சேர்ந்த புத்தே முஹம்மதுவும் (Futteh Mohammad) தாராபுரத்தை நோக்கிப் புரட்சிப் படையை வழி நடத்திச் சென்றனர்.

ருனனுல்லாகான்

இச்சப்பட்டியைச் சேர்ந்த ருனனுல்லாகான் (Ronoun-Ullah-khan) தலைமையில் புரட்சிப் படையின் இரண்டாவது பிரிவு காங்கேயத்தை நோக்கி வழி நடத்திச் செல்லப்பட்டது.

தாக்குதல் திட்டம்

1800 ஜூன் 3ஆம் நாள், கோவை நகரின் முக்கியமான இடங்களிலெல்லாம் ஆங்கிலேய எதிரிகளைத் தாக்குவதற்குப் புரட்சிப்படைகள் தயார் நிலையில் இருந்தன. முஹம்மது ஹசம் தலைமையிலான முதல் தாக்குதல் நடத்தும் படையினரின் வரவைப் புரட்சிப் படையினர் எதிர்நோக்கியிருந்தனர்.

தாசில்தார்தந்ததகவல்

நன்கு ஆலோசிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்த கோயமுத்தூர் இராணுவக் கோட்டையை முற்றுகையிடும் திட்டம் ஆங்கிலேயருக்கு இரகசிய ஒற்றர்கள்

மூலமாகத் தெரிந்தது. இதனை அறிந்த தாசில்தார் தந்த தகவல் ஆங்கிலேயர் மீது தாக்குதல் தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு கிடைத்து விட்டது. உடனடியாக ஆங்கிலேயர் ஆயத்தப்படுத்தப்பட்டனர். ஐரோப்பிய மற்றும் ராஜபுதனப் படைவீரர்களை முக்கிய இடங்களில் பாதுகாவலுக்கும் போருக்கும் தயாராக வெள்ளையர் தளபதிகள் வைத்துக் கொண்டனர். கோவை நகரில் ஐயப்பாட்டிற்குரியவர்களை வெள்ளை அரசாங்கத்தின் இராணுவம் கைது செய்தது.

மலைப்பகுதியில் மாவீரர்கள்

நீண்ட நாட்களாகத் தீட்டப்பட்ட திட்டப்படியான கோயம்புத்தூர் முற்றுகைத் திட்டம் தகுந்த பலனைத் தரவில்லை. தேசியப் புரட்சி வீரர்கள் கோவையிலிருந்து பத்து மைலுக்கு அப்பாலுள்ள மலைப்பகுதிகளுக்குச் சென்று பதுங்கினர். மறைந்திருந்து கோயம்புத்தூரை மீண்டும் தாக்குவதற்குத் தங்கள் தலைவர்களிடமிருந்து செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், என்று கருதிய பிரிட்டிஷார் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கினர். தாராபுரத்திலும், சத்தியமங்கலத்திலும் பிரிட்டிஷாரின் இராணுவ முகாம்களைத் தாக்கும் திட்டம் பலனளிக்காது போயிற்று. தல்லாமுல்லாவில் புரட்சி வீரர்கள் ஆங்கிலேயப் படையினரைத் தாக்கி வெற்றி பெற்றார்கள்.*

பிடிபட்ட போர்த்தளபதி

ஆங்கிலேப்படையினர் காட்டுப்பகுதியில் மறைந்திருக்கும் புரட்சிப் படையினரைப் பிடிப்பதற்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் காட்டுப் பகுதியில் புரட்சியாளர்களை பலரைக் கைது செய்தனர் . அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமான தளபதி முஹம்மது ஹசமும் ஒருவராவார்.**

முக்கியக்கடிதங்கள்

நாட்டுப்பற்றோடும், சுதந்திரதாகத்தோடும் போர்க்களத்திலிருந்த முஹம்மதுஹசத்தை வெள்ளைக் கும்பெனியார்

---

* Board of Revenue, 23 June, 1800 Proceedings ,Vol.25, P.5752.

** B.Hurdis, 8 June 1800 letter to Board of Revenue, Individual Papers, Nos.34-35.

கைது செய்யப்படுவதற்கு முன்னர் அவரிடம் ஏராளமான முக்கியக்கடிதங்கள் இருந்தன. அவைகள் புரட்சியாளர்களின் தலைவர்களால் கொடுத்து அனுப்பப்பட்டிருந்தது. 'இவைகளை வெள்ளையர் கண்டிபிடித்து விட்டால் புரட்சித்திட்டங்கள் குறித்த விவரங்களை அறிந்து கொள்வார்களே' என்று எண்ணிய அந்தமாவீரர் தன்னிடமிருந்த ரகசியக் கடிதங்களை அழித்தெறிந்தார். அவரைப் பிரிட்ஷ் ராணுவத்தினர் எவ்வளவோ துன்புறுத்தியும், அவரிடமிருந்து புரட்சிக் கூட்டத்தின் திட்டங்கள் பற்றி எந்தவிதத் தகவலையும் பெற முடியவில்லை.

வீரச்சாவைத்தழுவியவீரர்

Who carried with him several letters given by the leaders, but before he fell into the hands of the enemy he destroyed all of them. The English promptly placed Mohammed Hasham in irons and decided to interrogate him in order to obtain information about the rebel conspiracy. However, Dedicated Patriot as he was , he thwarted the intention of the aliens by committing suicide on the 8th June 1800, by cutting his throat.*

முஹம்மதுஹசத்தை ஆங்கிலேய ராணுவத்தினர் இரக்கமற்ற வகையில் விசாரணை செய்து குறுக்குக் கேள்விகள் கேட்ட போதும், கொள்கையில் உறுதியாக நின்ற மாவீரன் முஹம்மதுஹசம் 8.6.1800 இல் தனது கழுத்தை தானே வெட்டிக் கொண்டு வீரச்சாவினைத் தழுவிக் கொண்டார். அரசு ஆவணங்கள் இன்னும் அந்த வீரத் திருமகனின் வரலாற்றைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

தூக்கிலேதொங்கியதீரர்கள்

(கோவைப் புரட்சியில் 1800)

கோயம்புத்தூரை முற்றுகையிட்டு, அதன்பின் ஆங்கிலேயே இராணுவக் கோட்டையினை ஆக்ரமித்துக் கொள்ளும் திட்டம், விடுதலைப் புரட்சியாளர்களால் வெற்றிகரமாக நடத்திட முடியாது போயிற்று. கோவைப்புரட்சி தொடர்பாக பிடிபட்ட சுதந்திரப் போராட்டத் தளபதிகள் இராணுவ முறைப்படி விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

* B.Hurdis, Board of Revenue, 16 June 1800 Proceedings ,Vol.255, PP.5576-5583.

எட்வர்டுகிளைவ்

தமிழகத்தில் கும்பெனியாரின் ஆதிக்கத்தில் அப்போது கவர்னராக இருந்தவர் லார்டு எட்வர்ட் கிளைவ் ஆவார். வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு இந்தியத் திருநாட்டில் வித்தூன்றிய இராபர்ட் கிளைவ்வின் *(29-9-1725, - 22-11-1774)* மகன் தான் எட்வர்ட் கிளைவ்; சென்னையின் கவர்னராக எட்வர்டு கிளைவ் *5.7.1799* முதல் *30.3.1803* வரை பதவியில் இருந்தார்.*

மாவீரர்களுக்கு மரணதண்டனை

கோவைப்புரட்சி தொடர்பாகக் கைது செய்யப்பட்ட தேசியப் புரட்சிவாதிகளுக்கு உயர்ந்த அளவு தண்டனை வழங்குமாறும், பிடிபட்டவர்கள் அனைவரையும் இராணுவ முறைப்படி ஒரே விசாரணை நடத்தி அதில் எது அதிக அளவு தண்டனை என்று கலெக்டர் கருதுகிறாரோ அந்த தண்டனையையாவது, அல்லது மரண தண்டணையை உடனடியாக வழங்கிடுமாறு, கவர்னர் எட்வர்டு கிளைவ் சேலம் கலெக்டருக்கு ஆணை பிறப்பித்தார்.

வில்லியம்மாக்லியார்டு

கவர்னரின் ஆணைக்கிணங்க சேலம் மாவட்டக் கலெக்டர் வில்லியம் மாக்லியார்டு கோவைப் புரட்சியாளர்கள் 42 பேர்களை இராணுவ நீதிமன்ற விசாரணக்கு உட்படுத்தினார்.

முஸ்லிம் தீரர்கள்

ஷம்னஸ்கான் (Shumnus Khan)**
மொஹைறதீன்கான் (Mohe-ud-dinkhan)***
தாராபுரம் செய்யது இமாம் (Syed Imam)
பீர் சாஹிப் (Peer Saib)

* Lt.Col.Henry Davison, Vestiges of Old Madras, Indian Record Series, London, 1913, Vol.II. P.529.

** Board of Revenue, 10th July 1800, Proceedings, Vol256, PP.6115-6116.

*** Mohiuddindkhan declaration 8th June 1800, Board of Revenue Proceedings, Vol.255, PP.5752-5759.

மான்கான்	(Mann Khan)
ஷேக்மியான்	(Sheik Mean)***
கோவை கலீபா அமீர்தார்	
ருனா முஸ்டாக்கான்	(Runna Mustah Khan)
குலாம்பாய் ஹைதர்கான்	(Gulaum Boy Hyder Khan)
ஜமாஷ் கான் அலி சாஹிப்	(Sumash Khan Ali Seib)
கொடிக்குல் சேக்அலி	(Codikul Sheik Ali)
செலார் கான்	(Celar Khan)
அலி சாஹிப்	(Ali Seib)
முடாஸ்சாஹிப்	(Mudda Seib)
முஹம்மது சாஹிப்	(Mohammad [Seib)
மீர் கமுருதீன்கான்	(Meer Commeru deankhan)
சேக் மொகிதீன்	(Shaik Mohiud-deen)
கம்ருதீன்	(Cummeruddeen)
சோலைமலை அமீல்தார்	
பதே முகமது	(Futteh Mohammad)
சேக் மதார்	(Sheik Madar)
சேக்புத்தீன்	(Sheik Bud-din)
குலாம் உசேன் ஷேக்அலி	(Gulam Hussain Sheik Ali)
பீர் முஹம்மது	(Peer Mohammad)
குலாம் அலி	(Gulam Ali)
சோட்டார் அப்துல் காதர்	(Chotar Adul Kader)
முஹமது ஷெரீப்	(Mohammad Sheriff)
சேக் மீரா	(Sheik Meera)
சேக் முஹமது தெலார்வர்	(Sheik Mohammad Delarver)
பீர்முங்கப்அலி	(Peer Mungappa Alil)
பீனா சேக்மியான்	(Peena Sheik Mean)
சையது முகர்தீன்	(Syed Mohrideen)
ஹைதர்கான்	(Hyder Khan)
மொஹிர்தீன்கான்	(Mohirdeen Khan)

*** Sheik Mean, 8th June 1800, declaration, Board of Revenue, Proceedings Vol 255, PP 5759-5761.

சேக் முஹம்மது	(Sheik Mohamed)
தீதார் சேக் இமாம்	(Detawer Sheik Imam)
பீனாஷேக் மீயான்	(Peena Sheik Mean)*
ஒசூர் புத்தேமுஹம்மது	(Futteh Mohammad)
ருனனுல்லாகான்	(Ronoun-ullah-khan)

ருனனுல்லாகான் (Ronoun-ullah-khan) ஆகிய 38 முஸ்லிம்தீரர்களுடன், நான்கு ஹிந்து வீரர்களும் விசாரிக்கப்பட்டனர். அனைவருக்கும் இராணுவக் கோர்ட் மரண தண்டனையை விதித்தது.** புரட்சிப் பகுதி மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையாகத் தாராபுரத்தில் எட்டுப்பேர்களையும், சத்தியமங்கலத்தில் ஏழு பேர்களையும், கோயம்புத்தூரில் ஆறுபேர்களையும், மற்றவர்களைப் பல்வேறு புரட்சி மையங்களிலும், பொது இடங்களிலும் வைத்து காட்டுமிராண்டித் தனமாக தூக்கிலிட்டுக் கொன்றனர் ஆங்கிலேயர்கள்.***

இத்தகையை கொடிய நடவடிக்கைகளால் மக்களின் சுதந்திர தாகத்தைத் தணிக்க முடியவில்லை. சேலம், கோயம்புத்தூர் பகுதி மக்கள் தொடர்ந்து ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தது.****

இந்திய சுதந்திரப் போரில் தமிழக முஸ்லிம்கள் வெள்ளையர் எதிர்ப்புப்போரில் தங்கள் இன்னுயிரைத் தாரைவார்த்த தமிழக முஸ்லிம்தீரர்களின் பங்களிப்பு எவருக்கும், எந்த விதத்திலும், எந்த அளவிலும், எள்ளின் மூக்கின் முனையளவும் குறைந்ததில்லை என்பதனை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் தூக்கிலே தொங்கிய தியாகிகள் 42 பேர்களில் 32 பேர்கள் முஸ்லிம்கள் என்பதனை சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து அறிகிறபோது மெய்சிலிர்க்கிறது.

---

* Hyder khan, 8 June 1800, declaration to the court martial, Board of Revenue, Proceeding , Vol. 255, PP 5761-5766.

** Board of Revenue, 16 June 1800 Proceedings, Vol 255, PP.5582-5583.

*** Board of Revenue, 18 September 1800, Proceedings, Vol 262, PP 8093-8095.

**** Board of Revenue , January 1801, Proceedings, Vol 270, P.79.

மன்னர் ஊமைத்துரைகாலமுஸ்லிம்கள்

கவியோகி சுத்தானந்த பாரதியார் சிவகங்கைச் சீமையில் வாழ்ந்தவர். *1959* மார்ச் *13* இல் சென்னை திருவல்லிக்கேணி ஜகன்மோகினி அச்சகத்தில் அச்சிட்டு "ஊமையன் சண்டை எனும் நூலினை *121* பக்கங்களில், வர்ணனை நடையில், தெற்குச் சீமையில் நடைபெற்ற சுதந்திரப்போராட்ட வரலாற்று நூலாக வெளியிட்டார். அதில் *108, 109* ஆவது பக்கங்களில் "ஊமையனைக் காட்டிக் கொடுத்த சையத்காதர்சாயபுக்கு ஆறுபவுனும் ஒரு ஈட்டியும் • கொடுத்தார்கள் கும்பினிவெள்ளையர்; ஆட்டுக்கூடையில் ஊமையன் இருப்பதாகச் சொன்ன ராமக்கோனாருக்கு ஒரு சாயவேட்டியும். பத்துப்பணமும் கிடைத்தன. பிரான்மலையில் துப்புச்சொன்ன சோலைமலைக்குத் தொண்ணூறு பவுனும், தோடாவும் கிடைத்தன.

இப்படித் துரோகிகளுக்குச் சன்மானம் செய்த வெள்ளைக்காரர் புதுக்கோட்டை அரசருக்கு விருதும் ஊர்களும் அளித்தனர். ஊமையன் கோட்டை கும்பினிப்பட்டாளத்தில் பாசறையானது. முன்னும் பின்னும் துருப்புகள் காவல் வர ஊமையனை மணியாச்சி வழியாக பாளையங்கோட்டைக்குக் கொண்டு சென்றனர். அங்கே அவனைக் கடுஞ்சிறையிலிட்டனர். பத்துச்சிப்பாய்கள் எப்போதும் கண்ணும் காவலுமாக அங்கே இருந்தனர்.ஊமையன் பிடிபட்ட செய்தி சென்னை கவர்னருக்கு அறிவிக்கப்பட்டதும் உடனே அவனைத் தூக்குப்போட உத்திரவு வந்துவிட்டது. ஊரெல்லாம் தண்டோராப் போட்டு செய்தி அறிவித்து சித்திரை மாதம் 18ந்தேதி பத்து நாழிகைக்கு ஊமையினைத் தூக்குப்போட்டனர். "முருகா நாட்டைக் காப்பாற்று" என்று சொல்லிக்கொண்டே ஊமையன் தூக்குமேடை ஏறினான். கயிறு இறுக்கப்பட்டது. இழுக்கப்பட்டது; ஊமையனுடைய வீர ஆவி பிரிந்தது. நாட்டிற்காக இரத்தம் சிந்திய ஆவேச தேசபக்தன் பாரதமாதாவின் பலிபீடத்தில் தன் ஆவியை அர்ப்பணித்தான்; அவனுடைய உடல் பாளையங்கோட்டையில் புதைக்கப்பட்டது என்று கூறியுள்ளார்.

பாரதசக்தி நிலையம் சார்பில் "வீரத்தேவன்" "சந்தனத் தேவன்" இரத்தபலி, "லண்டன்புரட்சி" புதுவையில் பூத்த புதுமை, "தீப ஜோதி", "வழிகாட்டி" இன்னும் பலப்பல நூல்களை எழுதியுள்ள கவியோகிசுத்தானந்தபாரதியின் பல நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டும் வருகின்றன.இந்நிலையில் 1959 இல் எழுதிய "ஊமையன்சண்டை" நூலும் இன்றும் தமிழகத்தின் நூலகங்களில் உள்ளது. எனவே இதில் ஊமையனை (ஊமைத்துரையை) சையத் காதர் காட்டிக் கொடுத்தார் என்று எழுதியுள்ள செய்தியும் அப்படியே உள்ளது.எனவே அது குறித்த உண்மையினை வரலாற்றின் வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஊமைத்துரை

பாஞ்சாலங்குறிச்சி பெருவேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தம்பி ஊமைத்துரை; இவர் திக்குவிசயத்துரை—ஆறுமுகத்தம்மாள் புதல்வராகப் பிறந்தது 10.6.1772.* இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் தளவாய்க்குமாரசாமி. இவருடைய மனைவி சவுந்தரவடிவு. ஊமைத்துரைக்குப் பின்னர் பிறந்தவர் துரைச்சிங்கம். அதன்பின் ஈசுவரவடிவு, துரைக்கண்ணு என்ற இரு சகோதரிகளும் இருந்தனர்.

தளவாய்க்குமாரசாமி என்ற ஊமைத்துரை வாய் சிறிது கொன்னல்; ஆதலால் யாரோடும் இவர் அதிகமாய்ப் பேசமாட்டார். பெரும்பாலும் மவுனமாகவே இருப்பார். அதனால் ஊமைத்துரை என எல்லோரும் இவரை அழைத்தனர். இவர் காது கேளாத ஊமையர் என்றும் ஆங்கிலேயர்கள் எழுதி வைத்துள்ளனர். நல்ல உயரம், சிவந்தநிறம், மெலிந்ததேகம், உடல்ஒல்லியாக இருந்ததினால் தோற்றத்தில் கம்பீரம், வாட்போர்,கவன்கல் எரிதல், குதிரைசவாரி, சிலம்பம் ஆகிய கலைகளில் அபார தேர்ச்சி, நோயாளி போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் தொல்லைகள் ஏற்படும் வேளைகளில் மிகுந்த மனவலிமை கொண்டவராகத் திகழ்ந்தவர் ஊமைத்துரை.

---

*எஸ். ஐயர், ஊமைத்துரை, சென்னை, 1991,பக்.63.

மக்கள்தலைவன்

வேறொரு மனிதருக்கு இந்தக் குறைபாடு இருந்திருந்தால் எவ்வளவு ஊக்கத்தை இழந்திருப்பானோ அதற்கு நேர்மாறாக ஊமைத்துரைக்கு சாதாரணமக்களிடம் அதுவே ஒரு சக்தி வாய்ந்த தன்மையாகப்பட்டது. ஊமைத்துரையின் ஒவ்வொரு செய்கைக்கும் மக்கள் கீழ்ப்படிந்து நடந்தனர்.

முக்கியமான ஆலோசனைக்குழுக் கூட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம் ஊமைத்துரை தலைமை தாங்கினார்; வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய எல்லாத் தாக்குதல்களிலும் ஊமைத்துரை பங்கேற்றார். பிரசித்திபெற்ற புகழ் வாய்ந்த ஊமைத்துரையை ஆங்கிலேய ராணுவவீரர்கள் எப்படியும் அழித்துவிடவேண்டும் என்று ஆர்வத்துடன் இருந்தபோதிலும் ஒவ்வொரு போரிலும் அதிசயமாகவே தப்பிச் சென்றவர் ஊமைத்துரை. பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் நடத்தியது. 5.9.1799 இறுதியில் கயத்தாற்றில் கட்டப்புளியமரத்திலே தூக்கு கயிற்றை முத்த மிட்டது. 16.10.1799

பாளையங்கோட்டைச்சிறை

துரைசிங்கம், குமாரசாமி, முத்தையா, துரைராசு இராஜபொம்முலு, முத்துக்குமாரசாமி, வீரசின்னு, வீரராமுலு, விசயராகவன், கெடிவேட்டூர், சின்னமல்லு, ரணசிங்கு, வீரபொம்மு, ஜெயராமு, இராமதளவாய் உள்ளிட்ட உறவினர்கள் பலருடன் பாளையங்கோட்டை சிறையில் 1.11.1799 முதல் ஊமைத்துரை இருந்தார். 2.2.1801 இல் பாளைச்சிறையிலிருந்து வீராவேசத்துடன் வெளியேறினார்கள். 8.2.1801இல் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைத் திரும்பவும் தீரர்கள் எழுப்பினர். 9.2.1801 இல் கும்பெனிப்படை வந்தது. போர்புரிய மாட்டாமல் 10.2.1801 இல் திரும்பிச் சென்றது. பின்னர் வெள்ளையர் படை மூன்று மாதங்கழித்து வேகமாக வந்தது. 24.5.1801 இல் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை அழிந்தது. ஊமைத்துரைக்கு போரில் ஏற்பட்ட காயம் ஆறி 16.6.1801 இல் கமுதி நோக்கிச் சென்றார். 1.7.1801 இல் மருது பாண்டியரோடு சேர்ந்து கொண்டார்.

30.11.1801 இல் ஊமைத்துரையின் தம்பி துரைச்சிங்கம் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டார். 10.11.1801 இல் வெள்ளையரோடு நடந்த போரில் தம்பி அகப்பட்ட போதிலும், தான் மட்டும் தப்பிச் சென்றார். வீரபாண்டியகட்டபொம்மன் பத்து வருடம் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்டார். அவர் தம்பி ஊமைத்துரையோ பத்து மாதங்கள் அதனை ஆட்சி செய்தார். அவரது மறைவு குறித்து வரலாற்றில் சொல்லப்படும் செய்திகள்....

எம்.எஸ்.சுப்பிரமணியஐயர்

1955 இல் சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம் வெளியிட்ட 58 பக்கங்களைக் கொண்ட நூல் ஊமைத்துரை. இதை எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியுள்ளார். அதிலே அவர் கூறியிருப்பதாவது........

"திண்டுக்கலிலே தங்கியிருந்த போது வீரலக்கன் வந்து நடந்த விவரங்களை ஊமைத்துரையிடம் அறிவித்தான். முன்னும் (கட்டபொம்மன்) பின்னும் (துரைசிங்கம்) போன பின்பு நடுவே உள்ள கரும்பின் கணுப்போல நான் இருந்து என்ன பயன்? என்று எண்ணினார் ஊமைத்துரை; 'வீரர்களே வடகாசி போகின்றேன். விடைதாருங்கள்' என்று கூறிக்கடுகிநடந்தார். வடகாசி நோக்கி சென்ற ஊமைத்துரை காசி விசுவநாதரைக் கண்டு தொழுதார். பின்பு இமயமலை சார்ந்து தவயோகிகளை கண்டு வணங்கினார். அப்பால் நாட்டின் நலங்கருதித் தாமும் தவயோகியாக அம்மலையின் ஒருபால் அமர்ந்து விட்டார். அவர் இமயம் சார்ந்தது 16.12.1801.

எம்.இ.வீரபாகுபிள்ளை

1961 இல் வீரபாண்டிய கட்டபொம்மன் எனும் நூல் எம்.இ.வீரபாகுபிள்ளையால் எழுதப்பட்டது. 112 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 100,101 இல், 'ஊமைத்துரை சிறுமலை, சுருளிமலை, திண்டுக்கல் மலை முதலிய இடங்களில் சின்னாள் மறைந்திருந்து, பிறகு மாறுகோலத்தோடு காசிக்குப் போய் அங்கு சில காலந்தங்கியிருந்து அதற்குப் பிறகு இமயமலைக்குப் போய்விட்டான் என்று தெரிகிறது. சிலர்

துரைச்சிங்கத்தைப் பிடித்த பொழுதே ஊமைத்துரையும் பிடிப்பட்டுவிட்டான் என்றும் இருவரும் தூக்கில் இடப்பட்டனர்' என்றும் எழுதியுள்ளார்.

பாஞ்சாலங்குறிச்சியின் வீரவரலாறு

நெல்லை எஸ். எஸ் மணி எழுதிய நூலில் பக்கம் 14 இல், 'தம்பி துரைசிங்கம் பிடிபட்டு பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டார். இது கண்டு மனம் நொந்த ஊமைத்துரை வடதிசையில் இமயம் நோக்கி பயணமானார்' என சரித்திரம் கூறுகிறது என்று எழுதியிருக்கிறார்.

ம. பொ.சிவஞானம்

"வீரபாண்டியகட்டபொம்மன்" என்ற தனது நூலில் ம.பொ.சிவஞானம் (1945) 'ஊமைத்துரையை 1801 ம்ஆண்டு ஜூன் மாதம் 10ந்தேதி பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு மேற்புறத்தில் உள்ள பீரங்கி மேட்டில் தூக்கிலிடப்பட்டுக் கொன்றனர்' என்று குறிப்பிடுகிறார். தி.நா. சுப்பிரமணியனும், சீரஞ்சீவியும் இதுபோன்றே குறிப்பிடுகிறார்கள். (தேதி குறிப்பிடவில்லை)

ஆங்கிலேயர் காலஆவணங்கள்

பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான சாமி நாயக்கரும் ஊமைகுமாரசாமி நாயக்கரும் இன்னும் அவர்களது அறுபத்து ஐந்து தோழர்களும் திண்டுக்கல் சீமையிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பும் வழியில் வத்தலக்குண்டில் பரங்கியர் கைகளில் அகப்பட்டனர்.* பரங்கிகள் தடயனிலும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வெளியிலும் வைத்து அவர்களை 16.1.1801 யன்று சிரத்சேதம் செய்து கொன்றனர் என்று டாக்டர் எஸ்.எம். கமால் தனது மாவீரர் மருது பாண்டியர் நூலில் (பக்160) தெரிவிக்கிறார்.

கும்பெனித்தளபதிஇன்னிஸ்

தோற்கடிக்கப்பட்ட பல்வேறு படைப்பிரிவுகளைச் சேர்ந்த வீரஞ்செறிந்த புரட்சியாளர்கள் தணியாத ஆத்திரத்தோடும், தோல்விகளால் மனந்தளராதும் மிகக்கடுமையான போராட்டத்தை தொடர மீண்டும் மலைகளில் ஒன்று கூடினர். எதற்கும் அஞ்சாத

---

* Military Consultations, Vol 288, 27.10.1801, P 7108

ஊமைத்துரையின் ஆணையேற்று (Commanded by the indomitable Omathurai) தாக்குவதற்கான புதிய இடங்களைத் தேடி மிக விரைவாகத் திண்டுக்கல் பள்ளத்தாக்கிற்குச் சென்றனர். கன்னிவாடி (Kannivadi) க்கு அருகிலுள்ள சங்குளத்தில் (Shankulam) மேஜர் பரோஸ் (Major Burrows) தலைமையின் கீழ் நாட்டுக் குதிரைப்படையின் இரண்டாவது பிரிவு (Second Regiment of Native Cavalry) கும்பினித்தளபதி இன்ஸ் (Innes) ஆயுதந்தாங்கிய புரட்சியாளர்கள் மலையிலிருந்து சமவெளிக்கு இறங்கிவிட்டார்கள் என்ற தகவல் தெரிந்ததும் ஆங்கிலப்படை நெருக்கமாக அவர்களைத் தொடர்ந்து 51 மைல்கள் சண்டையிட்டுக் கொண்டே சென்றனர். இறுதியாக வத்தலக்குண்டில் மிகக் கடுமையான சண்டை நடைபெற்றது. ஆங்கிலப்படையிலுள்ள அனைத்து வீரர்களும் எந்த ஒரு புகழ்மிக்க புரட்சித் தளபதியைக் கண்டு அஞ்சி நடுங்கி வந்தார்களோ, எந்த ஒரு புரட்சித்தளபதி ஒவ்வொரு போரிலும் அதிசயிக்கத் தக்க வகையில் தப்பித்துக் கொண்டு வந்தாரோ, எந்த ஒரு புரட்சி தளபதியை அழிக்க ஆங்கிலேயர் மிகுந்த ஆவலுடன் இருந்தார்களோ அந்த ஒரு தளபதியான ஊமைத்துரையையும் அவனைச்சார்ந்த 65 பேர்களையும் இப்பொழுது ஆங்கிலேயர் பிடித்துவிட்டனர். அப்போரில் பலர் இறந்தனர்.

Many of them died in battle while Oomathurai with sixty five of his followers fell into the hands of enemy...*

ஜோசய்யாவெப்

சென்னையில் உள்ள கும்பெனித்தலைமையிடத்திற்கு, ஜோசய்யா வெப் என்பவருக்கு, இன்னிஸ் எழுதிய கடிதத்தில், 'ஊமைத்துரையும் அவனைச் சார்ந்தவர்களும் பிடிபட்டிருப்பது தெற்கே விளைந்த தொல்லைகளுக்கு திண்டுக்கல் வட்டாரத் திலாவது நிரந்தரமான முடிவை ஏற்படுத்தும் என்று கருதுவதாக எழுதியுள்ளார்' என்ற தகவலை பேராசிரியர் கு. இராஜய்யன் தனது South Indian Rebellion .என்ற நூலில் பக்கம் 264 இல் தெரிவித்துள்ளார்.**

---

*Madras council 27.10.1801, Military Consultations, Vol 288, P.7116.

**Innes 20 October 1801, Letter to Josiah webb, Military Consultatons, Vol. 288, P.7114.

ஊமத்துரைதூக்கிற்கான சான்று

அந்த நூலில் பேராசிரியர் ராஜய்யன் நவம்பர் 16, 1801 இல் ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டதற்கு கர்னல்வெல்ஷ் எழுதிய நூலிலிருந்து சான்று தருகிறார்; வெல்ஷ் என்ன சொல்கிறார்.?

A கர்னல்வெல்ஷ்

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் (Colonel James Welsh) தனது Military Reminiscences; Extracted from A journal of Nearly forty years Active service inthe East Indies எனும் தனது நூலில் முதற்தொகுதியில், இலண்டனில் 1830 இல் அச்சிடப்பட்ட நூலில், பக்கம் 133 இல் ' and was taken alive at the conclusion of the campaign, and hanged along with his gallant and ill - fated relation, on the tower we had crected in the plain before Punjalumcoorchy; என்று தெரிவித்துள்ளார். போர்முடிவுற்றபோது, 'ஊமைத்துரை உயிருடன் கைப்பற்றப்பட்டு பாஞ்சாலங்குறிச்சிக்கு முன்னால் சமவெளியில் எழுப்பியிருந்த கோபுரத்தில் அவனுடைய வீர மிக்க மோசமான விதிக்கான உறவினரோடு தூக்கிலிடப்பட்டார்' என்று தெரிவித்துள்ளார். இத்தகவலை பேராசிரியர் கு. ராஜய்யன் தனது South Indian Rebellion (The First war of Independence 1800 - 1801) என்ற நூலில் பக் 264 இல் தெரிவித்துள்ளார். கர்னல் வெல்ஷின் குறிப்புக்கள் மட்டுமே ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப் பட்டதாகக் தெரிவிக்கிறது.

நாட்டுப்புறப்பாடல்கள் தரும் செய்தி

கட்டபொம்மன் வரலாறு சென்னை அரசாங்க வெளியீடு 1960. டி. சந்திரசேகரன் பதிப்பித்தது. 211 பக்கங்களைக் கொண்டது. பக்கம் 204இல் ஊமைத்துரை கன்னிவாடிச் சீமையில் ஒரு கன்னி வீட்டில் ஆயுதங்களை அடகு வைத்து உணவு உண்ணுதல்..... ஊமைத்துரை உண்ட மயக்கத்தினாலும் நீண்டநாள் உறக்கமில்லாக் காரணத்தாலும் அயர்ந்து நித்திரை செய்தல்....

பக்கம் 205

கன்னி, ஊமைத்துரை என்றறிருந்து தன் ஊரின் அம்பலக்காரரிடத்தில் கூறிப்பரிசு வேண்டுதல். ஊமைத்துரையை கன்னிவாடிச் சீமை முனிசிப் போலீசு, அம்பலக்காரர் முதலியோர் ஆட்களைக் கூட்டிச்கொண்டு பிடிக்கச் செல்லுதல் அம்பலக்காரர் போலீசு முதலியோர் ஊமையன் தூங்குவதைப் பார்த்து அருகில் செல்ல அஞ்சுதல்.

பக்கம் 206

பத்துப் பேராக ஒருங்கு சேர்ந்து ஊமையின் மீது விழந்து பிடித்தல். ஊமைத்துரை நித்திரை கலைந்து மேல் விழுந்தோரில் மூன்று பேரைக் குத்திக் கொல்லுதல்; ஊமைத்துரையை எல்லோருங்கூடிப் பிடித்து விலங்கிட்டு அக்கினி மேஜருக்குக் கடிதம் எழுதுதல்,. பட்டாளத்துடன் அக்கினி மேஜர் வந்து ஊமைத்துரையை கைது செய்தல்.

பக்கம்208

பாஞ்சாலங்குறிச்சியில் ஊமைத்துரையையும், சிவத்தையாவையும் தூக்குப்போடுதல் ஆகியவைபற்றி விரிவாக பாடல்களால் விளக்கப்பட்டுள்ளது.

வீரபாண்டியக்கட்டபொம்மு கதைப்பாடல்

மதுரைப் பல்கலைக் கழகம் (தற்போதைய மதுரை காமராசர் பல்கலைக்கழகம்) நா.வானமாமலையை பதிப்பாசிரியராகக் கொண்டு 1971 இல் 214 பக்கங்களில் வெளியிட்ட நூல் வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல். 7410 வரிகளைக் கொண்டது. 7260 வது வரியிலிருந்து, 7340 வது வரிகள் வரை முற்கூறிய "கட்டபொம்மன் வரலாறு" நூலில் சந்திரசேகரன் சொல்லியுள்ள கருத்துக்கள் அடங்கிய பாடல் வரிகளே இதிலும் வருகிறது.

கட்டபொம்மன்கும்மிப்பாடல்

தூய யோவான் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றும் எனது நண்பர் பேராசிரியர் வே.மாணிக்கம் பதிப்பித்த கட்டபொம்மன் கும்மிப்பாடல் நூலினை மாநிலத் தமிழ்ச்சங்கம் 1983 இல் வெளியிட்டது. 87 பக்கங்களைக் கொண்ட 1246 வரிகளைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 81 ல் பள்ளர் (தலித்) குடியிலே இருக்கிறான் ஊமைத்துரை என்பதனை அறிந்து, அங்கு கைது செய்யப்பட்டு, வடக்குக் கோட்டை வாசலில் தூக்கிலிடப்பட்டான் என்று 1200வது பாடல் வரி முதல் 1210வதுபாடல்வரி வரை இச்செய்தி சொல்லப்பட்டுள்ளது.

இதற்கு அடிக்குறிப்பாக அந்த நூலின் பதிப்பாசிரியர், ஊமையன் முடிவு பற்றித் தெளிவான வரலாற்றுச் செய்திகள் கிடைக்கவில்லை என்று (பக்.82) குறிப்பிட்டுள்ளார்.

கட்டபொம்முதுரைகதை

அடைக்கலபுரம் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்றி மதுரையிலிருந்து 1933 இல் வெளிவந்த 64 பக்கங்களைக் கொண்ட நூல் "பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்முதுரை கதை" இந்நூலில் ஊமைத்துரை தற்கொலை செய்து கொண்டதாகவே கூறப்பட்டுள்ளது. ஊமைத்துரை வெள்ளையரிடமிருந்து தப்பி வீராயி என்ற பெண் வீட்டில் மறைந்திருந்ததாகவும், அப்போது வீராயியும் அவளது அக்காளும் ஊமைத்துரையை பிடித்துக் கொடுக்கத் திட்டமிட்டதாகவும், அதை அறிந்த ஊமைத்துரை வெறுப்புற்று, மனம் சோர்ந்து, திண்டுக்கல் மலை மீது சென்று தற்கொலை செய்து கொண்டதாகவும் அந்தத் தெருக்கூத்துப்பாடல் கூறுகிறது.

அந்த நூல் பக்கம் 63 இல் இறுதி பாரா இது "அவ்வஞ்சனையைச் சக்கதேவியால் வெற்றியடைந்து திண்டுக்கல் மலையில் சுப்பிரமணியர் கோவில் வந்து எங்கே போனாலும் தப்ப முடியாது பின் வாரீஸ் (வாரிசு) துலக்க நமது மனைவி (ஊமைத்துரையின் மனைவி) தப்பினாள். நாம்தற்கொலை செய்ய வேண்டுமென உடனே தற்கொலையாலிறந்தார். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். சுபம்! சுபம்! சுபம்! என்று கூறப்பட்டுள்ளது.

மன்னைசம்பத்

1995 இல் ஊமைத்துரை எனும் 80 பக்கங்கள் கொண்ட நூலினை எழுதிய மன்னை சம்பத் இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளதாவது (பக்கங்கள் 69,70) இந்நூலாசிரியர் (சிதம்பரசுவாமிகள்) வாழ்ந்த காலம் 1900 என்பதால் ஊமைத்துரை காலத்தில் வாழ்ந்தவர்களையோ, வாழ்ந்தவர்களின் பிள்ளைகளையோ இவர் சந்தித்திருக்க முடியும். ஊமைத்துரை தூக்கில் போடப்பட்டிருந்தால் அம்மக்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் அவர்கள் வழியே இவரும் உண்மை அறிந்திருப்பர்.

ஒரு வேளை இவரது கூற்றுப்படி ஊமைத்துரை தற்கொலை செய்து கொண்டது தான் உண்மையாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது" என்கிறார்.

மேலும் ஊமைத்துரையை தூக்கிலிட்டதற்கு அதிகார பூர்வமான ஆவணம் எதுவும் இல்லை என்பதாலும், ஊமைத்துரை, புதுக்கோட்டை தொண்டைமானுக்கு எழுதிய கடிதத்தில், 'வெள்ளையர் என்னை உயிரோடு பிடிக்க முடியாது. முடியும் மட்டும் போராடுவேன். ஆங்கிலேயர்கள் அழிக்கப்பட வேண்டும். அது முடியாவிட்டால் என் வாழ்வை நானே முடித்துக் கொள்வேன் நான் அவர்களது கையில் ஒரு போதும் அகப்படவே மாட்டேன்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆக ஆங்கிலேயரிடம் தோல்வியுற்றால் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் முன்பே ஊமைத்துரைக்கு இருந்திருக்கிறது என்பது புலானகிறது என்பர் மன்னை சம்பத்.

வித்துவான் ந.சண்முகம்

ஊமைத்துரை அல்லது "தன்னலம் கருதாத தியாகி எனும் 95 பக்கங்களைக் கொண்ட நூலினை 1954 இல் வித்வான் ந.சண்முகம் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 91 இல் திருமயத்திலிருந்து தப்பிச் சென்ற ஊமைத்துரை, திண்டுக்கல் மலைக்குகைகளில் மறைந்து வாழந்தார்.

தம்பிக்கு யாதுநேர்ந்ததோ எனக்கவலை கொண்டார். அந்நாளில் ஓர் உறவினர் அவரைக் கண்டு துரைச்சிங்கம் தூக்கிலிடப்பட்ட செய்தியை அறிவித்தார். கலங்காத அவர் உள்ளம் கலங்கி நின்றது. துயரைத் தாங்க முடியாது துடித்துப் புலம்பினார். பின்பு மணம் தேர்ந்து, உயிரையும் உலகையும் வெறுத்து, காசிமாநகரையடைந்து, அங்கே சின்னாட்கள் தங்கி உலகநாதனை வழிபட்டுப் பின் இமயம் சார்ந்து துறவியானார். அப்பொழுது அவருக்கு வயது முப்பது. ஊமைத்துரை, தமது முப்பதாம் வயதில் துறவு பூண்டு இமயம் சார்ந்தார் என்பதே நாட்டு வரலாறு என்று குறிப்பிடுகிறார்.

தி.சு.கலியபெருமாள்

67 பக்கங்களைக் கொண்ட, நாட்டுக்கு உழைத்த நல்லவர் ஊமைத்துரை எனும் தி.சு.கலியபெருமாள் நூலில் (1984) பக்கம் 66,67 இல் "சிறுமலையை விட்டு ஊமைத்துரை புறப்பட்டார். மீண்டும் வடதிசையை நோக்கி நடந்தார். காசியை அடைந்தார். அங்குச் சிலகாலம் தங்கி விசுவநாதக் கடவுளை வணங்கி மனஅமைதி பெற்றார். பிறகு, இமயமலைப் பகுதிக்குச் சென்று மறைந்தார் ஊமைத்துரை என்று சிலர் சொல்கிறார்கள். அதற்குப்பிறகு அவரைப் பற்றிய விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

கவிராஜபண்டிதர் ஜெகவீரபாண்டியனார்

கவிராஜ பண்டிதர் ஜெக வீரபாண்டியனார் பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் எனும் நூலை இரண்டு பாகங்களாக பெரிய அளவில் வெளியிட்டுள்ளார். அதில் இரண்டாவது பாகம் 1950 இல் வெளிவந்தது. மிகச்சிறந்த அளவில் வீரபாண்டிய கட்டபொம்மனது சரித்திரத்தை தமிழில் எழுதிய மேதை இவர் அவர் பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் இரண்டாவது பாகம் பக்கம் 346 இல் சொல்கிறார்.,

"தம்பி துரைச்சிங்கம் தான் கும்பினியார் கையில் அகப்பட்டு மாண்டார். ஊமைத்துரை எவரிடமும் பிடிபடவேஇல்லை. இவரும் எதிரிகளிடமும் சிக்கி இறந்தார் என்பது பெருந்தவறு.

அந்நூலில் பக்கம் 354

உயிரை வெறுத்து நின்ற இவர் உலகத்தை வெறுத்துத் தென் திசை நோக்காமல் வடதிசை நோக்கிக் காசிப் பதிக்குப் போக வேண்டும் என்று கருதித் துணிந்தார். காசியை நோக்கி நடந்து போயினார். பல தலங்களிலும் அமர்ந்து உலக நிலைகளை சேர்ந்து உணர்ந்து முடிவில் காசி நகரை அடைந்தார்.

இமயம்சார்ந்தது

புண்ணியத்தலம் என உலகம் எண்ணிப் போற்றும் காசிப்பதியில் நாளும் கங்கை நீராடி விசுவநாதரைத் தரிசித்து வந்தார். சில நாள் அங்குத் தங்கி இருந்தார். பின்பு இமயமலையை அடைந்தார். அங்கே தவயோகிகளைக் கண்டார். உவகை மீக்கொண்டார். அவருடைய ஞான போதனைகளைக் கேட்டார். உலகநிலையை மறந்தார். துறவு நெறியை மருவினார். அப்பொழுது இவருக்கு வயது முப்பது; பிறந்தது *10.6.1772*; மறைந்தது *16.12.1801*; அதிசய வீரனான இவரது சரிதம் இவ்வாறு முடிந்தது. கவிராஜ பண்டிதர் ஜெக வீரபாண்டியனார் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

வீரபாண்டியம்

1967 இல் தான் எழுதிவெளியிட்ட "வீரபாண்டியம்" எனும் வீர காவிய நூலில் *(784* பக்கங்களைக் கொண்டது) கதிஎய்திய படலத்தில் ஊமைத்துரை காசி செல்ல நினைப்பது முதல் பேரின்பம் பெற்றது வரை பாடல் *3672* முதல் *3808* வரை பாடியுள்ளார். பக்கம் *784* இல் ஊமைத்துரை உலகநிலையை வெறுத்து இமயமலையை அடைய விரும்பி, வடதிசையை நோக்கி உறுதியுடன் ஊக்கிப் போனார். *(16.12.1801)* என்று தெளிவாகச் சொல்லியுள்ளார். உலகாளப் பிறந்த ஊமைத்துரையின் வீர வரலாறு எவ்வாறு முடிந்தது என்பதற்குத் தெளிவான செய்தி கிடைக்கவில்லை. காயம் பட்டுப் போரிலே இறந்தார் என்றும் உடல் கிடைக்கவில்லை என்றும் மக்கள் வழக்கிலே கூறப்படுகின்றது. வேறு சில செய்திகளோ ஊமைத்துரை வடக்கே சென்று விட்டார் என்று கூறுகின்றன என்பர் செந்தில் செல்வகுமரன், சொ.சந்திரவாணன்.* ஊமைத்துரை தூக்கிலிடப் பட்டதற்கான தெளிவான சரித்திரச் சான்றுகள் இல்லை. திண்டுக்கல்லில் தற்கொலை செய்து கொண்டார் என்றும், காசி சென்று பின் இமயமலையில் தவநிலையில் உயிர்துறந்தார் என்றும் நாட்டுப்பாடல்கள் ஊமைத்துரையைப் பற்றி தெளிவாகச்

---

* வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை வீரவரலாறு, இராசபாளையம், 2003, பக்.25.

சொல்லியுள்ள நிலையில், ஊமைத்துரையை சையத்காதர் என்ற முஸ்லிம் காட்டிக் கொடுத்தார் என்று சுத்தானந்தபாரதி தனது ஊமையின் சண்டை, நூலில் எழுதியிருப்பது சரியா? தவறா? நடுநிலையாளர்களின் முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

ஊமத்துரையும் முஸ்லிம்களும்

கர்னல் வெல்ஷ் தனது நூலில் பக்கம் 131 இல் ஊமைத்துரையைப்ப பற்றி, Was well known by the English under the appellation of Dumby or the Dumbbrother, by the mussulmans as mookah, and by the Hindoss as oomee என்று குறிப்பிடுகிறார். வெள்ளையர்கள் மத்தியில் ஊமைச்சகோதரர் என்று அறியப்பட்டவர் முஸ்லிம்கள் "மூக்கா" என்று அழைத்தனர் ஹிந்துக்கள் ஊமை என்று அழைத்தனர் என்கிறார் கர்னல் வெல்ஷ்.

சுதந்திரப்போரில் முஸ்லிம்கள்

கட்டபொம்மன் கலெக்டர் ஜாக்சனை இராமநாத புரத்தில் சந்திக்கச் சென்றது 24.8.1798 துரைசிங்கமும், ஊமத்துரையும் கட்டபொம்மனுடன் 4000 வீரர்களுடன் அங்கு சென்றனர். அந்தப்படையில் முஹமது தம்பி யூசுப்லெப்பை, குப்பராவுத்தர், இஸ்மாயில் ராவுத்தர் என்ற தளபதிகள் ஊமைத்துரையோடு அணிவகுத்துச் சென்றனர். படையில் மேலும் சில முஸ்லிம் வீரர்களும் இருந்தனர். இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சிப் போரின் போதும் ஊமைத்துரை பெருவீரங்காட்டிப் போராடிய போதுஅவரது படையில் ஊக்கத்துடன் முஸ்லிம்கள் போராடியுள்ளனர்.

ஊமைத்துரையின் இறுதி குறித்தே வரலாறுகள் சரிவர இல்லாத நிலையில், ஊமத்துரையோடு இணைந்து வெள்ளையரை எதிர்த்து வீரச் சுதந்திரப் போர் நடத்திய முஸ்லிம் இளைஞர்களின் வரலாற்றுக் குறிப்புகள் காலகதியில் மறைந்து போனாலும், நாட்டுப்பாடல்களும், செவிவழிச்செய்திகளும் அதனை உலகிற்கு அறிவிக்கின்றன. ஊமைத்துரையோடும் இணைந்து முஸ்லிம்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார்கள் என்பது தெள்ளத் தெளிவான உண்மையாகும்.

பகதூர் வெள்ளை

வீரமறக்குலத்தின் வழித்தோன்றல் வெள்ளையத் தேவன். காட்டில் சிறு குழந்தையாயிருந்த போது சேற்றில் சிக்கித் தவித்த வேளை, வீரபாண்டிய கட்டபொம்மன் அக்குழந்தையை எடுத்துச் சென்று தனது அரண்மனையில் வளர்த்தான்.* வெள்ளையரை எதிர்த்த இறுதிப்போரில் கோட்டையின் தென்புற வாயிலில் தளபதியாக விளங்கிப்போரிட்டு, வீர சுதந்திரம் வேண்டி வீர மரணத்தைத் தழுவினான் பகதூர் வெள்ளை*

ப.முகையதீன்பிச்சைசாயிபு

முத்தமிழ் ஷேத்திரம்P.R.M. சாமிக்கணேணுக் கோனார் இயற்றியது. "பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு கதை பாதர் வெள்ளை சண்டை எனும் பாடல் நூல்." 1933 இல் 15 சதம் விலையில், கொழும்பு நீகல் அச்சியந்திரசாலையில் இதனைப் பதிப்பித்து வெளியிட்டவர் ப.முகையதீன் பிச்சைசாயிபு. 78, செட்டியார் தெரு, கொழும்பில் புத்தகம் படம் வியாபாரம் செய்து வந்த ப.முகையதீன் பிச்சை சாயிபு, நாடு விடுதலைக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில், 1933 இல் வெள்ளையரை எதிர்த்து, சுதந்திர உணர்வுடன் "கட்டபொம்முகதை-பாதர் வெள்ளை சண்டை" எனும் நூலினை அச்சிட்டு வெளியிட்டு, சுதந்திர உணர்வைத் தூண்டியுள்ளதை வரலாற்றின் பக்கங்கள் பறைசாற்றுகின்றன.

இந்திய சுதந்திரப் போரில் பாளையக்காரர்கள் ஆட்சி காலத்திலும், வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்திலும், அவரோடு உறுதுணையாக இருந்த தம்பி ஊமைத்துரை காலத்திலும்,சுதந்திரத்திற்காகப் போராடியவர்களில் முஸ்லிம் தீரர்களும் அடங்குவர். 1801 க்குப் பிறகு 1933 இல் அதே சுதந்திர உணர்வுடன் "கட்டபொம்முகதை - பாதர் வெள்ளை சண்டை" நூலினை கொழும்பில் வெளியிட்டு தனது சுதந்திர உணர்வை ப.முகையதீன் பிச்சை சாயிபு உலகிற்குப் பறைசாற்றியுள்ளார்.

---

*கோ.நீ.அண்ணாமலை, பகதூர் வெள்ளை, 1954.

** செ.திவான், தியாக நெருப்பில் வைகோ, நஜாத் பதிப்பகம், பாளை, பக்.168.

இந்திய சுதந்திரப் போரில் எல்லா கால கட்டங்களிலும் முஸ்லிம்களின் பங்களிப்பு இருந்துள்ளது. அது எவருக்கும் குறைந்திடாத அளவில் இருந்துள்ளது. என்பதனை உலகம் உணர்ந்து கொண்டு தான் வருகிறது.

கவிஞர் கண்ணதாசன்

1979இல் ஆதாரபூர்வமான சரித்திரப் பின்னணி யோடு கற்பனை கலந்து கவிஞர் கண்ணதாசன் "ஊமையன் கோட்டை" எனும் 167 பக்க நாவலை எழுதியுள்ளார். எனது நண்பர் மதுரா மண்ணுக்கு ஒரு முத்தம் எனும் நாவலை ஊமைத்துரையின் விடுதலைக்கான பகீரதப்பிரயத் தனங்களைக் களமாகக் கொண்டு 2002 இல் 223 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.

பி.கோமதிநாயகம்

ஊமைத்துரை விடுதலைப் போர் நடத்திய நெல்லைச் சீமையில் அமைந்துள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி பி.கோமதிநாயகம் (வரலாற்றுத் துறைப் பேராசிரியர்) பங்கேற்க, தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி வரலாற்றுத் துறை சார்பில் நடைபெற்ற இந்திய விடுதலைப் போராட்டத்தில் "நிகழ்காலப்போக்கு" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது.

அதில் அவர் பேசிய போது, விடுதலைப் போராட்டம் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு இன்னமும் திருப்தியான விடைகள் கிடைக்கவில்லை. இந்தப் போரட்டத்தில் தொடர்புடைய பல்வேறு நபர்கள், சம்பவங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும் விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு அம்சங்களையும் வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளனர். விடுதலைப் போராட்ட வரலாறுகள் திரித்தும், சிதைத்தும் எழுதப்படுகின்றன. இவற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் போராட்ட வரலாறு குறித்து இன்னும் ஆழமாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.". (தினமணி 18.10.2003) ஊமைத்துரையின் வீர வரலாற்றிற்கு இவ்வாசகங்கள் எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

மன்னர் சேதுபதி படையில் முஸ்லிம்கள்

மன்னர் சேதுபதி காலத்தில் தெற்குச் சீமையில் வீரப் போர்புரிந்த ஷேக் இபுராஹிம் சாகிப், கன்னிராஜபுரம் அப்துல் கனி போன்ற முஸ்லிம் தீரர்களது போர்களச் சரிதம் இதோ....

முத்துராமலிங்க சேதுபதி

வடக்கே கோட்டைப்பட்டினம் துவங்கி தெற்கே வேம்பாற்று எல்லையில் உள்ள கன்னிராஜபுரம் வரையிலான 120 கல் கடற்கரையை கிழக்கு எல்லையாகக் கொண்டு முத்துராமலிங்க சேதுபதி சிறப்பாக ஆட்சி நடத்திவந்தார்.

வணிகத்தொடர்பு

சேதுபதி மன்னருடன் முஸ்லிம்கள் பலர் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். கல்கத்தாவிலுள்ள பேரட்கம்பெனி, பாண்டிச்சேரி வரதப்பசெட்டியார், நாகூர்சாமி செட்டியார், நாகப்பட்டினம் சுப்பராயபிள்ளை போன்ற வணிகர்களுடன் நல்ல தொடர்பு இருந்தது.*

கீழக்கரை அப்துல்காதிர்

திருவாங்கூர் சேக்குட்டி, காயல்பட்டினம் சேக்குலப்பை, கீழக்கரையைச் சார்ந்த அப்துல்காதிர் மரைக்காயர் போன்ற வணிகர்கள் மறவர் சீமையில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள்.**

முன்ஷிலாலா சாகிப்

15.3.1795இல் சென்னைக் கோட்டையிலுள்ள கும்பெனியாரது கவர்னருக்கு முத்துராமலிங்க சேதுபதி எழுதிய கடிதத்தில்*** 'கம்பெனியாரது படைகள் சூழ்ந்து என்னைக் கைதியாக்கி வைத்துள்ளனர்; என்னோடு எனது முன்ஷிலாலா சாகிபும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்' என்ற தகவலைத் தந்துள்ளார்.

---

* எஸ்.எம்.கமால், விடுதலைப்போரில் சேதுபதி மன்னர், பக்.42.

**Revenue Consulations, Vol 62, 15.3.1795, PP.1260,79.

***Revenue Consulatilons, Vol62A,PP.179677.

மறவர் சீமை மாவீரர் மயிலப்பன்

மறவர் சீமையின் ஒரு பகுதியான முதுகுளத்தூர் நகரக்குத் தென்மேற்கில் இருப்பது சித்திரங்குடி, இவ்வூரில் பிறந்தவர் மயிலப்பன் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது இராணுவப்பணியில் பணியாற்றினார். மயிலப்பன் சேர்வைக்காரர் என்றழைக்கப்பட்டார். கி.பி.1795 பிப்ரவரி 8இல் ஆங்கிலேயே கும்பெனியார் திடீரென இராமநாதபுரம் அரண்மனையை வளைத்தனர். சேதுபதி மன்னரைக் கைது செய்தனர். முத்துராமலிங்க சேதுபதி திருச்சி கோட்டையில் காவலில் வைக்கப்பட்டார்.

இந்தக்கொடுமையை நாடெங்கும் தீரர்கள் எதிர்த்தனர். வெள்ளையரை எதிர்த்து மயிலப்பன் சேர்வை இரவுபகலாகப் பாடுபட்டார். ஆங்கிலேயரை எதிர்த்திட வீறு கொண்டெழுந்தார்.

வேம்பாறு பயணம்

திருநெல்வேலிச் சீமையின் வடகோடியில் கிழக்குக் கடற்கரையில் அமைந்திருக்கும் வேம்பாற்றில், டச்சுக்காரர்களின் வணிக அலுவலராகப் பணியாற்றியவர் ஐசக்பிள்ளை. அவரை மயிலப்பன் சந்தித்தார். பிரிட்டிஷ் கும்பெனியாரை எதிர்த்து கமுதிக் கோட்டைத் தாக்குதலுக்கு தேவையான கருமருந்துகளை விலைக்கு வாங்கிட அங்கு சென்றிருந்தார் மயிலப்பன் யாழ்ப்பாணத்திலுள்ள டச்சுக்காரர்கள் இந்தியக் கடற்கரையிலிருந்து கைத்தறித் துணிகள், முத்துக்கள், சங்குகள், தானியங்கள், உலர்ந்த மீன்கள் (கருவாடுகள்) ஆகிய பொருட்களைக் கொள்முதல் செய்து அனுப்புவதற்காக தங்களது பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தவர் ஐசக் பிள்ளை. ஏற்கனவே கமுதிக் கோட்டைப்போர் சம்பந்தமாக பலமுறை ஐசக்பிள்ளையைச் சந்தித்துப்பேசியிருந்தார் மயிலப்பன்.

இருநூறுசாக்குகளில்கருமருந்துகள்

"கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து கமுதிக் கோட்டைப் போரை நடத்திட இருநூறு சாக்குகள் கருமருந்துகள் தேவைப்படுகிறது. இப்போது ஐநூறு பொன் கொண்டு

வந்துள்ளேன். முன்பணமாக வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த வாரம் திரும்பவும் வருகிறேன். அப்போது மீதித் தொகையினைத் தந்துவிடுகிறேன். தாங்கள் இன்றே யாழ்ப்பாணத்திற்கு தெரியப்படுத்தி எங்களுக்குத் தேவையான கருமருந்துகளை (வெடிமருந்துகள்) ஒரு வாரத்திற்குள் கிடைக்கச் செய்யுங்கள்" என்று மாவீரன் மயிலப்பன் ஐசக்பிள்ளையிடம் தெரிவித்தார். அவரும் சம்மதித்தார். ஐநூறு பொன்களும் கைமாறியது. வெற்றிப் புன்னகையுடன் மயிலப்பன் ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். இந்தப்பயணத்தில் மயிலப்பனுடன் வீரர்ஷேக் இப்ராஹிம் சாகிபும் உடன்சென்றார் என்பது வரலாறு.

கன்னிராஜபுரம் அப்துல்கனி

ஆங்கிலேயரை எதிர்த்திட ஆயுதங்களுக்கான கருமருந்துகளை வாங்கிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, வேம்பாற்றிலிருந்து மயிலப்பன் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், தானும், தன்னோடு வந்தவர்களும் இளைப்பாறிக் கொள்ள, கன்னிராஜபுரம் என்ற ஊருக்குச் சென்றனர். இந்த ஊரின் மிராசுதாரர் அப்துல்கனி, சேதுபதி மன்னரால் அந்தப் பகுதியின் காவல் பணிக்கு நியமிக்கப்பட்டவர்.

வெள்ளையரை எதிர்த்து களங்கொண்ட மயிலப்பனுக்கும், அவருடன் வந்த வீரர்களுக்கும் மதிய உணவினை அளித்து மகிழ்ந்தவர் அப்துல்கனி. அந்தப் பகுதி அப்துல்கனி சேர்வைக்காரரது பெயரால் கனிராஜபுரம் என்று வழங்கப் பெற்று பிறகு கன்னிராஜபுரம் என மாறிற்று.

கன்னிராஜபுரம் அப்துல்கனியும், மயிலப்பனும் வெள்ளையரை எதிர்ப்பதற்கான திட்டங்களைப் பற்றி விரிவாகப் பேசிக் கொண்டே பின் அங்கிருந்து புறப்பட்டு, பேரையூர் கண்மாய்க் கரையில் உள்ள மடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அந்த மடத்தில் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி அந்தப் பகுதியைச்சேர்ந்த நாட்டுத் தலைவர்கள் பலர் கூடியிருந்தனர். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் கமுதிக்கோட்டையைத் தாக்கி கைப்பற்றுவது குறித்து அக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.*

---

*எஸ்.எம்.கமால், மறவர் சீமை மாவீரன் மயிலப்பன், பக்.94

கமுதிக் கோட்டைத் தாக்குதல்

முதுகுளத்தூர் பகுதியில் சித்திரங்குடி சேர்வைக்காரர் மயிலப்பன் தலைமையில் கும்பெனியாருக்கு எதிராகக் கிளர்ச்சிகள் தொடர்ந்தன. இருமுறை ஏற்கனவே கமுதிக் கோட்டைத் தாக்கப்பட்டிருந்தது.

21.7.1801

சுதந்திரவேட்கை மிகுந்த தீரர்களது தாக்குதல் கமுதிக் கோட்டையில் தொடர்ந்தது. 21.7.1801இல் போர் உக்கிரமாக நடந்தது. 19.8.1801இல் கமுதிக்கோட்டைப்போரில் வெள்ளைத் தளபதி, கோட்டையின் கொத்தளத்திற்கு வந்து, வெள்ளைக் கொடியை காண்பித்துச் சமாதானம் கோரினார்.* புரட்சியாளர்கள் பெருமிதங் கொண்டனர். வெள்ளையர்கள் பணிந்தனர், என்ற நம்பிக்கையில் தங்களது படைத்தலைவரின் ஒப்புதல் இல்லாமலேயே தாக்குதலிலிருந்து பின்வாங்கி, பழமானேரி நோக்கிச் சென்றனர். அங்கிருந்து சென்று திருச்சுழி கோட்டையைக் கைப்பற்றினர்.**

வெள்ளையரின்வஞ்சம்

வெள்ளைத் தளபதியின் சமாதானக் கோரிக்கையைப் புறக்கணித்திட ஆரம்பித்தது கும்பெனியார் பட்டாளம். புரட்சியாளர்கள் கூச்சலிட்டனர். பலனில்லை, பயனில்லை, முற்றுகை தொடர்ந்தது. இராமநாதபுரம் கம்பெனி கலெக்டர் 600 சுதேசி சிப்பாய்களை கமுதிக் கோட்டைக்கு வெள்ளையருக்கு ஆதரவாக அனுப்பி வைத்தார். நாகலாபுரத்திலிருந்து எட்டப்பநாயக்கரின் வீரர்கள் 500பேர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக அனுப்பப்பட்டனர். இரண்டு பேய்வாய் பீரங்கிகளும், கம்பெனியாருக்கு ஆதரவாக வந்து சேர்ந்தது. இரண்டு நாட்களில் தளபதி மக்காலே தலைமையில் கம்பெனிப்படைகள் புதிய வலுவுடன் கமுதிக் கோட்டையில் முகாமிட்டன. போரின் போக்குமாறியது. பறங்கியர் கை ஓங்கியது. விடுதலை வீரர்கள்

* Military Consultations, 1801.

** Military Consultations, Vol 285A, PP.6850-6857.

வீணாக்கிய சிலதினங்களில் வெள்ளையர்கள் வலிமை பெற்றுக் கொண்டனர். வீரர்களது வெற்றி முழக்கத்தை வெள்ளையரது விவேகமும், வஞ்சக நஞ்செண்ணமும் வீழ்த்தியது. விடுதலை வீரர்களுக்கு உதவிட வந்த படையினரின் முயற்சியும் பலன் தராது போயிற்று.

ஷேக்இபுராஹீம்சாகிபு

போரின் முடிவில் கமுதிக் கோட்டை வாசலுக்கு கிழக்கே கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை வீர மறவர்களது உடல்கள் சிதறிக் கிடந்தன. சிறுசிறு பிணக்குவியல்கள் அங்கு காணப்பட்டன. அந்தப் போரில் ஷேக்இபுராஹீம்சாகிபு தாய்த்திருநாட்டின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்தார்.*

கமுதிக் கோட்டையிலிருந்து வட கிழக்கேயுள்ள கீழ்க்குளம் காடுகள் வரை விடுதலை வீரர்களது சடலங்கள் சிதறிக் கிடந்தன. இந்தக் கிளர்ச்சியில் தீவிரப் பங்கு கொண்ட சிங்கன் செட்டியும், ஷேக் இபுராஹீம் சாகிபு என்ற மயிலப்பனது தோழர்களும் கொல்லப்பட்டனர்.**

முத்துக்கருப்பத்தேவர்

புரட்சியாளர்களது தலைவர்களில், மீனங்குடி முத்துக்கருப்பத்தேவர் கும்பெனியாரால் கைது செய்யப்பட்டார். தன்னந்தனியாக முதுகளத்தூர் பகுதியில் மயிலப்பன் சேர்வை சுற்றித்திரிந்தார். பின் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டார். 6.8.1802 இல் வெள்ளையர்களால் மயிலப்பன் சேர்வை தூக்கிலிடப் பட்டார். சென்னைக் கோட்டையில் வேதனைகளில் வாடிக் கொண்டிருந்த சேதுபதி மன்னர் 23.1.1809 இல் மறைந்தார். கன்னிராஜபுரம் அப்துல்கனியும் கமுதிக்கோட்டைப் போரில் வெள்ளையரை எதிர்த்து களப்பலியான ஷேக் இபுராஹீம் சாகிபு போன்ற முஸ்லிம் தீரர்களது சரிதை வெளிச்சத்திற்கு வர வேண்டும். இந்திய சுதந்திரப் போரில் பாளையக்காரர் காலத்தில் பங்கேற்ற முஸ்லிம் தீரர்களது சரிதை இன்னும் விரிவாக ஆராயப்பட்டு வெளிவர வேண்டும்.

---

*Militory Consulations, Vol 256, PP.6854-6858.

* எஸ்எம்கமால், சேதுபதி மன்னர் வரலாறு, பக்69 & மறவர் சீமை மாவீரன் மயிலப்பன், பக்111

மானங்காத்த மருதுபாண்டியரின் மறைவிற்குப்பின் முஸ்லிம்கள்

புதுக்கோட்டை

ஸ்ரீரங்கராயலு என்னும் விஜயநகர அரசனது மதங்கொண்ட யானையை அடக்கிப் பல விருதுகள் பெற்றவர் ஆவடை ரகுநாததொண்டைமான் இவரது இரு புதல்வரில் மூத்தவர் இரகுநாதராயதொண்டைமான் *(1686—1730)* மறவர் சீமையின் அதிபதியான கிழவன் ரகுநாத சேதுபதி *1710* இல் மறைந்தார். அரியணைக்கு யார்? என்ற குழப்பநிலை. இந்த நிலையில் இவர் திருமெய்யம், குளத்தூர் பகுதிகளை இணைத்து தொண்டைமான் சீமை என்ற நாட்டுப் பிரிவினை ஏற்படுத்தினார். சிங்கமங்கலம் கலசமங்கலம் என்னும் நகரங்கள் அழிந்த பின்னர் அவைகள் இருந்த இடத்தில் ஓர் புதியநகரை உண்டாக்கி அதற்குப் புதுக்கோட்டை யென்று பெயர் கொடுத்தார்.*

சிவகங்கைச்சீமை

அக்காலத்தில் சிவகங்கை என்றது தனித்ததோர் பாயைப்பட்டலல,**. பின்னர் சிவகங்கைச் சீமை எப்படி உருவாயிற்று? பவானி சங்கர சேதுபதிக்கும் *(1724—1728)* கட்டயத் தேவர் என்னும் முத்துவிஜயரகுநாத சேதுபதிக்கும் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் நாலுகோட்டை சசிவர்ண பெரிய உடையத்தேவர் கட்டயத்தேவருக்கு உதவி செய்த தன் காரணமாக வெற்றியடைந்த கட்டயத்தேவர் ராமநாதபுரம் ஆட்சிப் பகுதியிலிருந்து சிவகங்கைப் பகுதியைப் பிரித்துக் கொடுத்து சசிவர்ணத்தேவரை *(1730—1750)* சிவகங்கையின் முதல் மன்னராக ஆக்கினார்.*** சீர்மை என்பது ஒரு நிலப்பகுதியைக் குறிக்கும். சீர்மை என்ற சொல் திரிந்து சீமை என்றானது புதிதாக உருவாக்கப்பட்ட சிவகங்கைப் பகுதியும், (சிவகங்கைச் சீர்மையும்) சிவகங்கைச் சீமை என்று அழைக்கப்படலாயிற்று.

---

* ந.மு. வேங்கடசாமி நாட்டார், கள்ளர் சரித்திரம், திருச்சி, 1928, பக்.81.

**எஸ்.குருகுஹதாஸப்பிள்ளை, திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம், 1931, பக்.23,24.

***ஜெராஜா முகமது, புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, 1992, புதுக்கோட்டை,பக்.71.

மானங்காத்தமருதுபாண்டியர்

சசிவர்ணத் தேவரின் மகன் முத்துவடுகநாத பெரிய உடையார் (1750—1772) சிவகங்கைச்சீமையை ஆட்சி செய்தார். கி.பி.1772 முதல் 1780 வரை சிவகங்கைச் சீமை ஆற்காடு நவாபின் நேரடிப் பொறுப்பில் இருந்தது. 1780 இல் முத்து வடுகநாதரின் மனைவி வேலுநாச்சியார் அரசுப் பொறுப்பில் மீண்டும் அமர்ந்தார்.பின்னர் இவரது மகள் வெள்ளச்சி (1790—1793) ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். ஆனால் இம்மூவரது ஆட்சிகாலத்திலும், மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெயரளவில் ஆட்சியாளராக இருந்தனர். ஆட்சியும் அதிகாரமும் மானங்காத்த மருதுபாண்டிய மன்னர்களின் கரங்களிலிருந்தது. மருதிருவர் வெள்ளையரை எதிர்த்து வீரப் போரிட்டனர். அவரது காலத்தில் அவரது படைகளிலும் முஸ்லிம்கள்பங்கேற்றிருந்தனர்.

மருதிருவர்கும்பெனியாரால் தூக்கிலிடப்பட்டதற்குப் பின், எஞ்சியவர்களை கும்பெனியார் நாடு கடத்தினார்கள் வெள்ளையர்களால் நாடு கடத்தப்பட்ட 72 தீரர்களில் முஸ்லிம் வீரர் ஷேக் உசேனும் ஒருவர் இதோ அவரைப் பற்றியக் குறிப்புக்கள்....

இராமநாதபுரம் அருப்புக்கோட்டைக்கு கிழக்கே 18 மைல் தூரத்தில் முக்குளத்தில் 1748 இல் உடையார் சேர்வை என்ற மொக்க பழனியப்பன் சேர்வையின் மகனாகப் பிறந்தபெரிய மருதுவும், 1753 இல் பிறந்த சின்ன மருதுவும் வீரத்திற்கும், விசுவாசத்திற்கும், நாட்டுப்பற்றுக்கும் இலக்கணமாய் விளங்கிய மானங்காத்த மருது பாண்டியர்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் மறவர் சீமையை கும்பினிப்படைகள் வளைத்துக் கொண்டே போது, சிவகங்கைச் சீமையின் அதிபதியாக இருந்த முத்து வடுகநாதர் போரில் கொல்லப்பட்டதும் அவரது மனைவி வீராங்கனை வேலுநாச்சியார் மருது சகோதரர்களுடன் திண்டுக்கல்லில் இருந்த ஹைதர்அலியிடம் அடைக்கலம் புகுந்ததும், காலப்போக்கில் ஹைதர் அலியின் உதவியுடன் திரும்பவும் சிவகங்கைச் சீமையை மருதுபாண்டியர் ஆட்சி புரியத் துவங்கினர்.கட்டபொம்மன்

தூக்கிலிடப்பட்டதற்குப் பின்னால் ஊமைத்துரை சிவகங்கைச் சீமையில் அடைக்கலம் புகுந்ததும், ஆங்கிலேயர் வெகுண்டதும், பெரும்போர் நடந்ததும், கடைசியாக காளையார் கோவில் பிடிபட்டதும் "ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டவிடாது பெருங்கேடு சூழ்ந்த சிவகங்கையை அடக்கிவிட்டோம்" என்று சென்னை இராணுவ வரலாற்றில் மேஜர் வைபார்ட் சொல்லியதும்*, 27.10.1801இல் மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப் பட்டதும், உடலைத் திருப்பத்தூரிலும், தலையை காளையார் கோவிலிலும் அடக்கம் செய்யப்பட்டதும் இன்றும் அந்த மானங்காத்த மருதிருவரின் வீர வரலாறு வழிவழியாக தமிழகத்தில் போற்றப்பட்டு வருவதும் நாம் அறிந்த செய்திகளாகும். இந்த வீரவரலாற்றில் முஸ்லிம்களின் பங்கினைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

இராமநாதபுரம் திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளின் கலெக்டராயிருந்த லூஷிங்டன் 24.12.1800 இல் அரசுக்கு அளித்த அறிக்கையில் "மருதுபாண்டியர் தூக்கிலிடப்பதற்குப் பின்னால் தென்னாட்டில் ஓங்கி உயர்ந்து நின்ற கோட்டைகள் எல்லாம் தரைமட்டமாக்கப் பட்டதையும் தொன்று தொட்டு வாளும், வேலும் ஏந்திய வீரவாழ்வு வாழ்ந்த மறவர்களிடமிருந்த பல ஆயிரக்கணக்கான போர்க்கருவிகளும், பறிமுதல் செய்யப்பட்ட விபரத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

மருதுபாண்டியரைச் சேர்ந்த வீரர்களும், உறவினர்களும் வேட்டையாடப்பட்டார்கள். கணக்கற்ற விடுதலை வீரர்கள் குடும்பம் குடும்பமாக வீடு, வாசலை, மனைவி மக்களை, எல்லாம் மறந்து போர்க்களம் புகுந்து வளர்த்த ஒருபெரும் விடுதலை வேள்வித் தீயில் தங்கள் இன்னுயிராகிய நெய்யை வார்த்து நெஞ்சுமலி உவகை கொண்ட வீரவரலாறும் ஒருவாறு முடிந்தது.**

---

*Major H.M.Vibart, The Military History of the Madras Engineers and Pioneers.

**ந.சஞ்சீவி, மருதிருவர், சென்னை, 1956, பக்.143,144.

பதினைந்து வயதான சின்னமருதுவின் இளையமகனான துரைசாமி என்பவரும் மற்றும் 71 பேரும் நாடு கடத்தப் பட்டதையும், அதன் பின் நடந்த சரித்திரத்தின் சோகச் சம்பவங்களையும், கற்போர் மனமும் கசிந்து உருகும் விதத்தில் கர்னல் ஜேம்ஸ் வெல்ஸ் எழுதி இலண்டனில் 18.6.1830 இல் வெளியான அந்த நூலின் முதல் வால்யும் பக்கம் 133, 135ல் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்.

மலாய்மொழியில் பாக்குத்தீவு என்று வழங்கப்பட்ட பூலோபினாங் என்ற பினாங்குத்தீவிற்கு 11.2.1802இல் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து அட்மிரல் நெல்சன் என்ற பதினைந்தாயிரம் ரூபாய்க்கு பம்பாயிலிருந்து வாடகைக்கு வரவழைக்கப்பட்ட கப்பலில் 73 வீரர்களை கைகளில் விலங்கு பூட்டி அழைத்துச் சென்று, பயணத்தின் போது கொண்டு சென்ற அரிசி, பருப்பு உணவுப் பொருட்கள் காலியாகி 3 பேர் கப்பலிலே பசியால் செத்துப் போய், 75 நாட்கள் பயணத்திற்குப் பின் பினாங்குத்தீவின் கரையிலே இறக்கி, கார்வாலிஸ் கோட்டைக்கு வெளியே வாடகைக்கு அமர்த்திய வீட்டில் அடைத்தனர். சின்ன மருதுவின் புதல்வர் முத்துவடுகு என்ற துரைசாமியுடன் சென்ற மற்ற 72 சுதந்திரப் போர் கைதிகளின் பட்டியல் * குறிக்கப்பட்டிருக்கிறது. பினாங்குத்தீவிற்கு அனுப்பப்பட்ட 73 பேரில் குறிப்பிடப் பட்டுள்ள ஒருவரது பெயர் சேக் உசேன் (Sheik Hussain)

அமில்தார்சேக்உசேன்

இச்சப்பட்டி அமில்தார் (Itchapetty- Amildar) சேக்உசேன் 1800 இல் திண்டுக்கல்லில் நடைபெற்ற சுதந்திர கிளர்ச்சியாளர்களின் கூட்டத்தில் சிறந்த தளபதி.

ஆங்கிலேயரின் கோயம்புத்தூர் கோட்டையைத் தாக்கிட இவரது தலைமையில் தான் படையினரை அனுப்புவதென்று

*Military Consulatations, Vol 307,19-1-1803, P.1249.

திண்டுக்கல்லில் முடிவு செய்யப்பட்ட செய்தியை ஏற்கனவே, சொல்லப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் புரட்சிக்கூட்டத்தின் எழுச்சி வீரரும் சிறந்த போராளியுமான சேக்உசேன்* கோவைத்தாக்குதலுக்கு கிளம்பிட ஊரிலிருந்து தன்னுடன் நான்கைந்து வீரர்களை அழைத்துச் சென்றார். திண்டுக்கல் எழுச்சியில் பங்கேற்று போர்க்களம் சென்ற அவரை பின்னாளில் ஆங்கிலேயர் கைது செய்து பினாங்குத் தீவிற்கு அனுப்பி வைத்தனர்.**

கைவிலங்குகளுடன் பயணம்

தூத்துக்குடியிலிருந்து அனுப்பப்பட்ட போராளிகளில் சமையல் பணிக்கு அனுமதிக்கப்பட்ட ஆறு போராளிகளின் கைகளில் மட்டும் விலங்குகள் போடப்படவில்லை. மற்ற அனைத்துக் கைதிகளையும் இரண்டு இரண்டு பேராகச் சேர்த்து விலங்குகளுடன் வெள்ளையர் பிணைத்தனர். ***கடல் பயணத்தின் போது சுதந்திரப் போர்க் கைதிகளில் ஒருவர் காய்ச்சலாலும், மற்றொருவர் ஆழ்கடலில் தவறி வீழந்தும் ஆக இருவர் இறந்தனர். அத்துடன் பலர் நோய் வாய்ப்பட்டனர். வேதனை நிறைந்ததாக 76 நாட்கள் கடற்பயணம் நீடித்தது. 26.4.1802 இல் பினாங்குத் தீவில் (Prince of Wale's Island) பிழைத்திருந்த 70 போராளிகள் இறக்கிவிடப் பட்டனர். சேக் உசேனும், கை விலங்குகளோடு அங்கே இறக்கிவிடப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஐந்து மாதங்களில் சுதந்திரக் கைதிகள் 21 பேர் அங்கே இறந்து போயினர். அந்த அளவிற்கு கொடுமை நிறைந்ததாக தீவாந்திர வாழ்க்கை அமைந்தது.

கர்னல் வெல்ஷ்

'and thus ended this most harassing warfare in which the expenditure of life had been profuse, and the result any thing but honourable to the survivors.' ஏராளமான உயிர்கள் பலியிடப்படுவதற்குக் காரணமான மிகவும் தொல்லை தந்த போர் முடிவுற்றது என்று கர்னல் வெல்ஷ், இந்த நாடு கடத்தலைப் பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்.

---

* K.Rajayyan, The First War of Independence, 1800-1801,P.274.

** Madras Counnsil, 20 Jan 1802, Military consultations, Vol 293, PP.1318-1322.

*** மீ.மனோகரன், மருதுபாண்டிய மன்னர்கள், சிவகங்கை, 1994, பக்.649.

கிரேக்க அறிஞர் லூஷியன்

கடுமையான குற்றங்களுக்குத் தண்டனை தேசப் பிரஷ்டம் என்று எல்லா நாடுகளிலும் சட்டதிட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இறக்கிறபோது கூட அந்நிய நாட்டில் நாடு கடத்தப் பட்டவராக இருக்க வேண்டியிருப்பதைக் காட்டிலும் கொடுமையான விதி வேறொன்றுமில்லை என்பர் கிரேக்க அறிஞர் லூஷியன்.

1800—1802 களில் தென்னகத்தில் தெற்குச் சீமையில் நடைபெற்ற சுதந்திரப் போரில் பங்கேற்ற பலருக்குச் தீவாந்திரத் தண்டனையை வெள்ளையர் அன்று பரிசாக வழங்கினார். இச்சட்டப்படி அமில்தார் சேக் உசேன் கைவிலங்குகளுடன் நாடு கடத்தப்பட்டார். பினாங்குத் தீவில் பல ஆண்டுகள் கொடுமையை அனுபவித்தார். தனது இன்னுயிரை தாய்த் திருநாட்டின் விடுதலைக்காகத் தந்தார். வரலாற்றின் பின்னாட்களில் முகலாயச் சக்கரவர்த்தி பகதூர்ஷா போன்றவர்கள் வெள்ளையர்களால் நாடு கடத்தப்பட இருக்கிறார்கள் என்பதனை அப்போது சேக் உசேனும் அவருடன் வந்த போராட்டத் தளபதிகளும் அறிந்திருக்கவா முடியும்?*

---

* K.Rajayyan, A History of Freedom Struggle in India, Madurai ,1981, P.640.

Colonel James Welsh, Military Reminiscences, Vol I, P.128,129.

தீரன்சின்னமலை காலத்தில் முஸ்லிம்கள்

திவான் கிரிமிரேசாயபு - சிரஸ்தார்அமீர்அலிபத்தே - முகம்மதுஉசேன் நமானுல்லா - சேக்முஹம்மது - ஷேக்உசேன்

பழைய கோட்டைப் பட்டக்காரர் மரபில் தோன்றிய இரத்தினச் சர்க்கரைக்கும் பெரிய ஆடிப்பட்டி ஓதாள குலப்பத்துக்குடி உடையாக் கவுண்டர் மரபில் வந்த பெரியாத்தாவிற்கும் குழந்தைசாமி, தீர்த்தகிரி, தம்பி, கிலேதார், குட்டிச்சாமி பருவதம் எனும் ஆறு குழந்தைகள் பிறந்தன. இதில் கி.பி 1756 இல் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர் தீர்த்தகிரி; வளரும் இளமையிலேயே சிறந்த ஆற்றலும் திறமையும் நிறைந்தவராகத் திகழ்ந்தவர் தீர்த்தகிரி.

கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரிவசூல் செய்து வரும் பணம் எல்லாம் சங்ககிரிக்கோட்டைக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் அங்கிருந்து மைசூருக்குச் போய்ச் சேர்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் தீர்த்தகிரி தனது சகோதரர்களுடன் வேட்டையாடித் திரும்பும் வழியில் அவ்வாறு சென்று கொண்டிருந்த வரிவசூல் பண மூட்டைகளைப் பிடுங்கினார். அப்போது பணத்தையிழந்த வீரர்கள் சங்ககிரிக்கோட்டை திவானுக்கு என்ன பதில் சொல்லுவோம் என்று அவரிடம் முறையிட்டனர்.

சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் நடுவே சின்னமலை

வடக்கே சிரகிரி முருகனின் சென்னிமலை, தெற்கே சிவன்மலை, இதற்கு இடையில் ஒரு சின்னமலை வந்து வரிப்பணத்தை வாங்கிக் கொண்டதாகச் சொல் என்றார் தீர்த்தகிரி, அன்றிலிருந்து தீர்த்தகிரிச் சர்க்கரை என்ற பெயர் சின்னமலை என்று ஆனது. பின்னாளில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த தீரன் சின்னமலை இவரே.

ஹைதர் அலி

கிபி.1767 இல் வெள்ளையரை எதிர்த்துக் களங்கள் பல கண்ட கன்னட நாட்டின் போர்வாளான, தீரன் திப்புவின் வீரத்தந்தை ஹைதர் அலி 7.12.1782 இல் இவ்வுலக வாழ்வைத்

துறந்தார். அவருக்குப்பின் மாவீரன் திப்பு மைசூரின் மன்னரானார். சின்னமலையின்வீரம் மைசூரில் மிகவும் வியந்து புகழப்பட்டது.

திப்புவின்படையில்கொங்குவீரர்கள்

சின்னமலையின் நாட்டுப் பற்றுடைய செயல் திப்பு சுல்தானுக்கு, சின்னமலை மீது பெருமையையே ஏற்படுத்தியது. சின்னமலையின் புகழ் திப்பு சுல்தானின் சீரங்கப்பட்டினம் அரண்மனையில் எதிரொலித்தது.

திவான் கிரிமிதேசாயபு

அந்தியூர்கச்சேரியில் பணிபுரிந்த திவான் கிரிமிதே சாயபுவிடமிருந்து சிரஸ்தார் அமீர் மூலம் தீரன் சின்னமலைக்கு ஓர் ஒலை வந்தது. திப்புசுல்தானின் படையில் கொங்கு நாட்டு இளைஞர்களைச் சேர்க்க வேண்டும். ஆங்கிலேயரை விரட்டிட சின்னமலை போன்ற வீரர்கள் துணை திப்புசுல்தானுக்குத் தேவை என்று அதில் விபரம் இருந்தது.

சிரஸ்தார் அமீர்

வெள்ளையரை எதிர்த்திட திப்புசுல்தானோடு அணி சேர்வது நல்லதோர் திட்டம் என்று முடிவெடுத்தார். சின்னமலை ஆயிரம் இளைஞர்களுடன் நேரடியான ரோடு வழியாகச் செல்லாமல், காடு, வனங்களின் வழியாக சீரங்கப்பட்டினம் சென்று அடைந்தார் சின்னமலை. அவருடன் சிரஸ்தார் அமீரும் உடன் சென்றார்.

படைத்தலைவர் சையது சாயபு

தீரன் சின்னமலை சீரங்கப்பட்டணத்திற்கு வந்த போது, திப்புசுல்தானின் படைத்தலைவர் சையதுசாயபும், அமைச்சர் பூர்ணய்யாவும் வரவேற்று அவர்கள் வசதியாகத் தங்க எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்தனர்.

கொங்குப்படை

சின்னமலையின் வீரமும், நேர்மைப் போக்கும், ஒளிவு மறைவில்லாமல் கலகலப்பாகப்பேசும் தன்மையும் திப்புசுல்தானுக்கு மிகவும் பிடித்திருந்தது.திப்பு சுல்தான்

பிரெஞ்சுக் காரர்களை வெளிப்படையாக ஆதரித்ததால் பிரெஞ்சுப் படைத் தளபதிகள் துணையுடன் சின்னமலையும், அவருடன் வந்த இளைஞர்கள் சிறப்பாகப் போர்ப்பயிற்சி பெற்றனர். 1000 கொங்கு இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, உயர்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. அந்தப் படை "கொங்குபடை" என்று அழைக்கப்பட்டது.

தீரன்சின்னமலை, திப்புசுல்தானின் படைத்தலைவர்களில் ஒருவராக ஆக்கப்பட்டார். வெள்ளையரை எதிர்த்து சீரங்கப் பட்டிணத்தில் நடைபெற்ற இறுதிப்போரில் 4.5.1799 இல் திப்பு வீரச்சாவைத் தழுவினார். புரட்சி இயக்கம் தனது பணியினைத் தொடர்ந்து.

சின்னமலையுடன் சென்ற முஸ்லிம் வீரர்கள்

விருப்பாட்சி கோபால நாயக்கர் விருப்பப்படி மைசூர் தளபதி தூண்டாஜிவாக்கிடம் திப்புசுல்தானின் படைத்தலைவராக இருந்து மைசூரில் அனுபவம் பெற்றிருந்த சின்னமலை தூதராகச் சென்றார்.

தீரன் சின்னமலை ஈரோட்டிலிருந்து மைசூர் செல்லும் போது, தாங்களாகவே விரும்பி ஒசூரிலிருந்து பத்தே முஹம்மது முஹமது ஹாசம், ரமானுல்லாகான் ஆகியோர் இணைந்து கொண்டனர். பின்னர் ஷேக்முஹம்மது அக்குழுவினருடன் சேர்ந்து கொண்டார். இவர்கள் அனைவரும் தமிழகத்திலிருந்து சென்று தூண்டாஜி வாக்கைச் சந்தித்து வெள்ளையரை எதிர்த்து களங்காணத் திட்டமிட்டனர்.*

இஸ்லாமிய வீரர்கள் தமிழகத்திலிருந்து தானே விரும்பி போர்க்களம் சென்றதை வரலாற்றுப் பேராசிரியர் கு.இராஜய்யன் தனது நூலில் இவ்வாறு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

---

*செ.இராசு, வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த தீரன் சின்னமலைக் கவுண்டர், சென்னை, 1996, பக்.70.

K.Rajayyan, South Indian Rebellion,The First war of Independence, 1800-1801, Mysore, 1971, P.107.

சின்னமலையும் முஸ்லிம் தளபதிகளும்

துவக்கத்தில் தீரன் சின்னமலை சகோதரர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்த மன்னன் திப்பு சுல்தான் சின்னமலை இரண்டாவது முறையாக மைசூர்ப்பயணம் மேற்கொண்டு தூண்டாஜி வாக்கிடம் உதவிநாடிச் செல்லும்போது தாங்களாகவே விரும்பி உடன் சென்றவர்கள் பத்தே முகம்மது உசேன், ரமானுல்லாகான்,சேக் முகம்மது.

கான்ஜாகனி

வெள்ளையரை எதிர்த்து கோவையில் வீரப்போர் நடத்தியபோது சின்னமலைக்கு உதவி புரிந்தவர் ஷேக் உசேன், ரிஷாசாகிப் திப்புசுல்தானின் படையில் பணிபுரிந்த பல முஸ்லிம் வீரர்கள், திப்புவின் வீரச்சாவிற்குப்பின் சின்னமலையின் படையில் வெள்ளையரை எதிர்த்துப் பணியாற்றினர். சேலம் மாவட்டப் பெருவீரன் கான்ஜாகனி சின்னமலையின் உற்ற நண்பராக விளங்கினார்.* இறுதியில் துரோகத்தால் சின்னமலையும் வீழ்ந்த செய்தி இதோ.

சங்ககிரிக்கோட்டை

சங்ககிரிக்கோட்டை திப்புசுல்தானின் தலைமை யிடத்தில் ஒன்றாகத் திகழ்ந்தது. இந்தக் கோட்டையின் கொத்தளத்தில் பீரங்கிகளை நிறுத்தி சுடுவதற்கு வசதியாக இடைவெளி விட்டு அலங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வலிமையான கோட்டைப் பகுதி திப்புசுல்தான் கட்டியதாகும். **

The rampart on which this gate is placed is one of the largest on the hill and is said to have been constructed by Tippu Sultan.***

31.7.1805

கொங்கு நாட்டின் வரலாற்றின் கொடிய நாள் சங்ககிரிக் கோட்டைக் கதவுகள் அனைத்தும் அடைக்கப்பட்டன. காவிரிக் கரைப் போர் *(1801)* ஓடாநிலைப் போர் *(1802)* அறச்சலூர்ப் போர்

---

* செ. இராசு,முற்கூறிய நூல், பக்.124.

**க.இலக்குமி நாராயணன், தமிழகக் கோட்டைகள், சேலம் மாவட்டம்,1988, பக்.34.

***Ramaswami , Madras District Gazetteers, Salem, Madras, 1967,P.718.

(1804) ஆகிய மூன்று புகழ் கொண்ட போர்களிலும் ஆங்கிலேயரை வெற்றி கொண்டவர் தீரன் சின்னமலை. அவரை சமையல்கார நல்லப்பன் காட்டிக் கொடுத்தான். சின்னமலை வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டு, கைவிலங்குகள் பூட்டப்பட்டு சங்ககிரிக் கோட்டையில் பலத்த பாதுகாப்புடன் அடைக்கப்பட்டிருந்தார்.* தூக்கு மேடையிலே நிறுத்தினர் வெள்ளையர். அந்த மாவீரனும், பெரியதம்பி, கிலேதார், கறுப்பசேர்வை ஆகிய நால்வரும் தாங்களாகவே தங்கள் கழுத்தில் தூக்கிட்டு மாண்டனர்.** வரலாற்றில் இன்றும் வாழ்கின்றனர்.

**புலவர் குழந்தை, தீரன் சின்னமலை, ஈரோடு, 1958, பக்.83.

கு.சேதுராமன், கொங்குச் சீமைக் காணியாளர்கள், ஈரோடு, 1983, பக்.316.

கேரளவர்மா(பழாசிராஜா) கால முஸ்லிம்கள்

கேரளப் பகுதியில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் போராடிய ஆரம்ப கால வீரர்களுள் மலபார் பழாசிராஜா என்ற கேளரவர்மா, கொச்சி பலியத் அச்சன், வேலுத்தம்பி தளவாய் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள் ஆவர்.

கேரளசிம்ஹம்

சர்தார் கே.எம்.பணிக்கர் வரலாற்று நாவல் பல படைத்த சிறப்புடையவர். இவரது "கல்யாணமல்" இந்தியாவின் அக்பர் கால வரலாற்றை அடியொற்றியும், புணர்கோட்டு ஸ்வரூபம், "பறங்கிப் படையாளி" "தூமகேதுவின்றே உதயம்" ஆகியவை வரலாற்றுப் பின்னலைக் கொண்ட நாவல்களாகும். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவரான மலையாள நாட்டுப் பழாசிராஜாவைப் பற்றியதாக "கேரளசிம்ஹம்" எனும் நாவலைத் தந்துள்ளார்.* திப்புசுல்தானின் படையெடுப்புக்குப் பிற்பட்டதும், ஆங்கிலேயர் கேரளத்தில் நுழைய ஆரம்பித்ததுமான கால கட்டத்தின் சமூகநிலையை ஆசிரியர் வரலாற்றுக்கண் கொண்டு இந்நாவலில் சித்தரித்துள்ளார்.** * கப்பண்ண கிருஷ்ணமேனோன், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை கேரளத்தில் எதிர்த்த முதல்வரான கேரளஅரசன் கேரளவர்ம பழாசிராஜாவின் வீரச் செயல் பற்றி ஒரு நீண்ட வரலாற்று நாடகமும் புனைந்துள்ளார்.

கோட்டையாட்டு குடும்பம்

மலபார் கோட்டையாட்டு (Kotayattu) குடும்பத்தைச் சேர்ந்தவர் இளவரசன் கேரளவர்மா என்ற பழாசிராஜா (Rajah of Pazhassi)

மூன்றாவது மைசூர்ப்போர் (1790–1792)

ஆங்கிலக்கும்பெனியாரோடு நட்புறவு கொண்டிருந்த திருவாங்கூரை *1789* ஆம் ஆண்டின் இறுதியில் திப்புசுல்தான் தாக்கியதின் மூலம் போர் மூளுவது வேகமாயிற்று.

*ச.வே.சுப்பிரமணியன், திராவிட மொழி இலக்கியங்கள், பக்.341.

** பி.கே.பரமேச்வரன் நாயர், மலையாள இலக்கிய வரலாறு,பக்.145.

மூன்றாவது மைசூர்ப்போர் நடைபெற்றது, போரின் இறுதியில் 5.2.1792 இல் திப்புசுல்தான், இந்தியாவின் ஆங்கிலேய தலைமை ஆளுநர் காரன்வாலிசுடன், சீரங்கப்பட்டணம் உடன்படிக்கை செய்து கொண்டார்.

திப்புசுல்தான்

அதன்படி திப்புசுல்தான் தம் நாட்டில் ஒரு பகுதியை எதிரிகளுக்கு கொடுத்தார். 330 இலட்ச ரூபாயை இழப்பீட்டுத் தொகையாக திப்புவிடமிருந்து காரன்வாலிஸ் வற்புறுத்தி வாங்கினார். திப்பு சுல்தானின் இரண்டு பிள்ளைகள் பிணையாளிகளாக அனுப்பப்பட்டனர்.* 1794 இல் ஆங்கிலேயர் திப்பு கொடுக்க வேண்டிய தொகை முழுவதையும் பெற்றுக் கொண்ட பின் அவரது பிள்ளைகளைத் திருப்பி அனுப்பி வைத்தனர்.** 1792 ஒப்பந்தப்படி கிருஷ்ணாவிற்கும், பெண்ணை ஆற்றுக்கும் அப்பாலிருந்த நிலப்பகுதிகள் ஹைதரபாத் நிஜாமுக்கு வழங்கப்பட்டது. கடப்பை உட்பட கிடைத்தது. மைசூருக்கு வடக்கேயுள்ள துங்கபத்திரா ஆறு வரையுள்ள நிலப்பகுதி மராட்டியர்களுக்கு கொடுக்கப்பட்டது. திண்டுக்கல், சேலம், மலபார், பாராமஹால், சில கணவாய்கள் ஆங்கிலேயருக்கு கிடைத்தது. குடகு அரசர் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் சென்று விட்டார். ***

மூன்றாவது மைசூர்ப் போரில் ஆங்கிலேயர்கள் கொடுத்த வாக்குறுதியை நம்பி திப்பு சுல்தானுக்கு எதிராக ஆங்கிலேயர்களுக்கு கேரளவர்மா உதவிகள் செய்தார். போரின் முடிவில் மலபார்பகுதி ஆங்கிலேயர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

---

* வின்செண்ட் ஏ.ஸ்மித், **ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு தமிழாக்கம்** க.த.திருநாவுக்கரசு, சென்னை,1967,பக்.264.

** ஆர்.சத்தியநாதய்யர், டி.பாலசுப்பிரமணியன், இந்திய வரலாறு மூன்றாம் பாகம், அண்ணாமலைநகர், 1961, பக்.309.

*** கோ. தங்கவேலு, இந்திய வரலாறு மூன்றாம் மடலம் கிபி 1773 விருந்து இன்று வரை சென்னை, 1977, பக்.71.

கோட்டையாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த 2வது, 3வது அரச குமாரர்கள் தாயகம் திரும்பினர். தங்கள் பகுதியை தங்களுக்குத் தர வேண்டுமென்று வெள்ளையரிடம் கேட்டனர். அவர்களின் பகுதியை திரும்பக் கொடுத்த ஆங்கிலேயர், தாமரசேரி, (Tamarasseri) குறும்பாரா (Kurumbara) ஆகிய மாவட்டங்களின் வரிவசூல் (nadas) உரிமையைத் தாங்களே வைத்துக் கொண்டனர்.

கோட்டையாட்டு இரு அரச குமாரர்கள் கோழைகளாக ஓடிச்சென்று ஆங்கிலேயர்களிடம் அடைக்கலம் புகுந்து, வரிவசூல் உரிமையையும் அவர்களிடமே தந்ததை, கேரளவர்மா என்ற பழசிராஜா விரும்பவில்லை. ஆங்கிலேயர்களுக்கு எதிராக அஞ்சா நெஞ்சங்கொண்ட பெருவீரனாகத் திகழ்ந்தார். ஆங்கில ஆட்சியாளரைத் துச்சமென மதித்து தன்னுடைய மேலாதிக்கத்தை நிலைநாட்டினார். தன்னுடைய பலத்தை ஆங்கிலேயர்கட்கு எதிராக ஒன்று படுத்தினார். பலம்பொருந்திய படை உருவாக்கப்பட்டது. காடுகளாலும், மலைகளாலும் சூழப்பட்ட மலைப்பிரதேசத்தைத் தன்வசமாக்கிக்கொண்டு மலபார்ப் பகுதியில் ஆங்கிலேய அரசு நிலைப்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தையும் தகர்த்தார்.

ஜே.ஏ.வில்சன்

"The English considered him as the most unreasonable and intractable of the Rajahs of North Malabar and declared that his conduct was distinguished by a contempt for all authority and a total disregard to allegiance to any power." *

கேரள வர்மா நெறிமுறைகளுக்கு உட்படாதவர் என்றும், கட்டுப்பாட்டிற்கு அடங்காதவர் என்றும் வர்ணித்த ஆங்கிலேயர்கள், வடக்கு மலபார் மன்னர்களில் ஆங்கில ஆட்சியின் பால் நம்பிக்கையின்றி அவர்களை மதிக்காமல் விளங்கியவன் கேரளவர்மா என்று குறிப்பிடுகிறார்கள்.

*J.A Wilson, Report on Malabar to J.B.Travers, (15 october 1801),PP. 1-3.

1794

ஆங்கிலேயர்கள் தங்களது பிரித்தாளும் கொள்கையின் அடிப்படையில் கோட்டையாட்டு அரச குடும்பத்து அரசர்களில் ஒருவரான குறும்பர் நாட்டு அரசனுடன் (Rajah of Kurumbranad)கோட்டையாடு, வயநாடு (Wynaad) பகுதிகளில் வரிவசூல் செய்கின்ற உரிமையை ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்திக் கொண்டனர் கேரளவர்மா அந்தப்பகுதியில் தனது சகோதரனின் செல்வாக்கினை அழித்து விட்டு, தனது ஆதிக்கத்தை வெள்ளையருக்கு எதிராக நிலை நிறுத்தினார். இது கண்ட கும்பெனி அரசு படையினை அவர்மீது ஏவியது. போர் தொடர்ந்தது.

1796

லெப்டினென்ட் ஜேம்ஸ் கோர்டன் (Lieutenant James Gordan) *1796* ஏப்ரலில் பெரும் படையுடன் கேரளவர்மாவின் பழாசி தலைமை நிலையத்தைத் தாக்கினார். *17000* ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளியைக் கைப்பற்றினார். பழாசிராஜா "மனத்தானா" (Manathana) காடுகளுக்குத் தப்பி ஓடினார். பெருமழைக்காலத்தில் காடுகளில் துயரங்கள் அனுபவித்தார் பழாசிராஜா.

1796 ஜூன் திங்களில் இராணுவ அதிகாரி கர்னல்டோ விற்கு பழாசிராஜா தற்காப்பிற்கான கடிதத்தை எழுதிய போதிலும், அவரின் உள்ளம் வெள்ளையர் எதிர்ப்பில் வீறு கொண்டு நின்றது.

வரிசெலுத்தமறுப்பு

பெருவி(Peruvey) கூஞ்சிராட் (Counjirot) கரோட்டி (carrote) அயோடிக்கட்டளா(Iodikattala) ஆகிய பகுதிகளில் புரட்சிப் படையின் மையங்கள் உருவானது. ஆங்கிலேயருக்கோ, அல்லது அவர்களுடன் உறவு கொண்டவருக்கோ வரிசெலுத்த மறுத்தனர். மலைக்குகைகளில் இருந்து கொண்டே புரட்சியாளர்கள் பலம் பொருந்திய புரட்சி அமைப்பினை உருவாக்கினார்கள். அந்தப் பகுதியின் எண்ணிலடங்காகத் தலைவர்களும் விவசாயிகளும், விடுதலைவேட்கை கொண்டு பழாசிராஜாவிற்குர ஆதரவைத் தந்தனர்.

பனைஓலையில்

கேரளவர்மா பனைஓலையின் மூலம் ஆங்கிலேய ஆட்சியின் அவலங்களை மக்களுக்கு எடுத்துரைத்து, அந்தப் பகுதி மக்களைத் தன்னுடைய விடுதலை அமைப்பில் சேருமாறு வலியுறுத்தினார். வயநாடு, கோட்டையாடு, குறும்பர்நாடு இருவிநாடு மக்கள் புரட்சிப்படையில் சேர்ந்து கொண்டனர்.

மாப்பிள்ளைமுஸ்லிம்கள்

ஆங்கிலேய ஆட்சியால் விளைந்த கொடுமைகளின் காரணமாக பாதிக்கப்பட்டு அமைதியாக இருந்து வந்தவர்களும், திப்புசுல்தான் மீது பாசங்கொண்டிருந் தவர்களுமான மாப்பிள்ளை முஸ்லிம்கள் கேரளவர்மாவைச் சந்தித்தனர்.

The Moplas had remained restive for long not only because of the sympathy they had for Tipu but also because of the oppression they suffered under the companys administration. Led by the powerful chiefs, AtunGurukkal, Chempan Pokker and Unnimoota, they moved to the hills, where they entered into an understanding with the other rebel leaders.*

பலம் வாய்ந்த தலைவர்களான அட்டும் குருக்கள், செம்பன் போக்கர், உன்னிமூட்டா ஆகியோருடைய தலைமையில் மாப்பிள்ளை முஸ்லிம்கள் மலைப்பகுதிக்குச் சென்று கேரளவர்மாவுடன் இணைந்து வெள்ளையரை எதிர்த்துப் போரிட உறுதி பூண்டனர்.

திப்புசுல்தானின் கிலேதாருடன் சந்திப்பு

திப்புசுல்தானின் கில்தாருடன் (Killedar) கணக்கணிக் கோட்டை (Kankanikottai) என்ற இடத்தில் கேரளவர்மா என்ற பழாசிராஜா பேச்சுவார்த்தை நடத்தினார். கூர்க் நாட்டு அரசர் இதனை வெள்ளையருக்கு அறிவித்து துரோகம் புரிந்தார்.

திப்புசுல்தானுடன் சந்திப்பு

1796 டிசம்பரில் திப்புசுல்தான் எக்கடித் தேவகோட்டைக்கு (Egadi Devekottai)க்கு வந்தபோது, கேரளவர்மாவும், பரப்பநாடு (Parappanad) கரமக்கோட்டை(Karamakottai)அரசர்களும், வீரத்தளபதிகளும் திப்பு சுல்தானைச்சந்தித்துப் பேசினார்கள். அப்போது ஆங்கிலேயர்களை எதிர்த்திட உறுதி பூண்டார்கள்.

* K.Rajayyan, South Indian Rebellion Mysore, 1971, P.93.

2000 குதிரைகள்

ஆங்கிலேயரை எதிர்த்திட மலபார் புரட்சிக்குழுவிற்கு *2000* குதிரைகளையும், எண்ணற்ற போர்க்கருவிகளையும் திப்பு சுல்தான் அனுப்பி வைத்தார். Mysore supplied *2000* horse and numerous tents to assist the rebellion.

கூனியல்லா கோட்டை

ஆங்கிலேயர்களை எதிர்ப்பதற்காக மலபார்புரட்சிக் குழுவினர் கூனியல்லா (Konnyallah) என்ற இடத்தில் கோட்டை அமைக்கவும் திட்டமிட்டனர். வரிவசூல் செய்யும் முழுஉரிமையையும் புரட்சிக்குழுவிற்கு வழங்கினார் திப்புசுல்தான்* இதனால் மலபார் முழுவதும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் புரட்சியாளர்கள் வரி வசூலைத் தடை செய்தனர். ஆங்கிலேயருடைய நிர்வாகத்தை நிலைகுலையச் செய்தனர்.

1797 ஜனவரி

ஏரநாடு, மலப்புரம் (Malapuram) ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மாப்பிள்ளை முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந்தனர். ஆங்கிலேயர்களுக்கு வரி கொடுப்பதைத் தடுத்தார்கள். கி.பி.*1797* ஜனவரி *7* இல் புரட்சிப்படையின் கேப்டன் போமான் (Captain Bowman) தலைமையிலான ஆங்கிலப் படையின் ஒரு சிறுபிரிவினைக் கண்ட துண்டமாக வெட்டி எறிந்தனர். மணட்டோடி (Manantody) யில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயப் படையினர் *66* பேர்கள் கொல்லப்பட்டனர்.

பழாசியில் முகாமிட்டிருந்த ஆங்கிலப் படையை புரட்சி வீரர்கள் விரட்டியடித்தனர். ஒரேஒரு ஆங்கிலேயப் படைவீரன் மட்டும் தப்பிச் சென்று இச்சோகச் செய்தியை வெள்ளையருக்கு அறிவித்தான்.

1797 பிப்ரவரி

வெள்ளையர்படை பல வழிகளில் அனுப்பப்பட்டது. *1797* பிப்ரவரியில் தடிக்குளத்தை (Tadikulam) பிரிட்டிஷ் படை கைப்பற்றியது. *1797* மார்ச் *9* முதல் *12* வரை நடைபெற்ற

---

*Madras Council, 1 April 1800, secret Consultations, Vol 10 ,PP.230-241.

போர்களில் கர்னல்டோவின் ஆங்கிலப் படையினை புரட்சியாளர்கள் சிதறடித்தனர். 1797 மார்ச் 18 இல் பெரியா (Peria) என்ற இடத்தில் 1100 வீரர்கள் கொண்ட கும்பெனிப் படையை புரட்சியாளர்கள் தாக்கி வெற்றி பெற்றதோடு மேஜர் காமரானையும் (Major Cameron) கொன்றனர். வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் தொடர்ந்தது.

1800 ஏப்ரல்

ஆயுதம் தாங்கிய மக்கள் புரட்சிப் படைக்குத் தலைமை தாங்கிய கேரளவர்மா ஒடுக்கமான பள்ளத்தாக்குகளில் இருந்த தனது முகாமை சமவெளிப் பகுதிகளுக்கு மாற்றினார்.

செம்பன்போக்கர்

குட்டியாடியில் இருவிநாடு விவசாயிகளும், மாப்பிள்ளை முஸ்லிம்களின் தலைவருமான உன்னிமூட்டாவினுடைய படைவீரர்கள் கேரளவர்மாவுடன் சேர்ந்து கொண்டனர். முஸ்லிம் புரட்சி வீரர்கள் அட்டன் குருக்கள், செம்பன் போக்கர் தலைமையில் தென்பகுதியில் நிலை கொண்டிருந்தனர். அவர்கள் கோயம்புத்தூர் புரட்சிப் படையினரோடு சேர்ந்து ஆங்கிலேயப் படைகளைக் கடுமையாகத் தாக்கிட திட்டமிட்டிருந்தனர்.

1800 ஆகஸ்ட்

மேஜர்ஹோம்ஸ் (Major Holmes) 1800 ஆகஸ்ட் மூன்றாம் நாள் தனது படைப் பிரிவினரோடு மிராம்பி (Merambi) ஆற்றைக் கடந்து, பழாசிவழியாக, முற்றுகையிடப்பட்ட ஆங்கிலப் படைக்கு உதவியாக வந்து சேர்ந்தார். மனட்டானா, (Manatana) குத்துப்பரம்பா (Kuthuparamba) பகுதிகளுக்கு அப்படை வந்த போது புரட்சியாளர்கள் அவர்களைத் தாக்கி ஆங்கிலப் படையினரில் 76 பேர்களைக்கொன்று குவித்தனர்.*

கோட்டையாறு, கோபுலி, (Hobili) தெக்கன்கரா (Tekkankara) ஆகிய பகுதிகளிலுள்ள புரட்சியாளர்களும், மக்களும் ஆங்கில ஆட்சிக்கு எதிராக ஆயுதந்தாங்கினர். பட்டனூர் (Patanoor) மீட்டாடி(Meatady) கோவூர்(Kowoor) ஆகிய பகுதிகளில் புரட்சிப்படை

* Diary of the collector of cotiote, August 1800, P.13.

நிலை கொண்டது. தொடர்ந்து போர்கள் நடைபெற்றது. நாற்புறமும் எதிரிப் படைகளால் சூழப்பட்ட நிலையில் கேரளவர்மா கோட்டையாற்று முகாமை விட்டு, மலையடிவாரத்தின் வழியாக பையனூர் சென்று சிறக்கல்லை அடைந்தார்.

ஸ்டீவன்சன் படை

1800 ஜனவரியில் ஸ்டீவன்சன் தலைமையில் உள்ளபடை கடும் தாக்குதலைத் தொடர்ந்தது. *1800* ஏப்ரல் *20* இல் கர்னல் ஸ்டீவன்சன் (Colonel Stevenson) பொதுமக்களிடம், "கேரளவர்மாவை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அல்லது மறைவிடத்தை அறிவிப்பவர்களுக்கு *10000*ரூபாய் பரிசு வழங்கப்படும்" என்று அறிவித்தார்.

ஹைதர்கோண்டிகுட்டி

அது போன்று கஞ்சோட்டு நம்பியார் (Kanote (Kanjot) Nambiar, ஹைதர்கோண்டிகுட்டி (Hydari Contykutti) எலம்பலம் குஞ்சன் (Ezhambalam Kunjan) வாவன்ருலன்குன்றி (Wawan Rullenkuntry) ஆர்மி ஹைதரி கோண்டி குட்டி (Army Kydry Konti Kutti) சங்கோத்தரி சட்டு (Changotery chattoo) ஆகிய புரட்சியாளர்களையும் மன்னித்திட இயலாது என்றும் அறிவித்தார்.

1801 மே

1801 மே *4* இல் ஸ்டீவன்சன் தலைமையிலான படை புரட்சியாளர்கள் படைகள் இருக்குமிடத்தை ஒற்றர்கள் உதவி கொண்டு அறிந்து சென்று தாக்கியது. *1801* ஜூலையில் போர் வேகமாக நடைபெற்றது. *1801* ஆகஸ்ட் *4* இல் பொதுமக்கள் தங்கள் ஆயுதங்களை வெள்ளையரிடம் ஒப்படைத்து விடுமாறு ஸ்டீவன்சன் இரண்டாவது பொதுஅறிவிப்பைத் தந்தார். புரட்சியாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

1801 ஜூலை

புரட்சித் தளபதிகளான சாத்தப்பன் நம்பியார், சோயன் சந்து இருவரும் *1801* ஜூலை*28*இல் இப்பாகவுரில் கொல்லப்பட்டனர். பெருவயல்நம்பியாரும் அவரோடு சேர்ந்தவர்களும் கஞ்சோட்டில் (Kanjot) கொல்லப்பட்டனர்.

ரகுமான்

1801 நவம்பர் *21* இல் வயநாட்டுக் கடைத்தெருவில், புரட்சி வீரர்கள் ரகுமான் (Rehman) கல்லுசம்மா,(Kalluchama) புட்டயன் குஞ்சப்பன் (Puttian Kunjappan) கண்மைச்சேரி நம்பியார் ஆகியோர் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டார்கள். On the 21 st November Rehman, Kolluchama,Puttian Kunjappan and Kannamcherinambiar were hanged to death in the public bazaar of Wynaad. *

கஞ்சோட்டுநம்பியார்

ஆங்கிலேயரின் கொடிய எதிரி என்று பிரகடனப் படுத்தப்பட்டிருந்த கஞ்சோட்டு நம்பியாரும் அவரது 24 வயது புதல்வரும், சிறைப்பிடிக்கப்பட்டு, கஞ்கோட்டுக் குன்றில், பொதுமக்கள் மத்தியில் தலை வெட்டப்பட்டனர். சங்கோத்தரி சாட்டு, குட்டியாடியில் தூக்கிலிடப்பட்டார். ஆங்கிலேயரின் கொடிய நடவடிக்கைகளினால் புரட்சிப்படையினரை முழுவதுமாக ஒடுக்கி விட முடியவில்லை.

1804 பிப்ரவரி

லெப்டினென்ட்(Lieutenant Gray) கிரே தலைமையில், *1804* பிப்ரவரியில் ஆங்கிலேயப்படைகளத்தில் இறங்கியது. அத்துடன் கேப்டன் பாபெர் (Captain Baber) தலைமையிலும் படைகள் போரில் இறங்கின; புரட்சியாளர்கள் பலர் கைது செய்யப்பட்டனர், கொல்லப்பட்டனர்.

1804 அக்டோபர்

லெப்டினென்ட் கர்னல் ஹில் (Lieutenant Colonel Hill) *1805* அக்டோபர் *28* இல் புரட்சிப்படைகளைத் தாக்கினார். லெப்டினென்ட் ராபர்சனும் (Lieutenant Robertson)சேர்ந்து கொண்டார். விடுதலைப்போர் தொடர்ந்தது.

1805 நவம்பர்

வலிமைமிக்க வெள்ளையர் படையை எதிர் கொள்ள புரட்சியாளர்களால் இயலாதுபோயிற்று, போரின் இறுதியில் *1805* நவம்பர் *30* கேப்டன் பாபெர், கேப்டன் கிளாபம் (Captain Clapham) ஆகியோரது படைகள் கேரளவர்மாவைத் தாக்கியது.

---

*Correspondence relating to the pycheRajah's Rebellion, November 1801, P 93.

மைசூர் எல்லைக்கு அருகில் கக்னரா(Kagnara) ஆற்றங்கரையில் நேரடிப் போர் நடைபெற்றது. புரட்சியாளர்கள் அடியோடு வெற்றிவாய்ப்பை இழந்தனர். கேரளவர்மா 1805 நவம்பர் 30 இல் கொல்லப்பட்டார்.*

முஸ்லிம் விடுதலை வீரர்கள்

கேரளத்தில் மலபார் பகுதியில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் நடத்தி இறுதியில் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் சாவைத் தழுவிய கேரளவர்மா என்ற பழாசிராசாவிற்கு திப்பு சுல்தான் பேருதவி புரிந்தார். குதிரைகளையும், ஆயுதங்களையும் அனுப்பி வைத்தார். நேரிலும் தளபதிகள் மூலமும் ஆலோசனைகள் தந்தார். அவரது மறைவிற்குப் பின்னரும், முஸ்லிம்கள் பழாசிராசாவிற்கு உறுதுணையாக களத்தில் நின்றனர். வயநாட்டுக் கடைத்தெருவில் தூக்கிலிடப்பட்ட ரஹ்மான், ஆர்மிஹைதரிகோண்டிகுட்டி போன்றவர்களும், செம்பன்போக்கர், உன்னிமூட்டா போன்ற மாப்பிள்ளை முஸ்லிம்களின் தலைவர்களும், அவரது ஆதரவான புரட்சி முஸ்லிம் வீரர்களும் பழாசிராஜாவுடன் தோளோடு தோள் நின்று வெள்ளையரை எதிர்த்துப் போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர் என்பதும் மறந்துபோன வரலாற்றின் ஒரு பகுதியன்றோ! நினைந்து போற்றப்பட வேண்டியதுமன்றோ !!

*Correspondence relating to Pychi Rajah's Rebellion, 30 November 1805, P.433.

தளவாய்வேலுத்தம்பி காலமுஸ்லிம்கள்

கேரளத்தில் கைனிக்கர பத்மநாபபிள்ளை சிறந்த வரலாற்று நாடக ஆசிரியர். இவரது “வேலுத்தம்பி தளவா” மிக்க சிறப்பு வாய்ந்தது. புரட்சியாளனின் வீரவாழ்வும், வீரமரணமும் உணர்ச்சி வேகத்துடன் இதில் சித்திரிக்கப்படுகின்றன.* வேலுத்தம்பி தளவாயின் வீரமரணத்தைச் சித்திரிக்கிறது. கைனிக்கார பத்மநாபபிள்ளையின் வேலுத்தம்பி தளவா?** கே.எம்.பணிக்கர் ‘வேலுத்தம்பி தளவா’ என்னும் சிறுகவிதைக்காப்பியத்தை தந்துள்ளார்.*** வேலுத்தம்பி தளவாயின் வீரவரலாற்றில் வெள்ளையர் எதிர்ப்பில், முஸ்லிம்களும் பங்கேற்றனர். அந்தவீர வரலாறு இதோ. ...

தலக்குளம்தந்ததவப்புதல்வர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் தாலூகாவில் உள்ள இரணியலுக்கு அருகில் உள்ள சிறிய ஊர் தலக்குளம். அங்கு பரம்பரைச் செல்வாக்குடைய நாயர் குடும்பத்தில் குன்னுமாயாறிபிள்ளைக்கும், வள்ளியம்மா தங்கச்சிக்கும் புதல்வராக மலையாள ஆண்டு 940 சித்திரை 23 ஆம் நாள், கி.பி.1765 மே 6 இல் பிறந்தவர் வேலுத்தம்பி. இரணியல் குஞ்சாதிப் பிள்ளையிடம் கல்வி பயின்ற வேலுத்தம்பி, இளவயதிலேயே போர்ப்பயிற்சியையும் பெற்றார்.

இரணியலின் காரியக்காரர்

கி.பி.1785 இல் திருவிதாங்கூர் அரசர் ராமவர்மா ராமேஸ்வரத்திற்கு தீர்த்த யாத்திரை சென்றார். அப்போது அரசரது உடைவாளும், தங்க அணிகலன்களும் களவு போனது. அதனைக் கண்டுபிடித்து களவு போன பொருட்களை மீட்டுக் கொடுத்த இருபது வயது நிரம்பிய வேலுத்தம்பியின் திறமையைப் பாராட்டி, அரசர் அவரை இரணியலின் காரியக்காரர் ஆக்கினார். ****

---

*ச.வே.சுப்பிரமணியன், திராவிட மொழி இலக்கியங்கள், பக்.447.

**பி.கே.பரமேச்வரன் நாயர், தமிழாக்கம், இராம் கோபிநாதன், மலையாள இலக்கிய வரலாறு, புதுதில்லி, 1968,பக்.172.

***மேலது,பக்.250.

**** அ.கா.பெருமாள், தென்குமரியின் கதை, சென்னை, 2003, பக்160.

நாஞ்சில் நாட்டில் வேலுத்தம்பியின் புகழ் பரவிக் கொண்டிருந்த வேளையில் 1798இல் திருவிதாங்கூர் அரசர் தர்மராஜா என்ற ராமவர்மா மறைந்தார். அவரது மருமகன் அவிட்டம் திருநாள் (16 வயது) ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். திருவனந்தபுரம் அரண்மனையில் திவானாகப் பணிபுரிந்த திறமை மிகுந்த கேசவதாஸின் பகைவர்கள், மன்னரிடம் அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தினர். திவான் கேசவதாஸ் சிறையில் அடைக்கப்பட்டு மனம் ஒடிந்து 1799 இல் சிறையிலேயே மடிந்தார்.

மூவர்செய்தமோசடிகள்

கேசவதாஸ் மறைவிற்குப் பின் ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி என்பவர் வலிய சர்வாதிகாரியானார். தக்கலையில் வாழ்ந்த குளத்தூரரான் சங்கரன் நாராயணன் செட்டியும், மதுதாரகன் என்ற சிரியன்கிறிஸ்தவரும் சங்கரன்நம்பூதிரியின் கூட்டாளிகள். இவர்கள் மூவரும் அரசியல் அறியாத மன்னரை கைக்குள் வைத்துக் கொண்டு, மன்னர் பெயரால் மகாமோசடிகள் புரிந்தனர். மக்களைக் கசக்கிப் பிழிந்தனர்.

இந்த நிலையில் நாஞ்சில் நாட்டு மக்களிடமிருந்து 3000 பணம் பிரித்துத் தர வேண்டும் என்று இரணியல் காரியக் காரரான வேலுத்தம்பிக்கு கட்டளை வந்தது.

நேர்மையாளரும், வீரருமான வேலுத்தம்பி அநீதியை ஒழிக்க முடிவெடுத்தார். அமைச்சர்களிடம் வரியைக் கட்டாயமாகப் பிரித்திட சில நாட்கள் அவகாசம் கேட்டார். ஆனால் அந்த அவகாச நாட்களில், அநீதியை எதிர்த்திட நாஞ்சில் நாட்டு பன்னிரெண்டு பிடாகை மக்களிடமும் நிலையை எடுத்துக்கூறி, மக்களை அணி திரட்டினார்.

திருவனந்தபுரத்தில் தீரர் கூட்டம்

மலையாள ஆண்டு 947 பங்குனி 6ஆம் நாள் (1799) வேலுத்தம்பி தலைமையில் நாஞ்சில்நாட்டுப் பொதுமக்கள், அரண்மனையின் முன்னால் பெருந்திரளாகக் கூடியது கண்டு, மன்னன் பெயரால் மோசடிகள் செய்து வரும் மூவரும் தலைமறைவாயினர். வேலுத்தம்பி மன்னரிடம் உண்மையை

உரைத்தார். சூழ்ச்சிக்காரர்கள் பிடிக்கப்பட்டு, ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி நாடு கடத்தப்பட்டார். சங்கரன்நாராயணன் செட்டியை முக்காலியில் கட்டி வைத்து கசையடி கொடுக்கப்பட்டது. மதுதாரகனின் காதுகள் வெட்டப்பட்டன. மக்கள் மனம் மகிழ்ந்தனர். மாவீரன் வேலுத்தம்பியை மன்னர் திருவிதாங்கூரின் தளவாய் ஆக்கினார்.

சங்குண்ணிமேனன்

திருவிதாங்கூர் திவான் பேஷ்காரராகப் பணியாற்றிய (Dewan Peishcar) பி.சங்குண்ணிமேனன் (P.ShunGoony Menon) திருவிதாங்கூர் சரித்திரத்தை கி.பி.1878 இல் 523 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அந்த நூலில் பக்கம் 301 இல் அவர் தரும் செய்தி இதோ.

வேலுத்தம்பியும் முஸ்லிம் சட்டமும்

"The Dalawah being well versed in the laws of Manu and also in the prescriptions of the Mahomedan law, adhered strictly to the punishments there in prescribed.*

தளவாய் வேலுத்தம்பி மனுதர்ம சாஸ்திரத்திலும் இஸ்லாமியச் சட்டவிதிகளைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தபடியால் அவைகளில் கூறப்பட்ட தண்டனைகளை கண்டிப்புடன் அமுல்படுத்தி வந்தார் என்று சங்குண்ணி மேனன் தளவாய் வேலுத்தம்பி முஸ்லிம் சட்டப்படி தண்டனைகளை வழங்கிய செய்தியை தெரிவித்திருக்கிறார்.

வி.நாகமய்யா

கி.பி.1906 இல் வி.நாகமய்யா திருவிதாங்கூர் வரலாற்றை மூன்று பாகங்களாக 1886 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் முதல்பாகத்தில் பக்கம் 421 இல் தளவாய் வேலுத்தம்பியின் நிர்வாகம் குறித்து அவர் தருகின்ற செய்தி இதோ...

He held his court under the shade of trees or in the open air he would himself examine witnesses on both sides in the presence of his Sastri and Moftee and pronounce judgments then and there.

---

* P.Shungoony Menon, A History of Travancore from the Earliest Times, 1878,Madras,P.301.

தளவாய் வேலுத்தம்பியின் நீதி விசாரணைகள் திறந்த வெளியிலும், மரங்களின் அடியிலும் நடத்தப்பட்டன. தானே இருபக்கத்து சாட்சிகளையும் நேரில் விசாரிக்கின்ற போது ஹிந்து சாஸ்திரியும், முஸ்லிம் முப்தியும் (முஸ்லிம் நீதிபதி) உடன் இருப்பர் என்று தெரிவித்துள்ளார்.

எஸ்.எம்.சுப்பிரமணியம்

வார இதழ் ஒன்றில் எஸ்.எம்.சுப்பிரமணியம் எழுதிய "மானம் காத்த மாவீரன்" எனும் "தளவாய் வேலுத்தம்பி" பற்றிய தொடரில் 3வது அத்தியாயத்தில் அவர் தந்துள்ள செய்தி இதோ. "தளவாய் வேலுத்தம்பி, கூடவே ஓர் நீதிநெறி அறிந்த ஓர் முகமதியரும் (முஸ்லிம்) ஓர் சாஸ்திரியும் மற்றும் அறிஞர் பலரும் வருவார்கள். வாதி பிரதிவாதி இரு தரப்பையும் அவரே விசாரித்து நியாயம் வழங்குவார். குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க வேண்டிவருமானால், கோர்ட்டு நடந்த அதே மரத்தின் மீது குற்றவாளியைத் தூக்கிலிட்டு, ஒழிந்தான் ஒரு குற்றவாளி என்று நிம்மதியுடன் அந்த இடத்தை விட்டுச் செல்வார். அச்சம் என்பதை அவர் முகத்தில் காணவே முடியாது" என்று வேலுத்தம்பியின் நீதிமுறை பற்றி விளக்கியுள்ளார். வேலுத்தம்பிக்கு நீதிமுறைகளை அறிவித்திடும் இடத்தில் முஸ்லிம்கள் உடனிருந்து பணியாற்றிதை சங்குண்ணிமேனன், நாகமய்யா, எஸ்.எம்.சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது. இனி வெள்ளையர்களை எதிர்த்து வீரப்போர் நடத்திய போது வேலுத்தம்பிக்கு முஸ்லிம் படைவீரர்கள் பெரிதும் உதவினார்கள் என்பதும் வரலாற்றின் பக்கங்களில் காணக் கிடக்கின்றது.

கர்னல் மெகாலே

கி.பி.1795 இல் திருவிதாங்கூர் அரசு ஏற்கனவே ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பெனியுடன் உடன்படிக்கை செய்திருந்தது. கி.பி.1797 ஜூலை மாத முதல் திருவிதாங்கூர் நிரந்தரமாகவே கும்பெனியாருக்கு அடிமையாகிஇருந்தது. அதன்படி திருவிதாங்கூரின் தலைநகரான திருவனந்தபுரத்தில் கிழக்கிந்தியக் கும்பெனியின் ரெசிடெண்ட் தங்கிச் செயல்பட வேண்டும் என்ற ஆங்கிலேயரின் கட்டளையைத் திருவிதாங்கூர் அரசு முழுவதுமாக

ஏற்றிருந்தது. அதன்படி திருவிதாங்கூர் ரெசிடென்டாக கர்னல் மெகாலே (Colonel Macaulay) அப்போது *(1800—1810)* அங்கு இருந்தார்.

வேலுத்தம்பி மெகாலே மனவேறுபாடு

தளவாய் வேலுத்தம்பியின் நேர்மை, நல்ல திறமையான நிர்வாகம், துணிவு, ஆற்றல் மெகாலேயைக் கவரவில்லை.

முந்தைய மைசூர்ப்போர்களில் திருவிதாங்கூருக்கு வெற்றியைத் தேடித் தந்த நாயர்படைப்பிரிவை கலைத்திட மெகாலே யோசனை கூறினார். அரசரின் ஆணைப்படி படைகலைக்கப்பட்டாலும், இது விஷயத்தில் வேலுத்தம்பிக்கு மெகாலேயுடன், மனவேறுபாடு ஏற்பட்டது.

கப்பத்தொகை

கி.பி.1805 இல் திருவிதாங்கூர் அரசு கிழக்கிந்தியக் கும்பெனிக்குக் செலுத்த வேண்டிய கப்பத்தொகை எட்டு லட்சத்திற்கும் மேல்பாக்கி இருந்தது. இதனை முழுவதுமாக கட்ட வேண்டுமென்று கர்னல்மெகாலே வற்புறுத்தினார். திருவிதாங்கூர் மக்களின் ஏழ்மை நிலையையும், பொருளாதாரச் சீரழிவையும் கண்ட வேலுத்தம்பி கப்பம் செலுத்திட மறுத்தார். கோபமடைந்த கும்பெனியார் தளவாய் வேலுத்தம்பியை பதவிநீக்கம் செய்ய வேண்டுமென்று மன்னரிடம் கேட்டார்கள்.

விடுதலைப்போர்

கும்பெனியாரிடம் கொண்டுள்ள உறவு இராஜ்ஜியத்தின் நன்மைக்கும் குடிமக்களின் நலன்களுக்கும் பலவிதத்திலும் கேடு விளைவிக்குமென்ற நம்பிக்கை கொண்டிருந்த பெரும் மக்கள் கூட்டம் வேலுத்தம்பியை ஆதரிக்கத் துவங்கினர். விடுதலைப்போர் தெற்கே எழுந்தது.

பாலியத்தச்சன்

தளவாய் வேலுத்தம்பிக்கு உதவிட கொச்சியின் முதல் அமைச்சராகிய பாலியத்தச்சன்(பழிய அச்சன்) (Paliyatt Accan) முன்வந்தார்.

28.12.1808

கொச்சியில் தங்கியிருக்கும் ரெசிடென்ட் கர்னல் மெக்காலேயை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டு, அறுநூறுக்கு மேற்பட்ட திருவிதாங்கூர் படைவீரர்கள் 28.12.1808 நள்ளிரவில் கர்னலின் வீட்டை முற்றுகையிட்டனர். 29.12.1808 அதிகாலை 2 மணிக்கு இந்தத் தாக்குதல் நடைபெற்றது. அங்குள்ள அனைத்தும் தாக்கி அழிக்கப்பட்டது. கர்னல் மெக்காலே உயிர்தப்பிட ஓடி ஒளிந்தார். படகில் ஏறிச்சென்று தலைமறைவானார் என்று கே.பி.பத்மநாபமேனன், தனது "கேரள வரலாறு" நூலில் விவரித்துள்ளார்.

பத்மநாபமேனன்

Six hundred of the Travancoreans made a mad rush on the Resident's house at half-past two A.M on the 29th December 1808, obtained possession of it and destroyed every thing. They failed in finding Col.Macawlay, as he had already effected his escape along with his escort and got on board a pattimar.*

ஆயிரம் படை வீரர்களுடன் தளவாய் வேலுத்தம்பியின் நம்பிக்கைக்குரிய பத்மநாபபிள்ளை மற்றும் பலியத்தச்சன் தலைமையில் கர்னல் மக்காலேயின் கொச்சி வீட்டைச் சூழ்ந்து தாக்கினர்.**

மெக்காலே தப்பிச்செல்லல்

கர்னல் மெக்காலே அவருடைய குமாஸ்தாவின் உதவியோடு, அறையின் அடித்தளத்திலிருந்த சின்ன அறையில் ஒளிந்து கொண்டார். அதிகாலையில் அவர் முதலாவது வள்ளத்திலேறிச் (படகில்) சென்று கொச்சிக்கடல் வழிக்கு அச்சமயம் வந்த பையெட்மான்றெசி (PiedMontese) என்றும் பிரித்தானிய கப்பலில் ஏறிச் சென்று உயிர் தப்பினார்.

டாக்டர் ஹியூம் மற்றும் 33 ஆங்கிலேயர்கள் கைது செய்யப்பட்டனர். 12 போர் வீரர்களையும் ஒரு துரைசானியையும் (வெள்ளை மாது) வேலுத்தம்பியின் படைவீரர்கள் கைது செய்தனர். இதை வேலுதம்பி தளவா கேள்விப்பட்ட போது, துரைசானியை விட்டு விடவும், மற்றவர்களைக் கொன்று போடவும் உத்திரவு

---

* K.P.Padmanabha Menon, History of Kerala, Vol I, 1924, P.176.

** B.Sobhanan, Dewan VeluTampi and the British, Trivandrum, 1978,P.81.

பண்ணினதால், துரைமாரை வெட்டிக் கொன்று, மற்றவர்களை காயலில் அமிழ்த்திவிட்டார்கள்.* தனது படைவீரர்கள் கைப்பற்றிய வெள்ளைக்காரப் பெண் மணியை ஜாக்கிரதையாக தக்க காவலுடன் கொச்சிக்கு அனுப்பி வைத்த பெருந்தகையாளர் வேலுத்தம்பி தளவாய் ஆவார். இதையெல்லாம் மறைத்து விட்டு கர்னல் மெக்காலே மேலிடத்திற்கு கடிதங்களை எழுதினார்.

கொல்லம்போர்

திருநெல்வேலி, மலபார், சிலோன், ஸ்ரீரங்கப்பட்டினம் போன்ற பல பகுதிகளிலிருந்தும் ஆங்கிலப்படைகள் திருவிதாங்கூர் இராஜ்யத்தை நோக்கி வேலுத்தம்பியை வீழ்த்திட விரைந்து வந்தது.

15.1.1809 இல் கொல்லத்தில் திருவிதாங்கூர் படைகளுக்கும், ஆங்கிலக் கும்பெனிப்படையினருக்கும் கடும் மோதல் நடைபெற்றது.

16.1.1809 குண்டறைப்பிரகடனம்

கும்பெனிக் கவர்னர் வேலுத்தம்பியினை தாக்கி அறிக்கை வெளியிட்டார். அதற்குப் பதிலாக வேலுத்தம்பி *16.1.1809* இல் குண்டறை எனுமிடத்தில் வெள்ளையரை எதிர்த்து வீரப் பிரகடனம் செய்தார். "ஒண்டிப் பிழைக்க வந்தவர்கள் நம்மை ஓடத்துரத்துகிறார்கள், அழித்துத் தொலைத்திட ஆர்ப்பரிக்கிறார்கள். இவர்களை நாசமாக்கிட வேண்டும். இது இங்கு தோன்றிய ஒவ்வொரு ஆண் மக்களின் பிறவிக்கடன் என்றார்." **

கொச்சிப் போர்

19.1.1809 இல் திருவிதாங்கூர் வேலுத்தம்பியின் படைகள் கொச்சியில் வெள்ளையர் படையைத் தாக்கியது.

திரும்பவும் கொல்லத்தில் போர்

31.1.1809 இல் மூன்றாம் முறையாக கொல்லத்தில் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து தளவாய் வேலுத்தம்பி *40000* வீரர்களுடன் சென்று போரிட்டும் பலத்த சேதத்திற்குள்ளாயினார்.***

---

* சங்.சாமுவேல் சகரியா ஐயர், தென்திருவிதாங்கோட்டு திருச்சபைச் சரித்திரச் சுருக்கம் *1897*, நாகர்கோவில், பக்.*28*.

** தே.ப.பெருமாள், தளவாய்வேலுத்தம்பி சென்னை, *1962*, பக்.*315*.

*** Secret Consultations ,Vol XXXV III, PF 1073 - 1074.

6.2.1809

திருச்சியிலிருந்து வெள்ளையர் படைகள் விரைந்தது. ஆரல்வாய்மொழிகணவாய்க் கோட்டையினைத் தாக்கியது.

9.2.1809

*9.2.1805*இல் கர்னல்வெல்ஷ், திருவிதாங்கூர் படைகளுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடுத்தார். *10.2.1809* காலைக்குள் கோட்டை வெள்ளையர் வசமாயிற்று. போரில் *69* வது ரெஜிமண்டின் கேப்டன் கன்னிங்காமும், (Cunning ham) சிப்பாய் ஒருவரும் கொல்லப் பட்டார்கள். ஒருசார்ஜண்டும், மூன்று தனி வீரர்கள் ஒரு சுபேதார், மற்றும் ஆறுசிப்பாய்கள் காயம்பட்டனர் என்று கர்னல்வெல்ஷ் எழுதியுள்ளார்.

கர்னல் வெல்ஷ்

"On the morning of the 10th we succeeded, and having escaladed the southern fortified hill during the night, though defended by fifty pieces of cannon and tenthousand men, the whole lines were in our possession by eight o'clock A.M.*

"*10*ஆம் தேதி காலை நாங்கள் வெற்றியடைந்தோம். *50* பீரங்கிகளாலும் *10000* ஆட்களாலும் (வீரர்களாலும்) பாதுகாக்கப்பட்டு வந்த போதிலும் இரவு நேரத்தில் பலம் வாய்ந்த தெற்குக் கோட்டையை கைப்பற்றியபின், காலை *8* மணிக்குள் எதிரியின் கோட்டைப் பகுதி முழுவதும் எங்கள் வசமாயிற்று" என்று கர்னல் ஜேம்ஜ்வெல்ஷ் தெரிவித்துள்ளார். எதிரிகளின் ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டது. என்றும், ஆரல்வாய்மொழிக் கோட்டையைப் பாதுகாத்திட பத்தாயிரம் வீரர்கள் பணியாற்றியதை கர்னல் வெல்ஷ் தெளிவுபடுத்தியுள்ளார்".

இந்தப்படையில் வெள்ளையரை எதிர்த்து முஸ்லிம் வீரர்களும் பணியாற்றினர் என்பது வரலாற்றில் மறைந்து கிடக்கும் செய்தியாகும்.வெள்ளையரின் திரளான படைபலத்திற்கு முன் திருவிதாங்கூர் படைகள் தாக்குப்பிடித்திட முடியாமல் பின்

---

* Colonel James Welsh, Military Reminiscences, Vol I, London, MDCCCXXX, (1830),P.289.

வாங்கிஓடின. வெள்ளையர் கோட்டாற்றையும், நாகர்கோவிலையும் கைப்பற்றினார்கள். கொச்சி அமைச்சர் பாலியத்தச்சன் ஆங்கிலேயர்கள் பக்கம் உதவி புரிய வாக்களித்தார்.

மன்னரைக்காண

அனைத்து வழிகளிலும் வெள்ளையர் முன்னேறி வருவதை அறிந்த தளவாய் வேலுத்தம்பி மன்னரைக் காணச் சென்றார். லெப்டினன்ட் கர்னல் சென்டுலெஜர் (Lt.Col.Sentleger) 24 மணிநேரத்திற்குள் வேலுத்தம்பியைப் பிடித்துத் தருபவர்களுக்கு 50000 ரூபாயைப் பரிசாக அறிவித்தார்.

அந்தணர் வீட்டில்

தளவாய் வேலுத்தம்பி மாறுவேடத்தில் பயணித்தார். குன்னத்தூருக்கு அடுத்துள்ள மண்ணடி என்னுமிடத்தில் தளவாய் வேலுத்தம்பி கோயில் வளப்பிலுள்ள ஓர் அந்தணர் வீட்டில் தனது இளைய சகோதரருடன் இருந்த போது பிரிட்டிஷ் படை அவர்களை வளைத்தது. சில நிமிஷங்களில் எதிரிகளின் கையில் சிக்கநேரிடும் என்று அறிந்த வேலுத்தம்பி, தனது சகோதரரிடம் தனது கழுத்தை வெட்டிடுமாறு உத்தரவளித்தார். சகோதர நேசம் இதற்கு இணங்கவில்லை. தளவாய் வேலுத்தம்பி தானாகவே தனது கட்டாரியை எடுத்து தனது மாப்பினில் செலுத்தினார். மரணம் வரவில்லை. தனது மரண வேதனையை நிறுத்தச் சொல்லி தன் சகோதரனிடம் வேண்டினார். தம்பி வீரமீகு காரியமாற்றினார்; தளவாய் வேலுத்தம்பியின் தலை தனியாயிற்று.ஆனால் கும்பெனிப்படை அவரது உயிரற்ற உடலையும் தண்டித்தது.

கண்ணம்மூலை

கண்ணம்மூலை எனுமிடத்தில் தளவாய் வேலுத்தம்பியின் உடல் எல்லோரும் காணும் படி கழுமரத்தில் கட்டித் தூக்கிலிடப்பட்டது* உயிரற்ற உடலை வீதிகளிலே இழுத்துச் சென்றனர். **

---

*திருவிதாங்கூர் சர்க்கார், திருவிதாங்கூர் சரித்திரம், திருவனந்தபுரம், 1939,பக்.189.

** அநாராயணசாமி, இரா.இராமசேஷன் திராவிட நாட்டுத்தியாகிகள், சென்னை , 1958,பக்.65.

வேலுத்தம்பியின் இளையதம்பி பத்மநாபன் கைகளில் விலங்கு மாட்டப்பட்டு கொல்லத்துக்கு கொண்டு சென்றனர். வேலுத்தம்பியின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. அந்த இடத்தில் கொட்டைமுத்துப் பரப்பினார். (ஆமணக்கு விதைக்கப்பட்டது) இது கழுதை ஏரோட்டல் என்ற பண்டை வழக்கத்தை ஒத்தது. வேலுத்தம்பியின் உறவினர் பலர் மாலத்தீவிற்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் கடலில் சிறு தொலைவு சென்றதும் அங்கு கொடுங்காற்று வீசியதால் அவர்களை ஏற்றிச் சென்ற கலம் தூத்துக்குடிக்கு திரும்ப நேர்ந்தது. அவர்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டனர். சிலர் சிறைகளில் செத்தனர். எஞ்சியவர்களுக்கும் கசையடி தந்து அவர்களைத் திரும்பவும் நாடு கடத்தினர்.*

கே.எம்.பணிக்கர்

தனது 'சுயராஜ்ஜிய அபிமானி' என்ற நூலின் முன்னுரையில் கே.எம்.பணிக்கர், இந்திய சரித்திரத்தில் இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராடிய போராளி என்ற வகையில் வேலுத்தம்பியின் நாமத்தை காலை நேரங்களில் பிரார்த்தனையுடன் நினைவு கூறுவதற்கு தகுதியானது என்று நாம் கருதுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆரல்வாய் மொழிக்கோட்டையில் முஸ்லிம்கள்

அரன் + வாய் + மொழி ஆரல்வாய் மொழி எனத் திரிந்தது. ஆரல் = மதில். கோட்டை வாயிலிருக்குமிடம் என்று பொருள். அரன்வாழ்மொழி — சிவபெருமான் வாழ்கின்ற இடம்; என்று பலவாறாக கூறப்பட்டாலும், ஆரல்வாய்மொழியினை கோட்டை வாயிலின் வழியென்றும், கணவாய் (மலைவாய்) வழியிலிருக்கும் ஊர் என்றும் சொல்லலாம்.

ஆரல்வாய்மொழியில் மீனாட்சி சுந்தரர் கோயில் உள்ளது.இங்குள்ள கோட்டையில் முஸ்லிம் வீரர்கள் பணியாற்றிய செய்தி கேரளவரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது.

---

* பசிவனடி, இந்திய சரித்திரக் களஞ்சியம், பதினொன்றாம் பத்து, சென்னை, 1996, பக்.295.

டி.கே.வேலுபிள்ளை

திருவிதாங்கூர் அரசு மானுவல் நூலில் டி.கே.வேலுப் பிள்ளை 1940 இல் கூறியுள்ள செய்தி இதோ.

"The Muslims always received very kind and generous treatment at the hands of the rulers of Trvancore. So great was their attachment to the ruling family that when a Mugal Sirdhar made an irruption into Travancore in the middle of the seventeenth Century, the local muslims not only refused to join the invader but gave their support to the state in turning him beyond the Aramboly frontier." *

திருவிதாங்கூரை ஆண்ட மன்னர்கள் முஸ்லிம்களை மிகுந்த அன்புடனும் தாராள மனப்பான்மையுடன் எப்பொழுதும் நடத்தி வந்தனர்.

அரச குடும்பத்தினருடன் முஸ்லிம்களுக்கு இருந்த பாசமும், பற்றும் எத்தகைய மிகுதியாக இருந்தது என்றால், 17 வது நூற்றாண்டின் மத்தியில் முகலாயசர்தார் படையெடுத்து வந்த போது ஆரல்வாய்மொழி, உள்ளூர் முஸ்லிம்கள் படையெடுத்து வந்த முஸ்லிம்களுக்கு ஆதரவு அளிக்க மறுத்ததோடு அல்லாமல், படையெடுத்து வந்தவர்களை ஆராம்பொழி எல்லைக்கு அப்பால் விரட்டுவதற்கும் திருவிதாங்கூர் அரசுக்கு தங்களுடைய முழு ஆதரவைத் தந்தனர் என்று டி.கே.வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

திருவிதாங்கூர் அரசை எதிர்த்து முகலாயர் பிரதிநிதிகள் படையெடுத்து வந்த போது முஸ்லிம்கள் திருவிதாங்கூரின் பக்கமே நின்று தாய்நாட்டிற்காகப் போராடியுள்ளார்கள்.

ஆர்.பத்மநாபபிள்ளை

இந்து மதப்பிரசங்கியாரான ஆர்.பத்மநாபபிள்ளை 1943 இல் "ஆரைவாய்மொழி வரலாறும் மீனாஷி சுந்தரர் கோயிலும்" எனும் நூலினை 216 பக்கங்களில் 2 ரூபாய் விலையில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 195 இல் கூறியுள்ள செய்தி இதோ....

---

* T.K.Velupillai, Travancore State Manual,Trivandrum, Vol I, P. 812.

கோட்டைக்குள் முஸ்லிம்கள்

"17 வது நூற்றாண்டின் மத்தியில் முகல்ஸர்தார் படையெடுத்த போது முஸ்லிம்கள் அவனோடு சேராமல் திருவிதாங்கூருக்கு உழைத்து, ஆரைவாய்மொழிக் கோட்டைக்கு வெளியில் துரத்தினர். இதில் இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களும் உண்டு. அப்போதே இங்கு கோட்டைக்குள் முஸ்லிம்களும் தங்கி வருகின்றனர். மற்றையூர் முஸ்லிம்களுடன் இவர்களும் சேர்ந்து துரத்தினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்."

நுழைவாயில்

மேற்குத்தொடர்ச்சி மலையினின்றும் கிழக்கே செல்லஐந்து புழைகள் உளவென்றும், இது ஆறாம்புழையென்றும் நாவலர் சோமசுந்தரபாரதி கூற்றுப்படி, ஆரைவாய்மொழி, திருவிதாங்கூர் ராஜ்யத்தின் நுழைவாயிலாக இருந்தது. இங்கு 1809 இல் நடைபெற்ற போரில், ஆங்கிலேயக் கும்பெனியாரின் படைகளை எதிர்த்து தளவாய் வேலுத்தம்பியின் 10000 படைவீரர்கள் 50 பீரங்கிகளுடன் போரிட்டனர். இந்தப்படையில் தளவாய் வேலுத்தம்பியின் அணியில் பல முஸ்லிம் வீரர்களும் போரிட்டுள்ளனர்.

கோட்டாற்றில்ஈசாங்கல்

நாகர்கோவில் கோட்டாற்றில் இளங்கடை குத்பாபள்ளியில் உள்ள மையவாடி (இறந்தவர்களை அடக்கம் செய்கின்ற இடம்) மாலிக்கான் தோட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இங்குள்ள கல்லறைத் தோட்டத்தில் ஷஹீத் செய்யது ஃபக்கீர் இபுன் செய்யது என்பவரின் அடக்கஸ்தலம் உள்ளது அதன் இருபுறமும் அடையாள கற்கள் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு கல்லில் வாளும், உருவப்பட்ட கட்டாரியும காட்சியளிக்கிறது. மறுகல்லில் வாளும் உறையில் போடப்பட்ட கட்டாரியும் காட்சியளிக்கின்றன.

கபர் செய்யது ஃபக்கீர் இபுன்ஸய்யித்வலி ஷஹீத் தர்மஷ்ஹார் என்பவரது அடக்கஸ்தலமும் இங்குள்ளது. இவரது கல்லறைக்கு அருகில் மாலிக்கான் அடக்கஇடமும் உள்ளது.

அரிப்புத்தெரு பாஷில் ஷாஒலியுல்லா அடக்க இடத்தின் கீழ்ப்புறத்தில் நௌமியா, சௌமியா என்பவர்களது அடக்கஸ்தலம் உள்ளது.*

விரிவான ஆய்வுநடத்திட

கோட்டாறு பகுதிகளில் இஸ்லாமிய வீரர்களது கல்லறைகள் பல இன்றும் உள்ளது. காலகதியில் பல கல்லறைகள் பல மறைந்திருக்கவும் கூடும். 1809 இல் ஆரல்வாய்மொழிக் கணவாயில் நடைபெற்ற போரில், ஆங்கிலக் கும்பெனியாரின் படைகளை எதிர்த்து, திருவிதாங்கூரின் புரட்சித் தளபதி தளவாய் வேலுத்தம்பியின் பக்கம் நின்று, இந்த நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட பல்லாயிரக்கணக்கான படைவீரர்களில் முஸ்லிம் தீரர்களும் அடங்குவர். அது குறித்து முழுவதுமாக விவரங்களை வெளிக் கொண்டு வர இன்னும் விரிவான ஆய்வினை ஆய்வாளர்கள் செய்திட வேண்டிய நிலையே இன்றும் உள்ளது.

வீரகாவியம் விரைவில்

கி.பி.1741 முதல் 1809 வரையிலான சரித்திரத்தில் தாய்த்திருநாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட, போரிட்ட வீரமிகு முஸ்லிம்களின் பங்களிப்பினை இயன்றவரை இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளேன். ஹைதர்அலி, தீரன்திப்புசுல்தான், அவர் தம்பிள்ளைகள், அவர்தம் வாரிசுகள், அவர்களைப் பின்பற்றியவர்கள் ஆகியோர் நடத்திய விடுதலைப்போரின் வீரகாவியத்தை முழுவதுமாக விரைவில் தர இருக்கிறேன்(இறைவன் நாடினால்).

மறைந்து போன தியாகசீலர்களை நினைத்தும், மறக்கடிக்கப்பட்ட அவரது தியாகம் குறித்தும் போற்றிப் புகழ்வோமாக!

*பெட்டகம், குமரி மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பொக்கிஷம், 2001, பக்.258.

விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள்



செ. திவான்